# பனிப் பூவே

தமிழ் நிவேதா



# பனிப் பூவே..!

## 1

அந்த டெல்டா விமானம் அலாஸ்காவின் பெரிய ஊரான 'ஆங்கரேஜ்' நகரத்தை நோக்கி பறந்து கொண்டிருந்தது. இன்னும் இருபது நிமிடங்களில் விமானம் 'ஆங்கரேஜ் இன்டர்நேஷனல் ஏர்போர்ட்'டை அடையப் போகிறது என்ற விமானப் பணிப்பெண்ணின் குரல் ஸ்பீக்கர்களில் தேனாய் கசிந்தது. பயணிகள் இறங்குவதற்கு தயார் செய்யத் தொடங்கினார்கள்.

நேகா ஆர்வத்துடன் விமானத்தின் ஜன்னல் வழியாக கீழே பார்த்தாள். பனி படர்ந்த மலைச் சிகரங்கள் மிக

நெருக்கத்தில் தெரிந்தன. மலைகளிலிருந்து கீழே ஓடி உறைந்து கிடக்கும் பனி ஆறுகளும் வெளிர்நீல நிறத்தில் பனிப்பாறைகளும் கண்களைக் கவர்ந்தன.

பார்வைக்கு எட்டிய வரை பறவைகளோ, மனிதர்களோ தென்படாத அந்த ஏகாந்தம் மெதுவாய் பயமுறுத்தியது. உடல் ஒருமுறை சிலிர்த்து அடங்கியது.

சில நிமிடங்களுக்குப் பிறகு ஊர் கண்ணுக்குத் தெரிந்தது.

இப்போது இங்கு மைனஸ் ஐந்து டிகிரி பாரன்ஹீட். விமானப் பணிப்பெண்ணின் குரல் மீண்டும் ஒலித்தது.

நேகா அணிந்திருந்த ஸ்வெட்டரின் மீது கோட்டை அணிந்து கொண்டாள். கைகளில் க்ளவ்சும், கால்களில் சாக்ஸும் அணிந்து கொண்டு, கலைந்திருந்த தலையை விரல்களால் சீர் செய்தாள்.

விமானம் ஒரு பறவையைப் போல் சீராக தரை இறங்கியதும் மற்ற பயணிகளுடன் வெளியே வந்தாள். கஸ்டம்ஸ் க்ளியர் செய்துவிட்டு கன்வேயர் பெல்ட்டில் வந்த தன் லக்கேஜ்களை எடுத்துக் கொண்டு விமான நிலைய லௌவுச்சிற்கு வருகையில் வாட்ச்சை திருப்பி மணியைப் பார்த்தாள். மதியம் மூன்று மணி ஆயினும் மேகமூட்டத்துடன் இருளாக இருந்தது.

நேகா தன்னை அழைத்துப் போக யார் வந்திருக்கிறார்கள் என வெளியே எட்டிப் பார்த்தாள். பார்க்கிற இடமெல்லாம் வெள்ளையாகத் தெரிந்தது. மலைகள், கட்டிடங்கள், ரோடு, கண்களின் மீது கூட பனிக்குவியல்கள். தன்னை அழைத்துப்போக யாரும் வந்திருக்கவில்லை போலும்! நேகா குழப்பத்துடன் அலுவலகத்தை தொடர்பு கொண்டாள்.



"யு வார் மிஸ் நேகா. டெல்லியிலிருந்து வருகிறீர்கள். ரைட்? உங்களை அழைத்து வர வேண்டியவர் முன்பே ஏர்போர்ட் கிளம்பி விட்டார். பெயர் ராபின்" என்றார்கள்.

இங்கிருப்பவர்களில் ராபின் யாராய் இருக்கக்கூடும்? நேகா தன்னைச் சுற்றிலும் கவனித்தாள். அநேகமாய் அவளுடன் ப்ளைட்டில் வந்தவர்கள் அனைவரும் போய் விட்டிருந்தார்கள். லக்கேஜ்களுடன் செய்வதறியாது நின்றிருந்த நேகாவின் அருகில் ஒருவன் வந்து "ஹாய்" என்றான் புன்னகையுடன்.

"என் பெயர் ராபின். உங்களை அழைத்துப் போக வந்திருக்கிறேன்" என்றான் சிநேகமாக.

இவன் இத்தனை நேரமாய் நேகாவின் அருகில்தான் நின்றிருந்தான். ஏன் அவளிடம் பேசவில்லை? நேகா கேட்டபோது அவன் சொன்னான்.

"உங்களை இங்கு சுற்றிப் பார்க்க வந்திருக்கும் டூரிஸ்ட் என்று நினைத்தேன். அலாஸ்கா யுனிவர்சிட்டிக்கு இத்தனை அழகும் இளமையுமான லெக்சரர் வரக்கூடும் என்று நான் எதிர்பார்க்கவில்லை."

ராபின் அமெரிக்கன் என்பது அவனைப் பார்த்ததும் தெரிந்தது. வெளிப்படையான பேச்சு அவனது கலாச்சார குணம் என்பது புரிந்ததால் "ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?" என்றாள் நேகா.

இங்கு இயற்கையைத் தவிர ரசிப்பதற்கும் பொழுது போக்குவதற்கும் எதுவும் இல்லை. வித்தியாசமான தட்ப வெப்பம் வேறு. எனவே அமெரிக்காவின் மற்ற பகுதியில் வசிப்பவர்களே இங்கே வரத் தயங்குவார்கள். அதுவும் நீங்கள் வெப்பநாடான இந்தியாவிலிருந்து வந்திருக்

கிறீர்கள்'' என்ற ராபின் வந்த முதல் நாளே உங்களை பயமுறுத்துவதாக நினைக்காதீர்கள். வாருங்கள் போக லாம்'' என்று சிரித்தபடி முன்னே நடந்தான்.

வெளியே நின்றிருந்த காரின் மீது படிய ஆரம்பித் திருந்த பனியை அப்புறப்படுத்தி விட்டு நேகாவிற்கு கார் கதவைத் திறந்து விட்டான். அவள் அமர்ந்ததும் ஹீட்டரைப் போட்டு விட்டு காரை ஓட்ட ஆரம்பித்தான். வழி எங்கும் மரக்கிளைகளிலும், கட்டிடங்களிலும் ஒட்டி யிருந்த ஐஸ், சூரிய ஒளியில் கண்ணாடி துண்டுகளைப் போல் மின்னியது. நேகா தன்னை மறந்த உற்சாகத்துடன் சுற்றிலும் பார்த்தபடியே வந்தாள்.

கார் மிக மெதுவாக சென்றது. பல இடங்களில் முன்னும் பின்னுமாய் டான்ஸ் ஆடியது.

''காரில் ஏதாவது பிரச்சனையா?'' என்றாள் நேகா திகைப்புடன். ராபின் புன்னகைத்தான். ''பிரச்சனை காரில் அல்ல. தரையில் ஐஸ் படர்ந்த சாலையில் கார் செல்வ தால் சில இடங்களில் ஐஸ் கட்டிகள் புரண்டு காரின் டயர்களை இடறிவிடும். இதற்கென உள்ள ஆணி வைத்த டயர்களைத்தான் பயன்படுத்துகிறோம் என்றாலும் வாகனங்கள் குலுங்கியபடிதான் செல்லும். சில நாட் களில் உங்களுக்கே பழகிவிடும்.''

இனிதான் இங்கே சந்திக்கும் விஷயங்கள் ஒவ்வொன் றும் ஒரு புதிய அனுபவத்தை தரப் போகின்றன என்ற எதிர்பார்ப்புடன் நேகா பேசாமல் அமர்ந்திருந்தாள்.

யுனிவர்சிட்டி காம்பசிலிருந்த அலுவலகத்திற்கு அவளை அழைத்து சென்ற ராபின் தன் வாழ்த்துக்களை தெரிவித்துவிட்டு அவளது நன்றியைப் பெற்றுக் கொண்டு கிளம்பிப் போனான். 'யுனிவர்சிட்டி ஆப் அலாஸ்கா'



மிகப் பெரிதாக இருந்தது. அலுவலகத்தில் தனது வேலைக் கான உத்தரவையும், ஐ.டி.யையும் காண்பித்தாள். அவை சரி பார்க்கப்பட்டதும், அவள் கைகளை குலுக்கிய ஏ.ஓ. தனது வரவேற்பையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

'யுனிவர்சிட்டி ஆப் அலாஸ்கா' உங்களை மகிழ்ச்சி யுடன் வரவேற்கிறது நேகா. உங்களது கல்வியும் திறமை யும், மாணவர்களைச் சிறந்தவர்களாக உருவாக்கும் என்று நம்புகிறோம்.'

''ஷ்யூர்'' என்றாள் நேகா தலை சாய்த்து.

''யுனிவர்சிட்டி காம்பஸிலேயே உங்களுக்கு குவார்ட்டர்ஸ் ஒதுக்கப்பட்டுள்ளது. அங்கே நீங்கள் சமைத்துக் கொள்ள எல்லா வசதிகளும் உண்டு. இங்கு இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் என ஆசிய நாடுகளைச் சேர்ந்த பலர் பணிபுரிகிறார்கள். அதனால் நீங்கள் கவலைப் படத் தேவையில்லை.''

''எனக்கு எந்தக் கவலையும் இல்லை சார். எல்லோரும் மனிதர்கள்தான் என்கையில் அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தால் என்ன? மனிதர்களிடம் எனக்குத் தயக்கமோ, பயமோ இல்லை.''

''வெரி குட்'' என்றார் ஏ.ஓ. புன்னகைத்து.

தனக்கு ஒதுக்கப்பட்டிருந்த குவார்ட்டர்சிற்கு வந்த நேகா திருப்தியுடன் புன்னகைத்தாள். போம் மெத்தை யுடன் கட்டில், மினி ப்ரிட்ஜ், மைக்ரோவேவ், ஹீட்டர் என அனைத்து வசதிகளும் இருந்தன. அறையுடன் இருந்த பாத்ரூமிற்குள் சென்றவள் சுடுநீரில் குளித்து உடையை மாற்றிக் கொண்டு வந்து படுக்கையில் அமர்ந் தாள். எதிர் சுவர் முழுவதும் நிறைத்திருந்த கண்ணாடி

யில் பளிச்சிட்ட அவள் உருவத்தைக் கூர்ந்து பார்த்தாள். கோதுமை நிறத்தில் பளிச்சிட்ட முகத்தில் அகன்ற கண்களும், சுருண்ட முடியும், கூர் மூக்கும், செப்பு இதழ்களும் சிறு வயதில் அம்மாவை நேரில் பார்த்தது போல் இருந்தது.

இந்த நிறமும் அழகும்தான் அம்மாவை கர்வம் கொள்ள வைத்தது. கணவனையும், குழந்தையையும் மறக்க வைத்தது. முப்பத்தி மூன்று வயதில், பத்து வயது பெண்ணை மாமியாரிடம் விட்டு விட்டு கடை வீதிக்குப் போவது போல் வேறொரு வாலிபனுடன் சர்வ சாதாரணமாக கிளம்பிப் போக வைத்தது.

தாத்தா பாட்டியுடன், சித்தப்பாக்களும், அத்தைகளும், உறவினர்களும் சூழ்ந்திருந்த வீட்டில் அப்பா தலையில் அடித்துக் கொண்டு அழுதது நன்றாக நினைவில் இருக்கிறது.

''அவ இப்படி பண்ணுவான்னு நினைக்கல. என்ன குறை வெச்சேன் அவளுக்கு?''

கூட சேர்ந்து எல்லோரும் அம்மாவை வாய்க்கு வந்தபடி திட்டியதும், கண்களைத் துடைத்தபடி பாட்டி நேகாவை அழைத்துப் போய் சாப்பாடு போட்டதும் நினைவில் வந்தது. அதன் பிறகு நேகா பாட்டி வீட்டிலேயேதான் வளர்ந்தாள். அப்பா இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை வந்து போவார். எப்போதும் மகளைத் தூக்கி கொஞ்சி பழக்கமில்லை என்பதால் நேகா அவரைப் பார்த்ததும் தூணை கட்டிப்பிடித்தபடி ஒதுங்கியே நிற்பாள். அவரும் அதிகம் பேச மாட்டார்.

''நன்றாக படிக்கிறாயா?'' என்ற அவரின் கேள்விக்கு நேகா 'ம்' என்று தலையசைப்பாள். அத்துடன் அவர்களின் உரையாடல் முடிந்து போகும்.



பாட்டி நேகாவை நன்றாகத்தான் கவனித்துக் கொண்டாள்.

அம்மாவின் அழகு அப்படியே வந்திருந்ததாலோ என்னவோ 'இங்கே நிற்காதே, அங்கே நடக்காதே' என கெடுபிடிகள் அதிகம் செய்தார். நேகா பள்ளி இறுதி ஆண்டில் இருந்தபோது எதிர்பாராமல் பாட்டி போய்விட அடுத்து சில மாதங்களிலேயே தாத்தாவும் போய்ச் சேர்ந்தார். பாட்டி, தாத்தா இல்லாத வீடு, ஏற்கனவே ஒட்டுதல் இல்லாத உறவினர்களிடையே மிகவும் அந்நியமாகத் தெரிந்தது. அடுத்த முறை அப்பா வந்தபோது நேகா மிகுந்த தயக்கத்துடன் கேட்டாள். ''இங்கே ரொம்ப கஷ்டமா இருக்கு. நானும் உங்களுடன் வந்துவிடட்டுமா?''

அப்பா உடனே பதில் சொல்லவில்லை. முகம் இறுகிப் போனது. அமைதியாக இருந்தவரிடம் ''உன் பெண் என்ன சொல்கிறாள் அண்ணா?'' என்று கேட்டபடி வந்து அவர்கள் அருகே அமர்ந்தார் சித்தப்பா.

''என்னுடன் வருவதாகச் சொல்கிறாள்'' என்றார் அப்பா சுரத்தின்றி.

''நியாயம்தானே! இத்தனை வருடமாய் அம்மாவும் இல்லாமல் அப்பாவையும் பிரிந்து இருந்தாயிற்று. இப்போதாவது உன்னுடன் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுவது நியாயம்தான்.''

''ஆமாம். இன்னும் சில வருடங்களில் திருமணமாகிப் போகப் போகிற பெண். அதுவரையாவது உன்னுடன் இருக்கட்டுமே!'' என்றாள் அத்தை.

''முன்பானால் சின்னக் குழந்தை. பார்த்துக் கொள்வது சிரமம். இப்போது எப்படி வளர்ந்து விட்டாள் பார்.

இவளே உன்னை கவனித்துக் கொள்வாள். அதனால் கவலைப்படாமல் அழைத்துப் போ'' என்றார் மாமா.

'வயது பெண்ணின் பொறுப்பை ஏற்றுக் கொள்ள நாங்கள் தயார் இல்லை, நீ அழைத்துப் போய்விடு' என்று எல்லோரும் சொல்லாமல் சொல்லுவது புரிய அப்பா வேறு வழியின்றி தலையசைத்தார்.

தோளில் மாட்டிய பையுடன் எல்லோரிடமும் விடைபெற்று அந்த வீட்டை விட்டுக் கிளம்புகையில், இத்தனை நாள் வசித்த இடத்தை விட்டுப் போகிறோம் என்ற வருத்தத்தைவிட தனக்கு உரிமையான இடத்தில் அப்பாவுடன் இருக்கப் போகிறோம் என்ற மகிழ்ச்சியே அதிகம் இருந்தது.

அப்பா வழியெங்கும் அதிகம் பேசாமல் வந்தார். ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். சிறு வயதிலிருந்து விலகியே இருந்ததால் அப்பாவால் சகஜமாக இருக்க முடியவில்லை போலும்.

சில நாட்களில் சரியாகி விடும். நேகா தனக்குள் புன்னகைத்துக் கொண்டாள்.

வீட்டு வாயிலில் கார் நின்றதும் நேகா உற்சாகமாகக் கீழே இறங்கினாள். அவர்களுக்காக வாயில் கதவைத் திறந்து விட்ட பெண்ணைப் பார்த்துச் சிரித்தபடி உள்ளே நுழைந்தாள். நல்ல கறுப்பும், குள்ளமான உருவமுமாய் இருந்த அந்த பெண் இடுப்பில் கைகளை ஊன்றியபடி நேகாவை வெறித்தாள்.

''இதுக்கு இன்னும் எத்தனை நாளைக்கு சமைச்சிப் போடணும்?'' என்றாள் அப்பாவிடம்.

வீட்டு வேலைக்காரி போலும் என்று எண்ணியபடி நேகா உள்ளே செல்ல முயல அப்பா அவளைக் கூப்



பிட்டார். ''உன்னை அடுத்த மாதம் தான் கல்லூரியில் சேர்க்க முடியும். அதுவரை இவள் சொல்வதைக் கேட்டு நடந்து கொள்.''

''யார் இது?'' என்றாள் நேகா ஆச்சரியத்துடன்.

அப்பா சுவரை வெறித்தபடி சொன்னார். ''இவள் உன் சித்தி?'' நேகாவிற்கு இது எதிர்பார்க்காத திருப்பமாக இருந்தது. அப்பா இரண்டாவது திருமணம் செய்து கொண்டாரா? பாட்டியோ, அத்தையோ யாருமே அதைப் பற்றி சொல்லவில்லையே!

''நீங்கள் திருமணம் செய்து கொண்டது பாட்டி வீட்டிற்குத் தெரியுமா?'' என்றாள் நேகா உலர்ந்த குரலில்.

''யாருக்கும் தெரிய வேண்டிய அவசியமில்லை. என் திருமணம் என்பதேகூட அவசியமில்லை. எனக்கு இவளைப் பிடித்திருக்கிறது. என்னுடன் இருக்கிறாள். அவ்வளவுதான்.''

வயது வந்த பெண்ணிடம் பேசுகிறோம் என்பதையும் மறந்து அப்பா பேசினார்!

''ஏன் இதைப் பற்றி முன்பே என்னிடம் சொல்லவில்லை?''

''ஏன்? ஏன் சொல்ல வேண்டும்? உன் அம்மா சொல்லிக் கொண்டா ஓடினாள்? நான் செய்தால் மட்டும் தவறா? பெரியவர்கள் ஏற்பாடு செய்து வைத்த திருமணம் நிலைக்காதபோது நானாக இப்படி ஒரு ஏற்பாடு செய்து கொண்டதில் எந்தத் தவறும் இல்லை.''

அப்பா தனக்கே சொல்லிக் கொள்வதைப் போல் பேசிக் கொண்டு போனார்.

இருவர் பேச்சிற்கும் நடுவே அந்தப் பெண்மணியின் குரல் பொறுமையின்றி குறுக்கிட்டது.

"கேட்டேனே! இந்தப் பெண் இன்னும் எத்தனை நாள் இங்கே இருக்கும்?"

"கல்லூரி திறக்கும் வரைதான். பிறகு ஹாஸ்டலில் இருந்து கொள்வாள். விடுமுறைக்கு எப்போதாவது வந்து போவாள். அதற்குள் மாப்பிள்ளை பார்க்கத் தொடங்கினால் படிப்பு முடிவதற்குள் திருமணத்தை முடித்து விடலாம்" என்றார் அப்பா திட்டமிட்டதைச் சொல்கிற தொனியில்.

"அப்பா நான் படிக்க வேண்டும்" என்றாள் நேகா பதட்டத்துடன். "வகுப்பில் நான்தான் எப்போதும் முதல். இந்த பரிட்சையையும் நன்றாக எழுதியிருக்கிறேன். நிச்சயமாய் நல்ல மதிப்பெண் கிடைக்கும். மருத்துவக் கல்லூரியில் சேர வேண்டும் என்பதுதான் என் சிறு வயது இலட்சியம்."

அந்த பெண்மணி நேகாவின் பேச்சைக் கேட்டு கிண்டலாகச் சிரிக்கவும் அப்பா அதட்டினார். "மருத்துவம் படிக்க எத்தனை செலவாகும் என்று தெரியுமா? யார் செலவு செய்வார்கள் உனக்கு?"

அப்பாவே யார் செய்வார்கள் என்று கேட்கையில் என்ன பதில் சொல்வது என்று புரியாமல் நேகாவிற்கு கண்கள் கலங்கின.

நாட்களை எண்ணியபடி நேகா அங்கே ஒரு மாதம் கழித்த பின்னர் அவளது பரிட்சை முடிவுகள் வெளியாயின. நேகா எதிர்பார்த்தபடி தொண்ணூற்று ஆறு சதவீத மதிப்பெண்கள் பெற்று பள்ளியில் முதல் மாணவி



யாகவும், மாநில அளவில் இரண்டாம் இடத்திலும் தேறியிருந்தாள். தன் மதிப்பெண்கள் அப்பாவின் மனதில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று அவள் உறுதியாக எதிர்பார்த்திருக்க அப்பா பி.ஏ. ஆங்கில இலக்கியத்தில் சேருவதற்கான விண்ணப்பத்தாளை அவளிடம் கொடுத்தார். நேகா கடைசி முறையாக அவரிடம் கெஞ்சினாள். "எனக்குக் கண்டிப்பாய் இலவசமாய் மெடிக்கல் சீட் கிடைக்கும். டெர்ம் பீஸ் கட்ட சிறு வயதில் பாட்டி என் மீது டெபாசிட் செய்த பணம் பேங்கில் இருக்கிறது. உங்களுக்கு செலவு வைக்க மாட்டேன்."

"அந்தப் பணத்தைக் கொண்டுதான் உனக்குத் திருமணம் செய்ய வேண்டும்" என்றார் அப்பா.

"எனக்குத் திருமணமே வேண்டாம். படித்தால் போதும்" நேகா அடம் பிடிக்கவும் அப்பாவுக்குக் கோபம் வந்தது. "உன் அம்மா மாதிரி இருக்காதே. பெரியவர்கள் பேச்சை மதிக்கக் கற்றுக் கொள்."

எப்படியும் அப்பா சம்மதிக்க மாட்டார் என்பது புரிய நேகா அமைதியாக அழுகையில் கரைந்தாள்.

அவள் அழுகையையோ. சாப்பிட மறுப்பதையோ பொருட்படுத்தாமல் அப்பா அவர் பிரியப்படி பி.ஏ. வகுப்பில் சேர்த்து கல்லூரி ஹாஸ்டலில் தங்கவும் ஏற்பாடு செய்தார்.

சில நாள் வருத்தத்திற்கு பிறகு நேகா தன் பி.ஏ.வுடன் கம்ப்யூட்டர் கோர்ஸ் ஒன்றும் படித்தாள். கல்லூரி விடுமுறையில் கூட வீட்டிற்கு செல்வதைத் தவிர்த்து தான் படித்த கிறிஸ்துவ கல்லூரியிலேயே பகுதி நேர வேலைக்கு ஏற்பாடு செய்து கொண்டாள்.

அப்பா அவளை வீட்டிற்கு வருமாறு கூப்பிட வில்லை என்றாலும் அடிக்கடி அவளைப் பார்க்க வந்தார். கூடவே பெண் பார்க்கவென்று யாரையாவது அழைத்து வருவார். தனக்கு அதிகம் செலவு வைக்காமல் பெண்ணின் அழகைப் பார்த்ததும் தலையசைத்து விடு வார்கள் என்ற எதிர்பார்ப்புடன் இருப்பார். மாப்பிள்ளை பையன்கள் பெண்ணைப் பார்த்ததும் மயங்கிப் போய் நிற்க, பையனைப் பெற்றவர்கள் பெண்ணுக்கு எத்தனை பவுன் போடுவீர்கள்? பெண்ணின் அம்மா எங்கே? சொந்த வீடு இருக்கிறதா? என அடுக்கடுக்காய் கேள்வி கேட்க ஆரம்பித்ததும் வெளியே போய் பேசிக் கொள்ள லாம் என அவர்களை அழைத்துப் போய் விடுவார். வெளியே என்ன பேசுவாரோ, அடுத்த முறை அவர் வரும் போது வேறு ஆட்கள்தான் வருவார்கள். இந்த டிரா மாவில் போரடித்துப் போய் நேகா கொஞ்சம் கொஞ்ச மாக பொறுமையிழக்கத் தொடங்கினாள்.

கல்லூரி இறுதியாண்டு தேர்வை முடித்துவிட்டு அடுத்து என்ன செய்வது என்ற யோசனையில் நேகா இருந்தபோது அப்பா தொந்தியும் தொப்பையுமாய் உடல் குலுங்க நடந்து வந்த ஒருவனை அவளுக்கு அறி முகம் செய்தார்.

''இவர் நம் தெருமுனையில் மளிகை கடை வைத்திருக் கிறார். உன்னை ஒருமுறை பார்த்திருக்கிறார். பெண்ணை மிகவும் பிடித்திருக்கிறது. வேறு எதுவும் வேண்டாம் என் கிறார். எனக்கும் பையனைப் பிடித்திருப்பதால் ஜூன் மாதம் திருமணம் வைத்துக் கொள்ளலாம் என இரு தரப்பும் பேசி முடிவு செய்து விட்டோம்'' நேகாவிற்கு அடுத்து என்ன செய்வது என அந்த நொடியில் புரிந்து



போனது. அப்பாவிற்கு பதில் பேசாமல் தலையாட்டி யவள் அவர்கள் போனதும் அந்த கான்வென்டின் மதர் சுப்பீரியரைப் பார்த்துப் பேசினாள். தன் குடும்ப நிலையை விளக்கியவள், அவரின் சிபாரிசின் பேரில் டெல்லி கிளம்பினாள். போகும்போது வெளியூரில் படிக்கப் போவதாகக் கடிதம் எழுதிப் போட்டதுடன் அப்பா வுக்கும் அவளுக்கும் இருந்த தொடர்பிற்கு முற்றுப் புள்ளி விழுந்தது.

பி.ஏ. கோல்ட் மெடல் என்பதாலும் மதரின் சிபாரிசி னாலும் டெல்லி ஜீஸஸ் மேரி கல்லூரியில் உபகார சம்பளத்துடன் எம்.ஏ.க்கு இடம் கிடைத்தது. எம்.ஏ.யிலும் நல்ல ரேங்கில் தேறிய பின்னர் எம்.ஃபில்க்கு விண்ணப் பித்து விட்டு அதே கல்லூரியில் இளநிலை ஆசிரியராக பணியில் சேர்ந்தாள்.

பரபரப்பான வேலைகளுக்கிடையே எல்லாவற்றை யும் மறந்துபோன சமயத்தில்தான் ஒருநாள் எதிர்பாராமல் அவள் அம்மாவைச் சந்தித்தாள்.

கல்லூரி ஆண்டு விழாவின் போது அவளுடன் பணியாற்றும் ஆசிரியை ஒருத்தி சொன்னாள். ''நேகா, இன்று நம் விழாவுக்குத் தலைமை ஏற்க வந்திருக்கும் கலெக்டர் ராமசுந்தரம் அவர்கள் மனைவியைப் பார். உன்னையே உரித்து வைத்தாற்போல் இருக்கிறார்கள்.'' நேகா பார்த்தாள். இத்தனை வருடங்களுக்குப் பிறகும் நன்றாக அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது. வரு டங்கள் கழிந்த போதும் வயதாகாமல், நிறம் மாறாமல் முன்பைவிட செழுமையாக அழகாக இருந்தாள். அரு கில் இருந்த கணவனின் காதருகே சிரித்து ஏதோ சொல்கையில் வெண் பற்கள் பளிரிட்டன.

ஒலிபெருக்கியில் குரல்கள் ஒலித்தன. "மிஸ் நேகா, ஆங்கர் ஆஃப் ப்ரோகிராம், ப்ளீஸ் கம் டு தி ஸ்டேஜ்."

"மிஸ் நேகா, கம் டு தி ஸ்டேஜ்."

அருகிலிருந்த ஆசிரியை உலுக்கியதும் நேகா அவசரமாக மேடை ஏறினாள்.

தன் வழக்கமான சிரிப்புடன், இனிமையான குரலும், அழகான மொழி உச்சரிப்புமாய் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கலானாள். கலை நிகழ்ச்சிகள் முடிந்ததும் கலெக்டரின் மனைவி மாணவர்களுக்கு பரிசு வழங்க அழைக்கப்பட்டார். மைக்கின் அருகில் நின்றபடி மாணவர்களின் பெயரைச் சொல்லி மேடைக்கு வருமாறு அழைத்த பெண்ணை அப்போதுதான் நன்றாகப் பார்த்தாள். பார்த்ததும் குப்பென்று வியர்த்தது.

கைகளிலிருந்த கோப்பை நழுவி விடும் போலிருந்தது. கர்சீப்பால் நாசூக்காக முகத்தை ஒற்றி எடுத்தவளிடம் "இந்த ஏசி குளிரில் கூட உங்களுக்கு வியர்க்கிறதே!" என்றாள் நேகா வியப்புடன். சுரத்தின்றி பரிசுகளைக் கொடுத்துவிட்டு விழா முடியும் முன்பே தலைவலி என்று கிளம்பியவளிடம் கல்லூரி முதல்வர் நன்றி தெரிவித்தார். அத்துடன் "என்ன ஆச்சரியம் பாருங்கள் மிஸஸ் ராமசந்த்ராம்! நீங்களும் எங்கள் கல்லூரி ஆசிரியை நேகாவும் ஒன்று போலவே இருக்கிறீர்கள். அதுவும் இத்தனை நேரம் மேடையில் அருகருகே நிற்கையில் அக்கா தங்கை அல்லது அம்மா பெண் என்று தான் சொல்லத் தோன்றுகிறது. உலகில் ஒரே மாதிரி ஏழுபேர் இருப்பார்கள் என்று சொல்வது உண்மைதான் போலும்!"



மிஸஸ் ராமசந்த்ராம் என்றழைக்கப்பட்ட சுதா பதிலுக்கு புன்னகைக்கக் கூட மறந்தவளாய் வெளியே விரைந்தாள்.

அந்த வார ஞாயிறு விடுமுறையில் விடுதியில் இருப்பவர்கள் சினிமா, ஷாப்பிங் என்று போய்விட நேகாவுக்கு அந்த மதிய வேளை மிகவும் போரடித்தது. படிக்க ஏதாவது புத்தகம் கிடைக்குமா என ஷெல்பை தேடுகையில் அவளைப் பார்க்க யாரோ வந்திருப்பதாக தகவல் வந்தது. தன்னைத் தேடி வருவதற்கு யார் இருக்கிறார்கள்? ஒருவேளை அப்பாவுக்கு இந்த முகவரி கிடைத்திருக்குமோ என்று யோசித்தபடி ரிசப்ஷனுக்கு வந்தபோது அங்கே சுதா நின்றிருந்தாள்.

நேகா தன் வியப்பை வெளிக்காட்டாமல் "ஹலோ" என்றாள் அவள் அருகே சென்று.

"நேகா... நீ.. நேகாதானே!" சுதா தடுமாறினாள்.

"ஆமா, விழாவில் என் பெயர் சொல்லி அழைத்த போது கேட்டிருப்பீர்களே!" என்றாள் புன்னகையுடன்.

"நான் உன்னிடம் பேசவேண்டும். நான்.. நான் யார் தெரியுமா உனக்கு?" சுதா தடுமாறினாள்.

நேகா கைகளைக் கட்டியபடி அமைதியாய் நின்றிருந்தாள். அவள் முகத்தைப் பார்த்த சுதா கேட்டாள், "உனக்குத் தெரியும், அப்படித்தானே?" நேகா பதில் பேசாமல் தலையசைக்கவும், "நீ எப்போது டெல்லி வந்தாய்? ஏன் ஹாஸ்டலில் தங்கியிருக்கிறாய்? உன் அப்பா எங்கே?" என்றாள் சுதா அவளிடம்.

எல்லா கேள்விகளுக்கும் பொதுவாக நேகா மறுப்புடன் தலையசைத்தாள்.

"அப்படியானால்?" என்றாள் சுதா விளங்காமல்.

"அப்படியானால், நான் ஏதேச்சையாகப் பிறந்தவள். தன்னிச்சையாகத்தான் வாழ வேண்டும். திட்டமிட்டு விரும்பி பிள்ளை பெறுபவர்கள்தான் அதைப் பராமரிக்கவும், அந்தக் குழந்தைக்காக எதையும் விட்டுக் கொடுக்கவும், தியாகம் செய்யவும் தயாராய் இருப்பார்கள்.

"ஓ! நீயும் என் மீதுதான் பழி சுமத்துகிறாய்" என்றாள் சுதா சலிப்பான குரலில். "உன் சிறு வயதில் உன் அம்மாவைப் பற்றி நீ நல்ல விதமாக கேள்விப்பட்டிருக்க மாட்டாய். ஏனென்றால் உன் அம்மாவைப் பற்றி யாருக்குமே தெரியாது. அவளுக்கும் ஒரு மனம் உண்டு. அதில் ஆசைகளும் கனவுகளும் உண்டு என்று கணவனே நினைக்காத போது மற்றவர்களுக்கு எப்படித் தெரியும்? படிக்கும் காலத்தில் நான் தான் அந்தக் கல்லூரியின் ப்யூட்டிகுயின். எங்கள் தெருவிலும், தோழிகளிடமும் உறவுகளிடையேயும் என்னைக் கொண்டாடித்தான் பழக்கம். சொந்தத்தில் பலர் என்னை மணக்க போட்டியிட்ட போது உன் அப்பா சுமாராக இருந்தபோதும் நல்ல வேலையில் இருந்ததால் அவருக்குத் திருமணம் செய்து வைத்தனர். அவர் என்னை வீட்டிலுள்ள மிக்ஸி, கிரைண்டர் போலத்தான் என்னை பாவித்தார். வீட்டைப் பராமரிப்பது என் வேலையாகவும் அலுவலகம் செல்வது அவர் வேலை என்று இயந்திரத்தனமாய் வாழ்க்கை சென்றது. நீ பிறந்த பிறகு இன்னும் வேலை அதிகமாயிற்றே தவிர வீட்டில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை.

என் சின்னச் சின்ன ஆசைகளையும், ரசனைகளையும் பகிர்ந்து கொள்ளவும், கேலி பேசி வாய்விட்டுச் சிரிக்கவும் ஆளின்றி தவித்துப் போனேன். அவர் கவனத்தைக்



கவர நன்றாக உடை உடுத்தினேன். நானே வலிய எதையாவது பேசிச் சிரித்தேன். அது எதிர்மறை பலனையே கொடுத்தது. சும்மாவே என்னைவிட பர்சனாலிட்டி குறைவு என்ற தாழ்வு மனப்பான்மையில் இருந்த உன் அப்பா என்னிடம் எரிந்து விழத் தொடங்கினார். "எதுக்கு இத்தனை பளிச்சினு புடவை கட்டிக்கற? இங்கு என்ன அழகிப் போட்டியா நடக்குது? ஊரெல்லாம் திருட்டு. கழுத்தில் கையில் எதுவும் போடாதே. காலிங் பெல் அடிச்சதும் எதுக்கு ஓடி வர? நான் கூப்பிட்டால் மட்டும் வந்தால் போதும்" என நிற்கவும், நடக்கவும், பேசவும் கூட கட்டுப்பாடுகள் விதித்தார்.

எனக்கு மூச்சு முட்டிப்போன சமயத்தில் எதேச்சையாக என்னுடன் படித்த பழைய நண்பனை ஒரு கடையில் சந்தித்தேன். ஐ.ஏ.எஸ். தேர்வுக்குப் படித்துக் கொண்டிருப்பதாகச் சொன்னான். எங்களுடன் படித்தவர்களைப் பற்றியும், படிக்கும்போது நடந்த கலாட்டாக்களைப் பற்றியும் நேரம் போவது தெரியாமல் பேசினோம். வெகுநாள் கழித்து வாய்விட்டுப் பேசியதும், மனம் விட்டுச் சிரித்ததும் அன்று முழுவதும் உற்சாகமாக இருந்தது.

அடுத்த முறை அந்த கடைக்குச் சென்றபோது கண்கள் என்னை அறியாமல் அவனைத் தேடின. என் எதிர்பார்ப்பை பொய்யாக்காமல் அவன் எனக்காகக் காத்திருந்தான். அடுத்த முறை திட்டமிட்டே சந்தித்தோம். கடையில் வெகு நேரம் பேச முடியாததால் பார்க்கிலும் பீச்சிலும் பேசினோம். நல்ல படங்களாகத் தேர்ந்தெடுத்து பார்த்த பின் அதை காரசாரமாய் விவாதித்தோம். படிக்கும்போதே ஏன் இருவரும் இப்படிப்

பழகவில்லை? ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள வில்லை என வருந்தினோம். "முன்பே உன்னுடன் பழகியிருந்தால் என் வாழ்க்கை சுவாரஸ்யமாக இருந்திருக்கும்" என்று நான் சொன்னபோது அவன் சொன்னான்.

"இப்போதும் உன் வாழ்வை இனிமையாக்கிக் கொள்வது உன் கையில்தான் இருக்கிறது. என்னைப் பொறுத்த வரை நீ. நீ மட்டும்தான் முக்கியமே தவிர உன் கடந்த காலம் எனக்குத் தேவையில்லை. நீயும் அதே போல் நினைத்தால் என்னுடன் வந்து விடு."

நான் திகைத்துப் போனேன். மனசில் ஏற்பட்டுப் போய்விட்ட காதலுக்கும், சமுதாயச் சங்கிலிகளுக்கும் நடுவே ஊசலாடினேன். இதற்கிடையே ராமசுந்தரம் ஐ.ஏ.எஸ். பாஸ் பண்ணினான். டிரைனிங் எடுக்க வடக்கே போவதாகவும், இனி இந்தப் பக்கமே வர சந்தர்ப்பம் இல்லை என்று அவன் சொன்னதும் அதற்கு மேல் யோசிக்காமல் கிளம்பி விட்டேன். தன் பெற்றோரிடம் ராமசுந்தரம் என்னைத் தன்னுடன் படித்தவள், படிக்கும்போதே இருவருக்கும் காதல் என்று சொல்லி அறிமுகப்படுத்தினான். அவர்களிடம் என்னைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை என்று அவன் சொன்னதால் பெற்றோர் யாருமில்லை. அநாதை என்றேன் அவர்களிடம். பெருந்தன்மையான அவனது பெற்றோர் உடனே எங்களுக்குத் திருமணம் செய்து வைத்தனர். டிரைனிங் முடித்து அவன் வரும் வரை அவர்களுடனே தங்கியிருந்தேன். போஸ்டிங் வந்ததும் ஊர் ஊராகப் போக ஆரம்பித்தோம். உன் பாட்டி ஊரில் ஒருமுறை ராமசுந்தரம் சப்கலெக்டராக மூன்று மாதம் பணியில் இருந்தார்.



அப்போது பச்சைநிற பள்ளி சீருடையில் இரட்டைப் பின்னலுடன் உன் தாத்தாவின் கைகளைப் பற்றியபடி நீ பள்ளிக்குப் போவதை ஒரு முறை பார்த்தேன். மீண்டும் உன்னைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையும், அதனால் உன் பாட்டி வீட்டிலும், ராமசுந்தரத்தினுடனான என் வாழ்க்கையிலும் ஏற்படப் போகும் சலசலப்பைப் பற்றிய பயமுமாக நான் நாட்களைக் கடத்தியபோது ராமசுந்தரத்திற்கு ப்ரமோஷனுடன் டெல்லிக்கு ட்ரான்ஸ்பர் வந்தது. இத்தனை வருடங்கள் கழித்து உன்னை இங்கு சந்திப்பேன் என்று நான் நினைக்கவேயில்லை. உன் கல்லூரி ஆண்டு விழாவில் நான் கலந்து கொண்ட பிறகு பலர் உனக்கும் எனக்குமுள்ள உருவ ஒற்றுமையைப் பற்றி பேசுகிறார்கள். என்னிடம் எதையுமே எதிர்பார்க்காமல் என்னை மணந்து ஒரு அருமையான குடும்ப வாழ்க்கையை அளித்தவர் ராமசுந்தரம். சமூகத்தில் உயர்ந்த பதவியில் இருக்கும் அவருக்கு என்னால் எந்த அவப் பெயரும் வந்துவிடக் கூடாது."

நேகா கூர்ந்து கவனிக்க அவளின் நேரான பார்வையைத் தவிர்த்த சுதா சில நிமிட அமைதிக்குப் பின் சொன்னாள். "எனக்கும் ராமசுந்தரத்திற்கும் பிறந்த குழந்தைகள் ஆணும் பெண்ணுமாய் இரண்டு பேர் இருக்கிறார்கள். முழுக்க அப்பாவின் சாயலிலேயே இருக்கும் அவர்கள் உன்னைப் போல் ஒரு பெண் இருப்பதாகக் கேள்விப்பட்டோம்.

அவளைப் பார்த்தே ஆக வேண்டும் என அடம் பிடிக்கிறார்கள். ராமசுந்தாம் இந்த விழாவிற்கு வந்து விட்டு வந்ததிலிருந்து அதிகம் பேசாமல் அமைதியாகவே இருக்கிறார். உன்னைப் பார்த்த பின் ஏற்பட்ட

அதிர்ச்சியால் நான் அமைத்துக் கொண்ட குடும்பத்தின் அஸ்திவாரம் என் கண் முன்னாலேயே ஆட்டம் காணத் தொடங்கியிருக்கிறது.'' சற்று நிறுத்தி சுதா தொடர்ந்தாள். ''இதே ஊரில் நீ இருந்தால் உன்னைப் பார்க்கும் போதெல்லாம் அவர் மனதில் சஞ்சலம் ஏற்படும். தவிர நம் உருவ ஒற்றுமையைப் பற்றி சந்தேகப்பட்டு யாராவது குடைய ஆரம்பித்தால் குடும்பத்திற்குள்ளும் வெளியிலும், அவருக்கு அவப்பெயரை ஏற்படுத்தும். அதனால்...''

மேற்கொண்டு சுதா பேசும்முன் நேகா குறுக்கிட்டாள்.

''மனிதர்கள் ஏன் இத்தனை சுயநலமாய் இருக்கிறார்கள்? ஐந்தறிவு மிருகங்கள் கூட தன் குட்டியைப் புறக்கணிப்பதில்லை. நீ விரும்பியவருடன் வாழ்வது உன்னுடைய உரிமை. சரிதான். ஆனால் பிடிக்காத கணவனுடன் ஏன் பிள்ளை பெற்றுக் கொண்டாய். இப்போது உன் இரண்டு குழந்தைகளின் நலனுக்காக என்னிடம் பேசும் நீ உன் காதலனிடம் என் முதல் குழந்தையையும் ஏற்றுக் கொண்டால்தான் உன்னுடன் வருவேன் என்று ஏன் சொல்லவில்லை? ஏனென்றால் தாய்மையை மீறிய சுயநலம் உனக்கு.''

சுதா கோபத்துடன் சீறினாள். ''நம் சமுதாயத்தில் ஒரு ஆண் எப்போதும் தனக்குப் பிடித்த வாழ்க்கையை வாழலாம். அதையே ஒரு பெண் செய்தால் சமூகம் கேள்வி கேட்கும். ஒரு குழந்தையைப் பற்றிய பொறுப்பு அதன் அப்பா அம்மா இருவருக்கும்தான் உண்டு. ஆனால் உன் அப்பா தன் பொறுப்பை தட்டிக் கழிக்கையில், தகாத உறவு கொள்கையில் அவர் பெற்றோரோ, நீயோ கூட கேள்வி கேட்க மாட்டீர்கள். ஏனென்றால் அவர் ஆண்.



கருணையே இல்லாத சமூக அமைப்பு இது நேகா. கலாச்சாரத்தைப் பற்றி வாய் கிழியப் பேசுகிறாமே அதற்கெல்லாம் உண்மையில் பொருள் ஏதாவது இருக்கிறதா? நம்மை சுரண்டுகிற விஷயங்களைப் பத்தின விழிப்புணர்வு இல்லாதவரை நம்மகிட்ட இருக்கிற பொக்கிஷங்களும் மதிப்பே இல்லை.''

''எக்ஸ்யூஸ் மீ மேடம்...'' நேகாவின் மாணவிகள் இருவர் தயக்கத்துடன் குறுக்கிட்டனர். ''நாங்கள் உங்களுக்காக லாபியில் காத்திருக்கிறோம். மேடம் நீங்கள் பேசி முடித்துவிட்டு வாருங்கள்'' என அவர்கள் லாபியை நோக்கி நடக்க, ''நானும் வருகிறேன்'' என்ற நேகாவும் அவர்களுடன் நடந்தாள்.

விடைபெறக் கூட விருப்பமின்றி திரும்பிச் செல்லும் நேகாவின் நளினமான உடலையும், கரிய பந்தாய் முதுகில் புரண்ட கூந்தலையும் செழுமையான முதுகையும் பார்த்துக் கொண்டு அப்படியே நின்றிருந்த சுதாவின் கண்களிலிருந்து நீர் வழிந்து பார்வையை மறைத்தது.

நேகா அதற்குப் பின் தன் தாயைச் சந்திக்கவே இல்லை. அவளுக்கு போன் வந்திருப்பதாகவும், பார்க்கக் காத்திருப்பதாகவும் பலமுறை தகவல் வந்தும் அவள் யாரையும் போய் பார்க்கவில்லை.

என்ன உலகம் இது! எப்படிப்பட்ட மனிதர்கள் இவர்கள்! எங்கே போனாலும் யாரையாவது சந்தித்துக் கொண்டு.. எதையாவது பேசிக் கொண்டு.. உலகம் உருண்டை என்பதற்கிணங்க சுற்றிச் சுற்றி எல்லோரும் ஒரே இடத்திற்குத்தானே வருகிறோம்! எங்கே போனாலும் நாடெங்கும் சுற்றி வரும் மாவட்ட ஆட்சியர்

கண்ணில் பட சான்ஸ் இருக்கிறதே! நேகா டி.வி.யை ஆன் பண்ணி திரையை வெறித்தாள். மனம் எங்கோ லயித்திருக்க விரல்கள் தன் போக்கில் ரிமோட் பட்டன்களில் தாவித்தாவி விளையாடின. டி.வி. திரையில் நீலக்கடல் கண் முன் விரிந்தது. கடலுக்கு நடுவே பனிப்பாறைகளும், கூட்டமாய் அழகு நடை நடக்கும் பெண்குயின்களும் சீல்களும், ஆற்றில் துள்ளும் மீன்களும் கருத்தைக் கவர்ந்தன. அடுத்த இரண்டு மணி நேரம் நேகா ஜியாகிரபிக் சேனலில் ஆழ்ந்து போனாள். இன்டர்நெட்டில் அலாஸ்கா பற்றிய விபரங்களையும், அங்கு தனக்கு வேலை வாய்ப்புக்கான சாத்தியங்களையும் அலசினாள். யார் கண்ணிலும் படாமல் உலகின் கடைகோடிக்கு சென்று விடுவதென முடிவு செய்தாள். அலாஸ்கா யுனிவர்சிட்டிக்கு அனுப்பிய ஈ.மெயிலுக்கு வேலையில் சேர வருமாறு பதில் வரவும் உடனடியாகக் கிளம்பினாள். பிறந்ததிலிருந்து தன்னால் எங்கும் நிரந்தரமாக இருக்க முடியவில்லை என்ற ஏக்கம் மனதை அழுத்தியது.

கிளம்புகையில் கல்லூரி முதல்வர் சொன்ன வார்த்தைகள் காதில் ஒலித்தன. "நேகா நீ எப்போது வேண்டுமானாலும் இங்கே திரும்பி வரலாம். உன்னைப் போல் திறமையான ஆசிரியைகளுக்கு இங்கு எப்போதும் ஒரு இடம் காலியாக இருக்கும்."

ஒரு ஆசிரியை, மாணவி அல்லது தோழி என்பதைத் தவிர அவளை தன்னுடன் இணைத்துக் கொள்ள அங்கே எந்த உறவும் இல்லை. நேகா சோர்வுடன் கட்டிலில் சாய்ந்து கண்களை மூடினாள்.



# 2



நேகா தலையில் அணிந்திருந்த உல்லன் தொப்பியை சரியாக இழுத்து விட்டாள். ஜனவரி மாதக் கடுங்குளிர் அணிந்திருந்த 'டான்' கோட்டைத் தாண்டி உடம்பை முள்ளாகக் குத்தியது. பனியில் நடக்கவென்றே பிரத்யேகமான ஷூவை அணிந்து, ஷூக்களுக்கு கீழே முள் வைத்த ஸ்ட்ராப்புகளையும் கட்டிக் கொண்டு, இரண்டு கைகளிலும் க்ளவுஸுக்கு மேல் க்ளவுஸ் அணிந்த கைகளில் சாமான்கள் அடங்கிய பையுடன் நடப்பது சிரமமாக இருந்தது. நடைபாதை முழுவதும் பனி குவியல் குவியலாகக் கிடந்தது. அதனால் வாகனங்கள் செல்ல இடமின்றி நடப்பவர்களை உரசியபடி சென்றது. நேகா முடிந்தவரை பாதையின் ஓரமாக நடந்தாள். எத்தனை கவனமாய் நடந்தபோதும் ஒரு இடத்தில் பிடிமானம் இன்றி தரை வழுக்கியது. பற்றிக் கொள்ள எதுவும் கிடைக்காமல் தடுமாறி நேகா கீழே விழுந்தாள். கையில் பிடித்திருந்த பை நழுவி சாலையில் பொருட்கள் சிதறின.

நேகா அவசரமாக எழ முற்பட்டாள். ஐஸ்சில் கைகள் பதியாமல் வழுக்கியது. இப்போது எப்படி எழுவது என்ற திகைப்புடன் சுற்றிலும் பார்க்கையில் அவள் முன்னே ஒரு கரம் நீண்டது. நேகா நிமிர்ந்து பார்த்தாள்.

"ஹேய், கெட் அப் க்விக்" என்றான் அவன்.

தன் முன்னே நின்றிருந்த உயரமான கால்களையும் நீலநிற கோட்டில் பளிரென்றிருந்த அவன் முகத்தையும் பார்த்துத் திகைத்துப் போனவளாய் நேகா அமர்ந்திருக் கையில் அவன் விரட்டினான்.

''என் கைகளைப் பிடித்துக் கொண்டு எழுந்து நில். இல்லை என்றால் பனியில் விறைத்துப் போவாய்.''

நேகா அதற்கு மேல் தாமதிக்காமல் எழுந்து நிற்க கீழே சிதறியிருந்த அவள் பொருட்களை சேகரிக்க அவன் உதவி செய்தான். ஷாப்பிங் பைகளை அவளிடம் கொடுத்துவிட்டு ''ஆர் யு ஓகே?'' என்றான் திரும்பத் திரும்ப.

பலரும் பார்க்கும்படி தெருவில் விழுந்திருக்கிறோம் என்ற சங்கடத்துடன் நேகா தலையசைத்தாள்.

கூச்சத்தில் சிவந்திருந்த அவள் முகத்தைப் பார்த்த அவன் புன்சிரிப்புடன் சொன்னான். ''இங்கே கீழே விழா மல் நடப்பவர்கள் யாருமே இல்லை. அதனால் விழு பவர்களுக்கு மற்றவர்கள் உதவி செய்வார்களே தவிர யாரும் சிரிக்க மாட்டார்கள். எனக்குக் கூட ஒருமுறை ஐஸில் விழுந்து எலும்பு முறிந்திருக்கிறது.''

தன்னை உற்சாகப்படுத்தவே அவன் விளக்கம் சொல்வதை உணர்ந்த நேகா, ''நன்றி. இனி ஜாக் கிரதையாக இருப்பேன்'' என்று புன்னகைத்து விட்டு நடக்கத் தொடங்கினாள்.

ரோட்டைக் கடந்து எதிர்புறமாக திரும்பி நடந்தால் பத்து நிமிடத்தில் யுனிவர்சிட்டி காம்பஸ் வந்துவிடும். நேகா வெகு ஜாக்கிரதையாக வலதுபுறம் பார்த்துவிட்டு ரோட்டைக் கடக்கையில் இடதுபுறமாக ஒரு வண்டி



பெரிய ஹாரனுடன் விரைந்தது. பின் வாங்கி பழைய இடத்திற்கே வந்த நேகா மீண்டும் ரோடை கவனித்து விட்டு சாலையின் பாதி தூரம் செல்கையில் பெரிய ட்ரக் ஒன்று எதிரே வர நேகா மீண்டும் நடைபாதைக்கே திரும்பி வந்தாள்.

பதினைந்து நிமிடங்களாக ரோடை கடக்க அவள் படும் அவஸ்தையைப் பார்த்து, அவளுக்கு எழுந்து கொள்ள உதவி செய்தவன் அவள் அருகே வந்தான்.

''ஒரு பாதையை கடக்கும் முன் வாகன விதிமுறை களைத் தெரிந்து கொள்ள வேண்டும்'' என்றான் அவளிடம்.

''தெரியும். அதனால்தான் வலதுபுறம் சென்றேன்.''

''ஆனால் இங்கு இடதுபுறமாகத்தான் வண்டி ஓட்டு கிறார்கள் என்பதைக்கூட நீ கவனிக்கவில்லையா?''

சாலையில் விரையும் வாகனங்களை அப்போதுதான் உற்றுப் பார்த்த நேகா ''ஆமாம். நான் கவனிக்காமல்தான் போனேன்'' என்றாள் லேசாக தன் தலையைத் தட்டிய படி.

''சரி என்னுடன் வா'' என சகஜமாக அவன் அவள் கைகளைப் பற்றி ரோடை கடக்க உதவி செய்தான்.

''தேங்க்யூ. தேங்க்யூ வெரிமச்'' என்றாள் நேகா ஒரு வழியாய் சாலையைக் கடந்த திருப்தியுடன்.

''இத்தனை நன்றிகள் அவசியமில்லை. மற்ற நாடு களைப் போல் இங்கு வாழ்க்கை முறை இலகுவாக இல் லாததால் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்வது இயல்பான விஷயம்தான்'' என்றான் சகஜமாக.

"ஓ! இந்த ஊர் எத்தனை அழகானது! மனிதர்கள் எத்தனை நல்லவர்கள்!" என்றாள் நேகா மகிழ்ச்சியுடன் சிரித்து.

அணிந்திருந்த உல்லன் தொப்பிக்குக் கீழே சுருண்டு முகத்தில் விழுந்த முடியை ஒதுக்கியபடி அவள் சிரிக்கையில் சிவந்த இதழ்கள் விரிந்து வெண் பற்கள் மின்னலாய் ஒளிர்ந்தன.

அவன் தன்னையறியாமல் சொன்னான். "நீ சொன்ன ஊரையும், மனிதர்களையும் விட நீ அழகானவள். கவனமாகச் செல். பனியில் அதிக நேரம் வெளியே செலவிடுவது நல்லதல்ல."

நேகா பார்த்துக் கொண்டிருக்கையிலேயே அவன் மறுபடி ரோடை கடந்து எதிர்புற நடைபாதையில் வேகமாய் நடந்து போனான். லேசாக வீச ஆரம்பித்த காற்று இத்தனை நேரம் நேகா மறந்திருந்த குளிரை நினைவூட்டியது. அதற்கு மேல் தாமதிக்காமல் நேகா நடந்து சென்று குவார்ட்டர்சை அடைந்தாள். ஹீட்டரை ஆன் செய்து விட்டு கம்பளி உடுப்புகளை மாற்றுகையில் தோன்றியது. அவன் பெயரைக் கேட்கவே இல்லையே!"

* * *

நந்தகிஷோர் விசிலடித்தபடி உடை மாற்றிக் கொண்டிருந்தான். "இத்தனை நேரம் எங்கே போயிருந்தாய்? விடுமுறை நாளிலாவது வீட்டில் இருக்கக் கூடாதா? இந்த குளிரில் உனக்கு மட்டும் வெளியே என்னதான் வேலையோ?" அனுசுயா பேசியபடியே உணவை சூடு பண்ணி டேபிள் மீது வைத்தாள்.

"இளம் வயது பையன்களுக்கு எத்தனையோ வேலை இருக்கும். உன்னைப் போன்ற கிழவிகளுக்கு அதைப்



பற்றி என்ன தெரியும்?" சுமன் மனைவியைச் சீண்டினார்.

"நான் கிழவியா? நீங்கள்தான் இளைஞனாயிற்றே! நீங்களே, சொல்லுங்கள் இவனுக்கு இத்தனை நேரம் என்ன வேலை என்று!" என்றாள் அனுசுயா.

"தங்கள் காதலியைச் சந்திக்கவும், காதல் செய்யவும் ஏற்ற நேரம் இதுதான். அப்படித்தானே கிஷோர்?" என்றார் சுமன்.

அந்த கிஷோர் சிரித்தபடி டைனிங் டேபிளில் அவர்கள் எதிரே அமர்ந்தான். "நீங்கள் சொல்வது உண்மைதான் அப்பா. ஆனால் நான் எந்தப் பெண்ணையும் காதலிக்காததால் எனக்கு எல்லா நேரமும் ஒன்றுதான்."

"வாட் எ பிட்டி?" அலாஸ்காவில் அழகான பெண்களுக்கா கொஞ்சம்?" என்றார் சுமன் ரொட்டியில் வெண்ணெயைத் தடவியபடி. நந்தகிஷோருக்கு சற்று முன் தான் சாலையில் சந்தித்த பெண்ணின் நினைவு வந்தது. தலையிலிருந்து கால்வரை கனமான உடுப்பு போர்த்தியிருந்த போதும் முழு நிலவாய் பனிரிட்ட அந்த முகமும் சிரிப்பும் அப்படியே நினைவில் வந்தது. பெயரைக் கூட கேட்காமல் போனோமே என்று நினைத்தபடி சாப்பிடத் தொடங்கினான். நந்தகிஷோரின் அப்பா அலாஸ்காவின் கறுப்புத் தங்கம் என்று சொல்லப்படும் கடலிலிருந்து ஆயில் எடுக்கும் கம்பெனியில் வேலை பார்த்தார். அலாஸ்காவின் உச்சியான 'புருடபே' என்னும் இடத்தில் அவர் வேலை பார்க்கும் 'ரிக்' இருந்தது. ஆளே இல்லாத பனி உறைந்த ஆர்டிக் கடல் பகுதியில் தொடர்ந்து வேலை செய்வது கடினம் என்பதால் மாதத்தில் இரண்டு வாரம் வேலை செய்தால் மீதி இரண்டு

வாரம் வீட்டிற்குச் சென்று வர விடுமுறை அளிக்கப்படும். எனவே சுமன் மாதத்தில் பாதி நாள் ஆங்கரேஜ் நகரிலும் மீதி நாள் புருடபேயிலும் கழித்தார். அவர் மனைவி அனுசூயா இங்கு செட்டில் ஆகி வெகுநாட்கள் ஆகிவிட்ட போதும் இன்னும் தன் இந்தியத் தனங்களிலிருந்து விடுபடாதவள். நெய் சப்பாத்தியும் சன்னா மசாலாவும் மணக்கும் சமையலறையும், பஜன்களும், வாயிலில் ரங்கோலியும், விரல்களில் படர்ந்திருக்கும் மருதாணி சிவப்புமாக, டிபிக்கல் வட இந்திய குடும்பம் அவர்களுடையது. முதலில் நந்தகிஷோரும் பிறகு பூஜாவுமாக இரண்டு குழந்தைகள் பிறந்த பிறகும் அந்த வீடு மாறாமல் அப்படியே இருந்தது.

சுறுசுறுப்பும், பரபரப்புமான நகர வாழ்க்கையை விரும்பும் பூஜாவுக்கு அலாஸ்காவின் அமைதியும் ஐஸ்சும் போரடித்துப் போய் விட்டது. பெற்றோர் பார்த்த வரனை திருமணம் செய்து கொண்டு ப்ளோரிடா போனவள் அங்கேயே செட்டில் ஆகி விட்டாள். பூஜாவிற்கு நேர் மாறாய் நந்தகிஷோரை அலாஸ்கா காந்தம் போல் ஈர்த்தது. பைலட் டிரைனிங் முடித்த அவன் பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட சிறிய ரக புஷ் விமானங்களில் உயிர்களே வசிக்க முடியாத சிகரங்களைச் சுற்றி வருகிறான். நந்தகிஷோர் உணவை முடித்துக் கொண்டு எழுந்து போனதும் அனுசூயா கணவனிடம் சொன்னாள்.

''அப்பாவும், மகனுமாய் நீங்கள் இருவரும் காடுகளையும் சிகரங்களையுமே சுற்றிக் கொண்டிருப்பதால் கொஞ்சமும் பொறுப்பே இல்லாமல் போய்விட்டது.''

''அப்படி என்ன பொறுப்பில்லாமல் நடந்து கொண்டோம்?'' என்றார் சுமன் வியப்புடன்.



''நந்தகிஷோர் வேலை பார்க்க ஆரம்பித்து சில வருடங்கள் ஆகி விட்டன.''

''அப்படியா?'' என்றார் சுமன் கேலியாக.

''நந்தகிஷோருக்கு திருமணம் செய்ய வேண்டும் என்பதாவது உங்களுக்கு நினைவிருக்கிறதா?'' என்றாள் அனுசூயா கோபத்துடன்.

சுமன் சிரித்தபடி மனைவியின் தோளைத் தட்டினார். ''ஈஸி அனு. வயது வந்த ஆண் பிள்ளையின் திருமணம் பற்றி நீ கவலைப்படுவதை நம் அருகில் இருப்பவர்களிடம் சொல்லிப்பார். கேலி பேசிச் சிரிப்பார்கள்.''

''சிரிக்கட்டும். அதைப் பற்றி எனக்கு அக்கறை இல்லை. நான் அவனுடைய அம்மா. எனக்கு என் பிள்ளையைப் பற்றிய கவலை இருக்கத்தான் செய்யும். நாம் பேசாமல் ப்ளோரிடா போய்விடலாம். அல்லது இந்தியாவில் செட்டில் ஆனாலும் நல்லதுதான். இங்கேயே இருந்தால் அவனுக்கு எப்படி கல்யாணம் நடக்கும்? எங்கே போய் பெண்ணைத் தேடுவோம்?''

''எல்லாம் நடக்க வேண்டிய சமயத்தில் தானாக நடக்கும். அவனே ஒரு பெண்ணை அழைத்து வந்து உன் முன் நிறுத்தப் போகிறான் பார்.''

''இங்கே அப்படி எந்தப் பெண் இருக்கிறாள்? அவன் செல்லும் விமானத்தில் எதிர்படும் எக்ஸிமோ கிராமத்திலிருந்து ஒரு பெண்ணை பிடித்து வந்து சுறாவையும், திமிங்கலத்தையும் பச்சையாக சாப்பிட நம் நிலைமை என்னாவது?'' என்றாள் அனுசூயா சிரிப்புடன்.

''அப்படி எதுவும் நடக்காது. அவனுக்கென்று பிறந்த பெண், எங்காவது வளர்ந்து அவனுக்காக காத்திருப்பாள்'' என்றார் சுமன்.

* * *

நேகா வெகுநேரமாய் காத்திருந்தாள். அவளிடம் படிக்க வருவதாகச் சொல்லியிருந்த அவள் வகுப்பு பெண்கள் இரண்டு பேர் இன்னும் வரவேயில்லை.

"நேகா, நீ இன்னும் கிளம்பவில்லையா?" என்றாள் மாதவி.

மாதவி இந்தியாவில் ஆந்திரப்பிரதேசத்தைச் சேர்ந்தவள். கணவர் விஞ்ஞானி. அவரது ஆராய்ச்சி பணிக்காக பல வருடங்கள் முன்பு இங்கு வந்து தங்கி விட்டவர்கள் அவர்கள். மாதவி யுனிவர்சிட்டியில் இயற்பியல் பேராசிரியை ஆக வேலை பார்க்கிறாள். வந்த முதல் நாளிலேயே நேகாவுடன் நட்பாகப் பழகினாள்.

நேகா மாதவியைப் பார்த்துப் புன்னகைத்தாள். "பெர்னடின், பிருஸா என இரண்டு பெண்கள் இன்று படிக்க வருவதாகச் சொல்லியிருந்தார்கள். இன்னும் வரவில்லை."

"யார் அந்த எக்ஸிமோ பெண்களா?" மாதவி கடகட வெனச் சிரித்தாள். "நல்ல ஜோக். வீடு தேடிப் போய் பாடம் நடத்தினாலும் படிக்காத கூட்டம் அவர்கள்."

"அப்படிச் சொல்ல முடியாது மாதவி. ஒரு சில எக்ஸிமோக்கள் படித்து கார், வீடு என வசதிகளுடன் இருப்பதை நான் பார்த்தேன். அவர்களின் காரில் எழுதப்பட்டிருந்த வாசகம்தான் எனக்கு ஆச்சரியமாக இருந்தது. "எங்கள் நாட்டில் விசா விதிகள் முறையாக இல்லாததால் அதை அந்நியருக்கு தாரை வார்த்து விட்டோம்" என்ற வரிகள் கார்களில் எழுதப்பட்டிருந்தது."

"இது எக்ஸிமோக்களின் பரம்பரை பூமி நேகா. பல நூறு வருடங்களாக இங்கு கரடிகளும் அவர்களும்தான்



வசித்து வந்தார்கள். ஒரு முறை வழி தவறிப் போய் இங்கு வந்த ரஷ்ய கப்பலில் இருந்தவர்கள் தரையிறங்கிய போதுதான் இந்த நாட்டை அடையாளம் தெரிந்து கொண்டார்கள். இங்குள்ள ஆற்றுப் படுகைகளில் தங்கம் கிடைத்ததால் கூட்டம் கூட்டமாக மக்கள் இங்கு வந்து குடியேறினர். ரஷ்ய அரசாங்கம் அலாஸ்காவை தன் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்தது. ஆனால் நாளடைவில் அதனால் நிர்வகிக்க முடியாமல் அமெரிக்காவிற்கு விற்று விட்டது. அப்போது 'யார் பூமியை யாருக்கு விற்பது?' என எக்ஸிமோக்கள் அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். எனவே எக்ஸிமோக்களின் இடத்தைப் பறித்துக் கொண்ட அமெரிக்க அரசு பதிலாக இங்கு ஆயில் மூலம் கிடைக்கும் வருமானத்தை அவர்களுக்குப் பங்கிட்டுத் தருகிறது.

மீன் பிடிக்கவும் கல்வியிலும் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கிறது. கடலில் வேட்டையாடவும், காட்டு மிருகங்களைப் பிடிக்கவும் அவர்களுக்கு தடை விதித்த அரசு, வருமானத்திற்கு அவர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுப்பது, உணவுப் பொருட்களை கடையில் சென்று வாங்கி சமைப்பது என நாகரீக வாழ்வை கற்றுக் கொடுக்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளானது."

"நல்ல விஷயம்தானே!" என்றாள் நேகா.

"நல்ல விஷயம்தான். ஆனால் அதை ஏற்றுக் கொள்ளும் மனோபாவம் பலரிடம் இல்லை. இயற்கையை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்று வாழ்ந்தவர்கள், இன்று அரசாங்கம் தரும் பென்ஷனில் மொடாக் குடியர்களாகி விட்டார்கள்."

''உலகத்தில் மாறாதது எதுவுமே இல்லை மாதவி. கடலும், மலையும் நிலமுமே மாறும்போது மனிதர்கள் மாறமாட்டார்களா? நிச்சயம் மாறுவார்கள். அடுத்த தலை முறை எக்ஸிமோக்கள் இந்த யுனிவர்சிட்டியிலும், விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடத்திலும் பணியாற்றுவார்கள்'' என்றாள் நேகா.

''நேகா, இங்கே ஆர்டிக் கடல் அருகே 'போரா' போன்ற இடங்களில் வசிக்கும் எக்ஸிமோக்கள் குழந்தைகளுக்குப் படிப்பறிவை கொடுக்க ஒரு பள்ளிக்கூடம் கட்டப் பட்டது. ஒவ்வொரு செங்கல்லும் விமானம் மூலம் கொண்டு செல்லப்பட்டு பல கோடி டாலர் செலவில் உருவான அந்த பள்ளியினால் பெரிய பலன் எதுவும் ஏற்பட வில்லை.''

''சில சமயம் அரசாங்கங்களால் முடியாதது, ஆசிரியர்களால் முடியலாம் மாதவி.''

''உன் தன்னம்பிக்கைக்கு என் வாழ்த்துக்கள் நேகா. ஆனால் இப்போது உன் அறைக்குக் கிளம்பு'' என்ற மாதவி வாயிலில் வந்து நின்ற காரைப் பார்த்ததும், ''என் கணவர் வந்து விட்டார் என்று நினைக்கிறேன் நீ போய் சாப்பிட்டு விட்டு தூங்கு. நாளைப் பார்க்கலாம்'' என்று கிளம்பிப் போனாள்.

நேகா யோசனையுடன் நடந்தாள். நேகா முதலில் அந்தப் பெண்களை கடைத்தெருவில்தான் எதேச்சையாகச் சந்தித்தாள். நகரின் மத்தியில் டூரிஸ்ட்டுகள் அதிகம் தங்கியிருக்கும் down town என்ற இடத்திற்கு நேகா ப்ரெட் வாங்கப் போனபோது அங்கு எல்லா கடைகளிலும் ப்ரெட் இன்னும் வரவில்லை. ஒரு வாரம் ஆகும் என்றார்கள். இத்தனை பெரிய ஊரில் ப்ரெட் கூட



இல்லையா என்ற திகைப்பும், ஒரு வாரம் எப்படிச் சமாளிப்பது என்ற யோசனையுமாக நேகா நின்றிருந்த போது இரண்டு பெண்கள் அவளைப் பார்த்துவிட்டு அருகில் வந்தார்கள். ''நீங்கள் ப்ரெட் தேடுகிறீர்களா?'' என்றார்கள் கொச்சையான ஆங்கிலத்தில்.

அகலமான முகமும், குட்டையான உருவமும், மஞ்சள் நிறமுமாய் பார்த்தவுடனே எக்ஸிமோ பெண்கள் என்பது புரிந்தது. இதுவரை தான் ஹிஸ்டரி புத்தகங்களில் மட்டுமே படித்திருந்த எக்ஸிமோக்களை நேரில் சந்தித்து விட்ட உவகையுடன் நேகா அவர்களையே பார்த்தபடி நின்றிருந்தாள்.

அந்தப் பெண்கள் நேகாவை சற்றுத் தொலைவிலிருந்த க்ராக்கரி ஷாப்புக்கு அழைத்துப் போனார்கள். அங்கு விதவிதமாய் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ப்ரெட்களை வாங்கிக் கொண்டு நேகா வெளியே வருகையில் அந்தப் பெண்கள் போய் விட்டிருந்தனர்.

அதற்குப் பிறகு நேகா பலமுறை அந்தப் பெண்களை கடை வீதியில் சந்தித்தாள். சிரித்தபடி ''இன்று உங்களுக்கு ப்ரெட் கிடைத்ததா மேடம்?'' என்பார்கள்.

ஒரு நாள் எதிர்பாராமல் அந்த பெண்களை தன் வகுப்பறையில் பார்த்த நேகா வியப்படைந்தாள். ''என் க்ளாஸ்தானா நீங்கள் இருவரும். ஆனால் உங்களைப் பார்த்தால் படிக்கிற பெண்களைப் போல தெரியவில்லையே! ஏன் இத்தனை நாள் க்ளாசுக்கு வரவில்லை. கடை வீதியைச் சுற்றிக் கொண்டிருக்கிறீர்கள்'' என்றாள் அவர்களிடம்.

அதற்கு உடனே பதிலளிக்காமல் அந்த பெண்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''எங்கள் குடும்பத்தில் அதிகமாக யாரும் படிக்க மாட்டார்கள். நாங்கள் இருவரும் மிகுந்தப் போராட்டத்திற்குப் பிறகுதான் கல்லூரி வரை வந்திருக்கிறோம். எங்கள் பெற்றோர்கள் கரீபு, கரடி, ஓநாய், திமிங்கலங்களை வேட்டையாடி அவற்றின் எலும்பிலிருந்து ஊசி, பர்னிச்சர்களையும் தோலிலிருந்து அலங்காரப் பொருட்களையும் செய்வார்கள்.

நாங்கள் அதை டூரிஸ்ட்களிடம் விற்பனை செய்வோம். அவர்களுக்கு ஆங்கிலம் தெரியாது என்பதால் நாங்கள்தான் இந்த வேலையைச் செய்தாக வேண்டும். அதனால் சீஸன் சமயங்களில் டூரிஸ்ட்கள் அதிகம் வரும்போது எங்களால் கல்லூரிக்கு வர முடியாது.''

''எந்தக் காரணத்திற்காகவும் வகுப்பை மிஸ் பண்ணக் கூடாது. எத்தனை நாளைக்குத் தெருத் தெருவாய் போய் வியாபாரம் செய்ய முடியும்? நீங்கள் இருவரும் படித்து நல்ல வேலை பார்க்க வேண்டாமா?'' என்றாள் நேகா அவர்களிடம்.

அந்தப் பெண்களின் கண்களில் ஆர்வமும் வருத்தமும் ஒன்றாய் தெரிந்தது. ''அரசு சலுகையில் அந்த பள்ளியில் படிக்கையில் அங்குள்ள அமெரிக்க குழந்தைகள் எங்களுடன் நட்பாகப் பழக மாட்டார்கள். மற்றவர்கள் முன் மிகவும் தாழ்மையாக உணர்வதால் சில சமயங்களில் படிக்கச் செல்லவே எங்களுக்குப் பிரியம் இருப்பதில்லை. ஆனால் உங்களைப் போன்றவர்களைப் பார்க்கையில் எங்களுக்கும் இதுபோல் படித்து வேலை பார்க்க வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது.''

''வெரிகுட்'' என்றாள் நேகா, அவர்கள் முதுகைத் தட்டி-



''படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை மட்டும் எப்போதும் விட்டுவிடக்கூடாது. உங்களுக்கு படிப்பு சம்பந்தமாய் என்ன உதவி வேண்டுமானாலும் எந்த நேரமானாலும் தயங்காமல் என்னைக் கேட்கலாம். நன்றாகப் படிக்கும் மாணவர்களை யாரும் எந்தக் காரணத்திற்காகவும் புறக்கணிக்க முடியாது. நீங்கள் புத்திசாலியாக இருந்தால் எல்லோரும் உங்களிடம் சிநேகம் கொள்ள ஆசைப்படுவார்கள்.''

அவர்கள் இருவர் முகமும் நேகா சொன்னதைக் கேட்டதும் பளிச்சென்று மலர்ந்தது.

அன்றிலிருந்து அவர்கள் தவறாது கல்லூரிக்கு வந்தார்கள். வகுப்பு முடிந்த பிறகும் நேகாவிடம் வந்து தங்கள் சந்தேகங்களைக் கேட்பார்கள். செய்முறை அறிவு அதிகம் இருந்த அவர்களுக்கு ஆங்கில இலக்கணம் மூளைக்குள் ஏற மறுத்தது. ஒரு பக்கத்தை படிக்க பல மணி நேரம் ஆனது. நேகா அவர்களை உற்சாகப்படுத்தி எளிதாக நினைவில் வைத்துக் கொள்ளும்படியாக சில குறிப்புகள் கொடுத்தாள். படித்து முடித்ததும் ''ஓ! மேடம். நீங்கள் மிகவும் புத்திசாலி. எங்களால் எளிதாக இப்போது படிக்க முடிகிறது. நீங்கள் டீச்சராகக் கிடைத்தது எங்கள் அதிர்ஷ்டம்'' என்பார்கள், மகிழ்ச்சியில் குதித்தபடி.

சின்ன விஷயங்களுக்கும் மலர்ந்து போகும் அந்த முகங்களை ரசித்தபடி ''நீங்கள் இருவரும் சகோதரிகளா?'' என்றாள் நேகா.

''இல்லை தோழிகள். அடுத்தடுத்த நாளில் பிறந்தவர்கள். பிறந்ததிலிருந்து ஒன்றாகவே இருக்கிறோம்'' என்றார்கள்.

பொதுவாக எக்ஸிமோக்கள் தங்களுக்குள்ளேயே கூட்டமாக வாழ்பவர்கள், மற்றவர்களிடம் பேசவோ, பழகவோ ஆர்வம் காட்ட மாட்டார்கள் என்று நேகா கேள்விப்பட்டிருந்தாள். இங்கு வந்த பிறகு அது உண்மை தான் என்பதையும் அறிந்து கொண்டிருந்தாள். தங்கள் இனத்திற்கு நேர்மாறான இயல்புடன் இந்த பெண்கள் கலகலப்பும் அந்நியோன்னியமுமாய் இருப்பது அவளுக்கு ஆச்சரியமாய் இருந்தது.

''உங்கள் இருவரின் பெயரும் வித்தியாசமாக இருக்கிறது. ஆனால் பல எக்ஸிமோக்கள் மேரிஜான், ரேச்சல், ராபர்ட் என்ற பெயர்களுடன் இருப்பதையும் பார்த்தேன்'' என்றாள் நேகா, அவர்களிடம்.

''ஆமாம். இங்கு முதலில் குடியேறிய ரஷ்ய கிறிஸ்துவர்கள் பலர் எங்கள் முன்னோர்களை கட்டாயப்படுத்தி மதமாற்றம் செய்தார்கள். அவர்களுக்கு வேலையும், உதவித் தொகையும் படிப்பும் தர ஏற்பாடு செய்தார்கள். அதைப் பார்த்து சிலர் தாங்களாகவே மதம் மாறினார்கள். அதனால் எக்ஸிமோக்களில் நிறைய கிறிஸ்துவர்கள் இருக்கிறார்கள்'' என்றாள் பிரூஸா.

பிரூஸா, பெர்னடின் இருவரும் நேகாவைப் பார்க்க வரும்போது எதையாவது கொண்டு வருவார்கள். கரடி தோலினாலான க்ளவுஸ்களுடன், ராஸ்பெரி பழங்கள், ப்ளாக் பெரி ப்ளூ பெர்ரி பழங்களை வழியில் பறித்ததாகக் கொண்டு வந்து கொடுப்பார்கள். மலைக்காடுகளில் உள்ள 'டான்டிலயின்' என்ற செடியை பறித்து வந்து சாலட் செய்யச் சொல்லித் தருவார்கள்.

சமயங்களில் படிப்பு முடிந்த பின் சமையலில் நேகாவுக்கு உதவி செய்வார்கள். இந்திய உணவை ருசி



பார்த்து, ''ரொம்ப வித்தியாசமாக இருக்கிறது'' என்பார்கள்.

நேகா தந்த சுடிதார்களையும், குர்தாவையும் அணிந்து பார்த்து ''ஆளே அடையாளம் தெரியவில்லை'' என மகிழ்ந்து போவார்கள்.

நாளடைவில் நேகாவிற்கும் அந்த பெண்களுக்கும் இனம் புரியாத நெருக்கம் ஏற்பட்டுப் போனது. நேகாவின் பாடிகார்ட், அடாப்ட் சில்ரன் என யுனிவர்சிட்டியில் உள்ளவர்களே சொல்லும் அளவிற்கு அவர்களுக்குள் ஒரு அபிமானம் வளர்ந்தது.

இன்று ஏன் அந்தப் பெண்கள் வரவில்லை? என்று யோசித்தபடி நேகா யுனிவர்சிட்டி காரிடாரை தாண்டி வெளியே நடந்தாள்.

## 3



நேகா அந்த வீடியோ லைப்ரரியில் நின்றிருந்த கும்பலைத் தாண்டி எப்படி உள்ளே போவதென்ற யோசனையுடன் பார்த்தாள். அங்கு வசிக்கும் இந்தியர்கள் அனைவரும் ஒரே இடத்தில் குவிந்து விட்டதைப் போன்று இருந்தது. இங்கு சி.டி.யில் படம் பார்ப்பதுதான் பெரிய பொழுதுபோக்கு என்பதுடன் வெகுதூரத்தில் இருக்கும் தாய்நாட்டுடன் தொடர்பு கொள்ளும் திருப்தியும் அளிப்பதால் எப்போதுமே அந்த கடையில் கும்பல் அதிகமாய்த்தான் இருக்கும். சுறுசுறுப்புடன் சி.டி.யை

எடுத்துத் தருவதிலும், திரும்பி வந்தவற்றை என்ட்ரி போடுவதிலும் பிஸியாய் இருந்தான் கடை உரிமையாளன் தீபக் மேத்தா.

எதேச்சையாக நிமிர்ந்தவன், இத்தனை நாள் பரிட்சையத்தில் தோன்றிய புன்னகையுடன் ''ஹாய், என்ன வேண்டும் உங்களுக்கு?'' என்றான் அவளிடம்.

''புதிய தமிழ், ஹிந்தி படங்கள் ஏதாவது இருக்கிறதா தீபக்?''

''ம்ஹூம். இன்று விடுமுறை நாள் இல்லையா? சமீபத்திய படங்கள் எல்லாம் வெளியே போய் இருக்கின்றன.''

''ஓகே. ஜோதா அக்பர் கிடைக்குமா?''

தீபக் கம்ப்யூட்டர் திரையில் பார்வையைப் பதித்தபடி சொன்னான்.

''ஸாரி, வெளியே போயிருக்கிறது. நாளை வருகிறீர்களா? தருகிறேன்.''

''இப்பவே கொடுக்கலாம் தீபக்.'' யாரோ சி.டி.யை கொடுத்தார்கள்.

நேகா திரும்பிப் பார்த்தாள். பளீரென்று சிரித்தபடி நின்றிருந்த அவனை முன்பு சந்தித்த நினைவு வந்தது.

''நேகா சி.டி.யை வாங்கிக் கொள்ளுங்கள்'' என்று தீபக் அவள் பெயரை குறித்துக் கொள்ள, ''தேங்க்ஸ்'' என்றாள் நேகா அவனிடம்.

அவன் அதை ஏற்றுக் கொள்ளும் பாவனையில் தலை சாய்த்து புன்னகைத்தது மிக வசீகரமாய் இருக்க, ''நாம் முன்பே ஒருமுறை சந்தித்திருக்கிறோம்'' என்றாள், நேகா அவனுக்கு நினைவூட்டும் விதமாக.



''ஓ! எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. அழகான பெண்களை யாரும் லேசில் மறந்துவிட முடியாது'' என்றான் புகழ்ச்சியாக.

''இந்த ஊரெல்லாம் ஐஸ் ஆக இருக்கிறது. போதாததற்கு என் தலையிலும் ஐஸ் வைத்தால் நிச்சயம் என்னால் தாங்க முடியாது'' என்றாள் நேகா.

''தெரியும். அதனால்தான் நான் ஐஸ் வைக்காமல் உண்மையை மட்டும் சொன்னேன்?'' என்றவன் தொடர்ந்து ''என் பெயர் நந்தகிஷோர்'' என்றான் அறிமுகப்படுத்திக் கொள்ளும் விதமாக.

தன் பெயரை சொன்ன நேகா, ''இந்தியாவில் நீங்கள் எந்தப் பகுதியைச் சேர்ந்தவர்? வட இந்தியர் போலிருக்கிறது உங்களைப் பார்த்தால்'' என்றாள் அவனிடம்.

''என் பெற்றோர் இந்தியாவிலிருந்து வந்தவர்கள். மற்றபடி எனக்கும் இந்தியாவிற்கும் சம்பந்தமே இல்லை. நான் ஒரு முறை கூட அங்கே சென்றதில்லை. இத்தனை பெரிய உலகில் மனிதர்கள் வாழும் இடமே சிறிய பரப்பளவுதான். அதைத் துண்டு துண்டாக்கி நான் இந்தியன், நான் ஜெர்மன், இத்தாலி என்று சொல்லிக் கொள்வதே அபத்தம்.''

''ஆனால் ஒரு நாட்டின் அரசியலமைப்பு சட்டத்திற்கு உட்பட்டு மொழி, கலாச்சாரம், சமூகம், உடை, உணவு என பல்வேறு முரண்பாடுகளுடன் பிரிந்து நிற்கையில் நீ சொல்வது எப்படி சாத்தியம்?'' என்றாள் நேகா.

''பரந்த மனோபாவமும், சகிப்புத் தன்மையும் இருந்தால் எதுவும் சாத்தியம்தான். என் சான்றிதழ்களில் மட்டுமே என் குடியுரிமை பதியப்பட்டிருக்கிறது. உண

மையில் நான் விருப்பம் போல சிறகடித்துப் பறக்கும் ஒரு பறவை. எந்த எல்லைக்கோடும் என்னைக் கட்டுப்படுத்தாது."

நேகா ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தாள். "நீ என்ன வேலை பார்க்கிறாய்?"

"பைலட் ஆக இருக்கிறேன்."

நேகா வாய்விட்டுச் சிரித்தாள். "நீ பறவை என்றதன் பொருள் இப்போது புரிகிறது. ஆனால் வானத்திலும் எல்லைகள் உண்டு. விமானியாக இருந்தாலும் வரையறுக்கப்பட்ட வழித்தடத்தில்தான் செல்ல முடியும் இல்லையா?"

அவன் குறும்புடன் புன்னகைத்தான். "இல்லை. எனக்கென்று ஒரு வழியும் இல்லை. என்னைக் கட்டுப்படுத்தவும் யாரும் இல்லை. ஏனென்றால் நான் 'புஷ்' பைலட்டாக இருக்கிறேன்."

"அப்படியென்றால்?"

"இங்கு சுற்றி வரும் சிறியரக விமானங்களை நீ பார்த்திருக்கிறாயா?"

"ஆமாம். பார்த்திருக்கிறேன்."

"அத்தகைய சிறிய ரக விமானங்களைத் தான் 'புஷ்' என்பார்கள். கரடுமுரடான எந்த மலைப்பகுதியையும் ரன்வேயாக பாவித்து எங்களால் ஏறவும் இறங்கவும் முடியும். இன்றைய அலாஸ்கா வாழ்வில் இந்த விமானங்கள் இல்லை என்றால் நகரமே ஸ்தம்பித்து விடும்."

நாம் இந்த இடத்திற்கு புதியவள் என்பதால் கதை விடுகிறான் போலும் என்று எண்ணினாள் நேகா.



அதைப் புரிந்து கொண்டவனாக நந்தகிஷோர் சொன்னான்.

"இந்த நாட்டில் பனி உறைந்து சராசரி மனிதர்கள் வாழ முடியாத சில இடங்களில் எக்ஸிமோக்கள் இக்ளூ எனப்படும் பனி வீடுகளில் வசிக்கிறார்கள். அவர்களுக்கு உணவுப் பொருளும், மருத்துவ உதவியும் அளிப்பது புஷ் விமானங்கள் மூலம்தான். இங்குள்ள மலைகளில் ட்ரக்கிங் போவதற்காக வந்து ஆக்ஸிஜன் பற்றாமல் மூச்சு திணறுபவர்களைக் காப்பாற்றுவது, காடுகளிலும் பனிப்புயலிலும் சிக்கிக் கொள்பவர்களுக்கு உதவுவது. கடலில் நதிகளில் மாட்டிக் கொள்பவர்களை மீட்பது மேலும் அமெரிக்க 'ஜியோலஜிகல் சர்வே' நிறுவனத்திலிருந்து ஆராய்ச்சி பணிக்கு வருபவர்களை தொலை தூரம் அழைத்துச் செல்வது என புஷ் ப்ளைட்டின் பயன்பாட்டைச் சொல்லிக் கொண்டே போகலாம்."

"உன் விமானத்தை நான் பார்க்க அனுமதி கிடைக்குமா?" என்றாள் நேகா ஆர்வத்துடன்.

"நிச்சயம் கிடைக்கும். அதன் உரிமையாளர் அனுமதித்தால்."

"யார் அவர்?"

"நந்தகிஷோர்."

"வாவ்! நீ சொந்தமாக விமானம் வைத்திருக்கிறாயா? அப்ப நீ பெரிய பணக்காரனாய் இருக்க வேண்டும்" என்றாள் நேகா நம்ப முடியாத வியப்புடன்.

சாசரைப் போல் விரிந்த அவள் கண்களைப் பார்த்த நந்தகிஷோர் சிரித்தான். "இதில் வியப்படைய எதுவும் இல்லை. உங்கள் ஊரில் காஸ்ட்லி கார் வைத்திருக்கிற

மாதிரிதான் இதுவும். இங்கு ஒதுக்குப்புறமான இடங்களில் தனிமையில் வசிக்கும் சிலர் தங்கள் போக்குவரத்திற்கும் பொருள் வாங்கவும் சொந்தமாய் சிறிய ரக விமானங்கள் வைத்திருக்கிறார்கள். அது சரி உன் வீடு இங்கே எங்கே இருக்கிறது? நீ என்ன செய்கிறாய்?'' என்று அவளைப் பற்றி விசாரித்தான். நேகா சொன்னதும், ''ஹே'' என்றான் வியப்புடன்.

''உன்னைப் பார்த்தால் கல்லூரி மாணவியைப் போலிருக்கிறாய். ஆசிரியை என்றால் நம்ப முடியவில்லை.''

''நம்பித்தான் ஆக வேண்டும். ஏனென்றால் நான் மிகவும் கஷ்டப்பட்டு படித்து பாஸ் செய்திருக்கிறேன்.''

இருவரும் சிரித்தபடி நடக்கையில் 'ஹாய்' என்றபடி அவர்கள் அருகில் வந்தாள் ஒரு பெண். பொன்நிறக் கூந்தலும், ப்ரவுன் நிற கண்களும் பால் வெண்மையில் மினுமினுத்த உடலும் பார்த்தவுடனே அழகி என்று பறைசாற்றின.

''ஹாய் லோரியா'' என்றான் நந்தகிஷோர் உற்சாகத்துடன். நேகாவையும் அவளையும் ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்தி வைத்தான்.

''ஹலோ'' என்ற லோரியாவின் பார்வையில் சிநேகமற்ற பாவம் தெரிந்தது. நந்தகிஷோரிடம் திரும்பி நின்று பேசுகையில் தன் அழகைப் பற்றிய கர்வம் தெறித்தது.

''உனக்காக நான் முப்பது நிமிடங்களாகக் காத்திருக்கிறேன் நந்தகிஷோர்.''

''ஸாரி. நாங்கள் பேசிக் கொண்டே நடந்ததில் நேரமாகி விட்டது'' என்ற நந்தகிஷோர் நேகாவிடம் விடைபெற்றுக் கொண்டு அவளுடன் விரைந்தான். இணைந்



திருந்த கைகளையும், ஒன்றோடு ஒன்று உரசியபடி செல்லும் தோள்களையும் வெற்றுப் பார்வை பார்த்து விட்டு நேகா நடக்க ஆரம்பித்தாள்.

நேகாவிற்கு நாட்கள் வேகமாகச் சென்றன. யுனிவர்சிட்டியும், தன் வேலையும் அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. மாணவர்கள் இங்கு ஆசிரியர்களைச் சீண்டாமல், அதிகப்படி மரியாதையும் தராமல் இயல்பாக இருந்தார்கள். நேகாவும் அவர்களிடம் தன் எல்லை புரிந்து பழகினாள். யுனிவர்சிட்டி காம்பவுண்டிற்குள்ளேயே ஒருவரை ஒருவர் அணைத்தபடி நடப்பதையும், வகுப்பறைகளிலேயே யாருமில்லாத சமயம் முத்தமிட்டுக் கொள்வதையும் கண்டு கொள்ளாமல் இருக்கப் பழகிக் கொண்டாள்.

அந்த மாதத் தேர்வுக்கான டெஸ்ட் பேப்பர்களைத் திருத்திக் கொண்டிருக்கையில் மேக்ஸ் டீச்சர் ஜெயதேவ் வந்து அவள் அருகில் அமர்ந்தான். ''ரிசல்ட் எப்படியிருக்கிறது?'' என்றான் அவள் கையிலிருந்த பேப்பர்களைக் காட்டி.

''ஓகே'' என்றாள் நேகா பொதுப்படையாக.

''ஆனால் மேக்ஸ் டிபார்ட்மெண்ட் கொஞ்சம் மோசம். என்னதான் சொல்லுங்கள், இந்தியாவைப் போல கல்வியில் வேகமும் வெறியும் இங்கிருக்கும் மாணவர்களுக்கு இல்லை'' என்றான் ஜெயதேவ்.

''அதற்கான அவசியமும் இல்லை ஜெயதேவ். அடிப்படை வசதிகள் இங்கு யாரும் கேட்காமலே கிடைக்கின்றன. மக்கள் தொகை அதிகமுள்ள சமூகத்தில்தான் போட்டி அதிகம் இருக்கும். பற்றாக்குறை இருக்கும். முட்டி மோதி மேலே வரத் துடிக்கும் வேகம் பிறக்கும்.''

''நீங்கள் சொல்வது உண்மைதான்'' என்றான் ஜெய தேவ்.

''என்ன ஜெயதேவ், மேக்ஸுக்கு பதிலாய் நேகா வுடன் சேர்ந்து இங்கிலீஷ் பேப்பர் திருத்த ஆரம்பிச்சிட் டீங்களா?'' என்றபடி வந்து அவர்கள் அருகில் அமர்ந் தாள் மாதவி.

''அப்படித்தான் செய்ய வேண்டும் போலிருக்கிறது. மேக்ஸ் பேப்பரை பிரித்தால் திருத்துகிற மூட் போய் விடுகிறது.''

''என்னுடைய சப்ஜெக்ட் கூட அப்படித்தான். ஒரு வேளை நேகா பாடம் நடத்துகிற அழகில் மயங்கி மாண வர்கள் மற்ற பாடங்களை விட்டு விட்டு ஆங்கிலத்தை மட்டும் கவனிக்கிறார்கள் போலும்'' என்றாள் மாதவி.

''என்னை ஏன் வம்புக்கு இழுக்கிறீர்கள்?'' என்றாள் நேகா சிரிப்புடன்.

''வம்பில்லை. உண்மைதான் சொன்னேன். நீ ஷேக்ஸ் பியர் எடுக்க ஆரம்பித்தால் மாணவர்கள் வகுப்பு முடிந்த பின்பும் கலைந்து செல்வதில்லை என்று கேள்விப் பட்டேன்.''

''ஆங்கிலம் பரிட்சையமான மொழி என்பதாலும், நாடகம், பாடல்கள் என்றிருப்பதாலும் மாணவர்களுக்கு அதில் விருப்பம் ஏற்படுவது இயற்கையான விஷயம்'' என்றாள் நேகா.

''இங்கு சூஸன் என்றொரு இங்கிலீஷ் டீச்சர் இருக் கிறாள். ஒரு நாள் அவளை கேட்டுப் பார். மாணவர்கள் பண்ணும் கலாட்டாவை.''



பேச்சை மாற்ற விரும்பிய நேகா, ''இந்த விடுமுறை யில் ஊருக்குப் போகிறீர்களா?'' என்றாள் இருவரிடமும்.

''போய்த்தான் ஆக வேண்டும். இல்லை என்றால் என் மனைவியின் கோபத்தைச் சமாளிக்க முடியாது'' என்றான் ஜெயதேவ்.

''பேசாமல் அவர்களையும் இங்கே அழைத்து வந்து விடலாமே!''

''பஞ்சாபின் டிசம்பர் மாதக் குளிருக்கே வீட்டை விட்டு வெளியே வர மாட்டாள். சைனஸ் தும்மல் என்று தினம் எதாவது கம்ப்ளைன்ட் சொல்லுவாள். இந்த ஊர் ஐஸ்சை போட்டோவில் பார்த்தாலே அலறுகிறாள்.''

''பாவம்தான்'' என்ற மாதவி ''நானும் இந்த விடு முறையில் எங்காவது வெளியூர் போகலாம் என்றிருக் கிறேன். அநேகமாக இத்தாலி போனாலும் போவேன்'' என்றாள் மாதவி.

மேலும் சிறிதுநேர பொதுவான பேச்சிற்குப் பிறகு வரப்போகும் தன் பெண்ணின் பிறந்த நாளுக்கு இரு வரும் கண்டிப்பாக வர வேண்டும் என்று அழைப்பு விடுத்தாள் மாதவி.

''உன் பெண்ணிற்கு என்ன வயதாகிறது?'' என்றாள் நேகா.

''பதினான்கு முடிந்து பதினைந்து பிறக்கப் போகிறது.''

மாதவியை ஒரு பதினைந்து வயதுப் பெண்ணின் அம்மா என்று நம்புவது மிகவும் சிரமமாக இருந்தது. மாநிறமும், களையான முகமுமாய் பாப் பண்ணப்பட்ட தலையுடன், ஒரு மாடலைப் போல் ஒல்லியான உடல் வாகுடன் இருந்தாள். நடையிலும், சிரிப்பிலும்

எப்போதும் ஒரு கவர்ச்சி இருந்தது. அவளது குடும்பம் பெரிய கவலைகள் ஏதும் இல்லாத சந்தோஷமான குடும்பம் போலும் என்ற எண்ணம் எழுந்தது.

* * *

நந்தகிஷோரின் அறைக்கதவு மெலிதாகத் தட்டப் படும் சத்தம் கேட்டது.

''யெஸ்'' என்றான் நந்தகிஷோர் வேலையில் கவன மாய்.

''இன்னும் தூங்கலையா?'' என்றபடி அனுசூயா உள்ளே வந்தாள்.

''என்ன விஷயம் மம்மி?'' என்றான் நந்தகிஷோர் வியப்புடன். விஷயம் இல்லாமல் அவன் விஷயத்தில் யாரும் தொல்லை செய்வதோ குறுக்கிடுவதோ கிடையாது.

''பூஜாவுக்கு அடுத்த மாதம் பத்தாம்தேதி வாக்கில் பிரசவம் நடக்கும் என்று டாக்டர்கள் சொல்கிறார்கள். அதனால் நானும் அப்பாவும் அடுத்த மாத முதலிலேயே ப்ளோரிடா கிளம்பலாம் என்றிருக்கிறோம்.''

''அப்பாவுமா? அப்பா எத்தனை நாள் லீவ் போட் டிருக்கிறார்?''

''லாங்லீவ் எடுத்திருக்கிறார். ஆறு மாதம் என்று நினைக்கிறேன்.''

''அத்தனை நாள் அங்கே என்ன செய்யப் போகிறீர் கள்? குழந்தை பிறந்ததும் பூஜா குழந்தையுடன் இங்கு வந்து சிறிது நாள் தங்கி இருக்கலாமே!''

''இங்கே மருத்துவ வசதியும், க்ளைமேட்டும் ஒத்து வராததால்தான் பிரசவத்தையே அங்கே வைத்துக்



கொள்ளும்படி ஆயிற்று. இரண்டாவதாக உன் அப்பா விற்கும் வயதாகிறதில்லையா? டாக்டர் அவருக்கு ப்ளட் பிரஷர் இருப்பதாகச் சொன்னதிலிருந்து எனக்கும் பயம். ஆட்கள் நடமாட்டமே இல்லாத இடத்தில் வேலை செய்கிறார். திடீரென்று உடம்பு முடியாமல் போனால் அங்கே மருத்துவ வசதி கிடைக்காது. அதனால் அப்பா வும் இனி ப்ளோரிடாவிலோ அல்லது வேறு எதாவது நகர பகுதியிலோ வேலை பார்க்கலாம் என்றிருக்கிறார்.''

இன்றைய சூழலில் முப்பது வயதிற்குள்ளாகவே ப்ளட் பிரஷர் வரத்தான் செய்கிறது. இந்த சின்ன கார ணத்திற்காக அம்மாவும், அப்பாவும் ஊரை விட்டு வேலையை மாற்றிக் கொண்டு செல்கிறார்கள் என்பது நம்ப முடியாததாக இருந்தது. இருந்தாலும் அவர்கள் முடிவு செய்த பின் அபிப்ராயம் கூறுவது நாகரீகம் இல்லை என்பதால் ''ஓகே'' என்றான் நந்தகிஷோர் கேஷுவலாக.

அனுசூயாவின் முகத்தில் ஒரு கணம் ஏமாற்றம் பரவியது.

உடனே தன்னை சரி செய்து கொண்டு ''நீ என்ன செய்யப் போகிறாய் நந்தகிஷோர்?'' என்றாள் அனுசூயா.

''ஏன்? எனக்கென்ன?'' என்றான் நந்தகிஷோர் புரி யாமல்.

''நீயும் எங்களுடன் வந்து விடுகிறாயா?''

''நெவர். நான் எதற்காக வரவேண்டும்? எனக்கு அலாஸ்காவை விட்டு எங்கும் போகிற ஐடியா இல்லை.''

மகனின் நேரடியான பதில் தந்த வருத்தத்தை மறைத் துக் கொண்டு அனுசூயா புன்னகைத்தாள்.

"இனி வரப்போகும் குளிர் காலத்தை உன்னால் சமாளிக்க முடியுமா கிஷோர்?"

"அம்மா என்னை இங்கு ஈர்க்கும் விஷயமே இந்த பனியும் குளிரும்தான். அதை மறந்து விட்டீர்களா?"

"மறக்கவில்லை. ஆனால் பேசக்கூட ஆளில்லாமல், சரியான உணவில்லாமல் எத்தனை நாள் உன்னால் சமாளிக்க முடியும்? கிஷோர் நீ திருமணம் செய்து கொண்டால் உனக்கொரு நல்ல துணை கிடைக்கும்."

நந்தகிஷோர் பெரிதாகச் சிரித்தான். "ஆப்டர் ஆல் பேச்சு துணைக்காக என் சுதந்திரத்தை இழக்கச் சொல்கிறீர்களா?"

"பேசுவதற்கு மட்டுமல்ல கிஷோர். ஒரு மனைவி என்பவள் இன்பத்திலும், துன்பத்திலும் துணை நிற்பாள். உனக்காகவே வாழ்ந்து..."

"மம்மி ப்ளீஸ். ஸ்டாப் இட். இதுபோல நான் நிறைய சினிமா பார்த்து விட்டேன். இந்த வசனங்களும் எனக்கு ஏறக்குறைய மனப்பாடம் ஆகிவிட்டது. மம்மா, ஒரு திருமணத்தில் வெளியே சொல்லப் படாத, எழுதப் படாத கமிட்மென்ட்கள் நிறைய இருக்கின்றன. என்னை எதிர்பார்த்து ஒரு பெண் வீட்டில் காத்திருக்கிறாள், அவளுக்கு நான் பதில் சொல்ல வேண்டும் என்ற நினைவு என் வேலையை ஒழுங்காகச் செய்ய விடாது. என் இயல்பான குணம் மறைந்து போய் அவளைத் திருப்திப்படுத்த செயற்கையாய் நடந்து கொள்ள வேண்டிய நிர்பந்தம் ஏற்படும். மனைவி என்ற உறவு இந்தத் தூங்கும் அறையுடன் நின்று விடுவதில்லை மம்மி. என் உணவு, உடை, தனிப்பட்ட ஆசைகள், பொழுதுபோக்கு



நண்பர்கள் என எல்லாவற்றிற்குள்ளும் தலையிட்டு என் சுதந்திரத்தை அழிக்கும்."

அனுசுயா கவலையுடன் மகனைப் பார்த்தாள். "இது உன் அறியாமையினால் ஏற்பட்ட பயம் நந்தகிஷோர். கணவன் மனைவிக்குள் ஏற்படும் காதல் எனும் மாயா ஜாலம் மனிதர்களை தலைகீழாக புரட்டிப் போடுகிறது. விட்டுக் கொடுப்பதும் அதிகாரம் செலுத்துவதும், அடங்கிப் போவதும் இயல்பாக நடக்கிறது."

நந்தகிஷோர் அலட்சியமாகத் தோள்களைக் குலுக்கினான். "நீங்கள் சொல்கிற காதல் முதலில் வரட்டும். பிறகு திருமணத்தைப் பற்றி யோசிக்கலாம்."

ஒரு தோல்வியைத் தாங்க முடியாத மனோநிலையுடன் மகனின் அறையிலிருந்து வெளியே வந்த அனுசுயாவை சுமன் தோளை அணைத்துப் புன்னகைத்தார். "கவலைப்படாதே அனு. முதல் முறை தனியாக இருக்கப் போகிறான். இங்குள்ள வாழ்க்கை சூழலில் அது எத்தனை சிரமம் என்று உனக்குத் தெரியாதா? நாம் திட்டமிட்டபடி எல்லாம் நடக்கும்" என்றார் உறுதியுடன்.

"உண்மையாகவா?" என்றாள் அனுசுயா பாதி நம்பிக்கையும் அவநம்பிக்கையுமாக.

"ஆமாம். நாம் திரும்பி வரும்போது நந்தகிஷோர் திருமணத்திற்குத் தயாராக இருப்பான். ஒருவேளை திருமணமே செய்து கொண்டிருந்தாலும் இருப்பான்" என்றார் பெரிய சிரிப்புடன்.

"அப்படி நடந்திருந்தால் கூட எனக்கு மகிழ்ச்சிதான். அவன் மனைவி எந்த நாடு, பெற்றோர்கள் யார் என்றும் கூட நான் கேட்கப் போவதில்லை."

''அவன் எஸ்கிமோ பெண்ணை மணந்து கொண் டால்?''

''நானும் பச்சை மாமிசம் சாப்பிட பழகிக் கொள்ள வேண்டியது தான்.''

வாய்விட்டுச் சிரித்ததால் லேசான மனதுடன் இரு வரும் தங்கள் பயணத்திற்குத் தயாராகத் தொடங்கி னார்கள். தினமும் எதையாவது எடுத்து பெட்டிக்குள் வைப்பதும் பிறகு அது தேவையில்லை என்று தூக்கிப் போடுவதுமாய் இருந்தார் சுமன். கணவரின் விருப்பப் படி மகனை தனியே விடுவதென முடிவு செய்த போதும் அனுசூயா வரும் குளிர்காலத்திற்குத் தேவையான பொருட்களை வீட்டில் சேகரித்து வைத்தாள். ப்ரெட்டும் இறைச்சியையும், காய்கறிகளையும் ஸ்டோரேஜில் அடுக்கினாள்.

''நந்தகிஷோர் கதவைத் திறந்து போடாமல் இருக்க வேண்டும். இல்லை என்றால் குப்பையைச் சாப்பிட கரடி வந்துவிடும்.''

''நாய்களை நாம் வரும்வரை பார்த்துக் கொள்ள காப் பகத்தில் கொடுத்து விடலாம்.''

''அவன் நேரத்துக்கு சாப்பிடுவானோ என்னவோ?'' என அவள் ஒவ்வொரு விஷயத்திற்கும் கவலைப்பட சுமன் அதட்டினார்.

''நந்தகிஷோர் சிறு பையன் இல்லை அனு. நீ அவனைப் பற்றி இது போல யோசிக்கிறாய் என்று தெரிந்தால், தன் மீது பெற்றோருக்கு நம்பிக்கை இல்லை என்று நினைப் பான். அவனுக்குத் தேவையானதை அவன் பார்த்துக் கொள்வான். நீ கிளம்பு.''



அதன் பிறகே அனுசூயா எதுவும் பேசாமல் கிளம்பி னாள்.

புறப்படும் நாளன்று வீட்டிலிருந்த மகனிடம் அனு சூயா சொன்னாள். ''இந்தக் கால பெண்கள் மிக சுதந்திர மானவர்கள் கிஷோர். தான் விருப்பப்படி இருக்க நினைப் பவர்கள் மற்றவர்கள் விருப்பத்தில் தலையிட மாட்டார் கள். அதுபோல ஒரு பெண் உனக்கு மனைவியாய் வர கடவுளிடம் வேண்டிக் கொண்டே இருக்கிறேன்.''

அதற்கு பதில் எதுவும் சொல்லாமல் ''ஹேவ் எ ஒன் டர்புல் டேஸ் எ ஹெட். பூஜாவைக் கேட்டதாகச் சொல் லுங்கள். அவள் கணவருக்கு ஒரு ஹலோ சொன்னதாகத் தெரிவியுங்கள்'' என பெற்றோரின் கைகளைக் குலுக்கி நந்தகிஷோர் புன்னகைத்தான்.

டாக்ஸியில் ஏறி அமர்ந்து ஏர்போர்ட் செல்கையில் சுமன் மூடியிருந்த வீட்டின் கதவுகளைப் பார்த்தார். ஜன்னலிலோ, பால்கனியிலோ எங்கும் மகனின் தலை தெரியவில்லை. ஒரு பெருமூச்சுடன் இருக்கையில் சாய்ந்து அமர்ந்தார்.

# 4



நந்தகிஷோர் ப்ளூ ஜீன்ஸ் மீது அடர்சிவப்பு நிற டீ ஷர்ட்டை அணிந்தான். ஹேர் ஜெல் ஐ முடியில் தடவி யவன் பெரிய ப்ரஷ்ஷினால் முடியைச் சீராக்கினான். ஜெல்லின் பயனாய் ஈரம் சொட்டுவது போல் பளபளத்த

தலைமுடி அவன் முகத்தின் வசீகரத்தை அதிகமாக்கியது. ஷூவை அணிந்தபடி வாட்ச்சைப் பார்த்தான். இரவு மணி பத்து. வீட்டைப் பூட்டி விட்டு வெளியே வந்தான். கோடை வெய்யில் பளீரெனக் காய்ந்தது. தெருவெங்கும் நிறைந்திருக்கும் பனி சூரிய ஒளியில் தகதகத்துக் கண்களைக் கூச வைத்தது. கூலிங்க்ளாசை அணிந்து கொண்டு காரை எடுத்தான். ஆண்களும் பெண்களும் ஒருவரை ஒருவர் அணைத்தபடி தெருவில் நடந்து கொண்டிருந்தார்கள்.

சிறுவர்கள் ஒருபுறம் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தார்கள். இளந்தாய்மார்கள் பனி சறுக்கு பலகைகளில் குழந்தைகளை உட்கார வைத்துக் கயிற்றில் இழுத்தபடி நடந்து கொண்டிருந்தார்கள். அலாஸ்காவிற்கு வருடத்திற்கு மூன்று மாதம் கிடைக்கும் இந்த வெய்யிலை யாரும் வீட்டிற்குள் கிடந்து வீணாக்க மாட்டார்கள். அம்மா கோடை காலத்தில் வீட்டில் தோட்டம் போடுவார்கள். முட்டைகோசும், உருளையும், கேரட்டும், பீன்சும் வேகமாய் வளரும். மூன்று மாதம் தொடர்ந்து சூரிய ஒளி கிடைப்பதால் இங்கு விளையும் காய்கறிகள் மற்ற இடங்களில் விளைவதை விட அளவில் மிகப் பெரியவையாக இருக்கும்.

இன்று நந்தகிஷோரின் நண்பர் மகளுக்குப் பிறந்த நாள் விழா. 'அமெரிக்க ஜியோலஜிகல் சர்வே' என்னும் புவிஆராய்ச்சி நிறுவனத்தில் வேலை பார்க்கும் இந்தியரான ரங்காரெட்டியை நந்தகிஷோருக்கு சில வருடங்களாகத் தெரியும். விஞ்ஞான ஆராய்ச்சிக்காக யாரும் லேசில் நுழைய முடியாத இடங்களுக்கெல்லாம் அழைத்துச் சென்றிருக்கிறான். அவர் பெண் தர்ஷணாவை



அவனுக்கு மிகவும் பிடிக்கும். இங்கு பொழுதைப் போக்கவும், உறவுகளை விட்டு வெகுதூரம் வந்திருக்கும் தனிமையை ஈடு செய்யவும் இங்கு வசிப்பவர்கள் சிறு விஷயங்களையும் பார்ட்டி கொடுத்து வெகுவாகக் கொண்டாடுவது வழக்கம். அதனால் நந்தகிஷோர் ரங்காரெட்டி தம்பதிகள் அடிக்கடி சந்தித்து நண்பர்கள் ஆனார்கள். ஆங்கரேஜிலிருந்து ஒரு மணி நேரப் பயணத்தில் இருந்த ரங்காரெட்டியின் வீட்டை அடைந்தபோது விழா களை கட்டியிருந்தது.

ரங்காரெட்டியிடமும் அவர் மனைவி மாதவியிடமும் கைகளைக் குலுக்கி ''தர்ஷணா எங்கே?'' என்றான் நந்தகிஷோர்.

''அதோ'' என்றாள் மாதவி.

கைகளை நிறைத்த கிப்ட் பார்சலுடன் அவள் கை காட்டிய பக்கம் சென்றவன் தர்ஷணாவுடன் பேசிக் கொண்டிருந்த பெண்ணைப் பார்த்ததும் திகைத்துப் போனான். யாராவது சினிமா ஸ்டாராக இருக்குமோ என்று யோசிக்கையிலேயே அவனைப் பார்த்து விட்ட அந்தப் பெண் ''ஹலோ'' என்றாள் சிரிப்புடன்.

மின்னலாய் ஒளிர்ந்த சிரிப்பும், அகன்ற கண்களும் அவர் யார் என்பதை நினைவு படுத்த ''நேகா நீயா?'' என்றான் நந்தகிஷோர் வியப்புடன்.

''என்னை மறந்து விட்டதா உனக்கு?'' என்றாள் நேகா லேசான ஏமாற்றத்துடன். ''நாம் இரண்டு முறை சந்தித்திருக்கிறோம். இரண்டாவது முறை சிறிது நேரம் பேசியிருந்தோம்.''

''மறக்கவில்லை நேகா. கோட்டும் தொப்பியுமாய் இரண்டு முறையும் உன் முகத்தை மட்டும்தான்

பார்த்திருக்கிறேன். அதனால் புடவையில் அடையாளம் தெரியவில்லை. உண்மையைச் சொல்லட்டுமா? தூரத்திலிருந்து பார்த்ததும் யாரோ சினிமா ஸ்டார்ன்னு நினைச்சேன்.''

நேகா தன் மகிழ்ச்சியை மறைக்க அவனைச் சீண்டினாள். ''நீ வந்தவுடன் பேசாததற்கு பேலன்ஸ் பண்ணப் பார்க்காதே!''

''பேலன்ஸ் பண்ணுவதா? சீர்தூக்கிப் பார்க்க உனக்கு இணையாய் இங்கு யாருமே இல்லாதபோது என்னால் எப்படி பேலன்ஸ் பண்ண முடியும்?''

''ஹை! குட் டயலாக்.''

இருவரும் வாய்விட்டுச் சிரிக்கையில் மாதவி அவர்கள் அருகில் வந்தாள்.

''நேகா, இது நந்தகிஷோர். ரங்காவின் நண்பர்'' என்றவள் ''நந்தகிஷோர் இது நேகா. என் ப்ரண்ட் அண்ட் கொலீக் ஆஸ்லேயா'' என்றாள்.

''அப்படியா?'' என்றார்கள் இருவரும் ஒரே குரலில்.

''நைஸ் டு மீட் யு'' என சம்பிரதாயப்படி கைகளைக் குலுக்கிக் கொண்ட நேகாவும் நந்தகிஷோரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். விளையாட்டுத் தனமான இரகசியத்தை உள்ளடக்கிய சுவாரஸ்யத்தில் இருவர் கண்களும் சிரிப்பில் ஜொலித்தன.

''அங்கிள்'' என்ற தர்ஷணாவின் அழைப்பில் கலைந்து கிப்ட் பார்சலை அவளிடம் கொடுத்தான் நந்தகிஷோர்.

அப்போதே பார்சலை ஆர்வத்துடன் பிரித்த தர்ஷணா உள்ளே இருந்த பார்பி பொம்மையைப் பார்த்ததும்



சிணுங்கினாள். ''நான் என்ன குழந்தையா அங்கிள்! பொம்மை வைத்து விளையாடுவதற்கு!''

பளிங்கு போன்ற நிறமும், பட்டு போன்ற கூந்தலுமாய் மாதவி அணிவித்து விட்ட பார்ட்டி கவுனில் தர்ஷணா செல்லுலாய்ட் பொம்மையாகத் தெரிந்தாள். ''உன்னைப் பார்க்கும்போதே அழகான பொம்மையைப் போலிருக்கிறது'' என்றாள் நேகா அவள் கைகளைப் பற்றி.

''ஆனால் நான் உயிருள்ள மனுஷி அக்கா. உங்களுக்குக் கூட இது தெரியவில்லையா?'' என்ற தர்ஷணாவின் குரலில் ஏதோ வேறுபாடு தெரிந்தது.

''தர்ஷணா உன் பர்த் டேக்கு அங்கிளுக்கு எதுவும் இல்லையா?'' நந்தகிஷோர் தர்ஷணாவின் கவனத்தைத் திருப்பினான்.

''நிறைய இருக்கு அங்கிள். சாக்லேட்ஸ், கேக்ஸ், நட்ஸ், புட்ஸ் நிறைய இருக்கு. வாங்க சாப்பிடலாம்'' என அவன் கைகளைப் பற்றி இழுத்த தர்ஷணாவின் கூடவே ஓடியவனை நேகா வியப்புடன் பார்த்தாள்.

''நந்தகிஷோருக்கு குழந்தைகள் என்றால் மிகவும் இஷ்டம். அவன் பார்ட்டிகளுக்கு வருவதே குழந்தைகளுடன் விளையாடத்தான். நந்தகிஷோர் இருந்தால் போதும் பெற்றவர்கள் குழந்தைகளை அவனிடம் விட்டு விட்டு ஜாலியாக ட்ரிங் சாப்பிட உட்கார்ந்து விடுவார்கள்'' என்றாள் மாதவி புன்சிரிப்புடன்.

''உன் பெண் மிக அழகாக இருக்கிறாள் மாதவி'' என்றாள் நேகா மாதவியிடம் ரசனையுடன்.

''ஆமாம்'' என்ற மாதவியின் முகத்தில் பெருமையும் லேசான கர்வமும் சுடர் விட்டது.

மாதவி அன்று முழங்கால் வரையிலான ஸ்கர்ட்டும், ஸ்லீவ்லெஸ் டாப்சும் அணிந்து சின்னப் பெண்ணைப் போலிருந்தாள். ஆண்கள் பலர் அதை பாராட்டியபோது, ''யு லுக் ஸ்மார்ட்'' என வெற்று தோளில் கை பதித்துச் சொன்னபோது மாதவி வாய் கொள்ளாச் சிரிப்புடன் தலையசைத்தாள்.

பேச்சும் சிரிப்புமாய் அங்கிருந்த கூட்டத்தை கவனித்த நேகா, ''உங்களுக்கு இங்கே நண்பர்கள் அதிகம் போலிருக்கிறதே!'' என்றாள் மாதவியிடம்.

''அப்படியில்லை நேகா. இங்குள்ள இந்தியர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு சங்கம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இங்கு இந்தியர்கள் எண்ணிக்கை குறைவு என்பதால் பாகிஸ்தானியர்களும் ஸ்ரீலங்காவை சேர்ந்தவர்களும் கூட மெம்பராய் இருக்கிறார்கள். எல்லா மதத்தைச் சேர்ந்த பண்டிகைகளையும் சிறப்பாகக் கொண்டாடுகிறோம். எல்லா விசேஷங்களிலும் கலந்து கொள்கிறோம்'' என்ற மாதவி, ''வா சாப்பிடப் போகலாம்'' என அவளுடன் நடந்தாள்.

பஃபே டேபிளில் இருந்த உணவில் தேவையானவற்றை பரிமாறிக் கொண்டு சாப்பிடத் தொடங்குகையில் மாதவியை தேடிக் கொண்டு யாரோ வர, மாதவி அவர்களுடன் பேசப் போனாள். ஒரு ஐஸ்க்ரீமை சுவைத்தபடி நந்தகிஷோர் அவள் அருகில் வந்தான்.

''உணவு பிடித்திருக்கிறதா?'' என்றான் அவளிடம்.

''ஓ! நன்றாக இருக்கிறது. உண்மையில் எனக்கு நானே சமைத்து அலுத்துப் போய் இருந்தேன்'' என்ற நேகா



''ஊரே ஐஸ் உறைந்து கிடக்கையில் இங்கு ஐஸ்க்ரீம் கூட சாப்பிடுவீர்களா?'' என்றாள் வியப்புடன்.

''இப்போது கோடைக்காலம் நேகா. தரையில் ஐஸ் இருந்தாலும் தலைக்கு மேல் வெய்யிலும் இருக்கிறது. ஆனால் வின்டர் சீசனில் மைனஸ் டிகிரி குளிரில் ஐஸ் வாட்டரும், ஐஸ்க்ரீமும் சாப்பிடுகிறவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள்'' என்றான் நந்தகிஷோர்.

''என்னவோ, இங்கு வந்ததிலிருந்து எனக்கு 'கூல்' ஆக எதைப் பார்த்தாலும் குளிருகிறது. என் அறையில் ப்ரிட்ஜ்ஜைக்கூட நான் திறப்பதில்லை'' என்றாள் நேகா சிலிர்ப்புடன்.

''தேங்க் காட். நான் ரொம்ப ஹாட் எப்போதுமே. அதனால் என்னைக் கண்டு நீ நடுங்க வேண்டியதில்லை.''

''பெரிய ஜோக் ஹி.. ஹி...'' என நேகா சிரித்த விதத்தில் நந்தகிஷோருக்கு உண்மையாலுமே சிரிப்பு வந்தது.

பேச்சினிடையே வாட்ச்சைப் பார்த்த நேகா திடுக்கிட்டாள். ''நான் கிளம்புகிறேன். நாளை எனக்கு க்ளாஸ் இருக்கிறது.''

''வா போகலாம். நான் உன்னை டிராப் பண்ணுகிறேன்'' என்றான் நந்தகிஷோர்.

சற்று தள்ளி நிறுத்தப்பட்டிருந்த காரில் நந்தகிஷோர் அவளுக்காக காத்திருக்க, நேகா மாதவியின் குடும்பத்தினரிடம் விடைபெற்று வெளியே வந்தாள். மாதவி வீட்டிலிருந்து கார் நின்றிருந்த இடத்திற்கு அவள் நடந்து வருகையில் பின்னணியில் வெள்ளை பனியும் பச்சை இலைகளும், கலர் கலரான பூக்களும் ஓவியமாய் தெரிந்தன. அதற்குப் பொருத்தமாய் நீலநிற புடவையும்,

சுருண்டு அலை பாய்ந்த முடியும், நளினமான நடையு மாய் நேகா வருகையில் சிறு வயதில் தேவதை கதை களில் படித்த சிறகு முளைத்த தேவதையை நினை வூட்டியது. திடீரென சிறகு முளைத்து நேகா பறந்து போவதைப் போல் அபத்தமான கற்பனை எழுந்தது. நந்தகிஷோர் தலையை உலுக்கிக் கொண்டு திரும்பிப் பார்த்தான். நேகா நிஜமாகவே அங்கில்லை. கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தான். நேகாவைக் காணோம். கண்ணால் பார்ப்பதை நம்ப முடியாமல் திகைத்தபோது ''ஹலோ'' என்ற குரல் அருகில் கேட்டது.

நந்தகிஷோர் திரும்பிப் பார்த்தான். நேகா காரில் அவன் அருகே அமர்ந்திருந்தாள். ''நான் வந்து உட் கார்ந்ததைக் கூட கவனிக்காமல் அப்படி என்ன யோசனை? ம்?''

நந்தகிஷோர் தன் அசட்டுத்தனத்திற்கு சிரித்தபடி காரை கிளப்பினான். ம்யூசிக் சிஸ்டத்தில் பியானோ இசை வெள்ளமாய் வழிந்தது.

இருவரும் அதில் மூழ்கிப் போனவர்களாய் யுனிவர் சிட்டி வரும் வரை பேச்சே இன்றி வந்தார்கள். யுனிவர் சிட்டி காம்பசிற்குள் காரை நிறுத்தி ''சோ?'' என்றான் நந்தகிஷோர்.

''டு டே இஸ் வெரி நைஸ் டே. நல்ல சாப்பாடு. மகிழ்ச்சியான சூழ்நிலை. அருமையான உன் தோழமை. தேங்க்யூ'' என்றாள் நேகா.

நந்தகிஷோர் மெல்லிய சிரிப்புடன் சொன்னான். ''உன்னிடம் நான் முதல் நாளே சொன்னேன். நன்றி எல்லாம் அவசியமில்லை'' என்று.



''ஒகே குட் நைட்'' என்று புன்னகைத்த நேகா யோசித் தாள். 'இரவு ஒரு மணிக்கு பகலைப் போல் வெய்யில் கொளுத்துகையில் குட் நைட் என்று சொல்லலாமா? இங்கு கோடை காலத்தில் தூங்கப் போகும்போது என்ன சொல்வார்கள்?'

நேகாவிடம் கையசைத்து விட்டு காரை ரிவர்ஸ் எடுத்துத் திருப்பிய நந்தகிஷோர் நினைவு வந்தவனாக அவள் அருகில் நிறுத்தினான்.

''அலாஸ்கா மிக அழகிய நாடுதான். ஆனால் அது உனக்குக் கொஞ்சமும் நியாயம் செய்யவில்லை.''

நேகா புரியாமல் பார்த்தாள்.

''எப்போதும் பனியும் மழையுமாய் கொட்டி வருடத் தில் பெரும்பான்மை நாட்கள் உன் அழகை உல்லன் உடைக்குள் மறைத்து விடும்.''

நேகா பதில் சொல்லும்முன் நந்தகிஷோர் கிளம்பிப் போய்விட நேகாவுக்கு இவனுக்கு அதிக இடம் கொடுத்து விட்டோம் என்றிருந்தது. இதுவரை அவளிடம் யாரும் இப்படிப் பேசியதில்லை. அவள் முதல் முறையாக ஒரு ஆணுடன் நள்ளிரவு ஒரு மணிக்கு காரில் பயணித் திருக்கிறாள். இங்கு சூரியன் சுட்டெரிப்பதால் அவ னுடன் கிளம்பத் தயக்கமே ஏற்படவில்லை. இதுவே இந்தியாவாக இருந்திருந்தால் இரவின் இருளும் அமை தியும் அவளுக்குள் ஒரு பயத்தை உண்டாக்கி இருக்கும். அந்நிய சூழல் அவளையும் மாற்றி விட்டது போலும். இத்தனை நாள் படிப்பிலும், வேலை பார்ப்பதிலும் மூழ்கி யிருந்த மனம் தன் காலில் நிற்கிற தெம்பில், யாருக்கும் பதில் சொல்ல வேண்டியிராத நிலையில் சுமந்த

பாரத்தைக் கொஞ்சம் தளர்த்திக் கொண்டு விட்டது போலும். இல்லை எனில் நந்தகிஷோரின் வார்த்தைகள் அவளுக்கு இத்தனை மகிழ்ச்சியைக் கொடுத்திருக்காது. அவன் வெளிப்படையாக அவள் அழகி என்று பாராட்டும்போது அவள் மனம் குளிர்ந்து போவதை அவன் அறிந்திருக்க வேண்டும்!

அதனால்தான் கூசாமல் புகழ்கிறான்.

நேகா யோசித்தபடி படுக்கையில் புரண்டாள். எத்தனை யோசித்தும் அவளுக்கு நந்தகிஷோரிடம் போக்கிரித்தனம் தெரியவில்லை. அவன் அவள் முகத்தைப் பார்த்துப் பேசினான். கண்களைப் பார்த்து சிரித்தான். வார்த்தைகளில் சரளம் இருந்தது. நட்பு பாராட்டுவது அவனுக்கு இயல்பாக வந்தது. அது இந்த மண்ணின் இயல்பாக இருக்கலாம். இங்கேயே பிறந்து வளர்ந்தவனின் குண இயல்புகளை இந்தியாவில் வசிப்பவர்களுடன் ஒப்பிடக் கூடாது என்று நினைத்தபடி நேகா உறங்கிப் போனாள்.

அதன் பிறகு நந்தகிஷோரை பார்க்க நேராமல் சில வாரங்கள் கழிந்தன. ஒரு வார விடுமுறையின் போது மாதவி சொன்னாள்.

* * *

''நேகா நாளைக் காலையில் தயாராய் இரு. ஸ்லெட் நாய் ரேஸ் பார்க்கப் போகலாம்.''

இங்கு வீட்டிற்கு ஒருவர் நாய் வளர்ப்பதை பார்த்திருந்ததால், ''நம் ஊரில் குதிரை ரேஸ் போல இங்கு நாய்களுக்கு ரேஸ் வைப்பார்களா?'' என்றாள் நேகா.

''குதிரை ரேஸ் மாதிரி இல்லை நேகா. இது வித்தியாசமானது. ஸ்லெட் வண்டிகளில் கட்டப்பட்டு நாய்கள் ரேஸில் கலந்து கொள்ளும்.''



''ஸ்லெட் என்றால்?''

''மரப் பலகைகளை வளைத்து ரெயின்டீர் எனப்படும் மானின் தோலிலிருந்து செய்யப்படும் கயிறால் கட்டில் பெட்டி போன்ற ஒன்றை தயார் செய்கிறார்கள். இந்தப் பெட்டிகளை நாய்கள் இழுத்துச் செல்லும். முன்பு அலாஸ்காவின் போக்குவரத்துக்கு இந்த ஸ்லெட் வண்டிகள்தான் பெரிதும் பயன்பட்டன.''

மாதவியின் வர்ணனைகள் உண்டாக்கிய ஆர்வத்துடன் நேகா மறுநாள் விரைவிலேயே தயாரானாள். மாதவி தர்ஷணாவுடன் அவள் down town பகுதியிலிருந்த நான்காவது அவென்யூக்கு போய்ச் சேர்ந்தபோது ஒட்டு மொத்த ஆங்கரேஜ் மக்களுடன் நிறைய டூரிஸ்ட்களும் குவிந்திருந்தனர்.

குளிர் பிரதேசத்திற்கு இயற்கை அளித்த அடர்த்தியான ரோமங்களும், குளிரைத் தாங்க கொழுப்பை உடலில் சேமித்துக் கொள்வதால் உண்டான எடையுமாக ரேஸ் நாய்கள் கொழுகொழுவென்று பெரிதாக இருந்தன. விழா நடத்தும் குழுவினர் இந்த ரேஸ் நடத்தப்படுவதற்கான காரணத்தை பார்வையாளர்களுக்கு விளக்கிக் கொண்டிருந்தனர்.

''இந்த விழா அலாஸ்காவின் பாரம்பரியத்தை வெளி உலகிற்கு எடுத்துக் காட்டுகிறது. அது மட்டுமில்லாமல் ஒருமுறை அலாஸ்காவின் கிராமங்களில் டிப்தீரியா பரவி ஏராளமான குழந்தைகள் இறந்து போனார்கள். அப்போது இப்போதிருப்பது போல புஷ் விமானங்களும் இல்லாத நிலையில் பத்தொன்பது ஆட்களும், இருநூறு நாய்களும் கொண்ட ஸ்லெட் வண்டி தயாரிக்கப்பட்டது. அவர்கள் பனியையும், மழையையும் பொருட்படுத்தாது

கிராமங்களுக்கு மருந்துகளை எடுத்துச் சென்று பல உயிர்களை காப்பாற்றினார்கள். அவர்களுக்கு நன்றியும் வணக்கமும் செலுத்த இந்த விழா நடத்தப்படுகிறது.''

கூட்டத்தினர் கைதட்டலுடன் விழா தொடங்கப் பட்டது. பரிசுத்தொகை ஐம்பதாயிரம் டாலர் என்று அறிவிக்கப்பட்டது.

நேகாவிற்கு எதிர்புறம் நின்றிருந்த இருவரும் அவளைப் பார்த்து உற்சாகத்துடன் கையசைத்தார்கள். ஒரு வண்டியில் எட்டு நாய்கள் வீதம் பூட்டப்பட்டு மொத்தம் பத்து வண்டிகள் தயாராக நின்றன.

தர்ஷணா திடீரென்று நேகாவை உலுக்கினாள். ''அதோ அங்கிள்.''

அவள் சுட்டிக் காட்டிய இடத்தில் நின்றிருந்த ஒரு ஸ்லெட்டில் நந்தகிஷோர் கிளம்பத் தயாராக நின்றிருந் தான். இவர்களைப் பார்த்ததும் கட்டை விரலை உயர்த் திப் புன்னகைத்தான். தர்ஷணா எகிறி குதித்து கை அசைத்தாள்.

விசில் ஊதப்பட்டது. நாய்கள் விரைந்து சென்றன.

கூட்டத்தின் ஆரவாரம் கொஞ்சம் கொஞ்சமாக அடங்கியது. பிரூஸா, பெர்னடின் இருவரும் நேகாவின் அருகே வந்தார்கள். ''ரேஸ் பார்க்க வந்தீர்களா மேம்?'' என்றார்கள்.

''ஆமாம். நீங்கள் இருவர் மட்டும்தான் வந்தீர்களா?'' என்றாள் நேகா.

''இல்லை. எங்கள் பெற்றோர்களும் வந்திருக்கிறார்கள்'' என்ற பெர்னடின் சற்று தொலைவில் நின்றிருந்தவர் களைக் காண்பித்தாள்.



நீண்ட அங்கியும், மஞ்சள் முகமாய், பரிட்சையமற்ற பார்வையுடன் அவர்கள் நேகாவைப் பார்த்தார்கள்.

நேகா அவர்கள் அருகில் சென்று சிநேகமாய் புன் னகைத்து ''வணக்கம்'' என்றாள் கைகளைக் குவித்து.

அந்த கும்பலில் இருந்த ஆண்களில் ஒருவர் நேகாவைப் பார்த்து தலையசைத்து விட்டு திரும்பிப் பெர்னடின்னிடம் அவர்கள் பாஷையில் ஏதோ சொல்லி விட்டு நடக்கத் தொடங்கினார்கள். பெர்னடின் நேகா வின் கைகளைப் பற்றினாள்.

''ஸாரி மேடம். எங்கள் ஆட்கள் புதியவர்களுடன் சகஜமாகப் பேச மாட்டார்கள். பலநூறு வருடங்களாக பனி குகையையும், கடல் விலங்குகளையும் தவிர எதையும் அறியாதவர்கள். எங்கள் தலைமுறையில் தான் வெளியே வர ஆரம்பித்திருக்கிறோம். எங்கள் பெற்றோர் இந்த சமூக நாகரீகங்களை கற்றுக் கொள்ள இன்னும் சிறிது காலம் ஆகும். அதனால் உங்களை மதிக்கவில்லை என்று நினைக்காதீர்கள்.''

''எந்த நினைவும் இல்லை எனக்கு. உன் குடும்பத் தினரைப் பார்த்ததில் மகிழ்ச்சிதான்'' என்ற நேகா... அப்பா இவர்களைத் திருப்பிப் பார்ப்பதைக் கண்டதும் ''உனக்காகக் காத்திருக்கிறார்கள் பார். நாம் நாளை சந் திக்கலாம்'' என்றாள் அவர்களிடம்.

''ஒரு வழியாய் உன் சிநேகிதிகளிடம் பேசி முடித்து விட்டாயா?'' என்றாள் மாதவி கேலியாக.

''ஆமாம். நல்ல பெண்கள்'' என்ற நேகா ''ரேஸில் யார் ஜெயித்தது? முடிவு தெரிந்து விட்டதா?'' என்றாள் மாதவியிடம்.

''சரிதான். இப்போது எப்படித் தெரியும்? ரேஸ் முடியவே இரு வாரம் ஆகும்.''

''ஒரு வாரமா ரேஸ் நடக்கும்?''

''இங்கிருந்து கிளம்பும் நாய்கள் நாளை 'வாசில்லா' என்ற இடத்திற்கு போய்ச் சேரும். நாளை வாசில்லாவிலிருந்து 'அலாஸ்கன் ரேஞ்ச்' என்ற மலைப் பாதைகளில் சென்று 'யூகான்' நதிக்கரையையும், 'குஷ்ரோகிம்' மலையையும் கடந்து 'நாரிட்டன் சவுண்ட்' எனப்படும் கடற்கரை வழியே இருபத்தி ஏழு செக் பாயிண்டுகளை கடந்து கடைசியாக 'நோம்' என்ற இடத்தை அடைவார்கள்.''

நேகாவிற்கு தலை சுற்றியது. ''இத்தனை கடுமையாகவா ரேஸ் நடக்கும்?''

''ஆமாம். செல்லும் வழியில் சாதாரணமாக மைனஸ் நூற்றி முப்பது டிகிரி குளிர் இருக்கும். பனிப்புயல் கூட அடிக்கும். சில இடங்களில் லேசான வெப்பம் இருந்தாலும் ஐஸ் உருகி சகதியாகி ஸ்லெட்டுகள் பயணிக்க முடியாமல் போகும். வழியில் தென்படும் ஓநாய்.. மூஸ்.. போன்ற மிருகங்கள் நாய்களைப் பார்த்ததும் தாக்க முற்படும்.''

''ஐயோ!'' என்றாள் நேகா திகிலுடன். ''பரிசுத் தொகைக்காக இத்தனை சிரமப்பட்டாவது ரேஸில் கலந்து கொள்ள வேண்டுமா?''

''வெறும் பணத்திற்காக யாரும் ரிஸ்க் எடுக்கத் துணிய மாட்டார்கள் நேகா. உயிரைப் பணயம் வைப்பதில் ஒரு த்ரில் இருக்கிறது. அந்த த்ரில்லுக்காகத்தான் செய்கிறார்கள். தமிழ்நாட்டில் கூட மஞ்சு விரட்டு நடத்தும்



போது காயப்பட்டாலும், காளை முட்டி செத்தாலும் தொடர்ந்து கலந்து கொண்டுதானே இருக்கிறார்கள்?''

''போகலாம்'' என தர்ஷணா முன்னே நடக்கவும் இருவரும் கிளம்பினார்கள்.

வழியில் மைதானத்தில் கோடை பொருட்காட்சி நடந்து கொண்டிருந்தது. ஆடும் மாடும் பால் கறப்பதை டீச்சர்கள் பள்ளிக் குழந்தைகளை அழைத்து வந்து காண்பித்துக் கொண்டிருந்தனர். வீடுகளில் பயிரிடப்பட்ட பூக்களும், பெரிய காய்களும் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. நேகா இவை எதிலும் ஈடுபாடின்றி நடந்தாள்.

அன்று இரவு நேகாவால் கண்களை மூட முடியவில்லை.

நந்தகிஷோர் ஏன் இத்தனை கடுமையான ரேஸில் கலந்து கொண்டான்? அவனது வேலையே ஆபத்தானது என்பதால் புதிய ஆபத்துகளை தேடிப் போவதில் தயக்கம் ஏற்படவில்லை போலும். இளமைக்கே உரித்தான வேகமும், துணிச்சலும் அவனை தடைகளைத் தகர்த்து சாகசங்கள் செய்யத் தூண்டுகிறது. ஆனால் அவன் குடும்பத்தினர் அவனைப் பற்றி கவலைப்பட மாட்டார்களா? ஆபத்தான காரியங்களில் ஈடுபட வேண்டாம் என்று சொல்ல மாட்டார்களா?

மாதவியை அழைத்துப் போக வந்த ரங்காரெட்டி சொன்ன சம்பவம் நினைவுக்கு வந்தது. ''ஒருமுறை ரேஸில் கலந்து கொண்ட ஒருவனின் கால்கள் பனிச் சேற்றில் சிக்கிக் கொள்ள, நாய்களோ தொடர்ந்து ஓடிக் கொண்டே இருந்தது. பிறகு அவன் கால்களை வெட்டி எடுக்க வேண்டியிருந்தது. சென்ற வருடம் பனிப்புயல்

வீசியதால் ரேஸர்களுக்கு சாப்பாடு கொண்டு வரும் விமானங்கள் செக் பாய்ண்ட்டுக்கு செல்ல இயலாததால் ரேஸில் கலந்து கொண்டவர்கள் உணவின்றி மேலே செல்லவும் முடியாமல் திரும்பி வரவும் இயலாமல் தவித்துப் போனார்கள்'' என ரங்காரெட்டி ரேஸைப் பற்றி சொன்ன பல கதைகள் நினைவுக்கு வந்து பயமுறுத்தின. தான் எதற்காக இத்தனை கவலைப்படுகிறோம் என்பது அவளுக்கே புரியவில்லை. பிறந்ததிலிருந்து இங்கே வசிக்கும் நந்தகிஷோருக்கு தன்னை விட இந்த ஊரைப் பற்றி அதிகம் தெரிந்திருக்கும் என்றெண்ணிய போதும் அவளால் நிம்மதியாக இருக்க முடியவில்லை.

மறுநாள் யுனிவர்சிட்டி அலுவலகத்தில் நேகாவின் எதிரே வந்த ராபின் ''ஹலோ'' என்றான் முகம் முழுக்க மகிழ்ச்சியாக. ''வேலை எப்படிப் போகிறது? ஊர் பிடித்திருக்கிறதா?'' என்றான் அவளிடம்.

''ஆமாம். பிடித்திருக்கிறது. என்னை ஏர்போர்ட்டி லிருந்து அழைத்து வந்து டிராப் பண்ணிய பிறகு உன்னை இப்போதுதான் பார்க்கிறேன்'' என்றாள் நேகா.

''அலுவலகத்தில் தான் எனக்கு வேலை. நான் அடிக்கடி உங்களை பார்க்கத்தான் செய்கிறேன். நீங்கள்தான் பிசியாக இருப்பீர்கள்'' என்றான் ராபின்.

நேகா பதில் பேசாமல் நடக்கவும் கூடவே நடந்தபடி ராபின் கேட்டான்.

''இன்று மாலை நீங்கள் ப்ரீயா?''

''இல்லை ராபின். எனக்கு நோட்ஸ் எடுக்க வேண்டும்.''

''நாளை?''



''என் ஸ்டூடன்ட்ஸ் இருவர் டியூஷனுக்கு வருவார்கள். அதற்கு அடுத்த நாள் மாதவியின் பெண் தர்ஷனாவுடன் நேஷனல் பார்க் போகலாம் என்றிருக்கிறேன்'' என்றாள் நேகா உஷாராக.

''உங்களுக்கு இங்கு நிறைய நண்பர்கள் கிடைத்து விட்டார்கள் போலிருக்கிறது'' என்றான் ராபின் ஏமாற்றத்துடன்.

''ஆமாம். பிறகு பார்க்கலாம்'' என அவனிடமிருந்து கழண்டு கொண்டு தன் அறைக்கு வந்த நேகா ராபினை அத்துடன் மறந்து போனாள்.

நேகாவிற்கு ஒரு வாரமும் நகராமல் நின்றது. பொதுவாகவே கோடையில் இருட்டுவதில்லை என்பதால் பகல் நீண்டிருக்கும். இப்போதோ ஒரு நாள் முடிய ஒரு வருடம் ஆவது போலிருந்தது. மாதவியிடம் தினமும் ரேஸைப் பற்றி விசாரித்தாள். ''மஷர்கள், அதாவது ரேஸில் கலந்து கொள்பவர்கள் எதுவரை போய் இருக்கிறார்கள்? யாருக்கேனும் விபத்து ஏற்பட்டதா? யார் முன்னிலையில் இருக்கிறார்கள்?'' என அவள் தொடர்ந்து கேட்கவும், ''உனக்கென்ன ரேஸ்களில் இத்தனை ஆர்வம்? உன் பரபரப்பைப் பார்த்தால் அடுத்த வருடம் நீயே ரேஸில் கலந்து கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை'' என மாதவி கேலி பேசினாள்.

ஒரு வாரம் முடிந்த பிறகு நேகா பொறுமையிழக்கத் தொடங்குகையில் மாதவி ஒரு நாள் சொன்னாள், ''ஜோ ரெடிங்டன் என்பவர் ரேஸில் முதலாவதாக வந்திருக்கிறார். நாளை பரிசளிப்பு விழா நடக்கிறதாம்.''

''நந்தகிஷோரும் கலந்து கொண்டான் இல்லையா?'' என்றாள் நேகா.

''ஆமாம். ஆனால் இரண்டாவது பரிசில் கூட அவன் பெயர் இல்லை. அதனால் என்ன? பரிசா முக்கியம்? அனுபவம்தானே பெரிய விஷயம்?'' என்றாள் மாதவி.

அவனுக்கு எப்படிப்பட்ட அனுபவம் ஏற்பட்டிருக்கும் என்ற நினைவில் ''நந்தகிஷோரை நீ சந்தித்தாயா மாதவி?'' என்றாள் நேகா.

''இல்லை. ரங்கா ஏதோ விஷயமாக அவனைத் தொடர்பு கொள்ள முயற்சித்தபோது போன் எடுக்கவே யில்லை. போய் பார்த்தபோது வீடும் பூட்டி இருப்பதாக சொன்னார்.''

நேகாவின் கை பற்றியிருந்த புத்தகங்களை இறுக் கியது.

''எங்காவது வேலையாய் போய் இருக்கக் கூடும்'' என்றாள் மாதவி சாதாரணமாக.

நேகாவால் அத்தனை எளிதாக எடுத்துக் கொள்ள முடியாமல் மனம் தவித்தது. நந்தகிஷோர் பனிப்புயலில் சிக்கி எங்கோ விழுந்து கிடப்பது போல் கனவு வந்தது. வெகு நேரம் பனியில் கிடந்தால் இரத்தம் உறைந்து போய் விரல்கள், கை, கால் என ஒவ்வொன்றாக இற்று உதிர்ந்து விடும் என்று அவள் கேள்விப்பட்டிருந்தாள். அதெல்லாம் நினைவுக்கு வந்து கண்களை மூடினால் திகிலூட்டும் கனவுகளாகத் தொடர்ந்தன.

இரவு தூங்காததால் காலையில் எழும்போது தலை பாரமாக இருந்தது. அன்று விடுமுறை நாள் என்பதால் ஒரு தலைவலி மாத்திரையைப் போட்டுக் கொண்டு மீண்டும் உறங்க முற்பட்டாள். மாலை வரை ஓய்வெடுத்த பின் மிகவும் பசித்தது. ப்ரெட், அரிசி, கார்ன்ப்ளேக்ஸ்



எதுவுமே வீட்டில் இல்லை. எப்படி வாங்க மறந்து போனோம் என்ற சலிப்புடன் ஒரு ஜீன்சையும் டீ சர்ட் டையும் அணிந்து கொண்டு வெளியே கிளம்பினாள்.

## 5



நேகா டிபார்ட்மென்ட்டல் ஸ்டோருக்குள் சென்று தேவையான சாமான்களை வாங்கிக் கொண்டு வெளியே வந்தாள். தோளில் பையை மாட்டியபடி கடை வீதிக்குள் நடந்தபோது ''ஹாய்'' என்ற குரல் கேட்டது. நேகா ப்ரேக் போட்டது போல் நின்றாள். நந்தகிஷோர் தன் வழக்கமான சிரிப்புடன் அவள் அருகே வந்தான்.

நேகாவிற்கு மகிழ்ச்சியும், கோபமும் ஒரே நேரத்தில் ஏற்பட்டது. சட்டென பேச வாய் வராமல் திணறினாள்.

''இப்போது உனக்கு என்னை அடையாளம் தெரியவில் லையா?'' என்றான் நந்தகிஷோர் கேலியாக.

''இல்லை. நீதான் எல்லோரையும் மறந்து விட்டாய். அவ்வளவு ஏன் உன்னைப் பற்றியே உனக்கு நினை வில்லை'' என்றாள் நேகா.

நந்தகிஷோர் புரியாமல் பார்த்தான். ''நீ என்ன சொல் கிறாய் நேகா?''

''உன் ரேஸ் என்னவாயிற்று?''

''ரேஸா?'' நந்தகிஷோர் வாய்விட்டுச் சிரித்தான். ''சரியான ஆன்ட்டிக்ளைமாக்ஸ். போகும் வழியில் நாய்

கயிற்றை அறுத்துக் கொண்டு ஓடி விட்டது. ஓடிப்போன நாயை கண்டு பிடித்து, நான் வந்து சேர்வதற்குள் ரேஸ் முடிந்து விட்டது. ஜெயித்து ஹீரோவாக முயற்சி செய்தேன். இந்த நாய்கள் காமெடியன் ஆக்கிவிட்டன."

அந்த சிரிப்பு நேகாவை எரிச்சல் படுத்தியது. "உயிரைப் பணயம் வைப்பது உனக்குச் சிரிப்பாக இருக்கிறதா?" என்றாள் கோபத்துடன்.

"பயந்தவன் எதையுமே சாதிக்க முடியாது நேகா."

"உனக்கு இருக்கும் துணிச்சல் எல்லோருக்கும் இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. உன் மேல் பிரியம் வைத்தவர்கள் பயப்படலாம். கவலைப்படலாம். இரவில் தூங்க முடியாமல் கற்பனைகள் தரும் வலியைத் தாங்க முடியாமல் போகலாம்."

நந்தகிஷோரின் பார்வை கூர்மையுடன் அவள் மீது படிந்தது. சிவந்திருந்த கண்களை கோபத்தில் பளபளத்த முகத்தை. அதில் தெரிந்த சோர்வை ஒரு ஆச்சரியத்துடன் அளவெடுத்தான்.

"உனக்கு யாரைப் பற்றியும் கவலையில்லை. நீ ஒரு பொறுப்பற்றவன். ஒரு போன் செய்து யாருக்கும் தகவல் சொல்லக் கூடத் தோணாது உனக்கு..." நேகா படபடவெனப் பொரியவும் நந்தகிஷோர் மிருதுவாக அவள் தோள்களைப் பற்றினான்.

"உன் நெம்பர் என்னிடம் இல்லை நேகா. இரண்டாவது ரேஸில் பயப்பட வேண்டிய அவசியமும் இல்லை. ஆபத்து இருக்கும் இடங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகளும் அதிகம் இருக்கும். ரேஸ் செல்லும் பாதைக்கு மேலே ஹெலிக்காப்டர் அல்லது சிறிய ரக விமானங்கள் சுற்றிக்



கொண்டே இருக்கும். செக் பாய்ண்ட்களில் எங்களுக்கு உணவும் நாய்களுக்கு உணவுடன் வைட்டமின் மாத்திரைகளும், அவை தூங்க வைக்கோலும் இருக்கும். பிரச்சனை என்றால் உதவ ஆட்கள் இருப்பார்கள்."

"இதை நீ ரேஸில் கலந்து கொள்ளும் முன்பே சொல்லியிருக்கலாம்."

"நீ இப்படிக் கவலைப்படுவாய் என்று தெரியாது. தெரிந்தால் முன்பே சொல்லியிருப்பேன்."

"நான் கவலைப்பட்டதாக யார் சொன்னது" என்றாள் நேகா ரோஷத்துடன்.

"அப்படியா? இந்த ஒரு வாரமாய் நீ கவலைப்படவில்லை?"

"இல்லவே இல்லை. யாரோ ஒருத்தன் எங்கோ போனால் நான் ஏன் கவலைப்பட வேண்டும்? உண்மையில் நான் ரொம்ப ஜாலியாக இருந்தேன். நல்ல ம்யூசிக் கேட்டேன். வெரைட்டியாய் சமைத்து சாப்பிட்டேன்... நன்றாகத் தூங்கி."

"ஒகே.. ஒகே.." என்றான் நந்தகிஷோர் பெரிய சிரிப்புடன். "நீ கீழே விழவே இல்லை. உன் மீது மண் ஒட்டவே இல்லை. சரிதானா?"

"கிஷோர்..." என்றாள் நேகா கோபத்துடன்.

"சரி. நான் பேசவே இல்லை. எனக்கு இப்போது ரொம்ப பசிக்கிறது வா. சாப்பிடப் போகலாம்" என்றான் நந்தகிஷோர்.

"எனக்கு வழக்கத்தைவிட அதிகமாய் சாப்பிட்டதில் வயிறு புல் ஆக இருக்கிறது. நான் வரவில்லை. நீ சாப்பிடப் போ" என்றாள் நேகா.

''ஆமாம். நீ நிறைய சாப்பிட்டு விட்டு நடக்க முடியாமல் திணறுவது உன்னைப் பார்க்கும் போதே தெரிகிறது. எனக்குக் கம்பெனி கொடுக்க என்னுடன் வா'' என்ற நந்தகிஷோர் சுவாதீனமாக, அவள் கைகளைப் பற்றியபடி ஒரு ரெஸ்ட்டாரண்டிற்குள் நுழைந்தான்.

''உனக்காகத்தான் வருகிறேன்'' என்ற பிகுவுடன் நேகா உடன் நடந்தாள்.

ஸ்வான் சிக்கன் நூடுல்சும், மெக்ரோனியும், சிக்கன் சுபாப்பும் ஆர்டர் செய்தார்கள். முதலில் வந்த மட்டன் சூப்பை ருசித்தபடி ''தென்?'' என்றான் நந்தகிஷோர்.

''தென், வாட்?''

''நம் இருவரின் பெயரைத் தவிர, நாம் இதுவரை எதையுமே தெரிந்து கொள்ளவில்லை'' என்றான் நந்தகிஷோர்.

அப்போதுதான் உன் குடும்பத்தைப் பற்றி தனக்கு எதுவும் தெரியாதென்பது நேகாவுக்கு நினைவு வந்தது. முற்றிலும் அந்நியனான ஒருவனிடம் எத்தனையோ ஆண்டுகள் பழகியது போன்ற நெருக்கம் தோன்றுவது அவளுக்கேப் புதிதாக இருந்தது.

நந்தகிஷோர் தன் பெற்றோர்களைப் பற்றி பூஜாவைப் பற்றி, அவள் கணவர் அவர்களுக்குப் பிறக்கப் போகும் குழந்தையைப் பற்றி எல்லாம் சொன்னான். ''உன் பெற்றோர்கள் என்ன செய்கிறார்கள் நேகா? உனக்கு தம்பி, தங்கைகள் இருக்கிறார்களா?'' என்றான் அவளிடம்.

நேகாவிற்கு அவனைச் சந்தித்ததிலிருந்து முதன் முறையாக அவனுக்கு பதில் சொல்லத் தயக்கம் ஏற்பட்டது.



அவள் முகத்தைப் பார்த்த நந்தகிஷோர், ''இந்த நூடுல்ஸ் உனக்குப் பிடித்திருக்கிறதா நேகா?'' என்றான் அவளிடம். ''அமெரிக்காவில் மற்ற இடங்களில் சவுத் இண்டியன் ஹோட்டல்கள் இருப்பது போல் இங்கு கிடையாது. அதனால் இட்லி, தோசைக்கு ஆசைப்பட்டால் நீயேதான் தயாரித்துக் கொள்ள வேண்டும். அதுவும் மாவு புளிக்காது. எனவே இங்கு உள்ளவர்கள மாவை மைக்ரோ அவனில் வைத்து புளிக்கச் செய்து உபயோகப்படுத்துகிறார்கள். ஆனால் என்னைக் கேட்டால் எங்கே, எது கிடைக்குமோ அதை சாப்பிடப் பழகிக் கொள்வது தான் நல்லது.''

தன் தயக்கத்தை உணர்ந்து நந்தகிஷோர் அதைப் பற்றி ஒரு வார்த்தை பேசாமல் பேச்சை மாற்றிய இதம் நேகாவின் மனதைத் தொட்டது. இவன் உண்மையானவன் என மனசு சொல்லவும் நேகா வாயைத் திறந்தாள். ''என் குடும்பத்தைப் பற்றி பெரிதாகச் சொல்ல எதுவும் இல்லை கிஷோர். என் சிறு வயதிலேயே என் அம்மாவும், அப்பாவும் பிரிந்து விட்டார்கள். நான் பாட்டி வீட்டில் வளர்ந்தேன். இப்போது பெற்றோர் இருவரும் அவரவர்களுக்குப் பிடித்த துணையுடன் செட்டில் ஆகி விட்டார்கள்.''

''இதில் நீ கூச்சப்பட எதுவும் இல்லை நேகா? என்றான் நந்தகிஷோர் அவளையே பார்த்தபடி.

''திருமணமாகி ஒரு குழந்தை பிறந்த பிறகு குழந்தையையும், கணவனையும் விட்டு விட்டு ஓடுவது வெட்கப்பட வேண்டிய விஷயமில்லையா நந்தகிஷோர்.''

''இல்லை. உன் அம்மா எதிர்பார்த்த அன்பும் நெருக்கமும் உன் அப்பாவிடம் கிடைத்திருக்காது. தனக்குப்

பிடித்தமான ஒரு ஆணை சந்தித்ததும் அவர் மேல் பிரியம் ஏற்பட்டுப் போயிருக்கும்'' என்றான் நந்தகிஷோர் சாதாரணமாக.

''மணமான பெண்ணுக்கு எப்படி வேறு ஆடவன் மீது பிரியம் ஏற்படும் கிஷோர்?''

''இது இந்திய கலாச்சாரத்தின் குறுகிய கண்ணோட்டம் நேகா. இருவர் மனமும் ஒத்துப் போன பிறகு ஜாதியோ, மதமோ, மொழி வேறுபாடுகளோ ஒரு பொருட்டில்லை எனும் போது திருமணம் ஆனவர்கள் என்ற அடையாளம் மட்டும் எப்படி தடையாக இருக்க முடியும்?''

''நீ சொல்வது காதலர்களுக்குத்தான் பொருந்தும். என் அம்மா ஒழுக்கமற்றவள். நேர்மையான வாழ்க்கை வாழாதவள்'' என்றாள் நேகா வெறுப்புடன்.

''யோசித்துப்பார் நேகா உன் அம்மா தான் விரும்பியவருடன் மட்டும்தான் வாழ்கிறாள். ஒழுக்கமில்லாதவள் என்றால் அவரை விட வசதியானவனைப் பார்த்ததும் அங்கே போயிருப்பாள்.''

''கலெக்டரின் மனைவி என்ற அந்தஸ்தும், வசதி வாய்ப்புகளும், அடுத்தடுத்து பிறந்த இரண்டு குழந்தைகளும் இல்லை என்றால் போனாலும் போயிருப்பாள்.''

''வக்கிரமாக யோசிக்காதே'' என்றான் நந்தகிஷோர். ''நாம் எல்லோரும் தனித்தனி மனிதர்கள். ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட ஆசைகள், எண்ணங்கள் இருக்கும். உறவு என்ற பெயரால் யாரும் யாரையும் நிர்பந்திக்க முடியாது.''



''தனியாக பிறக்கும் மனிதர்கள் தனியாகவே நின்றுவிட்டால் அதை எப்படி குடும்பம் என்று சொல்ல முடியும் கிஷோர்? பரஸ்பர அனுசரிப்பும், விட்டுக் கொடுத்தலும்தான் குடும்ப உறவுகளின் அஸ்திவாரம்.''

''இது பல வருடங்களாக ஊறிப்போன பழமைவாத சமூகத்தின் பிரதிபலிப்பு நேகா. கணவனுக்கும் மனைவிக்கும் ஜென்மாந்திர தொடர்பு இருப்பதாகக் கூறுவதும், ஒருவருக்காகவே மற்றவர் பிறந்திருப்பதாக நினைப்பதும், கல்லானாலும் கணவன் என்பதும் சமூக கட்டுப்பாடுகள் தானே தவிர வேறு எதுவும் இல்லை. நம் உறவுகள் எதுவும் நமக்கு விதிக்கப்பட்டவை அல்ல. அவை மிக எதேச்சையானவை. விதியின் பெயரால் அவற்றை கட்டிப்போட முயல்கிறோம்.''

''அப்படியானால் நாம் இருவரும் சந்தித்துக் கொண்டதும் கூட எதேச்சையானதுதானா. கிஷோர்? இந்தியாவைத் தவிர எங்கும் போகவேண்டும் என்று கனவு கூட கண்டிராத நான் எதிர்பாராமல் இங்கு கிளம்பி வந்ததும் உன்னுடன் பழக்கம் ஏற்பட்டதும் கூட விதி என்று தோன்றுகிறது எனக்கு.''

''நிச்சயம் இல்லை. அன்று நீ கீழே விழுந்த சமயம் நான் பார்த்ததால் உதவ நேர்ந்தது. அந்த சமயம் நான் இல்லை என்றாலும் யாராவது உதவத்தான் செய்திருப்பார்கள்.''

நேகா அடிபட்டுப் போனவளாய் அவனைப் பார்த்தாள். இந்த பத்து நாட்களாய் மனதில் தோன்றிய உணர்வுகளுக்கெல்லாம் அர்த்தமே இல்லை என்பது புரிந்தது. ஒரு ஆணின் சகஜமான பேச்சைக் கூட புரிந்து கொள்ளாமல் போனோம் என்ற வெட்கம் ஏற்பட்டது.

உண்மையில் தன் பெற்றோர்களுக்கும் இவனுக்கும் அதிக வித்தியாசம் இல்லை. காதல் என்ற பெயரால் தங்கள் பொறுப்புகளை தட்டிக் கழிப்பவர்கள் எந்த வயதிலும் யார் மீதும் இவர்களுக்கு காதல் வரும். திருமணம் என்ற வார்த்தைக்கு இவர்களைப் பொருத்த வரை பிரத்தியேக அர்த்தம் எதுவும் இல்லை. இவர்களை நம்பி கற்பனைகளை வளர்த்துக் கொள்பவர்கள் உண்மையில் முட்டாளாய் இருக்க வேண்டும். நேகாவிற்கு வாய்க்குள் திணித்த நூடுல்ஸ் தொண்டைக்குள் இறங்காமல் நின்றது. கண்ணாடி டம்ளரிலிருந்த ஜூஸை விழுங்கி விட்டு நந்தகிஷோரைப் பார்த்து புன்னகைத்தாள்.

"போகலாமா?"

"நீ இன்னும் முடிக்கவில்லை போலிருக்கிறதே!" நந்தகிஷோர் ப்ளேட்டில் மீதியிருந்தவற்றைக் காட்டினான்.

"ஸாரி. என்னால் முடியவில்லை" என்றாள் நேகா.

"நோ. ப்ராப்ளம்" என எழுந்து பணத்தைக் கொடுத்து விட்டு வெளியே வருகையில் நந்தகிஷோர் சொன்னான். "உனக்கு நல்ல பசின்னு பார்த்தாலே தெரிந்தது. இருந்தும் நீ சரியாகச் சாப்பிடவில்லை. நான் நீ வருத்தப்படும் விதமாய் உன் வீட்டுக் கதையை ஆரம்பித்திருக்கக் கூடாது. ஸாரி நேகா. ஐயம் வெரி ஸாரி."

"என் சிறு வயதிலேயே முடிந்து போன கதை அது. இத்தனை வருடங்கள் கழித்து அதற்காக நான் ஏன் வருந்த வேண்டும்? என் எதிர்காலத்தைப் பற்றிதான் இனி நான் யோசிக்க வேண்டும்" என்றாள் நேகா.



"அந்த யோசனை கூட தேவையில்லை. இனிமேல் உனக்கு எப்போதும் உதவ நான் காத்திருக்கிறேன் நேகா" என்றான் நந்தகிஷோர்.

"உறவில்லாதவர்கள் செய்யக் கூடிய உதவி ஒரு எல்லைக்கு உட்பட்டது நந்தகிஷோர்."

"நட்புதான் உலகிலேயே மிகப் பெரிய உறவு நேகா. அதற்கு ஆண், பெண் வேறுபாடு இல்லை. மொழி, அந்தஸ்து வித்தியாசங்கள் இல்லை. நீ என் தோழி நேகா. பார்த்ததும் பிடித்துப் போன பிரியமான தோழி" என்றான் நந்தகிஷோர் உணர்ச்சியுடன். "என்னிடம் எதற்காகவும் நீ தயங்க வேண்டியதில்லை" என்றான் அவள் கைகளைப் பற்றி.

பற்றியிருந்த கைகளின் வழியே மின்சாரம் பாய்ந்து நேகாவிற்கு மெல்லிய நடுக்கம் ஏற்பட்டது. உணர்ச்சிகளை சமாளித்துக் கொண்டு நேகா புன்னகைத்தாள். "தேங்க்யூ."

நேகா மறுத்தும் கேளாமல் நந்தகிஷோர் அவளை அவளது அறை வரை கொண்டு வந்து விட்டான். காரிலிருந்த பிஸ்கெட் பாக்கெட்டுகளையும், கேக்கையும் அவள் கையில் திணித்து விட்டுக் கிளம்பிப் போனான். தான் சரியாகச் சாப்பிடாததால் இவற்றை வாங்கியிருக்கிறான் என்பது புரிந்த நேகாவிற்கு உண்மையில் இவன் நல்ல நண்பன் என்ற உணர்வில் மனம் கரைந்தது.

அடுத்து வந்த நாட்களில் நேகாவிற்கு வேலை மிகவும் கடுமையாக இருந்தது. அவளது டிபார்ட்மெண்டில் சிலர் விடுமுறையில் சென்றிருந்தனர். அவர்கள் வேலையையும் பகிர்ந்து கொண்டதில் எல்லோருக்குமே

வேலை அதிகமாக இருந்தது. ரெஸ்ட் ரூமில் அமர்ந்திருந்தபோது அவளது துறை ஆசிரியர்கள் முணுமுணுத்தார்கள். "நம்முடைய ரெகுலர் ஒர்க்கே அதிகம். அத்துடன் எக்ஸ்ட்ரா ட்யூட்டி வேறு. குளிர்காலம் தொடங்கப் போகிறது. இனி புதிதாக போஸ்டிங் இருக்காது. எத்தனை நாளைக்கு நம்மால் சமாளிக்க முடியும்? இருளிலும் குளிரிலும் வேலை செய்வது நமக்கு மட்டும் சிரமம் இல்லையா என்ன? இப்போதே மூன்று நான்கு மணி நேரம்தான் சூரிய ஒளி இருக்கிறது. அடுத்த மாதத்திலிருந்து இதுவும் குறையத் தொடங்கும். டிப்ரஷன் ஏற்படும்" என ஆளாளுக்கு பேசியே பயமுறுத்தினார்கள்.

எதையும் வரும்போது எதிர்கொள்ளுவோம் என்ற எண்ணத்துடன் நேகா தனது வேலையில் ஆழ்ந்து போனாள்.

நந்தகிஷோர் அடிக்கடி போன் செய்தான். அவளைப் பற்றி விசாரித்தான். தன் வேலையைப் பற்றி தான் போயிருந்த இடங்களைப் பற்றி சுவாரஸ்யமாக எதையாவது சொன்னான். சாதாரணமாக அவனுடன் பேசத் தொடங்கிய நேகா நாளடைவில் அவன் போன் காலை ஆவலுடன் எதிர்பார்க்கத் தொடங்கினாள். நந்தகிஷோரைப் பொறுத்தவரை இந்த பேச்சுகளுக்கு பெரிய முக்கியத்துவம் எதுவும் இருக்காது என்பது புரிந்த போதிலும் அவன் குரலைக் கேட்க மனம் ஆர்வத்துடன் காத்து நிற்பதைத் தடுக்க முடியவில்லை.

நேகா அன்று காலையில் வழக்கம் போல் கிளம்பி செல்கையில் மாணவர்கள் அங்கும் இங்குமாக கும்பலாக நின்றிருந்தார்கள்.



"குட்மார்னிங் மேம்" என்றார்கள், அவளைப் பார்த்ததும். "நீங்கள் க்ளாசுக்கு போகவில்லையா?" என்றாள் நேகா, அவர்களிடம்.

"போக வேண்டும் மேம். அதோ அங்கே பாருங்கள் 'டெர்மினேஷன் டஸ்ட்' நீங்கள் பார்க்கவில்லையா?" என்றார்கள் குதூகலத்துடன்.

கோடைக்காலம் முடியும் நேரம் முதன் முதலில் மலையில் விழும் பனியை 'டெர்மினேஷன் டஸ்ட்' என்பார்கள். மாணவர்களுடன் சேர்ந்து சற்று தொலைவிலிருந்த மலைமீது படிந்திருந்த பனியைப் பார்த்த நேகாவிற்கு அவர்கள் உற்சாகம் ஆச்சரியமாக இருந்தது. பனி நிறைந்த இடத்திலேயே வாழ்பவர்களுக்கு பனியைக் கண்டால் ஏற்படும் மகிழ்ச்சி ஆச்சரியமாக இருந்தது. அன்று முழுவதும் பார்க்கிறவர்கள் அனைவரும் இதைப் பற்றியே ஒருவருக்கொருவர் விசாரித்துக் கொள்வதை பார்க்கும்போதுதான் இந்த விசாரிப்பு இந்த ஊரின் மரபு எனப் புரிந்தது.

குளிர்காலம் தொடங்கப் போவதால் கிடைக்கும் சில மணி நேர வெளிச்சத்தை உல்லாசமாகச் செலவழிக்க மக்கள் ஒரு அவசரத்துடன் வெளியே சுற்றினார்கள்.

ராபின் பலமுறை அவளை வெளியே அழைத்தான். ஒவ்வொரு முறையும் அவள் மறுக்கும்போது "நீ இங்கேயே அடைந்து கிடந்தால் பைத்தியம் பிடித்து விடும்" என்பான்.

அன்று போட்டிங் போகலாம் என்றழைத்த ராபினிடம் ஏதோ காரணங்களைக் கூறி மறுத்தபோது மாதவி கேட்டாள். "யாருடைய தோழமையும் வேண்டாமா

உனக்கு? ஒரு நண்பனுடன் உல்லாசமாய் நாளை செலவழிப்பதில் உனக்கு ஏன் இத்தனை தயக்கம்? ஊரில் உனக்கு வேறு காதலன் இருக்கிறானா? அவனுடன் மட்டுமே பொழுதை கழிக்க வேண்டும் என்று நினைக்கிறாயா?''

''அப்படி யாரும் இல்லை மாதவி. எனக்கு விடுமுறை தானாக கழியும். அதற்கு ஒரு துணை தேவை என்ற எண்ணமே ஏற்படவில்லை.''

''இதற்கு உன் கட்டுப்பாடான வளர்ப்பு முறை காரணமாய் இருக்கக் கூடும். வாழ்க்கை வாழ்வதற்குத் தான் நேகா. இப்போது நழுவவிட்ட தருணங்கள் மீண்டும் கைக்கு வராமலே போய்விடக் கூடும்.''

நேகா பதில் பேசாமல் புன்னகைக்கவும், ''நாளை அசோசியேஷனில் ஒரு பார்ட்டி இருக்கிறது. வருகிறாயா'' என்றாள் மாதவி. தர்ஷணாவை பார்க்கலாமே என்ற எண்ணம் எழ ''வருகிறேன்'' என்றாள் நேகா.

''குட். நாலு மணிக்கு ரெடியாக இரு'' என்றாள் மாதவி.

மறுநாள் பார்ட்டிக்கு மாதவியுடன் செல்கையில் காரில் தர்ஷணாவை காணாததால் ''உன் பெண் எங்கே மாதவி? அவள் வரவில்லையா?'' என்றாள் நேகா ஏமாற்றத் துடன்.

''தர்ஷணாவா?'' மாதவி பெரிதாகச் சிரித்தாள். ''பெரியவர்கள் பார்ட்டியில் அவளுக்கென்ன வேலை?''

''உன் கணவர் கூட வரவில்லையே!''

''அவருக்கு ஏதோ வேலை இருக்கிறது.''



இவர்கள் போய் சேர்ந்தபோது பார்ட்டி தொடங்கியிருந்தது. ஸ்பீக்கர்களில் உச்சத்தில் ஒலித்த இசைக்கு ஆண்களும் பெண்களையும் ஒருவரை ஒருவர் அணைத்த படி நடனமாடிக் கொண்டிருந்தனர். பால் வேறுபாடின்றி எல்லோர் கைகளிலும் விஸ்கி டம்ளர்கள் இருந்தன. மாதவி வெகு நாட்கள் பழகிப் போன சரளத்துடன் அந்த கும்பலில் இணைந்து கொள்ள நேகா ஒரு ஆங்கிலப் படம் பார்க்கும் சுவாரஸ்யத்துடன் சோபாவில் அமர்ந் தாள்.

நேகாவிடம் நிறைய ஆண்கள் தங்களை அறிமுகப் படுத்திக் கொண்டார்கள். சொல்லி வைத்தாற்போல் ''டான்ஸ் ஆட வா'' என்றார்கள். நேகா நாசுக்காய் மறுத்துவிட்டு வேடிக்கைப் பார்த்தாள்.

மாதவி இந்த உலகையே மறந்து விட்டவளைப் போல் தென்பட்டாள்.

பாதி கண்கள் மூடிய நிலையில் ஒரு இளைஞனின் தோள் மீது சாய்ந்திருந்தவளைப் பார்க்கையில் அவள் ஒரு பொறுப்புள்ள ஆசிரியை, வயது வந்த பெண்ணின் தாய் என்று நம்புவது கடினமாக இருந்தது. நேரம் போய்க் கொண்டிருந்தது. பேரரிடம் ''பார்ட்டி எத்தனை மணிக்கு முடியும்?'' என்றாள் நேகா.

அவளை விநோதமாகப் பார்த்துவிட்டு அவன் சொன்னான். ''விடியும் வரை நடக்கும். நாளைக் காலைதான் எல்லோரும் வீட்டிற்குக் கிளம்புவார்கள்.''

இப்போது எப்படி வீட்டிற்கு போவது? மாதவியை எப்படிக் கிளப்புவது என்று நேகா யோசிக்கையில் பெரிய சிரிப்புடன் ராபின் அவள் அருகில் வந்தாள்.

''உண்மையில் நீங்கள்தானா என்று ஆச்சரியமாக இருக்கிறது. உங்களுக்கு பார்ட்டி பொழுதுபோக்குகளில் விருப்பம் இல்லை என்று சொன்னீர்கள் இல்லையா?''

''விருப்பம் இல்லைதான். இன்று மாதவியிடமிருந்து என்னால் தப்பிக்க முடியவில்லை.''

''அதுவும் நல்லதிற்குதான். வந்து என்னுடன் ஒரு டான்ஸ் ஆடுங்கள்.''

''ஸாரி எனக்கு டான்ஸ் ஆடத் தெரியாது.''

''வாட் எ பிட்டி. இத்தனை அழகான பெண்களுக்கு டான்ஸ் ஆடத் தெரியாதா? சரி. நான் கற்றுத் தரு கிறேன். என்னுடன் வாருங்கள்'' ராபின் கைகளை நீட்டினான்.

''நோ. எனக்கு டான்ஸ் ஆடுவதில் இன்ட்ரஸ்ட் இல்லை.'' நேகா மறுப்புடன் தலையசைத்தாள்.

ராபின் முகம் சுருங்கியது. ''நீங்கள் என்னை வேண்டு மென்றே தவிர்க்கிறீர்கள். இது எனக்குப் பெரிய அவ மானம்.''

''அப்படி எதுவும் இல்லை ராபின். எனக்கு இது புதிய இடம். புதிய சூழ்நிலை. அதனால்தான். எங்கள் நாட்டில் பெண்கள் இத்தனை ப்ரீயாய் பழக மாட்டார்கள்.''

ராபின் பெரிதாக சிரித்தான். ''இங்கிருப்பவர்களில் ஒரு சிலரைத் தவிர எல்லோருமே உங்கள் நாட்டவர் கள்தான். உங்கள் சிநேகிதி மாதவிகூட எத்தனை ஜாலி யாய் இருக்கிறாள் என்று பாருங்கள். மாதவியின் கண வன் கூட இருந்தால் கூட மாதவியின் விஷயத்தில் தலையிட மாட்டார்.''



''அது அவர்கள் தனிப்பட்ட விஷயம் ராபின். எனக்கு இப்போது மூட் இல்லை. பிறகு பார்க்கலாம்'' என்றாள் நேகா முடிவாக.

ராபின் தோள்களைக் குலுக்கியபடி வேறு துணையை தேடிப்போக, சற்று நேரத்தில் நேகாவிற்குப் போரடித்தது.

மாதவி டான்ஸ். இடைவெளியில் ஓய்வெடுத்த நேரத்தில் அவள் அருகில் சென்று ''போகலாம் மாதவி'' என்றாள் நேகா.

''எங்கே?'' என்ற மாதவியின் வாய் குழறியது. தலையை உயர்த்தி நேகாவைப் பார்க்க அவள் முயற்சி செய்தாள். போதையில் கண்கள் சொருக உருவம் மங்கலாகத் தெரிந்தது.

''மாதவி எழுந்து நில். நாம் வீட்டிற்குப் போக வேண் டும்'' நேகா அவளை உலுக்கினாள்.

மாதவிக்கு நேகாவின் குரல் காதிலேயே விழவில்லை. புத்தி வேறு உலகில் சஞ்சரித்தது.

இன்று ஏன் இவளுடன் வந்தோம் என்றிருந்தது நேகாவிற்கு.

ரங்காரெட்டி கூட ஊரில் இல்லை. இப்போது மாத வியை அவள்தான் வீட்டிற்கு அழைத்துப் போக வேண்டும்.

ராபின் எங்காவது தென்படுகிறானா என்று நேகா பார்த்தாள். அவனை காணவில்லை. டிரைவர் துணை யுடன் ஒரு சிலர் கிளம்பிப் போயிருக்க, மீதியிருந் தவர்கள் தரையில் உருண்டு கிடந்தனர். மாதவியை இப்போது எழுப்பி கார் ஓட்ட வைப்பது முடியாத காரியம்

என்று புரிந்ததும் நேகா என்ன செய்வதென்று தெரி யாமல் திகைத்தாள்.

செல்போன் சிணுங்கியதும் குழப்பத்துடனே பட்டனை அழுத்தி ''ஹலோ'' என்றாள்.

''ஹாய் நேகா. வேர் ஆர் யு?'' என்ற நந்தகிஷோரின் குரல் போனில் கேட்டதும் துள்ளிக் குதித்தாள்.

''கிஷோர், எனக்கு உதவ முடியுமா?'' என்றவள் சுருக்கமாக விபரம் சொன்னாள்.

''அங்கேயே காத்திரு. அரைமணி நேரத்தில் வருவேன்'' என்றவன் சொன்னது போல் அரை மணி நேரத்தில் வந்து விட்டான்.

நந்தகிஷோரைப் பார்த்ததும் புதிய தெம்பு வந்தவளாக ''தேங்க் யூ'' என்றாள் நேகா... மகிழ்ச்சியுடன்.

''எதற்கு? நான் உனக்கு உதவி எதுவும் செய்யவில் லையே'' என்றான் வியப்புடன்.

''அதனால் என்ன, எனக்கு உதவத்தானே வந்திருக் கிறாய்!''

''நோ. யு வார் ராங். நான் மாதவிக்காக வந்தேன்'' பேசியபடி நந்தகிஷோர் மாதவியை எழுப்பி நடத்திச் சென்று காரில் அமர வைத்தான். அவனும் டிரைவிங் சீட்டில் அமர்ந்து காரை ஸ்டார்ட் செய்ததும். இவன் வேண்டுமென்றே நம்மை சீண்டுகிறான் என நேகா விற்கு ரோஷம் வந்தது. வெடுக்கென திரும்பி நடக்கத் தொடங்கினாள். மாதவியின் காரில் வந்ததால் நேகா பனியில் நடப்பதற்கான ஷூவை அணிந்து வரவில்லை. அதனால் சில அடிகளுக்கு மேல் நடக்க முடியாமல் கால்



சறுக்கியது. இருந்தும் வீம்புடன் நடந்தவளின் பின்னால் நந்தகிஷோரின் கார் ஊர்ந்து வந்தது. நேகா கால்களை ஊன்ற முடியாமல் நடப்பதையும், அவள் நடைக்கேற்ப சுருண்ட முடி ஸ்பிரிங்கைப் போல் துள்ளி தோளில் விழுவதையும் ஒரு பள்ளிச் சிறுமியின் பிடிவாதத்தைக் காண்பது போல் கண்டு ரசித்தபடி நந்தகிஷோர் அவள் நடைக்கு ஏற்றாற்போல் காரை நகர்த்தினான்.

பின் இருக்கையில் படுத்திருந்த மாதவி ஏதோ முணகினாள். திடீரென்று நந்தகிஷோர் காரில் ஏதோ அசைவை உணர்ந்தான். தெருவெங்கும் மெல்லிய புகைப்படலம் எழுந்தது. காரின் கண்ணாடி மங்கலாய் வழியை மறைத்தது. நந்த்கிஷோர் வேகமாய் காரை நேகாவின் அருகில் நிறுத்தி ''ஏறு போகலாம்'' என்றான்.

''எதற்காக உன் காரில் நான் ஏற வேண்டும்?''

''விளையாடியது போதும் நேகா. வா போகலாம்.''

''நான் விளையாடவில்லை நந்தகிஷோர்.''

''சரி. நான்தான் விளையாடினேன். சும்மா ஜாலியாகப் பேசியதை ஸீரியஸ் ஆக்காதே. இங்கு வெகு நேரம் தாமதிப்பது சரியல்ல. ஏறு வண்டியில்.''

நந்தகிஷோர் கெஞ்சத் தொடங்கவும் நேகாவிற்கு தன் சுபாவத்தை மீறிய வீம்பு ஏற்பட்டது. அவனைத் திரும்பிப் பார்க்காமல் நடக்க முற்பட்டாள்.

''நேகா. வா என்னுடன்'' என்றான் நந்தகிஷோர் பொறுமையிழந்த குரலில்.

மறுப்புடன் நகர்ந்த நேகா தொடர்ந்து நடக்க முடி யாமல் பெரிய புகையும் தூசியும் எழுந்து கண்ணையும் மூக்கையும் மறைத்தது. கண் முன் என்ன நடக்கிறதென

தெரியாமல் நேகா இரும ஆரம்பித்தாள். இருமுகையில் வாய்க்குள் புகுந்த தூசி வயிற்றில் இருந்தவற்றை வெளியே கொண்டு வந்தது. நேகா மூச்சுவிட முடியாமல் திணறினாள்.

நந்தகிஷோர் மின்னல் வேகத்தில் கார் கதவைத் திறந்து அவளை உள்ளே இழுத்துக் கொண்டு கதவை மூடினான். காரிலிருந்து டவலை அவளிடம் கொடுத்தான். டவலால் முகத்தை துடைத்த நேகாவிற்கு இயல்பு நிலைக்கு வர சிறிது நேரம் ஆனது. இருமலும், தும்மலும் அடங்கியதும் டவலைப் பார்த்த நேகா திடுக்கிட்டாள். டவலில் கரியைப் போல் கறுப்பாய் ஒட்டியிருக்கவே, தன் கைகளிலும் உடம்பிலும் படிந்திருந்த தூசியை அதிர்ச்சியுடன் பார்த்தாள்.

''இத்தனை தூசி எங்கிருந்து வந்தது? அருகில் எங்காவது சாம்பலோ, மண்ணோ இருக்கிறதா கிஷோர்?'' என்றாள் அவனிடம்.

அவளுக்கு பதில் சொல்வது போல் கார் ஒருமுறை வேகமாகக் குலுங்கியது. மாதவி சீட்டிலிருந்து நழுவிக் கீழே விழுந்தாள். கண் முன்னே புழுதிக் காற்று விசிறியடித்தது. இன்று உருப்படியாக வீடு போய் சேர மாட்டோம் என்றிருந்தது நேகாவுக்கு.

அவன் காரை ஓட்ட சிரமப்படுவதைப் பார்த்த நேகா, ''சிறிது நேரம் காருக்குள்ளேயே காத்திருக்கலாம். வழி சரியான பிறகு போகலாம்'' என்றாள் அவனிடம்.

''பனி விழத் தொடங்கி விட்டது நேகா. நாம் நகராமல் இருந்தால் பனி காரை மூடி விடுவதுடன் பெட்ரோலும் உறைந்து விடும்'' என்றான் நந்தகிஷோர்.



''இப்போது என்ன செய்வது?'' என்றாள் நேகா பயத்துடன்.

''ஒன்று வேண்டுமானால் செய்யலாம்.''

''என்னது?''

''உன் பயத்தையும் கவலையையும் போக்க, ரொம்ப ஸ்மார்ட்டான ஒருவன் அருகில் இருக்கிறான் என்று நம்பலாம்.''

''நம்பித்தான் ஆக வேண்டும். வேறு வழியல்லை'' என்றாள் நேகா.

தொடர்ந்த அமைதிக்குப் பிறகு சொன்னாள். ''வீட்டில் நிம்மதியாக இருந்த உன்னை அழைத்து தொல்லைக்குள்ளாக்கி விட்டேன் கிஷோர்.''

''எனது தினசரி வேலையே இது போன்ற தொல்லைகளை எதிர்கொள்வதுதான். தனியாக பனி மலைகளில் ப்ளைட்டை ஓட்டிச் செல்லும் போது பல சமயம் கீழே இறங்க தரையே கண்ணுக்குத் தெரியாது.

ஒரு பச்சை மரக்கிளையை உடைத்து கீழே போட்டு தரை எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்று அனுமானிப்போம். சில சமயம் பனி உருகி கண்ணுக்குத் தெரியாமல் இருக்கும். அந்த சமயத்தில் விமானம் பனி சகதிக்குள் மாட்டிக் கொள்ளும். சில சமயம் பனிப் பாறைகள் தடதடவென நகரும். தினமும் எத்தனையோ சவால்களைச் சந்திக்க வேண்டி இருக்கும்.

''நேற்று டி.வி.யில் உன்னைப் போன்ற ஒரு பைலட்டின் பேட்டியைப் பார்த்தேன் கிஷோர். ஒரு பைலட் சிறந்த விமானியா என்பதை எப்படித் தெரிந்து கொள்வது? என்று கேள்வி கேட்டார்கள். அதற்கு அவர்

சொன்ன பதில் 'வெல் ஹி இஸ் அலைவ்.' என்று. உயிரோடு இருப்பதே சாதனை என்று சொல்லும்படியான வேலையை நீ ஏன் செய்ய வேண்டும்?'' என்றாள் நேகா ஆதங்கத்துடன்.

''இறக்கைக் கட்டி வானத்தில் பறப்பது போன்ற உணர்வும், அது தரும் சுதந்திரமும் உனக்குச் சொன்னால் புரியாது நேகா. எவ்வளவும் ரிஸ்க் எடுக்கலாம் என்ற தீர்மானமும், எப்போது சரியில்லை என்று தோன்றுகிறதோ அப்போது திரும்பி விடுகிற தீர்க்கமும் இருந்தால் போதும். இந்த வேலை அற்புதமானது.''

''உன்னுடைய இந்த சுதந்திர மனோபாவமும், எவ்வளவு தூரம் இறங்கலாம் என்கிற தீர்மானமும் வேலைக்கு மட்டுமல்ல கிஷோர் வாழ்க்கையிலும் நீ அப்படித்தான் என்று தோன்றுகிறது'' என்றாள் நேகா.

''அப்கோர்ஸ். அதிலென்ன தவறு? எந்த ஒரு மனிதனுக்கும் வாழ்க்கையை தன் விருப்பம் போலும் வாழும் சுதந்திரம் முக்கியம்'' என்றான் நந்தகிஷோர்.

நேகா பதில் பேசாமல் வெளியே பார்த்தாள். மாதவி வீட்டு போர்டிகோவில் கார் நின்றிருந்தது.

## 6



ரங்காரெட்டி சூடான உணவை கப்பில் நிரைத்த பிஸ்கட்டுடன் இருவருக்கும் பரிமாறினார். தானும் ஒரு வாய்... உணவை அருந்தியவர், இருவருக்கும் நன்றி சொன்னார்.



''நீங்கள் ஊரில் இல்லை என்று மாதவி சொன்னாள்'' என்றாள் நேகா.

''ஆமாம். சற்று முன்புதான் வந்தேன். இந்த க்ளைமேட்டைப் பார்த்ததும் மாதவி இன்று வீட்டிற்கு வரமாட்டாள் என்று நினைத்தேன்.''

ரங்காரெட்டி இந்தியாவில் இருந்திருந்தால் இந்த வார்த்தைகளை சொல்ல தைரியம் வந்திருக்குமா என்று தோன்றியது நேகாவுக்கு. தாங்கள் மாதவியுடன் உள்ளே நுழைகையில் கதவைத் திறந்த தர்ஷணாவின் கண்களில் தெரிந்த வெறுப்பு மனதில் நிழலாடியது.

அவர்கள் இருவரும் கிளம்புகையில் ''இன்று இங்கேயே தங்கி விட்டுப் போகலாம். இந்த புகையில் கார் ஓட்டுவது சிரமம்'' என்றார் ரங்காரெட்டி.

''திரும்பிய பக்கமெல்லாம் ஐஸ்சும், மரங்களும் பூக்களுமாய் இருக்கையில் இத்தனை புழுதி எங்கிருந்து வருகிறது?'' என்றாள் நேகா வியப்புடன்.

நந்தகிஷோர் அவள் கேட்டதையே கண்டு கொள்ளாமல் முன்னால் நடக்கவும், ரங்காரெட்டி சொன்னார். ''இங்கு அருகாமையிலுள்ள ஒரு எரிமலை வெடித்ததால் ஏற்பட்ட தூசிதான் இது. இன்று மாலையிலிருந்து அலாஸ்காவிற்கு விமானப் போக்குவரத்து நிறுத்தப்பட்டு விட்டது.''

நேகாவிற்கு தூக்கிவாரிப் போட்டது. இத்தனை நேரம் நந்தகிஷோர் இதைப்பற்றி சொல்லவேயில்லை என்பது நினைவு வர, ''இந்த பனியில் எரிமலையா?'' என்றாள் நம்ப முடியாமல்.

''ஆமாம். இயற்கையின் விந்தை இதுதான். இங்கு பனிக்குவியலுக்குள் எரிமலைகள் உறங்கிக் கொண்

டிருக்கும். புருடபே எனுமிடத்தில் ஐஸ்சுக்கு நடுவே
வெந்நீர் ஊற்று கூட உண்டு'' என்றார் ரங்காரெட்டி.

நேகாவிற்கு மனதில் பெரிய திகில் ஏற்பட்டது. ஒரு
வார்த்தை பேசாமல் அமர்ந்திருந்தவளைப் பார்த்த
நந்தகிஷோர் யுனிவர்சிட்டி காம்பசிற்குள் காரை நிறுத்தி
விட்டு அவள் குவார்ட்டர்ஸ் வரை உடன் வந்தான்.

தன் அறைக் கதவைத் திறந்து விளக்கைப் போட்ட
நேகா அதிர்ந்து போனாள். அறையெங்கும் பொருட்கள்
சிதறிக் கிடந்தன. கபோர்டில் அடுக்கியிருந்த புத்தகங்
களும், துணிகளும் கீழே கிடந்தன. சமையல் பாத்திரங்
களுக்கு நடுவே ப்ரிஜ்ஜும் கவிழ்ந்திருந்தது.

''கிஷோர், நாம் இல்லாத நேரம் யாரோ திருடன்
வந்திருக்க வேண்டும். பொருட்களை இறைத்து விட்டுச்
சென்றிருக்க வேண்டும்'' என்றாள் நேகா.

நந்தகிஷோர் மறுப்பாக தலையசைத்தான். ''இத்
பூகம்பம் நேகா. நான் காரில் இருந்தபோதே உணர்ந்
தேன். அதனால்தான் நடந்து கொண்டிருந்த உன்னை
அவசரமாக காரில் ஏறும்படி சொன்னேன்.

இங்கு அடிக்கடி பூகம்பம் ஏற்படும். அதனால்தான்
வீடுகள் பெரும்பாலும் மரத்தினாலேயே கட்டப்பட்டிருக்
கின்றன. எப்போதுமே வெளியே போகும்போது பொருட்
களை சங்கிலியால் கட்டி வைத்து விட்டுத்தான் போக
வேண்டும். மெழுகுவர்த்தியை ஏற்றி விட்டு கண்டிப்
பாக போகக்கூடாது. அது எரியும் சமயம் கீழே விழுந்தால்
பெரிய தீ விபத்து ஏற்படும். இந்த ஊரைப் பற்றிய
அடிப்படை விஷயங்களைக் கூடவா இத்தனை நாளில்
தெரிந்து கொள்ளாமல் இருந்தாய்?'' என்றான் அவன்.



நேகா அறை ஜன்னல்களை தாழிடாமல் வெளியே
சென்றிருந்ததால் எரிமலை சாம்பல் அறையெங்கும்
படிந்திருந்தது. படுக்கை விரிப்புகளும், ஜன்னல் திரை
களும் கூட கரி படிந்திருந்தன. வீட்டையே மொத்தமாக
புரட்டிப் போட்டு கழுவித் துடைத்தாக வேண்டும்.
கோடையின் இறுதியில் பனி விழத் தொடங்கியிருக்கும்
இந்த இரவில் எப்படி கழுவ முடியும் என்ற கவலை
ஏற்பட்டது.

''நேகா.''

நந்தகிஷோரின் குரல் கேட்டதும் நேகா தன்னை
சமாளித்துக் கொண்டாள். கூப்பிட்டவுடன் கிளம்பி வந்து
மாதவியையும் என்னையும் பத்திரமாக வீட்டில் சேர்த்
திருக்கிறான். இதற்கு மேலும் அவனை தாமதப்
படுத்துவது சரியல்ல என்று நினைத்தவளாய் ''மிகவும்
நன்றி கிஷோர். நீ மட்டும் இன்று வரவில்லை என்றால்
நான் மிகவும் சிரமப்பட்டிருப்பேன்'' என்றாள் நேகா.

பயம் விலகாத அவள் குரலையும், தூசு படிந்த அவள்
முகத்தையும் பார்த்த நந்தகிஷோர் தயக்கத்துடன்
நின்றிருக்க ''பை கிஷோர். குட் நைட்'' என்றாள் நேகா.

''இந்த பொருட்களை எல்லாம்...'' நந்தகிஷோர்
முடிக்கும் முன் நேகா சொன்னாள். ''நான் சரி செய்து
கொள்வேன்.''

அதற்கு மேல் அங்கு நிற்பது முறையல்ல என்று
நினைத்தவனாய் நந்தகிஷோர் அவளிடம் கையசைத்து
விட்டு இறங்கி நடக்கத் தொடங்கினான்.

நேகா சோர்வுடன் தரையில் அமர்ந்தாள். நம் நாட்டில்
வசதி வாய்ப்புகளுக்காக மக்கள் போராட வேண்டி

பிருக்கிறது என்றால் இங்கு இயற்கையுடன் போராட வேண்டும் போலும். நிம்மதியாக உறங்கக் கூட முடியாமல் பூகம்பத்தையும், எரிமலையையும் பனிப் புயலையும் எதிர்பார்த்துக் கொண்டு எத்தனை நாள் விழித்திருப்பது என்ற பயம் வந்தது. முதன் முறையாக பெற்றோர் மீது பிருந்த வெறுப்பு வந்தது. அவர்களது பொறுப்பின்மையால்தான் இத்தனை பெரிய சிக்கலில் மாட்டிக் கொண்டோம் என்ற துக்கம் ஏற்பட்டது. முழங் கால்களில் முகத்தைப் புதைத்து அதில் தன் பயத்தை மறைத்து நேகா அமர்ந்திருந்தாள். அவள் பயத்தை பரிசீலிப்பது போல் தரையில் சிதறியிருந்த பாத்திரங்கள் கடகடவென்ற சத்தத்துடன் உருண்டன. அறை யாரோ உலுக்கி விட்ட பொம்மை கட்டிடத்தைப் போல் ஒரு முறை குலுங்கி அடங்கியது. சடாரென எழுந்த நேகா தடுமாறி கீழே விழுந்தாள்.

விழுந்தவள், மீண்டும் எழ முயற்சி செய்யக்கூட பயந்து வாய்விட்டு அலறினாள்.

நேகாவின் அறையிலிருந்து காரை நோக்கி நடக்கையில் நந்தகிஷோரின் மனம் முழுவதும் அவளைப் பற்றியே இருந்தது. மிகவும் பயந்து போயிருக்கிறாள். மாற்றிக் கொள்ளக்கூட உடையின்றி அத்தனையும் தூசு படிந்து கிடக்கிறது. அமெரிக்காவில் ஏதோ ஒரு மாநிலத்தில் சொகுசாக வேலை பார்த்து ஜாலியாக செலவு செய்திருக்கலாம். அதை விட்டு விட்டு இங்கே ஏன் வந்தாள்? இனி எப்படி சமாளிக்கப் போகிறாள்? காரில் அமர்ந்த பிறகும் கிளம்பத் தோன்றாமல் ஸ்டியரிங்கை இறுகப் பிடித்தபடி நந்தகிஷோர் அமர்ந்திருந்தான். திடீரென கார் குலுங்கியது. ஓ! நில நடுக்கம் தான். எத்தனை ரிக்டர்



இருக்கும் என கணக்கிடுகையில் மீண்டும் ஒரு அதிர்வு ஏற்பட்டது. நந்தகிஷோர் காரை விட்டு இறங்கி நேகாவின் அறையை நோக்கி ஓடினான். திறந்திருந்த கதவின் வழியே நேகாவின் அலறல் சத்தம் தொலைவிலேயே கேட்டது. வேகமாக அறைக்குள் நுழைந்து "நேகா" என அவள் தோள்களைப் பற்றினான். நேகா மூடியிருந்த கண்களைத் திறக்கக்கூட பயந்தவளாய் அவனை இறுகப் பற்றி "எனக்கு பயமாய் இருக்கிறது கிஷோர்" என்றாள் குரல் நடுங்க.

"நான் உன் அருகில் இருக்கிறேன். பயப்படாதே நேகா" என ஒரு கையில் அவளைப் பிடித்தபடி மறு கையால் கதவைத் தாழிட்டுவிட்டு நந்தகிஷோர் காரை நோக்கி நடந்தான்.

பெரிய பூகம்பம் எதுவுமில்லை. எரிமலையின் சீற்றத்தால் வரும் அதிர்வுதான் என்பதை அனுபவம் உணர்த்த நேகாவுடன் தன் வீடு நோக்கிச் சென்றான்.

"இதுதான் என் வீடு. இறங்கு நேகா" என நந்தகிஷோர் சொன்ன பிறகுதான் சுய உணர்வு பெற்றவளாக நேகா தயங்கினாள்.

"இந்த நேரத்தில் அறிமுகம் அற்ற ஒரு பெண்ணுடன் தங்கள் மகன் வீட்டிற்கு வந்தால் உன் பெற்றோர்கள் என்ன நினைப்பார்கள்?" என்றாள் நேகா.

நந்தகிஷோர் தோள்களைக் குலுக்கினான். "அதை அவர்களிடம் கேட்டுத்தான் சொல்ல வேண்டும்."

"நீ கேட்டுப்பார். அதுவரை நான் இங்கேயே காத்திருக்கிறேன்."

"அப்படியானால் நீ ஆயுசு முழுக்க வெளியேதான் நிற்க வேண்டும்."

"ஏன்?"

"ஏனென்றால் எத்தனை உரக்கக் கத்தினாலும் இங்கிருந்து ப்ளோரிடாவுக்குக் கேட்காது."

"நீ என்ன சொல்கிறாய் கிஷோர்?"

"என் பெற்றோர் என் தங்கை வீட்டிற்குப் போயிருப்ப தாக நான் சொன்னதை நீ மறந்து விட்டாயா நேகா?"

நேகாவிற்கு அப்போதுதான் அவன் சொன்னது நினை வுக்கு வர, நந்தகிஷோரின் பின்னால் உள்ளே சென்றாள்.

அந்த பெரிய வீட்டின் அமைதி நேகாவை பயமுறுத் தியது. கூட யாருமே இல்லாமல் ஒரு ஆணுடன் எப்படி தனியாக இருக்க முடியும். இவள் எப்படி எதைப் பற்றி யுமே யோசிக்காமல் துணிச்சலுடன் கிளம்பி வந்தாள்? இப்போது என்ன செய்வது? திரும்பிச் செல்ல வழி தெரியாது என்பதுடன், வாகனங்களும் கிடைக்காது.

ஹீட்டரை ஆன் செய்துவிட்டு அவள் அருகில் வந்த நந்தகிஷோர் அவள் முகத்தைப் பார்த்ததும் தன்னை யறியாமல் சிரித்தான்.

"என்ன நேகா, வில்லனிடம் கதாநாயகி சிக்கிக் கொண்டாற் போல் விழிக்கிறாய்?" என்றான் அவளிடம்.

நேகா பதில் பேசாமல் இருக்கவே, நந்தகிஷோர் அவள் எதிரே வந்தான். "நேகா இங்கே பார். என்னைப் பார்த்தால் நிஜமாகவே உனக்குப் பயமாக இருக்கிறதா?" என்றான் அவள் கண்களைப் பார்த்து.

அந்த உயரமும், செதுக்கின உடலும், கவர்ச்சியான சிரிப்பும், ஆளை விழுங்கும் கண்களும் மனதில் சிலிர்ப்பை ஏற்படுத்த நேகா இப்போது தன் மனதை



நினைத்தே பயந்தாள். அதை மறைக்க குரலில் கோபத் தைக் காட்டினாள்.

"எனக்கென்ன பயம்? நாடு விட்டு நாடு வந்து வேலை பார்ப்பதிலிருந்தே என் தைரியத்தை நீ தெரிந்து கொள்ள வேண்டாமா கிஷோர்?"

"நான் தெரிந்து கொள்வதைவிட நீ எத்தனை தைரிய சாலி என்பதை நீ உணர்ந்து கொண்டால் போதும்."

அதை உணர்ந்ததால்தான் உன்னுடன் கிளம்பி வந் திருக்கிறேன். எதற்காகவும் நான் பயப்பட வேண்டிய அவசியமில்லை."

"பூகம்பம் ஏற்பட்டால் கூடவா?" என்றான் நந்த கிஷோர்.

குறும்பில் மின்னிய அவன் கண்களைப் பார்த்ததும் நேகாவிற்கு தான் அலறியது நினைவுக்கு வந்தது. எனவே "இயற்கை மனித சக்திக்கு அப்பாற்பட்டது. அதைக் கண்டு மிரண்டு போவது யாருக்கும் இயல்பு தான்" என்றாள் கம்பீரம் குறையாமல்.

"அடேயப்பா! எத்தனை துணிச்சலான பெண் நீ! எனக்கே பயமாக இருக்கிறது, உன்னைப் பார்த்தால்" என்றான் நந்தகிஷோர் நடுக்கத்துடன்.

"கிஷோர்..." என்றாள் நேகா சிரிப்பும் சிணுங்கலுமாக.

கொதிக்கும் நீரில் குளித்துவிட்டு வந்து அவன் தங் கையின் உடையை அணிந்து, அவன் காட்டிய அறையில் படுத்ததும், தோன்றியது, நந்தகிஷோர் தன்னிடம் வாதாடாமல், மறுத்துப் பேசாமல் சிரிக்க வைத்தே இங்கு தங்க செய்து விட்டான் என்று. சாமர்த்தியசாலிதான் என்று நினைத்தபடி கண்களை மூடினாள்.

* * *

காலையில் நந்தகிஷோர் கொடுத்த டோஸ்ட்டையும், சாண்ட்விச்சையும், டீயுடன் சாப்பிட்டதும் புதிய தெம்பு ஏற்பட்டது. இரவு ஏற்பட்ட கலக்கமும், பயமும் கனவு போல் தோன்றியது. வீட்டிற்கு வெளியே தெரிந்த ஆங்கரேஜ் நகரம் எப்போதும் போல் அமைதியாக இயங்கிக் கொண்டிருந்தது. நந்தகிஷோர் வீட்டின் லான் மிக அழகாக பச்சை புல்வெளிகளுடன் டியூலிப்களும், லூபைன் பூக்களும் தலையசைக்க வெகு நேர்த்தியாக இருந்தது. இயற்கையை நேசிக்கும் நந்தகிஷோரின் வீடு இப்படித்தான் இருக்க முடியும் என்று தோன்றியது. பக்கத்து வீடுகளில் வசிப்பவர்கள் தங்கள் வண்டிகளிலும், வீட்டின் மீதும் படிந்திருந்த சாம்பலைக் கழுவிக் கொண்டிருந்தனர்.

''இந்த வருடம் செடிகளுக்கு நல்ல உரம் கிடைத்தது. எரிமலைச் சாம்பலால் தான் இங்கு இத்தனை காடுகளும், மரங்களும் செழிப்பாக இருக்கின்றன'' என்றான் நந்தகிஷோர்.

நேற்று புயலோ, பூகம்பமோ உண்டானதற்கான அறிகுறியே இல்லாமல் வழக்கம்போல் வேலைகளைக் கவனிக்கும் மக்களைப் பார்க்கையில் நேகாவிற்கு தானும் சமாளித்திருக்க வேண்டும் என்று தோன்றியது. தேவையில்லாமல் இவனை அலைக்கழித்து விட்டோம் என்றிருந்தது. அதை அவனிடம் சொன்னபோது, ''நீ தனியாக சமாளித்திருப்பாயா என்று எனக்கு சந்தேகமாக இருந்தது. பூமி அதிர்ச்சி ஏற்பட்டதும் மேற்கொள்ள வேண்டிய தற்காப்பு நடவடிக்கைகளைக் கூட செய்யாமல் நீ பயத்தில் அழுது கொண்டிருந்தாய். பயம் ஏற்பட்டு விட்டால் அது புத்தியை இயங்க விடாது.''



அவன் சொன்னதிலிருந்த உண்மை புரிந்த நேகா அமைதியானாள். நந்தகிஷோர் சிரித்தபடியே சொன்னான். ''நீ ஒரு பூ மாதிரி தெரிகிறாய். உன்னால் பூகம்பத்தை எதிர்கொள்ள முடியுமா என்று சந்தேகமாக இருக்கிறது.''

''நான் பார்ப்பதற்கு பூ நந்தகிஷோர். ஆனால் மனசு இரும்பு. எளிதில் உடையாது.''

''உண்மையில் இரும்பாய் இருப்பதுதான் மிகவும் ஆபத்து நேகா. வாழ்க்கையை ரசிக்கவும், சுற்றியிருப்பவர்களை நேசிக்கவும் கற்றுக் கொண்டால் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க முடியும்.''

தன்னைச் சுற்றிலும் ஒரு பார்வை பார்த்த நேகா, ''என்னைச் சுற்றி யாருமே இல்லையே! யாரை நேசிப்பது?'' என்றாள் விழிகளை விரித்து.

''இதோ, உன் எதிரில் நிற்பவனை முதலில் நேசிக்கத் தொடங்கு. பிறகு உன் வாழ்க்கையே சுவாரஸ்யமாகி விடும். வீடே இடிந்து விழுந்தாலும், பனி உன் மீது உறைந்து நின்றாலும் கூட ரசிக்கத் தோணும்.''

நந்தகிஷோர் விளையாட்டாகச் சொன்னாலும், நேற்று இங்கு தங்குவதற்கு தயங்கியதற்காகத்தான் இதைச் சொல்கிறான். நட்பாக இருக்கச் சொல்கிறான். மற்றபடி நேசம் என்ற வார்த்தைக்கு பிரத்யேக அர்த்தம் எதுவும் கொள்ளத் தேவையில்லை என்று எண்ணியவளாக நேகா சிரித்தாள்.

''பெரிய கவிஞன்னு நினைப்பா உனக்கு? அவர்களுக்குத்தான் அபத்தங்கள் எல்லாம் அழகாய் தோன்றும்.''

"ஒரு அழகான பெண் அருகில் இருக்கும்போது ஒரு சராசரி ஆண் கூட கவிஞனாக மாறி விடுவான் நேகா."

"சரி... சரி.. குளிர் தாங்கல. கிளம்புவோமா?" என்றாள் நேகா.

"கிளம்பலாம். ஆனால் எங்கே?" என்றான் நந்த கிஷோர்.

"என் அறைக்குதான்."

"அங்கு உனக்கு ரூம்மேட் கூட யாரும் இல்லை நேகா. உன் அறையும் மெயின் பில்டிங்கில் இல்லாமல் ஒதுக்குப்புறமாக இருக்கிறது. ஒரு அவசரம் என்றால் கூட உதவ யாரும் இல்லை. உன் பக்கத்து அறையில் இப்போது யாரும் இல்லை. இல்லையா? எதற்காக நீ அங்கே தங்க வேண்டும்?"

"வேறு என்ன செய்ய முடியும் கிஷோர்? எனக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில்தானே நான் இருக்க முடியும்!"

"பேசாமல் இங்கேயே நீ தங்கலாமே!" என்றான் நந்தகிஷோர் சகஜமாக.

சடாரென அவனைப் பார்த்த நேகாவின் கண்களில் லேசான சந்தேகம் தோன்றி மறைந்தது. அதைப் பார்த்த நந்தகிஷோர் அவசரமாகச் சொன்னான்.

"இங்கேயே என்றால் இந்த வீட்டிலேயே என்று அர்த்தம் இல்லை. இதைப் போல மக்கள் நெருக்கமாக வசிக்கும் இடங்கள் உனக்கு பாதுகாப்பாக இருக்கும். அதுவும் அபார்ட்மென்ட் வீடுகள் என்றால் மிகவும் நல்லது."

அவன் சொல்வதிலிருந்த உண்மை புரிய "இங்கு அபார்ட்மென்ட்களில் வீடு காலியாய் இருக்குமா?" என்றாள் நேகா.



"விசாரித்துப் பார்க்கலாம்" என்றான் நந்தகிஷோர்.

"முதலில் என் அறைக்குப் போக வேண்டும்."

"ரைட் ஓ.கே."

நேகாவின் அறையிலிருந்த அவள் பெட்டியில் பணத்தையும், ஸ்வெட்டரையும் எடுக்கையில் "எதற்கும் இரண்டு செட் உடைகளையும் எடுத்துக் கொள்" என்றான் நந்தகிஷோர்.

"எதற்கு?"

"உனக்கு வீடு தேட வேண்டாமா? அதற்கு நீ அங்கே இருந்தால் தான் வசதி."

வேலை முடிந்து தினமும் இங்கிருந்து கிளம்பிப் போய் வீடு தேடுவது சிரமம் என்பது புரிய நேகா மேற்கொண்டு எதுவும் பேசாமல் தன் உடைகள் அடங்கிய பையுடன் கிளம்பினாள்.

அடுத்து வந்த நாளில் நேகாவும், நந்தகிஷோரும் ஆங்கரேஜ் நகரத்தையே சுற்றி வந்தார்கள்.

"இத்தனை பெரிய ஊரில் ஒரு இடம் கிடைக்காமல் போகாது. இரண்டே நாளில் உனக்கு அருமையான இடத்தைப் பிடித்துத் தருகிறேன் பார்" என்றான் நந்தகிஷோர் ஜம்பமாக.

ஆனால் அவன் பெருமையடித்தபடி உடனடியாக இடம் எதுவும் கிடைக்கவில்லை. அபார்ட்மென்ட் உரிமையாளர்கள் சிலர் கோடையில் மட்டுமே இங்கு வசிப்பவர்களாக இருந்தார்கள். இப்போது குளிர் காலம் தொடங்கப் போவதால் அவர்கள் வெளியூரில் இருந்தார்கள். சில இடங்களில் வீடு காலியில்லை என்றார்கள்.

பல வீடுகள் பூட்டிக் கிடந்தன. ''இந்த வீடுகளை அடுத்த வாரம் வந்து பார்க்கலாம்'' என்றான் நந்தகிஷோர்.

நாள் முழுவதும் அலைந்தும் வீடு கிடைக்காத சோர்வுடன் இருக்கையில் ''டோன்ட் வொர்ரி நேகா. நானிருக்க உனக்கு என்ன கவலை?'' என்றான் நந்தகிஷோர் அபயம் அளிக்கும் குரலில்.

''நீ இருப்பதுதான் பெரிய கவலை எனக்கு'' என்றாள் நேகா.

''ஆனாலும் ரொம்ப திமிர் உனக்கு'' என்றான் நந்தகிஷோர் அவள் தலையை தட்டி.

மறுநாள் நந்தகிஷோர் நேகாவை யுனிவர்சிட்டியில் டிராப் பண்ணி மாலையில் அழைத்து வந்தான். ''நீ டிரைவிங் பழகிக் கொள் நேகா. தினமும் என்னால் டிராப் பண்ண முடியாது. நான் இல்லாத சமயம் காரை நீயே எடுத்துப் போகலாம்'' என்றான்.

''தேவையில்லை'' என்றாள் நேகா. ''எனக்கு வீடு கிடைக்கும் வரைதான் இங்கிருக்கப் போகிறேன். பிறகு அங்கிருந்து போய் வர எதாவது ஏற்பாடு செய்து கொள்வேன்.''

''உன் இஷ்டம்'' என்றான் நந்தகிஷோர்.

நேகா தினமும் வேலைக்குப் போய் வந்து சமைத்துச் சாப்பிடுவதிலேயே வார நாட்கள் கழிந்து போயின. அவளது விடுமுறை நாட்களில் நந்தகிஷோருக்கு வேலை இருந்ததால் தொடர்ந்து இரண்டு வாரங்கள் அவர்களால் வீடு தேட போக முடியவில்லை.

அந்த வார சனிக்கிழமை காலையிலேயே நேகா நந்தகிஷோரிடம் சொன்னாள். ''இங்கிருந்து இரண்டு



மைல் தூரத்தில் 'ஜோன்ஸ்வான்' என்ற அபார்ட்மென்டில் இடம் இருப்பதாக இன்டர்நெட்டில் பார்த்தேன். இன்று நாம் வரப் போவதாக போனில் சொல்லியிருக்கிறேன். கிளம்பு போகலாம்.''

''ஜோன்ஸ்வான் அபார்ட்மென்டா? எந்த ப்ளோர்? வீட்டு நம்பர் என்ன?'' என்றான் நந்தகிஷோர்.

''நான்காவது ப்ளோரில் இரண்டாவது வீடு'' என்றாள் நேகா.

''குட்'' என்றான் நந்தகிஷோர் புன்னகையுடன். ''ஆனால் என்னால் வர முடியாது. இன்று முக்கியமான வேலை இருக்கிறது எனக்கு.''

''இன்று விடுமுறை என்று சொன்னாயே!''

''இப்போதுதான் வரச் சொல்லி தகவல் வந்தது.''

''சரி. நீ வராவிட்டால் போ. நானே போகிறேன்.'' நேகா தயாராகி தோளில் ஹேன்ட்பேக்குடன் வெளியே வந்தாள்.

பின்னாலேயே வந்த நந்தகிஷோர், ''இங்கேயே நில். காரை எடுத்து வருகிறேன்'' என்றான் அவளிடம்.

''உனக்கு வேலை இருப்பதாகச் சொன்னாயே!''

''கேன்சல் ஆகிவிட்டது.''

அவன் முகத்தையும் கண்களையும் பார்த்த நேகா சொன்னாள்.

''சரியான திருடன் நீ.''

இருவரும் சிரித்தபடியே ஜோன்ஸ்வான் அபார்ட்மென்டின் இரண்டாவது மாடியில் பெல்லை அழுத்தியபோது

ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒருவர் கதவைத் திறந்து "எஸ்" என்றார் கேள்விக் குறியுடன். "நான் நேகா. இவன் என் ப்ரண்ட் நந்தகிஷோர். இங்கே வருவதாக நேற்று போன் செய்திருந்தேன்" என்றாள் நேகா.

"வீடு விஷயமாக! ரைட்?" என்றவர் "ஐயம் ஆன்ரு" என்றார் அவர்கள் கைகளைக் குலுக்கி.

இரண்டு படுக்கை அறைகள், ஒரு ஹால், அகலமான பால்கனியுடன் அந்த வீடு மிக நவீனமாக இருந்தது.

"வீடு மிகவும் அழகாக இருக்கிறது. ஆனால் என் ஒருத்திக்கு இது மிகவும் அதிகம். பராமரிப்பதும் சிரமம் என்பதுடன் வாடகையும் அதிகம் இருக்கும்" என்றாள் நேகா.

"கரெக்ட். அதனால்தான் முழு வீட்டையும் வாடகைக்கு விடாமல் இன்னொரு அறையில் நானும் தங்கியிருக்கிறேன். நாம் இருவரும் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ளலாம்."

"நீங்கள் இதைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லையே!" என்றாள் நேகா திகைப்புடன்.

உண்மையில் எனக்கு ஒரு கம்பானியன் தேவைப்பட்டது. பணத்திற்காக கம்பெனி கொடுக்க பல பெண்கள் கிடைக்கக் கூடும். ஆனால் நானாக பழகிப் பார்த்து முடிவு செய்ய வேண்டும் என்றுதான் விளம்பரத்தில் எதுவும் குறிப்பிடவில்லை."

நேகா திகைப்பு மாறாமல் அமர்ந்திருக்க ஆன்ரு சவாதீனத்துடன் அவள் தோள்களைப் பற்றினார். "நீ அழகாக இருக்கிறாய். உன்னை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. நான் நன்றாக பியானோ வாசிப்பேன். அதை விட



நன்றாகப் பாடுவேன். நீ தினமும் என்னுடன் சேர்ந்து பாடி ஆடினால் போதும். வாடகை எதுவும் கொடுக்கத் தேவையில்லை" என்றவர் அவள் பதிலை எதிர்பாராமல் பாடத் தொடங்கினார்.

"ஓ... மை லவ்... லவ்... லவ் இஸ் ப்ளைன்ட்... உச்சஸ்தாயில் ஒலித்த அந்த குரல் காது சவ்வைக் கிழித்தது. நேகா எழுந்து நின்றாள். போகலாம் என்ற பார்வையுடன் நந்தகிஷோரை நோக்கினாள். நந்தகிஷோர் தீவிரமாக ஆன்ருவின் பாடலை ரசித்துக் கொண்டிருந்தான்.

"கிஷோர் போகலாம்" என்றாள் கிசுகிசுப்பான குரலில்.

நந்தகிஷோர் அசையாமல் இருக்க, ஆன்ரு அவள் கைகளைப் பற்றிக் கொண்டு 'லவ் இஸ்... ஒண்டர்புல்' என்றபடி ஆடத் தொடங்க, நேகா அதற்கு மேல் தாமதிக்காமல் அவர் கைகளை உருவிக் கொண்டு வெளியே ஓடினாள். அவள் பின்னாலேயே வந்த நந்தகிஷோர் கீழே வந்ததும் சொன்னான். "இப்படி பாதியில் சொல்லாமல் வருவது மரியாதை இல்லை நேகா. இத்தனைக்கும் அவர் நன்றாகப் பாடினார்."

"சே! அவன் பாட்டும், அந்த முகமும், வீடு தேடிப் போனவர்களிடம் இப்படியா நடந்து கொள்வார்கள்? அந்த ஆள் ஒரு பைத்தியம் போலிருக்கிறது."

"நீ அங்கே தங்கினால் வாடகை தரவேண்டியதில்லை. கூடவே பாட்டும் டான்சும் கற்றுக் கொள்ளலாம். நல்ல சான்ஸை மிஸ் பண்ணிடாதே நேகா" என்றான் புன்னகையுடன்.

"என்னிடம் நன்றாக உதை வாங்கப் போகிறாய் நீ" என்றாள் நேகா எரிச்சலுடன்.

"ஒ.. மை லவ்... மை லவ்..." நந்தகிஷோர் உரத்த குரலில் பாட, "பாடாதே" என்றாள் நேகா பற்களைக் கடித்தபடி.

"எனக்குப் பிடித்திருக்கிறது. நான் பாடத்தான் செய்வேன்" என நந்தகிஷோர் தொடர்ந்து பாட நேகா அவன் முதுகிலும், தோளிலும் மாறி மாறி குத்தினாள். "ஸ்டாப் யுவர் நான்சென்ஸ். விளையாட்டா போச்சா உனக்கு?"

"சரி.. சரி.. இனிமேல் பாடமாட்டேன்.. என்னை விடு" என்ற நந்தகிஷோர் வாய்விட்டுச் சிரித்தான்.

சிரித்து முடித்ததும் சொன்னான். "இந்த விடுமுறை உன்னால் சுவாரஸ்யமாகக் கழிந்திருக்கிறது."

அடக்கப் பார்த்தும் முடியாமல் நேகாவின் முகத்திலும் புன்னகை அரும்பியது.

திரும்பிச் செல்லும்போது நந்தகிஷோர் சொன்னான். "இதைவிட என் வீட்டிலேயே நீ தங்கலாம். ஒரு பெரிய குவாலிபிகேஷனாய் எனக்கு பாடவும் ஆடவும் தெரியாது. எனவே நீ கவலையின்றி இருக்கலாம்."

சிரித்தபடியே நேகா தலையசைத்தாள். "இப்போதைக்கு வேறு வழி இல்லை. ஆனால் வேறு இடம் கிடைத்ததும் போய்விடுவேன்."

"அநேகமாய் உனக்கு எந்த இடமும் பிடிக்காது" என்றான் நந்தகிஷோர் நம்பிக்கையுடன்.

* * *

ரஷ்யன் ஆற்றின் நீர் அந்தப் பகுதிக்கே உரிய ஜில்லிப்புடன் இருந்தது. ஆற்றின் கரையில் ஏக கும்பல் கூடியிருந்தது. கும்பலிலிருந்து "பிஷ் ஆன்" என்ற



உற்சாகக் குரல் கேட்டது. ஒருவரை ஒருவர் இடித்தபடி நின்றிருந்தவர்கள் தங்கள் தூண்டில் கம்பியில் மீன் பிடிக்கும் கொக்கியை சுருட்டிக் கொண்டிருந்தனர்.

நேகாவின் கையிலிருந்த தூண்டிலின் நுனி வளைந்திருந்து. தூண்டிலிலிருந்து செல்லும் நைலான் கயிற்றில் கோர்த்திருக்கும் கொக்கி மீனின் வாய்க்குள் மாட்டியிருந்தது. மீன் நீரை விட்டு இரண்டடி மேலே எழுந்து துள்ளி மறுபடியும் ஆற்றுக்குள் விழுந்தது.

"வாவ்!" என்றார்கள் கூடியிருந்தவர்கள் ஒரே குரலில். வருடந்தோறும் இது போன்ற ஆயிரக்கணக்கான மீன்களைப் பார்த்திருந்தாலும் ஒவ்வொரு முறையும் யார் தூண்டிலிலாவது மீன் மாட்டும்போது முதன் முறை பார்ப்பதுபோல் உற்சாகமடைவார்கள் 'வாவ்!' என உரக்கக் கூச்சலிடுவார்கள்.

"மீனை சிறிது நேரம் அதன் போக்கில் விட்டு விட்டு, அது கொஞ்சம் களைப்படைந்ததும் கரையை நோக்கி இழு" என்றான் நந்தகிஷோர்.

நேகா சற்றே தூண்டிலைக் கீழே இறக்க, மீன் ஒரு நிமிடம் விடுபட்டு விட்டதாக நினைத்து விரைந்து ஓட மறுபடி தூண்டிலை மேலே தூக்கிக் கயிற்றைச் சுருட்டினாள். அவள் பொறுமையுடன் மீனுடன் போராடுவதை வரிசையில் நின்றிருந்தவர்களும் தங்கள் முறை வரும் வரை பொறுமை இழக்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

நேகா மீனை கரைக்கு இழுத்ததும் "கிரேட்" என்றான் நந்தகிஷோர் கைகளைத் தட்டி.

கரைக்கு வந்த மீன் பதறித் துடித்தது. நிலை கொள்ளாமல் தவித்தது. அந்த மீனின் ஜீவ மரணப் போராட்டம்

நேகாவின் மனதை இளகச் செய்தது. தூண்டிலில் இருந்த மீனை நொடியில் ஆற்றில் விட்டாள். மீன் தப்பிப் பிழைத்த உற்சாகத்துடன் துள்ளிக் கிழித்தது.

''அடிப்பாவி'' என்றான் நந்தகிஷோர்.

''பாவம் கிஷோர்'' என்றாள் நேகா.

''பெரிதாய் காப்பாற்றி விட்டதாய் நினைக்காதே. இதோ வரிசையில் காத்திருக்கும் தூண்டில் எதிலாவது மாட்டிக் கொள்ளத்தான் செய்யும்.''

''அதற்கு அதிர்ஷ்டம் இருந்தால் மாட்டாமல் பிழைத்துக் கொள்ளும்'' என்றாள் நேகா.

''மீனுக்கு எப்படியோ, நமக்குதான் இன்று அதைச் சாப்பிடுகிற அதிர்ஷ்டம் இல்லை.''

''உண்மையில் எனக்கு சாலமன் மீன்களைப் பற்றித் தெரிந்ததிலிருந்து அவற்றை.. சாப்பிட மனம் இல்லை.''

''நீ உல்டாவாகச் சொல்கிறாய். இந்த சாலமன் மீன்களில் இருக்கும் ஒமேகா B இதயநோயைத் தீர்ப்பதற்கும், நோய் வராமல் இருக்கவும் உலகம் முழுக்க மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது. அதனால் பெரிய கம்பெனிகள் இங்கு வந்து மீன்களை அள்ளிச் செல்ல ஆரம்பித்தது. இதனால் சாலமன் இனமே அழிவதைத் தடுக்க அலாஸ்கா அரசு, உள்ளூர்வாசிகள் மட்டும் பணம் கட்டி லைசன்ஸ் வாங்கி மீன்பிடிக்க வேண்டும். அனு மதிக்கப்பட்ட அளவு மட்டுமே பிடிக்க வேண்டும். மீன் பிடிக்கத் தூண்டிலை மட்டுமே உபயோகிக்க வேண்டும். எத்தனை மீன்கள் பிடித்தோம் என்ற கணக்கை மீன் துறைக்கு எழுதி அனுப்ப வேண்டும் என்றும் கடுமையான கட்டுப்பாடுகள் விதித்தது.



சாலமன்களிலிருந்து தயாரிக்கப்படும் விட்டமின் மாத்திரைகளின் விலை மிக மிக அதிகம். அது மட்டுமில்லாமல் இயற்கையின் நியதிப்படி குளிர் பிரதேசத்தில் வாழும் நமக்கு குளிரைத் தாங்க உடலில் அதிகப்படி கொழுப்பு தேவை. அந்தக் கொழுப்பு இதய நோயை ஏற்படுத்தாமல் தடுக்க சாலமன் மீன்களும் தேவை'' என்றான் நந்தகிஷோர்.

''அது மட்டுமல்ல கிஷோர், இங்குள்ள ஆற்றில் பிறக்கும் சாலமன் மீன்கள் சில மாதங்கள் கழித்து பசிபிக் கடலை நோக்கி போய்விடும். அங்கேயே சில வருடங்கள் வாழும். முட்டையிடும் சமயத்தில் எதிர் நீச்சல் அடித்து மீண்டும் தான் பிறந்த ஆற்றுக்கே போய் அங்கு முட்டையிட்ட பின் தன் உயிரை விட்டு விடும். இவற்றின் பிறந்த இடத்துப் பாசம் அபூர்வமானது. பிறந்த இடத்திலேயே இறந்து போகும் சந்தர்ப்பம் நம்மில் எத்தனை பேருக்கு கிடைக்கும்?'' என்றாள் நேகா உணர்ச்சி வசப்பட்டவளாய்.

அவள் முகத்தைப் பார்த்த நந்தகிஷோர் மென்மையான குரலில் சொன்னான். ''இந்த உலகம் முழுக்க நம்முடையது நேகா. மனிதர்கள் எல்லோருமே நம்முடையவர்கள்தான். பிறந்த இடம், வளர்ந்த ஊர் என்பதெல்லாம் வெறும் குறியீடுகள் நேகா.''

''உன் பார்வை மிக விசாலமானது கிஷோர்'' என்ற நேகா தன் கலங்கிய கண்களை அவன் பார்க்கும் முன் அவசரமாகப் பேசினாள்.

''இங்கு 'பிஷ் பீவர்' எனப்படும் மீன் பிடிக்கும் வேகம் அதிகமாக இருப்பதைப் பார்க்க ஆச்சரியமாக இருக்கிறது.

இரவு பகல் பாராமல் டென்ட் போட்டு ஆற்றங்கரையி லேயே தங்கி பலர் மீன் பிடிக்கிறார்கள். சில மாதங் களைத் தவிர மற்ற நாளெல்லாம் நீர் உறைந்து போய் இருக்கும் போது இவர்களுக்கு ஏமாற்றமாக இருக்கும் இல்லையா?''

''உனக்கு இங்குள்ளவர்களைப் பற்றித் தெரியாது. குளிர் காலத்திலும் சில சமயம் உறைபனிக்குக் கீழே நீர் உறையாமல் இருக்கும். அதனால் ஐஸ்சில் ஓட்டை போட்டு அதற்கு அடியில் மீன் பிடிப்பார்கள்.''

''எதற்காக இப்படிச் சிரமப்பட வேண்டும்? பல நூறு மைல் மீனுள்ள ஆற்றைத் தேடி பயணம் செய்து, பணம் கட்டி சீஸன் கார்டு வாங்கி, வரிசையில் நின்று பல கொக்கிகளை இழந்து மீன்களை பிடிக்க ஆகும் செலவை விட கடைக்குச் சென்று மீன் வாங்கிச் சாப்பிடுவது செலவு குறைவு இல்லையா?''

''குறைவுதான். ஆனால் மீன் பிடிப்பது ஒரு சவாலை எதிர்கொள்வது மாதிரி. ஒரு சீஸனில் மீன் பிடிக்கும் அனுபவம் அந்த வருடம் முழுவதையும் புத்துணர்ச்சி யுடன் இருக்க செய்கிறது.'' என்ற நந்தகிஷோர் தங்கள் எதிரே வந்த தம்பதிகள் அணிந்த டீ ஷர்ட்டை அவளிடம் சுட்டிக் காட்டினான். 'வேலைக்குச் செல்லும் நாளை விட மீன் பிடிக்கும் நாளே உயர்ந்த நாள்' என அந்த பனி யனில் எழுதப்பட்டிருந்த வாசகங்களைப் படித்த நேகா ''இதே போன்ற வாசகங்கள் கார்களிலும் எழுதப்பட் டிருப்பதை பார்த்திருக்கிறேன்'' என்றாள்.

இந்த நாட்டின் பல விநோதங்களில் இதுவும் ஒன்று என்று தோன்றியது அவளுக்கு.



''நல்ல மீன் சாப்பிடுவதும் உன்னால் போயிற்று. இனி கடையில்தான் வாங்க வேண்டும்'' என்று நந்தகிஷோர் எழுந்து நின்றான்.

''பெரிய கவலைதான்'' என்றபடி நேகா உடன் நடந் தாள்.

''குட் நூன் மேம்'' என்றபடி எதிரே வந்தார்கள் பிரு ஸாவும், பெர்னடின்னும்.

எதிர்பாராது அவர்களைச் சந்தித்த மகிழ்ச்சியுடன் ''ஹலோ, எப்படியிருக்கிறீர்கள்?'' என்றாள் நேகா.

''நன்றாக இருக்கிறோம் மேம். வகுப்பறையில் உங் களிடம் பேசவே முடிவதில்லை. உங்கள் குவார்ட்டர் சிற்கு போனபோது நீங்கள் அங்கே இல்லை என்றார்கள்'' என்றாள் பிருஸா.

''ஓ! உங்களிடம் தெரிவிக்க மறந்து போனேன். இப்போது நான் குவார்ட்டர்சில் இல்லை.''

''அப்படியானால் இனி எங்களுக்கு பாடம் நடத்தப் போவதில்லையா மேம்?'' என்றார்கள் ஏமாற்றத்துடன்.

''ஏன் நடத்த மாட்டார்கள்? உங்கள் மேடத்தின் அட்ரஸ் மட்டும்தான் மாறியிருக்கிறது. குவார்ட்டர்சில் போய் படித்தது போல இங்கும் நீங்கள் வந்து படிக் கலாம்'' என்ற நந்தகிஷோர் அந்த பெண்களிடம் தன் வீட்டு முகவரியைக் கூறினான்.

''யுனிவர்சிட்டியை விட உங்கள் வீடு எங்களுக்குப் பக்கம்தான்'' என்றார்கள் இருவரும் முகம் மலர.

''சரி, வருகிறோம்'' என்று நேகா கிளம்பவும், இரு வரும் தாங்கள் சுமந்து வந்த பையிலிருந்த மீன்களை நேகாவிடம் கொடுத்தார்கள்.

''இன்று உங்கள் அதிர்ஷ்டம், எங்களுக்கு கிங் சாலமன் கிடைத்தது. சமைத்துப் பாருங்கள். வெகு ருசியாய் இருக்கும்.''

கிட்டத்தட்ட ஐந்து அல்லது ஆறு பவுண்ட் எடையுள்ள அந்த மீனைப் பிடிக்க முடியாமல் நேகாவின் கைகள் தளர்ந்தன. ''வேண்டாம்'' என நேகா மறுக்கவும் பிருஸா சொன்னாள். ''சீஸன் முடியப் போகிறது மேடம். இனி அடுத்த வருடம்தான் இத்தனை பெரிய மீனைப் பிடிக்க முடியும். இந்த சமயத்தில் எல்லோரும் ஒரு வருடத்திற்கு வேண்டிய மீன்களைப் பிடித்துக் கொள்வார்கள். நாங்களும் நிறைய பிடித்தாகி விட்டது. எங்கள் பிரதான உணவு சாலமன் மீன்கள்தான். அதனால்தான் எங்கள் இனத்தவருக்கு இதய நோயே வருவதில்லை. சீக்கிரம் போய் சமையுங்கள். நேரமாகி விட்டது'' என்றபடி சிட்டாகப் பறந்து போனார்கள் இருவரும்.

''என்னால்தான் மீன் சாப்பிட முடியவில்லை என்றாய். இப்போது என்னால் உனக்கு எத்தனை பெரிய மீன் கிடைத்திருக்கிறது பார்த்தாயா?'' என்றான் நேகா பெருமையுடன்.

''ஆமாம். இந்த ஊரில் உனக்கிருக்கும் செல்வாக்கைப் பார்த்தால் எனக்கே பயமாக இருக்கிறது.''

நந்தகிஷோர் அவளை கிண்டலடித்தபடியே அவள் கையிலிருந்த மீனை வாங்கிக் கொண்டு முன்னால் நடந்தான்.

அவர்கள் எதிரே வந்து கொண்டிருந்தவர்கள் அவன் கையிலிருந்த பெரிய மீனைப் பற்றி ஆர்வத்துடன் விசாரித்தார்கள். ''எங்கே பிடித்தாய்?'' என்றார்கள். ஒவ்வொருவரும் தாங்கள் பிடித்த மீனுடன் போட்டோ எடுத்துக் கொண்டார்கள். நேகா வியப்புடன் பார்க்கையில், ''இப்படி படம் எடுத்துக் கொள்வது இந்த நாட்டு கலாச்சாரம்'' என்றான் நந்தகிஷோர்.



நேகாவுக்கு அவளுடன் பணிபுரியும் உள்ளூர் வாசியான சக ஆசிரியை ஒரு முறை பேச்சுவாக்கில் சொன்னது நினைவுக்கு வந்தது. ''நேற்று நானும் என் கணவரும் தீவிரமாக மீன் பிடிப்பதில் ஈடுபட்டிருந்தோம். ஆற்றங் கரையில் நின்றிருந்த எங்கள் மகன் எதற்கோ அழுது கொண்டிருந்தான். நாங்கள் முதலில் அவனைக் கண்டு கொள்ளவில்லை. பிறகு அவன் ஒரேயடியாக கத்தத் தொடங்கினான். பிறகுதான் அருகில் போய் பார்த்தோம். பெரிய பூச்சி எதுவோ கடித்து அவன் கால்களில் எல்லாம் இரத்தம் வடிந்தது. உடனே டாக்டரிடம் தூக்கிக் கொண்டு ஓடினோம். இப்போது கொஞ்சம் பரவாயில்லை. இன்னும் தாமதமாக வந்திருந்தால் பூச்சி விஷம் உள்ளே பரவி மிகவும் சிரமமாகி இருக்கும்'' என்றார் டாக்டர்.

''நீ முதலில் அவன் அழும்போதே ஏன் நீ கவனிக்கவில்லை'' என்றாள் நேகா.

''மீனை பிடிக்கும் ஆர்வத்தில் அவனை மறந்தே போனோம்'' என்றாள் அவள். இப்படியும் இருப்பார்களா என்று நேகா யோசனையில் இருந்தாள். இன்று அந்த ஆசிரியை போலவே எல்லோரும் தங்களை மறந்த பரவசத்துடன் மீன் பிடிப்பதைப் பார்க்கையில் அவள் சொன்னது உண்மைதான் என்று புரிந்தது.

# 7

நேகா கடிகாரத்தைப் பார்த்தாள். மாலை நான்கு மணி ஆகியிருந்தது. கோடை காலம் முடிந்து விட்டதால்

இருந்த சில மணி நேர வெளிச்சமும் இல்லாமல் எப்போதும் இருட்டாக இருந்தது. பொதுவாக, சூரியன் எழும்போது எழுந்து, அது மறையும்போது உறங்கச் செல்பவர்கள் இந்தியர்கள். அதே போல சூரியனோடேயே வாழப் பழகிய நேகாவுக்கு விடியவே விடியாத இருள் தாங்க முடியாததாக இருந்தது. காலையில் கண் விழிக்கும் போதே சூரிய ஒளியை எதிர்பார்த்து காத்திருந்த பிறகு இன்னும் ஏழெட்டு மாதங்களுக்கு சூரியனையே பார்க்க முடியாது என்பது நினைவுக்கு வந்ததும் அவசரம் அவசரமாய் கிளம்பி யுனிவர்சிட்டிக்கு விரைவாள். நல்ல வேளையாய் நந்தகிஷோரின் வீட்டிற்கு அருகிலேயே பஸ் நிறுத்தம் இருந்தது. அதனால் போக்குவரத்துக்கு அவனை எதிர்பார்க்காமல் இருக்க முடிந்தது.

அவள் காலையில் கிளம்பி வருகையில் நந்தகிஷோர் அவன் வேலையாய் போய் இருப்பான். அல்லது அவனது அறையில் தூங்கிக் கொண்டிருப்பான். மாலையில் வீட்டிலேயே இருக்க மாட்டான். இரவு உணவை மட்டும் வீட்டில் இருந்தால் அவளுடன் பேசியபடி சாப்பிடுவான். சில நாட்களில் பார்ட்டி என்று போனால் இரவில் வர மாட்டான். இருவருமாய் வீட்டிலிருக்கும் சமயங்களில் வேலைகளில் அவளுக்கு உதவி செய்வான். காலையில் நேகா அவனுக்காக சமைத்து வைத்து விட்டுக் கிளம்புவாள். மாலையில் நேகா திரும்பி வரும்போது அவளுக்காக அவன் எதாவது சாப்பிடத் தயார் செய்து விட்டுப் போயிருப்பான்.

நேகாவிற்கு சிறு வயதிலிருந்து ஏற்பட்டிருந்த தனிமை உணர்ச்சி கொஞ்சம் கொஞ்சமாய் மறையத் தொடங்



கியது. தனக்கு ஒரு துணை இருப்பதாக தெம்பு ஏற்பட்டது. அந்நிய ஆணுடன் தங்கியிருக்கிறோம் என்ற உறுத்தல் இன்றி சகஜமாக உணரத் தொடங்கினாள்.

அன்றைய வேலை நேரம் முடிந்ததும் டீச்சர்ஸ் ரூமிலிருந்த தன் மேஜையைப் பூட்டி விட்டு நேகா கிளம்பினாள்.

''நந்தகிஷோர் ஊரில் இல்லையா?'' என்றாள் மாதவி அவளிடம்.

''இங்கேதான் இருக்கிறான்'' என்றாள் நேகா.

''பிறகு ஏன் உன்னை அழைத்துப் போக வரவில்லை? மழைக்காலம் தொடங்கி விட்டது. இனி நீ பஸ்ஸில் போய் வருவது சிரமம்.''

''எனக்குச் சிரமம் என்பதற்காக அவனையும் சிரமப் படுத்துவது நியாயம் இல்லை மாதவி.''

''இதில் நியாய அநியாயம் எங்கிருந்து வந்தது நேகா! அவனுடைய கம்பெனியில் நீ இருக்கும்போது உனக்குத் தேவைப்படும் உதவிகளைச் செய்ய வேண்டியது அவன் கடமை.''

''அவன் வீட்டில் தங்கியிருந்த போதும் எந்த உறவும் இல்லாத ஒரு பெண்ணுக்கு உதவி செய்வதற்கும் ஒரு அளவு இருக்கிறது இல்லையா?''

''உறவில்லையா?'' என்றாள் மாதவி மிகப் பெரிய கேள்விக்குறியுடன். ''கூட யாரும் இல்லாத சூழ்நிலையில், ஒரே வீட்டில் ஒரு ஆணும் பெண்ணும் வசிக்கும்போது அவர்களுக்குள் உறவில்லாமல் எப்படி இருக்க முடியும்?''

நேகாவின் முகம் சிவந்தது. "உன் கற்பனை மிகவும் அபத்தமாக இருக்கிறது மாதவி. ஒரே வீட்டில் வசிப்பவர்கள் ஒரே படுக்கையில்தான் தூங்க வேண்டும் என்பதில்லை. எனக்கு அந்த வீடு பாதுகாப்பாக இருக்கிறது. நந்தகிஷோருக்கு என் மூலமாய் பேசவும், பழகவும் ஒரு துணை கிடைத்திருக்கிறது. செலவுகளை இருவரும் பகிர்ந்து கொள்கிறோம். மற்றபடி எங்களுக்குள் நட்பைத் தவிர வேறு எதுவும் இல்லை."

"தீவிரமான நட்பு பல சமயங்களில் காதலில்தான் முடியும் நேகா. நந்தகிஷோர் எல்லா வகையிலும் உனக்குப் பொருத்தமானவன். நீங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் காதலிப்பதிலோ, இயல்பான உணர்வுகளுக்கு வடிகால் தேடுவதிலோ தவறு எதுவும் இல்லை. இந்த வின்டரில் ஏற்படும் டிப்ரஷனிலிருந்து விடுபட நெருக்கமான துணை அவசியம். என்னிடம் நீ எதையும் நீ மறைக்கவோ, கூச்சப்படவோ வேண்டிய அவசியம் இல்லை நேகா."

நேகா தன் கோபத்தையும், வருத்தத்தையும் அடக்கிக் கொண்டு மறுப்புடன் தலையசைத்தாள். "இங்கேயே வசிக்க நேர்ந்ததால் உன் மனோபாவம் கூட அமெரிக்கத் தனமாய் மாறி விட்டிருக்கிறது மாதவி. நீ அவசியம் என்று சொல்கிற விஷயம் எனக்குத் தேவை என்றே தோணாது. ஒருவனிடம் பிரியம் ஏற்பட்டாலும், அவனை காதலித்தாலும் கூட அது படுக்கை அறை வரை செல்ல வேண்டிய அவசியம் இல்லை மாதவி. நந்தகிஷோரின் பார்வையில் சிறு சலனம் தென்பட்டிருந்தால் கூட என்னால் அந்த வீட்டில் இருந்திருக்க முடியாது. ஹி இஸ் எ பர்பெக்ட் ஜென்டில்மேன்."



"ஆனால் நந்தகிஷோருக்கு நிறைய பெண் சிநேகிதிகள் உண்டு நேகா. இயல்பிலேயே அவன் மிக ஜாலியானவன். அவன் பறக்கும் விமானத்தைப் போலத்தான் அவனும்."

"அவனது பர்சனல் லைப் பற்றி நாம் விமர்சிப்பது சரியில்லை மாதவி" என்றாள் நேகா.

"அவனது பர்சனல் உன்னை பாதிக்காத வரை விமர்சிக்கக் கூடாதுதான்" என்ற மாதவி, "சரியான பழம் பஞ்சாங்கம் நீ. உன் அழகான உருவத்திற்கு நேர் எதிரான மென்டல் மேக்அப் உனக்கு" என்றாள் அவளிடம்.

மாதவியிடம் பேசிக் கொண்டிருந்ததில் நேகா அன்று கிளம்பத் தாமதமாகியிருந்ததில் வழக்கமான பஸ் போய் விட்டிருந்தது. பனிக்காற்று வேகமாக வீசத் தொடங்கியது. 'டான்' கோட்டையும் மீறி வெடவெடத்த குளிரில் பற்களை கடித்தபடி நின்றிருந்தாள். பஸ் சுலபத்தில் வருவதாகக் காணோம். புயலில் எங்காவது சிக்கியிருந்தால் இன்று பஸ் வராது என்றார்கள் பஸ் நிலையத்தில் நின்றிருந்தவர்கள். நந்தகிஷோர் இப்போது வீட்டில் இருப்பானா என்று தெரியவில்லை. பஸ் வராமல், அவனும் இல்லை என்றால் தன் கதி என்ன என்று ஒரு நிமிடம் திகைப்பாக இருந்தது. பஸ் நிலையத்தில் ஒரிருவர் இன்னும் பஸ்சுக்காக காத்திருக்கவே, நேகாவும் சமாதானத்துடன் பஸ்சுக்காக காத்திருக்கத் தொடங்கினாள்.

வெகு நேரத்திற்கு பிறகு ஒரு வழியாய் பஸ் வந்து சேர்ந்தது. ஏறி அமர்ந்ததும் நேகாவிற்கு பசியும், குளிரும் உடலை வாட்டியது. எப்போது வீடு வரும் இறங்கி போகலாம் என்ற அலுப்புடன் சாய்ந்து அமர்ந்தாள். அவ

மணியில் செல்ல வேண்டிய பஸ் அன்று போய்ச் சேர ஒரு மணி நேரமாயிற்று.

நேகா பஸ்சை விட்டு இறங்கி ஓட்டமும் நடையுமாக வீட்டை நோக்கி விரைந்தாள். காலிங் பெல்லை அழுத்தும் முன்பே கதவைத் திறந்த நந்தகிஷோர் ''ஏன் இத்தனை நேரம்?'' என்றான்.

''வழக்கமான பஸ்சை மிஸ் பண்ணிட்டேன்'' என்றாள் நேகா. இன்று நியூஸ் கேட்டாயா நீ? புயல் ஆரம்பித்து விட்டது நேகா. சற்று வேகமான புயலோ மழையோ தொடங்கினால் பஸ் போக்குவரத்தை நிறுத்தி விடுவார்கள். நீ வழியில் எங்காவது மாட்டிக் கொள்ளப் போகிறாய் என்று பயந்து போனேன்.''

''அப்படி எங்காவது மாட்டிக் கொண்டால் உன் ப்ளைட்டில் பறந்து வந்து என்னைக் காப்பாற்றி விட மாட்டாயா?'' என்றாள் நேகா சிரிப்புடன்.

''புயல் வேகமாக வீசும்போது ப்ளைட் செல்ல முடியாது நேகா'' என்றான் அவளுக்கு விளக்கும் விதமாக.

பதில் பேசாமல் போய் உடைமாற்றிக் கொண்டு வந்து டைனிங் டேபிளில் அமர்ந்தாள் நேகா. நந்தகிஷோர் அவளுக்குப் புரியும் விதமாக கூறினான். ''இனி பல மாதங்களுக்கு இங்கு க்ளைமேட் மோசமாக இருக்கும் நேகா. வாழ்க்கை முறை கடினமானதாக இருக்கும். அதிக நேரம் வெளியே செலவிட்டால் உடல் குளிர்ந்து விடும். ஒரு முறை என் சக பைலட் ஒருவருக்கு ஒரு கண் சிவந்து போய் விழி அசையாமல் நின்றது. டாக்டரிடம் காண்பித்தபோது, ''குளிரில் அதிக நேரம் இருந்ததால் உங்கள் கண் விறைத்துப் போய் விட்டது இனி அந்த



கண்ணில் பார்வை தெரியாது என்று சொல்லி விட்டார்கள். இன்னும் சிலருக்கு குளிரில் விறைத்துப் போய் கை, கால்கள் இற்று விழுந்து விடுவது என இந்த சமயத்தில் தாக்கும் ஆபத்துகள் அதிகம்.''

''ரொம்ப போர் அடிக்காதே கிஷோர். ஆபத்து ஏற்பட்டால் உன்னை கூப்பிடுகிறேன். நீ உடனே உதவி செய்து ஹீரோவாகி விடலாம். சரியா?'' என்றாள் நேகா கிண்டலாக.

நந்தகிஷோருக்கு கோபம் வந்தது. அன்று அவள் வரும் வரை அவன் பதட்டத்தில் இருந்தான். எங்காவது வழிமாறி போயிருப்பாளோ என்று பயந்தான். ஏனென்றால் இங்கு பழகியவர்களுக்கு வழி தவறுவது சகஜம். கோடையில் நகரமே ஒரு பூந்தோட்டமாகக் காணப்படும். திரும்பிய பக்கமெல்லாம் பூக்களும் பழங்களும் காய்கறிச் செடிகளும் கலர்கலரான இலைகளுடன் மரங்களுமாய் கொள்ளை அழகுடன் இருக்கும். அதே நகரம் குளிர் தொடங்கியதும் மரங்களின் இலைகள் எல்லாம் உதிர்ந்து அவற்றின் மீது ஐஸ் உறைந்திருக்கும். புயல் காற்று நடக்கிற பாதையையே புரட்டிப் போட்டிருக்கும். இந்த மரம், இந்த ரோடு என்று அடையாளம் வைத்துக் கொண்டு ஒரு இடத்திற்குப்போய் வர முடியாது. மறுபடி போகையில் முதலில் அந்த இடத்திற்கு இருந்த அடையாளமே மாறிப் போயிருக்கும். எனவே நேகா வழி தெரியாமல் குளிரில் எங்கோ அலைவது போல அவனுக்குப் பிரேமை ஏற்பட்டது. தவிப்புடன் அவளுக்காகக் காத்திருந்தான். ஆனால் நேகா அவன் கவலையையும் தவிப்பையும் பொருட் படுத்தாததுடன் கேலி பேசிச் சிரிக்கவும் நந்தகிஷோர் தன்னை மறந்து கத்தினான்.

''உன்னைப்போல அறிவில்லாத பெண்ணை நான் பார்த்ததே இல்லை. ஏதோ ஒரு முறை உதவியதற்காக எப்போதுமே உன் பின்னால் ஓடி வருவேன் என்று நினைக்காதே. முட்டாள். முதலில் உன்னை இங்கு அழைத்து வந்தது நான் செய்த பெரிய தவறு.''

தட்டிலிருந்த சப்பாத்தியை வேக வைத்த பருப்புடன் வாய்க்கருகே கொண்டு போன நேகாவின் கரங்கள் தயங்கின. விரல்களிலிருந்து சப்பாத்தி நழுவி தட்டில் விழுந்தது. துக்கமும், அவமானமும் தொண்டையை இறுக்கின.

நந்தகிஷோர் தன் போக்கில் தொடர்ந்து பேசினான். ''யோசிக்காமல் எங்காவது போவதும் பின் பயந்து அலறுவதுமே உன் சுபாவமாகப் போய் விட்டது. முன் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்ற அறிவில்லையா உனக்கு? உன் பொறுப்பற்ற தனத்தில் எல்லோரையும் சிரமத்துக்குள்ளாக்குகிறாய். இடியட்.''

நேகா தன்மானத்திற்கு அடிவிழுந்தாற் போலானாள். இவன் சொன்னவுடன் அறையை காலி செய்து கொண்டு ஓடி வந்ததால் நம்மை எளிதாக எண்ணி விட்டான் என்ற துக்கம் ஏற்பட்டது. மேற்கொண்டு பேச முற்பட்ட நந்தகிஷோரிடம் ''போதும் கிஷோர்'' என்றாள் தன்னைக் கட்டுப்படுத்த முயற்சிக்கும் குரலில்.

''நீ சொன்னது போல் நான் முட்டாள்தான். என் முட்டாள் தனத்தால் உன்னை மிகுந்த சிரமப்படுத்தி விட்டேன். மாதவியுடன் பார்ட்டிக்கு போன இரவில் உன்னை உதவிக்கு அழைத்தது என் முதல் முட்டாள் தனம். பரிதாபப்பட்டு நீ என்னை விடுதியில் டிராப் பண்ணியபோது பயந்து அலறி உன்னுடன் வந்து



ஒட்டிக் கொண்டது என் இரண்டாவது முட்டாள்தனம். இத்தனை முட்டாள்தனம் செய்த பிறகும் மறுபடி இங்கிருந்து கிளம்ப முயற்சி செய்யாமல் முழு முட்டாளாய் இருந்து விட்டேன். இனி என்னால் உனக்கு எந்தச் சிரமமும் ஏற்படாது. கிஷோர் கூடிய விரைவில் நான் வேறு வீடு பார்த்துக் கொள்கிறேன்.''

நேகா பேசி முடித்ததும் அவர்களுக்கிடையே கனத்த மௌனம் நிலவியது. நேகா ப்ளேட்டில் இருந்த சப்பாத்தியை டஸ்ட் பையில் போட்டு விட்டு தட்டைச் சுத்தப் படுத்தினாள்.

''நேகா...'' என்றான் நந்தகிஷோர் தணிந்த குரலில்.

ஹாட் வாட்டரை டம்ளரில் சரித்துக் குடித்துவிட்டு நகர முற்பட்டவளின் கைகளைப் பற்றினான். ''ஸாரி.''

''விடு கிஷோர்'' நேகா கைகளை உதறினாள்.

''நான் எதற்காகச் சொன்னேன் என்று புரிந்து கொள். நேகா.''

அவள் கண்களில் திரண்டிருந்த நீர் அவன் கைகளை பட்டுச் சிதறியது. நந்தகிஷோருக்கு மிதமிஞ்சிய வருத்தம் ஏற்பட்டது. ''என் பதட்டத்தை புரிந்து கொள்ள மறுக்கிறாய் என்ற கோபத்தில் ஏதோ பேசி விட்டேன் நேகா. இதை பெரிதுபடுத்தாதே. மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டுதான் எனக்குப் பழக்கம். யாரையும் அழ வைப்பது என் சுபாவம் அல்ல. ப்ளீஸ் அண்டர்ஸ்டேண்ட் மீ நேகா.''

நேகா பதில் பேசாமல் அவன் கரங்களில் சிக்கியிருந்த தன் விரல்களை உருவ முயலவும், நந்தகிஷோர் வலுக் கட்டாயமாக அவள் முகவாயைப் பற்றித் திருப்பினான்.

நேகாவின் அகலமான கண்களில் ததும்பியிருந்த நீர், கோடையில் உருகி ஓடும் ஆற்றையும், கண்ணீரில் தத்தளித்த விழிகள், அந்த ஆற்றில் துள்ளும் மீன்களையும் அவனுக்கு நினைவு படுத்தின. கோபத்தில் சிவந்திருந்த அந்த முகம் கட அதீத கவர்ச்சியுடன் ஜொலித்தது. அந்த கவர்ச்சியில் தூண்டப்பட்டவனாய் நந்தகிஷோர் ஒரு நொடி தன்னை மறந்து அவள் முகம் நோக்கி குனிந்தான். அவனை நிமிர்ந்தும் பாராமல் நேகா தன் முகவாயைப் பற்றியிருந்த அவன் விரல்களைப் பிரித்துக் கொண்டு அங்கிருந்து விரைந்தாள்.

நந்தகிஷோர் ஏதோ மயக்கத்திலிருந்து விடுபட்டவனாக தலையைக் குலுக்கினான். நல்லவேளை. நேகா போய்விட்டாள். ஒரு நிமிடம் அவள் நின்றிருந்தாலும் தான் இத்தனை நாள் காப்பாற்றிய கண்ணியம் காற்றில் பறந்திருக்கும். நந்தகிஷோர் திவானில் சரிந்து அமர்ந்தான்.

இருவரும் சாப்பிடுவதற்காக அவன் தயாரித்திருந்த உணவு யாரும் தொடாமல் டேபிளில் கிடந்தது. விடியாமலே முடிந்து போகும் இரவுப் பொழுது அன்று அவர்களுக்கு மிக நீண்டதாகத் தோன்றியது.

அடுத்த நாளிலிருந்து நேகா மிகத் தீவிரமாக வீடு தேடும் முயற்சியில் இறங்கினாள். அவள் காலி செய்த குவார்ட்டர்சிற்கு வேறு ஆள் வந்துவிட்டதால் இப்போது அங்கும் இடம் இல்லை என்றார்கள். யுனிவர்சிட்டியில் தெரிந்தவர்களிடம் சொல்லி வைத்தாள். ராபினிடம் சொன்னபோது அவன் உற்சாகமாகச் சொன்னான். "என்னுடைய வீட்டில் இப்போது நான் தனியாகத்தான்



இருக்கிறேன். என் கேர்ள் ப்ரண்ட்டும் வெளியூர் போய் இருக்கிறாள். நீ என்னுடன் வந்துவிடு" என்றான்.

நேகா அருவெறுப்புடன் உடல் சிலிர்த்தாள். "எனக்குத் தனியாக வசிக்க வேண்டும் ராபின். அதற்கு ஒற்றை அறை கிடைத்தாலும் போதும்."

"தனியாகவா? நந்தகிஷோருடன்தானே. நீ வசிக்கிறாய்! உங்களுக்குள் ஏதாவது பிரச்சனையா?" என்றான் ராபின்.

இந்த ஊரிலும் வம்பு பேச ஆட்கள் இருக்கிறார்கள் போலும் என்றெண்ணியபடி "நந்தகிஷோரின் வீட்டில் தான் வசிக்கிறேன். அவனுடன் அல்ல" என்றாள் நேகா.

"இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?" என்றான் ராபின் புரியாமல்.

"அந்த வித்தியாசத்தைப் புரிந்து கொள்ள நீ எங்கள் கலாச்சாரத்தை புரிந்து கொள்ள வேண்டும்" என்ற நேகா அதற்கு மேல் அவனிடம் எதுவும் பேசாமல் தன் வேலையை கவனித்தாள்.

பத்து நாட்கள் தொடர்ந்து வீடு வேட்டையாடிய பின் நேகா சோர்ந்து போனாள். ஒன்று வீடு பெரிதாக, வாடகை அதிகமாக இருந்தது. அல்லது பேயிங் கெஸ்ட்டாக வசிக்கக் கிடைத்த இடங்களில் எல்லாம் பெரும்பாலும் ஆண்கள் தனியாக வசிக்கும் இடங்களாக இருந்தன. அதையும் மீறி அவளுக்கு ஒத்து வரும் போல தோன்றிய சில இடங்கள் யுனிவர்சிட்டியிலிருந்து வெகு தூரத்தில் இருந்தன. யுனிவர்சிட்டி குவார்ட்டர்சை அவசரப்பட்டு காலி செய்திருக்கக் கூடாது என்று தோன்றியது. நந்தகிஷோர் ஆபத்தில் உதவி செய்தான் என்ற ஒரே

காரணத்திற்காக எதைப் பற்றியும் யோசிக்காமல் அவனுடன் சென்றது பெரிய தவறு. அந்தத் தவறைச் சுட்டிக் காட்டியதில் வருத்தப்பட ஏதுமில்லை.

நந்தகிஷோர் அன்று ஸாரி கேட்டதுமே அந்த பிரச்சனையை மறந்து விட்டான். அவளிடம் எப்போதும் போல் பேசினான். சமைத்தான்.

எதையாவது பேசிச் சிரித்தான். ஆனால் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் பேசினாலும் நேகா அங்கிருந்து போய் விடுவதென்ற முடிவில் உறுதியாய் இருந்தாள். இன்னொரு முறை நந்தகிஷோர் எதாவது சொன்னால் என்னால் தாங்க முடியாது என்றாள் தனக்குள்.

* * *

அன்று நேகா தன்னைச் சந்திக்க வந்திருந்த பிருஸாவுடன் ஒரு வீட்டைப் பார்க்க கிளம்பினாள். ஒரு நடுத்தர வயது பெண்மணி தனது சிறிய அறையை வாடகைக்கு விடுவதாக விளம்பரம் செய்திருந்தாள். அதில் இருந்த முகவரிக்கு பிருஸாவுடன் நேகா சென்றபோது ஊரே கனத்த மௌனத்தில் இருந்தது. எப்போதும் பரபரப்பாக இருக்கும் கடை வீதி அதிக ஆரவாரமின்றி இருந்தது.

''இதோ, ஹில்டன் ஹோட்டல். இதற்கு எதிர்புறம் என்று தான் முகவரியில் குறிப்பிட்டிருக்கிறது'' என்றாள் நேகா.

''ஆமாம்'' என்ற பிருஸா அந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலை ஒரு சுவாரஸ்யத்துடன் அண்ணாந்து பார்த்தாள். கோடை முடிந்து விட்டால் டூரிஸ்ட்கள் அதிகம் இன்றி ஹோட்டல் வெறிச்சோடியிருந்தது. பிருஸா நகராமல் நிற்பதைக் கண்ட நேகா ''என்ன விஷயம் பிருஸா?'' என்றாள் அவளிடம்.



''எத்தனையோ நாடுகளிலிருந்து இங்கு வந்து மக்கள் தங்குகிற அளவுக்கு இதன் உள்ளே எப்படியிருக்கும் என்று யோசித்தேன்'' என்றாள் பிருஸா ஒரு வெகுளி சிரிப்புடன்.

இங்கேயே பிறந்து வளர்ந்திருந்த போதும் இந்த ஹோட்டலின் உள்ளே சென்று பார்க்க அனுமதிக்காத அவளின் பொருளாதார நிலையை எண்ணிய நேகா சொன்னாள். ''இதன் உள்ளே எப்படியிருக்கும்? என்ன இருக்கும்? என்று இன்று பார்க்கப் போகிறோம் பிருஸா.''

''எப்படி மேம்?'' என்றாள் பிருஸா ஆர்வத்துடன்.

''அதை அப்புறம் சொல்கிறேன்'' என்ற நேகா, அவள் கைகளைப் பற்றியபடி ஹோட்டலின் எதிர்புறமிருந்த தெருவுக்குள் நுழைந்தாள்.

அந்த வீட்டின் உரிமையாளர் சில்வியா நடுத்தர வயது பெண்மணியாய் இருந்தாள். நேகாவின் அதிர்ஷ்டமோ என்னவோ பெரிதாக கண்டிஷன்கள் போடாமல் அட்வான்ஸ் அதிகம் எதிர்பார்க்காமல் ''உன்னால் முடிந்ததை தா. நல்ல துணைதான் எனக்கு முக்கியம்'' என்றாள்.

நேகா நிம்மதியுடன் அடுத்த நாளே தான் அங்கு வந்து விடுவதாகச் சொன்னாள்.

''அடுத்த மாதம்தான் வீடு காலியாகும். இப்போது வேறு ஒரு தம்பதிகள் தங்கியிருக்கிறார்கள்'' என்றாள் சில்வியா.

டோக்கன் அட்வான்ஸாக ஒரு தொகையைக் கொடுத்து விட்டு, நேகா பிருஸாவுடன் ஹில்டன் ஹோட்டலின் ரெஸ்ட்டாரண்ட்டிற்குள் நுழைந்தாள்.

''இங்கே எதற்கு?'' என்றாள் பிருஸா தயக்கத்துடன்.

''எனக்கு வீடு கிடைத்ததைக் கொண்டாட. ஆனால் ஒரு காபிக்கு மேல் எதுவும் கேட்டு விடாதே. என் பர்ஸ் அதற்கு மேல் தாங்காது'' என்றாள் நேகா சிரித்தபடி.

ஹோட்டலின் அழகிய வேலைப்பாடுகளையும், காலில் புதைந்த கார்பெட்டையும், ஆளை விழுங்கும் சோபாக்களையும், சரம் சரமாய் தொங்கும் ஷாண்டிலியர்களிலிருந்து பரவிய ஒளி வெள்ளத்தில் அந்த ஹோட்டல் ஒரு புதிய உலகமாகக் காட்சியளிப்பதையும் ஆர்வத்துடன் ரசித்தபடி பிருஸா ரெஸ்டாரண்டினுள் நுழைந்தாள். காதை வருடும் இசையை ரசித்தபடி இருவரும் காபியை சுவைத்தார்கள். பிருஸா சொட்டுச் சொட்டாய் காபியை ருசித்துச் சுவைக்கவும், நேகா காலிக் கோப்பையை டேபிள் மீது வைத்து விட்டு கண்ணாடித் தடுப்பின் மறுபுறம் தெரிந்த லாபியையும், அதில் கண்ணாடிக் குவளையில் சிரித்த பூக்களையும் வேடிக்கை பார்த்தாள். லாபியின் வரவேற்பு கவுண்டரைப் பார்த்த நேகா அங்கே நின்றிருந்த நந்தகிஷோரைப் பார்த்ததும் ஆச்சரியமானாள்.

''பிருஸா லாபியில் இருக்கிறேன். நீ காபியை முடித்து விட்டு வா'' என்ற நேகா ரிசப்ஷனை நோக்கி விரைந்தாள்.

ரிசப்ஷனில் கையெழுத்திட்ட நந்தகிஷோர், அங்கே தந்த சாவியைப் பெற்றுக் கொண்டு திரும்பி வாயிலைப் பார்த்தான். பெரிதாய்ச் சிரித்தபடி அப்போதுதான் உள்ளே வந்த ஒரு பெண்ணின் தோளை அணைத்தபடி அவன் பேசியதைப் பார்த்த நேகா தயங்கி நின்றாள்.



பார்த்துக் கொண்டிருக்கையிலேயே நந்தகிஷோர், அந்தப் பெண்ணுடன் லிப்டிற்குள் சென்று மறைய நேகா ரிசப்ஷனை அணுகினாள்.

''எஸ்'' என்ற புன்னகையுடன் வரவேற்ற பெண்ணிடம், ''என் நண்பன் சற்று முன் இங்கே நின்றிருந்ததைப் பார்த்தேன். அவன் எங்கே போனான் என்று சொல்ல முடியுமா?'' என்றாள் நேகா.

''உங்கள் நண்பரின் பெயர் என்ன?'' என்ற அவள் கேள்விக்கு,

''நந்தகிஷோர்'' என்றாள் நேகா.

''ஓ ஜஸ்ட் நவ் ஹி இஸ் கோயிங். மூன்றாவது மாடி. அறை எண் முந்நூற்று பதினாறு'' என்றாள் அந்த பெண் கொஞ்சும் குரலில்.

''என்னது? நந்தகிஷோர் இங்கே தங்கியிருக்கிறானா?'' என்றாள் நேகா நம்ப முடியாமல்.

''ஆமாம். அவர் எங்களது பழக்கமான கஸ்டமர். நீங்கள் அவரைச் சந்திக்க வேண்டுமா? பொதுவாக இந்த நேரத்தில் அவரை தொல்லை செய்வது சரியில்லை. உங்கள் பெயரைச் சொன்னால் அவர் ப்ரீயாக இருக்கும் சமயம் தகவல் சொல்கிறேன்' என்றாள் ரிஷப்ஸனிஸ்ட்.

''இல்லை எனக்கு அவசரம் இல்லை. நான் அவனை பிறகு சந்திக்கிறேன்'' என்ற நேகா அடக்க மாட்டாமல் கேட்டாள். ''அந்த பெண் யார் என்று தெரியுமா?''

''அவர் அடிக்கடி தன் கேர்ள் ப்ரண்சுடன் வருவது வழக்கம்தான். அவர்களைப் பற்றி எல்லாம் எங்களுக்குத் தெரியாது. தெரிந்தாலும் நான் அதைச் சொல்லக் கூடாது.''

இதற்கு மேல் தொல்லை செய்யாதே என்ற கண்டிப்பு அந்த குரலில் ஒலிக்க நேகா மேற்கொண்டு எதுவும் கேட்காமல் கிளம்பினாள்.

## 8

கூடவே வந்த பிருஸாவிடம் ஒரு வார்த்தை பேசாமல் வீட்டை நோக்கி செல்கையில் எங்கோ அடிவாங்கினாற் போல் மனம் வெதும்பியது. தினம் ஒரு பெண்ணுடன் நந்தகிஷோர் உல்லாசமாய் பொழுதை கழிக்கிறான் என்று நம்புவது கஷ்டமாக இருந்தது. தன்னிடம் மிகுந்த கண்ணியத்துடன் நடந்து கொண்டவன் எப்படி ஒரு ப்ளேபாய் ஆக இருக்க முடியும்? ஒரு வேளை அந்த பெண் இவன் காதலியாக இருக்கக் கூடுமோ? அப்படியானால் ஏன் காதலிக்கும் பெண்ணை திருமணம் செய்து கொள்ளவில்லை? நந்தகிஷோரின் பெற்றோருக்கு நேகா அவர்கள் வீட்டில் தங்கியிருப்பதை நந்தகிஷோர் தெரிவித்திருந்தான். அம்மாவோ, தங்கையோ போன் செய்தார்கள். உன்னை விசாரித்தார்கள் என்றுகூட இரண்டொரு முறை சொல்லியிருக்கிறான். தாங்கள் இல்லாத சமயம் மகன் ஒரு பெண்ணுக்கு வீட்டில் தங்க இடம் கொடுத்திருப்பதை ஆட்சேபிக்காதவர்கள், நிச்சயம் அவன் காதலித்திருந்தால் குறுக்கே நிற்கப் போவதில்லை, பிறகு ஏன் காதலியை கௌரவமாக மணந்து கொள்ளாமல் இரகசியமாக



ஹோட்டல் அறையில் சந்திக்கிறான்? தெரிந்தால் கோபித்துக் கொள்வாள் என்றுதான் வீட்டிற்கு அழைத்து வரவில்லையா? ஆனால் ரிஷப்சனிஸ்ட் அவன் அடிக்கடி வந்து போவதாகவும், கேர்ள் பிரண்ட்ஸ் என்று பன்மையிலும் சொன்னாளே!

தன்னை மறந்து நடந்து கொண்டே போனவளின் கைகளைப் பற்றினாள் பிருஸா. "உங்கள் வீடு வந்து விட்டது மேடம். கவனிக்காமல் எங்கே போகிறீர்கள்?"

நேகா சுய உணர்வு பெற்றவளாய் திரும்பிப் பார்த்தாள். பிருஸா சொன்ன உங்கள் வீடு என்பது மனதில் உறைக்கவும் மறுப்புடன் தலையசைத்தாள்.

"பனி அடர்த்தியாகிக் கொண்டே போகிறது. சீக்கிரமாக உள்ளே செல்லுங்கள்" என அவளை உலுக்கினாள் பிருஸா. "இந்த பனியில் நீ மட்டும் எப்படி நடந்து போவாய்? இன்று இங்கேயே தங்கி விடு. நாளை போகலாம்" என்றாள் நேகா.

"என் வீட்டினர் நான் வராவிட்டால் தேடிக் கொண்டு வந்து விடுவார்கள். ஐஸ்சில் பிறந்த என்னை இந்தக் குளிர் ஒன்றும் செய்யாது" என்ற பிருஸா தன் வீட்டிற்குக் கிளம்பிப் போனாள்.

தெருவெங்கும் பனி மூடத் தொடங்கியிருந்ததால் வழியே கண்ணுக்குத் தெரியாமல் சாலை சமதரையாய் இருந்தது. இருளில் பழகிய லாவகத்துடன் பிருஸா நடந்து செல்வதை பார்த்துக் கொண்டிருந்து விட்டு நேகா கதவைத் தாழிட்டாள்.

கண்களை மூடினால் நந்தகிஷோரும், அவனுடன் இருந்த பெண்ணுமே நினைவுக்கு வந்தனர். நினைவு

களை ஒதுக்க, தூக்கம் வரும் வரை டி.வி.யை ஓட விட்டாள்.

* * *

காலையில் கண் விழிக்கும்போதே நேகாவிற்கு அலுப்பாக இருந்தது. சூரிய வெப்பத்தில் உடலுக்கு எனர்ஜியை பெற்று இயங்குபவளுக்கு இருள் சூழ்ந்த அந்தக் காலை வேளை எந்தப் புத்துணர்வையும் அளிக்க வில்லை. கடிகாரத்தையும், காலண்டரையும் பார்த்தே நாளைத் தள்ள வேண்டியிருந்தது. ஒரு வழியாகத் தயாராகி அவள் அறையை விட்டு வெளியே வந்த போது ''குட்மார்னிங்'' என்றான் நந்தகிஷோர் கார்ன்ப்ளேக்ஸில் சூடான பாலைக் கலந்தபடி.

''யுவர் ப்ரேக் பாஸ்ட் ரெடி'' என்றவனின் இயல்பான சிரிப்பை எதிர்கொள்ள முடியாமல் நேகா தடுமாறினாள். இரவு அவள் உறங்கும் வரை அவன் வீட்டிற்கு வர வில்லை. பிறகு எப்போது வந்தான் என்று தெரியாது. காலையில் அவளுக்கு முன் எழுந்து ப்ரேக்பாஸ்ட்டுடன் காத்திருக்கிறான். நேகாவுக்கோ பதில் பேசக்கூட முடியவில்லை. எப்படி இவனால் இத்தனை சாதாரண மாக இருக்க முடிகிறது என்ற வியப்பை முகத்தில் காட்டாமல் இருக்க அவள் வாட்ச்சைப் பார்த்தாள்.

''எனி திங் ராங்க்?'' என்றான் நந்தகிஷோர் அவள் முகத்தைப் பார்த்து.

''இல்லை'' என நேகா தலையசைத்தாள்.

''பிறகு ஏன் டல்லாக இருக்கிறாய்?''

''நேற்று நீ வீடு வர வெகு நேரமாகி விட்டது போலிருக் கிறதே!'' என்றாள் நேகா அவன் முகத்தைப் பார்க்காமல்.



''ஓ! நான் சீக்கிரமாக வரவில்லை என்று தான் டல்லாக இருக்கிறாயா?'' என்றான் நந்தகிஷோர் உற் சாகத்துடன்.

''ஷட்டப்... நீ எங்கோ சுற்றி விட்டு வந்தால் நான் ஏன் மூட் அவுட் ஆக வேண்டும்?'' நேகா சீறினாள்.

''சரி. நீ உண்மையான காரணத்தைச் சொல்'' நந்த கிஷோர் விடாது சீண்டினான்.

''ஓகே என் கேள்விக்கு பதில் சொல். நேற்று மாலை யில் நீ எங்கே போய் இருந்தாய்?''

''ஹோட்டலுக்குப் போயிருந்தேன்'' என்றான் நந்த கிஷோர் உடனடியாக.

''தனியாகவா போனாய்?''

''இல்லை. ஒரு ப்ரண்ட்டுடன் போயிருந்தேன்.''

ப்ரெண்ட் என்ற வார்த்தை எத்தனை பாதுகாப்பானது. ஆணா, பெண்ணா என்று விளக்க வேண்டியதில்லை. உண்மையையும் முழுதாகச் சொல்லாமல் பொய்யும் சொல்லாமல் தப்பிக்க உபயோகிக்கும் வார்த்தை அது. நீ ஒரு பெண்ணுடன் ஹோட்டலில் தங்கி இருந்தாயா என்று நேரடியாகக் கேட்க முடியாமல், முழுதாக விட்டு விடவும் முடியாமல் நேகா தடுமாறினாள்.

அவளுக்கு வாய்ப்பளிக்கிற விதமாய் நந்தகிஷோரே கேட்டான்.

''நேற்று நீ என்ன செய்தாய் நேகா? உன் பொழுது எப்படி கழிந்தது?''

''நேற்று நான் பிருஸாவுடன் கடை வீதிப் பக்கம் போயிருந்தேன்.''

''ஓ.கே.''

''அங்கே ஹோட்டல் ஹில்ட்டனின் உன்னை உன் ப்ரண்ட்டுடன் பார்த்தேன் கிஷோர்'' என்றாள் அவன் முகத்தையே பார்த்தபடி.

''ஆமாம். எனக்குத் தெரிந்த பெண்ணுடன் போயிருந் தேன்'' என்றான் நந்தகிஷோர் சாதாரணமாக.

''போயிருந்தது மட்டுமல்ல. நேற்று அங்கேயே அவளுடன் தங்கியிருந்தாய் என்று நினைக்கிறேன்'' நேகாவின் குரல் அழுத்தத்துடன் வந்தது.

''ஆமாம். தங்கியிருந்தேன். அதனால் என்ன?'' என்றான் நந்தகிஷோர் சகஜமாக.

குற்ற உணர்வோ, தவறு செய்து விட்ட படபடப்போ இல்லாத அவனது சகஜமான பேச்சு நேகாவை ஆச்சரியப்படுத்தியது.

''அந்தப் பெண்ணை நீ காதலிக்கிறாயா நந்த கிஷோர்?'' என்றாள் தன் மனம் படபடப்பதை வெளிக் காட்டாமல்.

''நாங்களா? காதலர்களா? என் ப்ரெண்ட் கேட்டால் பயங்கரமாக சிரிப்பாள்'' என்றான் நந்தகிஷோர் புன் னகையுடன்.

''கிஷோர் இது உன் பர்சனல்தான். என்றாலும் இத்தனை நாள் பழகிய நண்பர்கள் என்ற உரிமையில் கேட்கிறேன். உன் மனைவியாகவோ, காதலியாகவோ இல்லாத ஒருத்தியுடன் தனிமையில் எப்படித் தங்கி யிருந்தாய்? இந்த உறவுக்கு என்ன பெயர் வைத்திருக் கிறாய்? இது சமூக உறவுகளுக்கு நேர்மாறானது என்று உனக்குத் தோணவில்லையா? இது தவறில்லையா?''



''இதில் என்ன தவறு நேகா?'' என்றான் நந்தகிஷோர் ''சகஜமாக பரஸ்பர உணர்ச்சிகளுக்கு ஒரு வடிகால். அன்றாடம் பல் துலக்குவது போல ஒரு நார்மலான விஷயம். ஒரு வேளை நீ வளர்ந்த சூழ்நிலையால் உனக்கு வித்தியாசமாகத் தெரியலாம். மணமான தம்பதி கள் கூட தாம்பத்ய உறவில் திருப்தி இல்லை எனில் வேறு துணையைத் தேடத்தான் செய்கிறார்கள். அதற்காக கணவன் மீது மனைவிக்கோ, மனைவி மீது கணவனுக்கோ அன்பு இல்லை என்ற அர்த்தம் இல்லை.

காதல் என்பது வேறு. உணர்ச்சிகள் என்பது வேறு. காதலிப்பவர்களிடம் மட்டும்தான் உணர்ச்சி வசப்பட முடியும் என்பது சினிமா காதலர்களில்தான் சாத்தியம். நிஜத்தில் உடல் அமைதியடைந்தால் மனம் லேசா கிறது. மன அழுத்தம் இல்லாமல் நம் வேலையைப் பார்க்க முடிகிறது.''

இந்த புதிய விளக்கத்தில் நேகா திகைத்துப் போனாள்.

''யாரும் யாருடனும் உறவு கொள்ள முடியும் என்றால் மனிதனுக்கும் விலங்குகளுக்கும் வேறுபாடு இருக்காது கிஷோர். தனக்கென்று ஒரு துணையை ஏற்படுத்திக் கொண்டு வாழ்நாள் முழுவதும் அந்தத் துணையிடம் நேர்மையாகவும், நம்பிக்கையுடனும் வாழ்வதுதான் நல்ல தாம்பத்தியத்தின் அடிப்படை. உன் திருமணத் திற்கு பின்பும் இது தொடருமானால்...''

நேகா முடிக்கும் முன் நந்தகிஷோர் குறுக்கிட்டான். ''ஸ்டாப் திஸ் இடியாடிக் ஆர்க்யுமென்ட்ஸ். ஒரு இயல் பான விஷயத்தை நீ மிகுந்த சிக்கலாக்கிப் பார்க்கிறாய். நான் யாரையும் ஏமாற்றவில்லை.

பொய் சொல்லவில்லை. ஒரு பாட்டை ரசித்துக் கேட்பதைப் போல ஒரு சினிமா உற்சாகத்துடன் பார்ப்பதைப் போலத்தான் இதுவும். இதில் நேர்மை. உண்மை என்பதற்கெல்லாம் அர்த்தமே இல்லை'' என்ற நந்தகிஷோர் சிறிது நேர யோசனைக்குப் பின் சொன்னான். ''உன் பெற்றோர் உன்னைப் பிரிந்து சென்றதின் பாதிப்பு இன்னும் உன் ஆழ் மனதில் இருக்கிறது நேகா. அதனால்தான் உனக்கு ஆண், பெண் உறவு குழப்பமானதாக இருக்கிறது. கணவனோ மனைவியோ உடைமைப் பொருள் அல்ல நேகா. அடிப்படையில் அவர்கள் தனித்தனியானவர்கள். தன் விருப்பம் போல் வாழும் சுதந்திரம் அவர்களுக்கு உண்டு.''

''அப்படியானால் உன் வருங்கால மனைவிக்குக் கூட இந்த சுதந்திரம் உண்டா கிஷோர்?''

''முதலில் நான் நிச்சயம் திருமணமே செய்து கொள்ள மாட்டேன்.

ஒருவேளை அப்படி நடந்தால் எனக்கு இருக்கும் எல்லா சுதந்திரமும் அவளுக்கும் இருக்கும்.''

''பிறகு ஏன் உன் பெற்றோரோ, சகோதரியோ இந்த வாழ்க்கை முறையைப் பின்பற்றவில்லை?''

''அவர்களுக்கு இதில் பிரியம் இல்லை. உன்னைப் போன்ற கட்டுப்பெட்டித்தனம் அதற்குக் காரணமாய் இருக்கலாம்.''

ஒரு உயர்வான பண்பாடு இவனுக்குக் கட்டுப்பெட்டித்தனமாய் தெரிகிறது. மனித உறவுகளின் அடிப்படையிலேயே முரண்பட்டு நிற்பவனிடம் எதைச் சொல்லி புரிய வைக்க முடியும்? நேகாவுக்கு அலுப்பாக இருந்தது.



இரவு முழுவதும் தான் எதிலோ ஏமாந்து போனாற் போல் தவித்தது. எத்தனை முட்டாள்தனம் என்ற வெட்கமேற்பட்டது.

சத்தமின்றி கிளம்பி வந்து யுனிவர்சிட்டியின் படிகளில் ஏறுகையில் இந்த மண்ணிலேயே பிறந்து வளர்ந்தவன் அதற்குண்டான குண இயல்புகளுடன் இருப்பான். இந்தியாவின் பாரம்பர்ய சூழலில் வளர்ந்த தன் பெற்றோரே மனம் தடுமாறிப் போனபோது இவனைக் குற்றம் சொல்ல நமக்கு உரிமை இல்லை என்ற எண்ணம் எழுந்தது.

இந்த மாதம் முடிந்ததும் சில்வியா வீட்டிற்குப் போய் விடப் போகிறோம். அதன் பின் நந்தகிஷோருக்கும் எனக்கும் என்ன தொடர்பு இருக்கப் போகிறது. நான் ஏன் அவனைப் பற்றி இத்தனை குழம்ப வேண்டும்! இங்கிருந்து போன பிறகு என்றாவது அவனை வழியில் பார்த்தால் அவனுக்கே உரிய சிரிப்புடன் ஒரு 'ஹாய்' சொல்லக் கூடும். அதைத் தவிர அவனுக்கும் எனக்கும் என்ன தொடர்பிருக்கப் போகிறது! அத்துடன் திருப்தியடைய முயற்சித்தும் முடியாமல் நேகாவின் மனம் கனத்தது.

அடுத்த நாள், இன்னும் இருபத்தி எட்டு நாட்கள்தான் ஒன்றாக இருக்கப் போகிறோம் என்று நாட்களைக் கணக்கிட்ட நேகா இருக்கும் வரை உற்சாகமாகக் கழிப்பதென முடிவு செய்தாள். இடையில் நடந்த விஷயங்களை மறக்க முயற்சி செய்தாள்.

நந்தகிஷோர் எப்போதும் போலச் சிரிப்பும், விளையாட்டுமாக இருந்ததால் அவளாலும் தன் முடிவின்படி நடக்க முடிந்தது.

நேகாவிற்கு அன்று காலை கிளம்பத் தாமதமானதால் காலை உணவை அவளது அறைக்கே கொண்டு வந்து தந்தான் நந்தகிஷோர்.

''உனக்கெதுக்கு சிரமம்?'' என்று மறுத்தவளிடம், ''என் சமையலைச் சாப்பிடுவது அதை விட சிரமம்'' என்றான் கிண்டலாக.

''சமையல் என்று பெரிதாக அலட்டிக் கொள்ளாதே கிஷோர். ப்ரெட்டின் மீது ஜாம் தடவி வைப்பதையும், கார்ன்ப்ளேக்சில் பாலை கலப்பதையும், டீ டிகாஷன் போடுவதையும் எங்கள் ஊரில் சமையல் என்றே சொல்ல மாட்டார்கள். உண்மையில் சமையல் என்னவென்று ஒரு நாள் நான் உனக்கு சமைத்துப் போட்ட பிறகு சொல்'' என்றாள் நேகா.

''தினமும் நீ சமைக்கத்தானே செய்கிறாய்?''

''ஆமாம். தயிர் சாதம், சப்பாத்தி, தோசை என்று ஒரு சிலது மட்டும் தான் செய்திருக்கிறேன். இனி வெரைட்டியாக செய்யப் போகிறேன். இனி ஒரு மாதத்திற்கு தினமும் நமக்கு விருந்துதான்.''

''அதென்ன ஒரு மாத கணக்கு?''

சொல்லிவிடலாமா என்று யோசித்த நேகா இருக்கிற சுமூகமான சூழ்நிலையை கெடுக்க மனம் வராததால், ''ஒரு மாதம் டிரைனிங் பீரியட், கிஷோர். ஏனென்றால் இனிமேல்தான் நன்றாக சமைக்கக் கற்றுக் கொள்ளப் போகிறேன்'' என்றாள் சிரித்தபடி.

''அடிப்பாவி.''

இருவரும் கலகலவெனச் சிரிக்கையில் நந்தகிஷோர் சொன்னான்.



''எதுவுமே தெரியாமல்தான் இத்தனை அலட்டலா?''

''என் பெட்டியில் நிறைய சமையல் புத்தகங்கள் இருக்கிறது. விரைவிலேயே கற்றுக் கொண்டு விடுவேன்.''

''நீ கற்றுக் கொண்ட பிறகு சொல்லியனுப்பு. அப்புறம் வருகிறேன்'' என்றான் நந்தகிஷோர்.

அன்றிலிருந்து நேகா பரிசோதனைக் கூடத்தில் நிற்பது போல தினமும் சமையலறையில் புத்தகமும் கையுமாக நின்றிருந்தாள் 'வால்மார்ட்'டிலும் 'கே மார்ட்'டிலும் தேடித்தேடி மளிகை சாமான்கள் வாங்கினாள். சமையலறையே பழியாகக் கிடந்ததில் ஒரு வாரத்தில் ஓரளவு நன்றாக சமைக்கப் பழகியிருந்தாள். அவ்வப்போது மாதவியிடமும் கேட்டுக் கொண்டாள்.

''கட்டின பொண்டாட்டி மாதிரி சமையலுக்கு இத்தனை மெனக்கெடறியே'' என்றபோதும் மாதவி அவள் கேட்ட விபரங்களைத் தர தயங்கவில்லை.

ஒரு விடுமுறை நாளில் சாம்பார் சாதத்தையும், பால் பாயசத்தையும் ருசித்த பின்னர் ''உண்மையிலேயே சூப்பர்ப். சொன்னபடி சவாலில் ஜெயித்து விட்டாய். இனி இந்த அரண்மனையின் சமையலறை சாம்ராஜ்ஜியம் உன் கையில்தான். உனக்கு வேறு என்ன பரிசு வேண்டும் சொல்!'' என்றான் நந்தகிஷோர்.

''நான் கேட்காமலேயே நிறைய பரிசளித்திருக்கிறாய் கிஷோர்'' என்றாள் நேகா.

''என்ன பரிசளித்தேன்?'' என்றான் கேள்வியுடன்.

நந்தகிஷோரின் தனிப்பட்ட வாழ்க்கை முறையை விமர்சிக்க தனக்கு உரிமை இல்லை என்பதால், நேகா

தன்னிடம் அவன் நடந்து கொண்ட விதத்தைச் சொன்னாள். "உன் நட்பும் இக்கட்டான சூழ்நிலையில் நீ செய்த எதிர்பாராத உதவியும் எனக்குக் கிடைத்த பெரிய பரிசு கிஷோர். அதுவும் முன்பின் தெரியாத பெண்ணை யார் வீட்டில் தங்க இடம் கொடுப்பார்கள்?"

நந்தகிஷோர் வியப்புடன் தலையசைத்தான். "நீ சொன்ன பிறகுதான் இது எனக்கு நினைவுக்கு வருகிறது. உன்னைப் புதியவளாக எனக்கு தோன்றவே இல்லை. முதன் முதலாகப் பார்த்தபோதே நெடுநாள் பழகியவர்களைப் பார்க்கிற உணர்வுதான் ஏற்பட்டது. அதனால்தான் உன்னை வீட்டிற்கு அழைத்து வருவதில் எனக்கு எந்தத் தயக்கமும் ஏற்படவில்லை.

நேகாவின் மனதிற்குள் இனம்புரியாத உணர்வொன்று எழ, அதை சமாளித்தபடி சிரித்தாள். "ஒருவேளை கதைகளில் வருவது போல் என்னை உன் கனவில் பார்த்திருக்கிறாயோ என்னவோ?" நேகாவை ஒரு கணம் உற்றுப் பார்த்த நந்தகிஷோர் புன்னகைத்தான். நேகா அணிந்திருந்த வெள்ளை நிற மிர் ஹவுஸ் கோட் பாதம் வரை நீண்டிருந்தது. இயல்பாகவே அவளது சிவந்த நிறம் தற்போது சூரிய ஒளியே படாததால் இன்னும் வெளுத்து பால்நிறத்தில் பளபளத்தது. குளிரில் சிவந்து போயிருந்த கன்னங்களையும், இதழ்களையும் பார்த்தபடியே அமர்ந்திருந்தவனை நேகாவின் குரல் கலைத்தது.

"கிஷோர்."

"நின்று கொண்டே தூங்குகிறாயா என்ன?"



நந்தகிஷோர் சொன்னான். "உண்மையிலேயே உன்னைப் பார்த்தால் கனவுகளில் வரும் தேவதைப் பெண்ணைப் போலவே இருக்கிறாய். தொட்டால் மறைந்து போய் விடுவாயோ என்று கூட பயமாக இருக்கிறது."

மிருதுவான அவனது குரலில் நெகிழத் தொடங்கிய மனதை அடக்கியபடி நேகா சொன்னாள். "பறந்து போகிற சக்தி எனக்கிருந்திருந்தால் எத்தனை நன்றாக இருக்கும் கிஷோர்! அந்த சக்தி இல்லாததாலேயே சில கசப்பான நிஜங்களின் பிரதிபிம்பமாய் உன் எதிரில் நிற்கிறேன்."

அந்த குரலின் லேசான சோகம் மனதைத் தொட, "நேகா" என அவன் அருகில் வரும் முன் "எனக்கு வேலையிருக்கிறது. கிஷோர். பிறகு, பேசலாம்" என நேகா விலகிப் போனாள்.

ஒரு புத்தகத்தை கையில் எடுக்கும் போதுதான். அவளுக்கு நினைவு வந்தது, நந்தகிஷோரிடம் இன்று சில்வியா வீட்டிற்கு போய் விடுவதை சொல்ல நினைத்திருந்தோம் என்பது, தினமும் இப்படித்தான் நடக்கிறது. நிதானமாக பேசிக் கொண்டிரும் போது சொல்ல வேண்டும் என ஒவ்வொரு முறையும் நினைப்பாள். ஆனால் பேச்சு வேறு திசையில் செல்லவும் சொல்ல நினைத்ததையே மறந்து போவாள். அடுத்த முறை கண்டிப்பாக அவனுக்கு தெரிவித்துவிட வேண்டும் என உறுதியாக முடிவு செய்தாள்.

யுனிவர்சிட்டி பில்டிங்கில் அன்று காலை நேகாவைப் பார்த்ததும் "ஜெயதேவ் வந்துவிட்டான்" என்றாள் மாதவி தகவல் தெரிவிக்கும் விதமாக.

"மனைவியுடனா?" என்றாள் நேகா ஆர்வமாக.

மாதவி இல்லை என தலையசைத்தாள். "சோகத்தில் மூழ்கிப் போய் இருக்கிறான். பாவம்."

இருவரும் சிரிக்கையில் "உண்மையிலேயே பாவம் தான்" என்றாள் நேகா.

அன்று மதிய இடைவேளையில் ஜெயதேவ்வை சந்தித்த போது "ஹலோ" என்றான் அதிக சுரத்தின்றி.

மனைவி செய்து கொடுத்திருந்த நெய் மணக்கும் இனிப்பு வகைகளை மாதவிக்கும் நேகாவிற்கும் கொடுத் தான்.

அவன் குடும்பத்தைப் பற்றி நேகா விசாரிக்கும் முன்பே சொன்னான்.

"உண்மையில் இந்த முறை எனக்கு இங்கு திரும்பி வரவே மனசில்லை."

"ஒவ்வொரு முறையும் இப்படித்தான் சொல்கிறாய்?" என்றாள் மாதவி ஜாங்கிரியை சுவைத்தபடி.

"நிஜம்தான்" என்றான் ஜெயதேவ் முகத்தின் சோகம் மாறாமல்.

"பேசாமல் நீங்கள் அங்கேயே வேலை தேடிக் கொள்ள லாமே!" என்றாள் நேகா.

"செய்யலாம். ஆனால் இங்கே கிடைக்கிற அளவிற்கு சம்பளம் கிடைக்காது. செலவுகளும் அதிகமாகும். என் திருமணத்திற்கு வாங்கிய கடன் இப்போதுதான் முடியும் தருவாயில் இருக்கிறது. இன்னும் என் தங்கைக்கு திருமணம் ஆக வேண்டும். அதன் பிறகு தான் எதையும் யோசிக்க முடியும்," என்ற ஜெயதேவ் சிறிது இடை



வெளி விட்டு சொன்னான். "என் மனைவிக்கு அதுதான் மிகவும் கோபம். அவளுக்கு இங்கே ஒத்துவராது. என்னை அங்கேயே இருக்க சொல்கிறாள். இருவரும் தனித்தனியாய் வாழ்வதற்கு எதற்கு திருமணம் என் கிறாள்."

"கரெக்ட். சரியான கேள்வி" என்றாள் மாதவி.

"ஷ்... மாதவி..." என அவளை அதட்டிய நேகா... ஜெயதேவ்க்கு இதமாக சிறிது நேரம் பேசிக் கொண்டிருந் தாள்.

சற்று நேரத்தில் சமாதானம் அடைந்தவனாக ஜெய தேவ் எழுந்து தன் வேலையைப் பார்க்கப் போனான். விடாது தொணதொணத்த மாதவியிடமிருந்து விலகி நேகா தன் டேபிளில் அமர்ந்து நோட் புத்தகத்தின் பக்கங்களை மார்க் செய்யத் தொடங்கினாள்.

அன்று அவளுக்குத் தொடர்ச்சியாக நான்கு வகுப் புகள் எடுக்க வேண்டியிருந்தது. பிருஸாவும், டெர்னடின் னும் கூட ட்யூஷனுக்கு வருவார்கள். இப்போதெல்லாம் வகுப்பு மாணவ, மாணவிகள் அவளுடன் மிகவும் நெருக்கமாகி விட்டார்கள். சகஜமாக கேலி பேசி சிரித்தார்கள். ரொம்ப சிரமம் கொடுக்காமல் பாடத்தை கவனித்தார்கள். தன் வேலையை முழு ஈடுபாட்டுடன் செய்வதால்தான் அவர்களை தன் பக்கம் இழுப்பது சாத்தியமாகியிருக்கிறது என்று நினைத்தாள் நேகா. அவளது டெடிகேஷன் பார்த்த நந்தகிஷோர் கூட ஒரு முறை சொன்னான். "உன் ஸ்டூடன்ஸ் அதிர்ஷ்டசாலிகள் நேகா. உன் கவனம் முழுவதும் அவர்கள் மீது பதிந் திருக்கிறது."

''உண்மைதான். ஏனென்றால் எனக்கு அவர்களைத் தவிர யாரும் இல்லை.''

நந்தகிஷோர் சடாரென திரும்பினான். ''நான் உனக்கு யாரும் இல்லையா நேகா?''

அந்த குரல் நேகாவின் மனதைத் தொட்டது. வெறும் நண்பன் என்று ஒதுக்கி விட முடியாமல் இன்ன உற வென்று சொல்லவும் முடியாதவனை யார் என்று சொல் வது? நேகா பதில் சொல்ல முடியாமல் அமைதியானதை நினைக்கையில் இப்போதும் குழப்பமாகத்தான் இருந்தது.

* * *

வார இறுதிநாளான அன்று நேகா இரவு டிவியில் ஒரு ஆங்கிலப் படத்தைப் பார்த்து விட்டு, தூக்கம் வராமல் தன் துணிகளை அயர்ன் செய்து கொண்டிருந்தாள். அவள் அறைக் கதவு மெலிதாகத் தட்டப்படும் ஓசை கேட்டது. நேகா ஆச்சரியமானாள். இரவு ஒரு மணிக்கு நந்தகிஷோர் எதற்காக கூப்பிடுகிறான்? இருவரிடமும் தனித்தனியே சாவி இருப்பதால் அவன் எத்தனை தாமதமாக வந்தபோதும் அதனால் நேகாவிற்கு தொல்லை எதுவும் ஏற்பட்டதில்லை. அவனை மோசமான சூழ்நிலையில் ஒரு பெண்ணுடன் பார்த்துவிட்ட போதும் இப்போது கதவைத் திறக்க நேகாவுக்கு எந்த தயக்கமும் ஏற்பட வில்லை. அவள் கதவைத் திறந்ததும் ''வா'' என்றான் நந்தகிஷோர் இவள் கைகளைப் பற்றி.

''எங்கே?'' என்றாள் நேகா வியப்புடன்.

நந்தகிஷோர் அவளை வேகமாக ஜன்னலருகே இழுத்துச் சென்றான். மூடியிருந்த கர்டன்களை விலக்கி ''இங்கே பார்'' என்றான் உற்சாகத்துடன்.



லானிலும், தெருக்களிலும் எரிந்த மங்கலான விளக் கின் ஒளியில் வானத்திலிருந்து பஞ்சு பொதிகள் பறந்து வந்து கீழே விழுவது போலிருந்தது.

''கிஷோர், இதென்ன மேகக் கூட்டம் தரைக்கு வந்து விட்டதா?'' என்றாள் நேகா நம்ப முடியாமல்.

''நன்றாக பார். பனிமழை பொழிகிறது'' என்றான் நந்தகிஷோர் புன்னகையுடன்.

''வாவ்!'' கைகளை தட்டி குதித்த நேகா, நந்தகிஷோர் திரும்பிப் பார்ப்பதற்குள் கதவைத் திறந்து கொண்டு வெளியே ஓடிவிட்டாள்.

மணிரத்னம் படத்தில் மட்டுமே பார்த்திருந்த வெள்ளை மழையை நேரில் பார்த்ததும் மனம் பரவச மானது. கைகளை விரித்து கண்களை மூடி நின்றாள். பனி மேலே படும் போது உடல் குளிர்ந்து சிலிர்க்கும் சுகத்தை ரசித்தாள். வீட்டு வாயிலில் நின்றிருந்த ஸ்ப்ரூஸ் மரத்திலும் ராஸ்பெரி செடிகளிலும் பனி உறைந்திருந் தது. நேகா மரத்தை அசைத்து பனி நழுவி கீழே விழு வதை கண்டு ஆர்ப்பரித்தாள். தலையிலும், தோளிலும் முகத்திலும் திட்டுதிட்டாக விழுந்திருந்த பனித்துகள் களை விரல்களில் தடவி குதூகலித்தாள்.

நேரம் மறந்து நின்றிருந்தவளுக்கு திடீரென உடல் குளிரத் தொடங்கியது. உள்ளே போய்விடலாம் என் றெண்ணிய போது நடக்க முடியாமல் கால் தடுமாறியது. நந்தகிஷோர் உள்ளே வர சொல்லி குரல் கொடுத்ததை ஏன் கண்டு கொள்ளாமல் போனோம் என்றிருந்தது. அவனை கூப்பிட வாயை திறந்த போது உதடுகள் தந்தியடித்தன. குரல் தொண்டையை விட்டு வெளியே வரவில்லை.

நேகாவின் உடல் முழுவதும் உதறத் தொடங்குகையில் அவள் தோளில் கனமான பர் ப்ளாஸ்கெட் விழுந்தது.

''உள்ளே வா'' என்றான் நந்தகிஷோர் அவளிடம்.

நேகா எத்தனை முயற்சித்த போதும் கால்கள் நகர மறுத்தன. குளிரில் உடல் உறுப்புகள் இற்று விழுந்து விடும் என்று நந்தகிஷோர் கூறியிருந்தது நினைவுக்கு வர பயந்து போனாள்.

''நேகா, பாஸ்ட்...'' என்று நந்தகிஷோர் அவள் முகத்தைப் பார்த்ததும் நிலைமையை புரிந்து கொண்டவனாக நேகாவின் இடுப்பை அணைத்தபடி, கிட்டத்தட்ட அவளை தூக்கிய நிலையில் வேகமாக நடந்தான். சோபாவில் அவளை அமர வைத்து ஹீட்டரை முழு வேகத்திற்கு திருப்பினான். ட்ரையரால் அவள் தலையையும், உடைகளையும் உலர வைத்தான். சூடான பாலை குடிக்க வைத்து கை கால்களை ஆவி பறக்க தேய்த்துவிட்டான்.

வெகு நேரத்துக்கு பிறகு உணர்வு வரப்பெற்ற நேகா, ''தேங்க்ஸ்'' என்றாள் நன்றியுடன்.

அத்தனை நேரமும் அக்கறையும், கனிவுமாய் கவனித்துக் கொண்ட நந்தகிஷோர் கோபத்துடன் சீறினான். ''சரியான முட்டாள் பெண் நீ. பாதுகாப்பான உடைகளைக் கூட அணியாமல் கொட்டுகிற பனியில் எப்படி வெளியே போனாய்?''

மீண்டும் இவனை அலைக்கழித்து விட்டோம் என்ற குற்ற உணர்வுடன் நேகா சொன்னாள். ''வெள்ளையாய் மழை பொழிவதைப் பார்த்ததும் என்னையே நான் மறந்து போனேன்.''



''சரிதான். சோலோ டான்ஸ் ஆடப் போனாயா?'' என்றவனுக்கு தலை குனிந்து அவள் அமர்ந்திருந்த விதம் தவறு செய்து விட்ட குழந்தையை நினைவு படுத்தியது. இயல்பாக அவள் முகத்தை நிமிர்த்தி கனிவாக பேசத் துடித்த மனதை அடக்கியபடி ''சரி. போய் தூங்கு'' என்றான் அவளிடம்.

எழுந்து தன் அறைக்குச் செல்ல திரும்பிய நேகா தடுமாறி அவன் மீதே விழுந்தாள். கவனமாய்த் தானே நடந்தோம், எப்படி விழுந்தோம் என்று யோசிக்கையில் வீட்டின் மேஜை நாற்காலிகள் தடதடவென ஆடின. வெளியே 'விர்' என்ற காற்றின் சப்தம் பயங்கரமாக கேட்டது. சற்றுமுன் அழகாய் விழுந்து கொண்டிருந்த வெள்ளை பனி எல்லாம் சூறைக் காற்றில் பறந்து கொண்டிருந்தன. காற்றில் பறந்த பனிக்கட்டிகள் போர்டிகோவின் ப்ளாஸ்டிக் கூரை மேல் அடுத்தடுத்து விழவே, கூரை பலத்த சப்தத்துடன் சரிந்தது.

நேகா நடுங்கும் விரல்களால் நந்தகிஷோரின் கைகளைப் பற்றி, ''மீண்டும் நிலநடுக்கமா?'' என்றாள்.

''இல்லை. புயல். சூறைகாற்று புயலுடன் சேர்ந்து வீசுகிறது'' என்றான் நந்தகிஷோர்.

''இப்போது இந்த வீடும் சரிந்து விழுந்தால், கொட்டுகிற பனியில் நம் கதி என்ன?'' என்றாள் திகிலுடன்.

''அப்படி ஒன்றும் நடக்காது நேகா. இதை விட பெரிய புயலை நான் பார்த்திருக்கிறேன்'' என்றான் நந்தகிஷோர்.

அந்த பெரிய சோபாவில் நந்தகிஷோரின் கைகளைப் பற்றியபடி நேகா அப்படியே அமர்ந்திருந்தாள். உள்ளே சென்று படுக்கவும் பயமாக இருந்தது.

''இந்த காற்று எப்போது நிற்கும்?'' என்றாள் நந்தகிஷோரிடம்.

''இயற்கையின் சீற்றங்களை கணிக்க முடியாது நேகா. அதை சமாளித்து வாழத்தான் பழகிக் கொள்ள வேண்டும்'' என்றான் நந்தகிஷோர்.

''நல்ல ஊரில் வந்து மாட்டிக் கொண்டேன்'' என்றாள் நேகா. ''புகைப்படத்தில் இந்த இடத்தின் அழகைப் பார்த்ததும் மயங்கிப் போனேன். இத்தனை அழகு நிறைந்த இடத்தில் இப்படிப்பட்ட பயங்கரங்களும் இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. நாளை முதல் வேலையாய் வேறு இடத்தில் வேலை தேடப் போகிறேன்...'' நேகாவின் புலம்பல்களுக்கு பதில் சொல்லாமல் நந்தகிஷோர் பெரிதாய் புன்னகைத்தான்.

நேகா சோபாவில் பின்னால் சாய்ந்து அமர்ந்தாள். வெளியே காற்றின் இரைச்சல் தணிந்திருந்தது. கண்கள் அலுப்புடன் தானாக மூடின. எங்கே இருக்கிறோம் என்பதைக் கூட உணராமல் அப்படியே உறங்கிப் போனாள். தூக்கத்தில் சரிந்து தன் தோளில் விழுந்தவளை நந்தகிஷோர். அவள் உறக்கம் கலையாமல் சோபாவில் படுக்க வைத்தான். கனமான போர்வை கழுத்து வரை போர்த்தி விட்டு தரையின் வெல்வெட் விரிப்பில் கால் நீட்டி அமர்ந்தான்.

## 9



நேகா காலையில் உறக்கம் கலைந்த பின்பும் எழ மனசின்றி கண்களை மூடியபடி படுத்திருந்தாள்.



அவளை சூழ்ந்திருந்த கதகதப்பிலிருந்து விலக விரும்பாமல் புரண்டு படுத்தவளுக்கு தூக்கி வாரிப் போட்டது. நந்தகிஷோரை அணைத்தபடி தான் படுத்திருப்பது தெரிந்ததும் சடாரென்று எழுந்தாள்.

குழப்பத்துடன் யோசித்தவளுக்கு இரவு நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றாக நினைவுக்கு வந்தன. கடைசியில் சோபாவில் அமர்ந்தபடியே தூங்கிப் போனோம். பிறகு எப்படி இவன் அருகில் வந்தோம்? தூங்கிய பிறகு நந்தகிஷோர் நம் அருகில் வந்திருப்பானா? இல்லையே! நான்தானே சோபாவிலிருந்து அவன் அருகில் வந்திருக்கிறேன்! இரவு முழுவதம் ஒரு ஆணின் அணைப்பில் உறங்கி இருக்கிறோம் என்ற எண்ணம் அவளை பயங்கொள்ள செய்தது. தான் பாதுகாப்பாகத்தான் இருக்கிறோம் என்று தெரிந்த போதும் நேகாவின் கண்கள் கலங்கின.

நேகா எழுந்து சென்று தன் அறையின் படுக்கையில் விழுகையில் அவனது கதகதப்பு கூடவே இருப்பது போன்ற பிரேமை ஏற்பட்டது. தன் புத்தி ஏன் இப்படி போகிறது? இந்த சூழ்நிலையில் நானும் மாறிவிட்டேனா? இங்கே எல்லோரும் சொல்கிற மாதிரி இந்த குளிரும் இருளும் துணைத் தேட சொல்கிறதா? அதுவும் இவன் தினம் ஒரு பெண்ணுடன் சுற்றுபவன் என்று இவன் வாயாலேயே கேட்ட பிறகும் எனக்குள் இந்த சலனம் ஏன் வந்தது? சிறு வயதிலிருந்து படிந்து போன பாட்டியின் வளர்ப்பு முறை கூட மறந்து விட்டதா எனக்கு? காதல், கல்யாணம் என்ற பொறுப்புகளை விரும்பாதவனை காதலித்தால் எதிர்காலத்தில் என் நிலை என்னவாகும்?

நேகாவின் கண் முன்னே, நந்தகிஷோர் பெண்களுடன் நெருக்கமாக இருப்பது போன்ற காட்சிகள் விரியவும் நேகா அருவெறுப்புடன் தலையை உலுக்கினாள்.

'நோ. எந்த காலத்திலும் என் சுயமரியாதையை இழக்கமாட்டேன். தனியாக இவனுடன் இருக்க நேர்ந்ததால் வந்த குழப்பம் இது. வேறு வீட்டிற்கு குடி போனதும் தானாக போய்விடும்.'

நேகா எழுந்துபோய் கொதிக்கும் நீரில் முகத்தை கழுவினாள். சமையலறைக்கு சென்று டீக்கு பாத்திரத்தில் நீரை வைக்கையில் போன் ஒலித்தது.

''நேகா, ஞாயிறு மாலை என் வீட்டில் ஒரு பார்ட்டி இருக்கிறது. வருகிறாயா?'' என்றாள் மாதவி.

''ஓ. நோ.'' என நேகா மறுக்கையில் ''என் பிறந்தநாள் நேகா கண்டிப்பாக வர வேண்டும். நந்தகிஷோரிடமும் சொல்லியிருக்கிறேன். நேரில் பார்க்கலாம். பை'' என நேகா பேசுமுன் போனை மாதவி கீழே வைத்தாள்.

நேகா டீ பாக்கெட்டைப் பிரிக்கையில் மறுபடி போன் ஒலித்தது.

மாதவிக்கு இன்று வேறு வேலை இல்லை போலும் என்ற எரிச்சலுடன் ஹாலிலிருந்த போனை எடுத்து ''என்னால் இன்று வரமுடியாது மாதவி'' என்றாள் நேகா.

''எங்கே என்று தெரிந்து கொள்ளலாமா?'' என்றது எதிர்புறமிருந்த குரல்.

''நீங்கள் யார்?'' என்றாள் நேகா திகைப்புடன்.



''நான் அனுசூயா. நந்தகிஷோரின் அம்மா. நீ நலமா நேகா? இன்று உனக்கு விடுமுறை நாள் இல்லையா?'' என்றாள் அனுசூயா பலநாள் பழகின பாவனையில்.

''என் விடுமுறை. வேலை பற்றி எல்லாம் உங்களுக்குத் தெரியுமா ஆன்ட்டி?'' என்றாள் நேகா வியப்புடன்.

''எங்கள் வீட்டில் என் மகனுடன் தங்கியிருக்கும் பெண்ணைப் பற்றி இது கூட தெரியாமல் இருக்குமா?'' என்றாள் அனுசூயா.

தனியாக ஒரு ஆண்பிள்ளையுடன் தங்கியிருக்கிறாள். என்ன மாதிரி பெண் இவள் என்று தன்னை பற்றி இவர்கள் நினைக்கக் கூடுமோ என்று நேகா யோசிக்கையில் ''வீடு உனக்கு வசதியாக இருக்கிறதா?'' என்றாள் அனுசூயா.

''ஆமாம். ஆனால்...'' என நேகா மேலே பேசும்முன் ''ஆனால் என்னம்மா?'' என்றாள் அனுசூயா அவசரமாக.

''ஒரு இக்கட்டான சூழ்நிலையில் தற்காலிகமாக இங்கே தங்கியிருக்க வந்தேன் ஆன்ட்டி. இப்போது வேறு வீடு பார்த்திருக்கிறேன். இந்த மாத இறுதியில் கிளம்பி விடுவேன். உங்களை எல்லாம் பார்க்காமல் போகிறேன் என்ற குறைதான்'' என்றாள் நேகா.

''குறைப்பட வேண்டியதே இல்லை. பூஜாவின் பெண்ணுக்கு இப்போதுதான் இருபது நாள் ஆகிறது. இன்னும் நான்கு மாதம் கழித்து குழந்தையுடன் அங்கு வருவோம். அதுவரை நீ எங்கும் போக வேண்டாம். நந்தகிஷோருக்கும் ஒரு துணை இருக்கிறது என்ற திருப்தி எங்களுக்கு. நீ எந்த தயக்கமும் இன்றி உன் வீட்டில் இருப்பது போல இருக்கலாம்,'' என்றாள் அனுசூயா.

நந்தகிஷோரின் பெற்றோர்களும் வித்தியாசமானவர்கள்தான் என்ற நினைவில் பூஜாவையும் குழந்தையையும் பற்றி விசாரித்தாள் நேகா.

நந்தகிஷோரை கூப்பிடுவதாக சொன்னதும், ''வேண்டாம் நேகா. அவனிடம் நான் பிறகு பேசுகிறேன்'' என்றாள் அனுசூயா.

ரிசீவரை வைத்துவிட்டு போய் பார்க்கையில் டீ ஜில்லென குளிர்ந்திருந்தது. ஒரு பெருமூச்சுடன் நேகா மறுபடி டீ தயாரிக்கத் தொடங்கினாள். கொதிக்கிற டீயை வடிகட்டி பீங்கான் கோப்பையில் ஊற்றி ஷுகர் க்யூப்பை போட்டாள். ஸாசரைத் துடைத்து டீ கோப்பையை அதில் வைத்துவிட்டு திரும்பிய போது டீ கோப்பை காணாமல் போய் இருந்தது.

''நைஸ் டீ'' என்றான் நந்தகிஷோர் டீயை குடித்தபடி.

''சே! இன்னிக்கு எனக்கு ஒரு டீ குடிக்கக் கூட அதிர்ஷ்டம் இல்லை!'' என்றாள் நேகா சலிப்புடன்.

''டீ குடிக்க டீ பவுடர், ஷுகர் தான் வேண்டும். அதிர்ஷ்டம் எதுக்கு?'' என்றான் நந்தகிஷோர்.

''காலையிலிருந்து ஒரு டீ குடிக்க நான் படும்பாட்டை பார்த்திருந்தால் தெரியும் உனக்கு.''

''சரி... சரி.. நீ பாடுபட்டு போட்ட டீயை நீயே குடி'' நந்தகிஷோர் தன் கையிலிருந்த டீ கோப்பையை அவள் கைகளில் திணித்தான். காலியாய் இருந்த டீ கப் அவளைப் பார்த்து சிரிக்க, ''ரொம்ப திமிர் உனக்கு.'' என்ற நேகா அருகிலிருந்த கரண்டியை கையில் எடுத்தாள்.

''வேண்டாம் நேகா. என்னை விட்டு விடு ப்ளீஸ்'' என்றான் நந்தகிஷோர்.



''நோ சான்ஸ்.''

நேகா அவன் அருகில் நெருங்கவும், ''ப்ளீஸ் எனக்கு பயமாக இருக்கிறது. என்னை எதுவும் செய்துவிடாதே ப்ளீஸ்...'' நந்தகிஷோர் நடுங்கவும் நேகாவுக்கு தன்னையும் மீறி சிரிப்பு வந்தது.

''ஓவர் ஆக்டிங் பண்ணாதே, கிஷோர்.''

''இல்லை. நிஜமாகவே எனக்கு பயமாக இருக்கிறது. நீ என்னை என்ன செய்தாலும் ஓடி வர அருகில் ஆட்கள் இல்லை. கத்தினால் கூட வெளியே கேட்குமோ என்னவோ?''

''சரி... சரி.. உன்னைப் பார்த்தாலும் பாவமாக இருக்கிறது. என்னிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டு, எனக்கு குடிக்க டீ தயாரித்து தந்தால் விட்டுவிடுவேன்.''

''டீயுடன் சேர்த்து டிபனும் தயாரித்துத் தருகிறேன். ஆனால் மன்னிப்பு கேட்க மாட்டேன். நியாயமாக பார்த்தால் நேற்று உன்னை குளிரில் உறைந்து போகாமல் காப்பாற்றியதற்கு நீ எவ்வளவோ செய்ய வேண்டும் எனக்கு.''

நேகாவுக்கு சற்றே மறந்திருந்த முந்தைய நாள் நிகழ்ச்சிகள் நினைவுக்கு வந்தன. அவன் முகத்தைப் பார்த்து உடனே பதில் கொடுக்க முடியாமல் ஒரு தயக்கமும், கூச்சமும் ஏற்பட்டது.

''என்ன பதிலே காணோம்?'' என்றான் நந்தகிஷோர்.

நேகாவின் விரல்கள் கதவை மறைத்த கனமான திரைச்சீலையை நெருடின.

''நேற்று ஏன் அப்படி நடந்ததென்று எனக்கு புரியவில்லை கிஷோர்'' என்றாள் சிதறிய குரலில்.

''பனியில் நின்றிருந்ததை சொல்கிறாயா? முதன் முதலாய் பனிமழை பொழிவதை பார்க்கும் யாரும் அதன் அழகில் மயங்கிப் போவது இயற்கை. இத்தனை வருடங்களாக பார்த்துக் கொண்டிருந்த போதும் எனக்கே அலுக்காத விஷயம் அது. நீ கோட், தொப்பி எதுவும் அணியாமல் போனதுதான் தவறு. ஆனால் அது முடிந்து போன விஷயம்'' என்றான் சமாதானப்படுத்தும் விதமாக.

''ஆனால்... ஆனால்... அதன் பிறகு நான் சோபா வில்தானே உறங்கிப் போனேன்!'' மேற்கொண்டு கேட்க மாட்டாமல் நேகா தயங்க, நந்தகிஷோர் சொன்னான். ''சோபாவில்தான் தூங்கினாய். நடு இரவில் வீடு அதிர்ந் ததில் சோபாவிலிருந்து உருண்டு கீழே படுத்திருந்த என் அருகில் வந்துவிட்டாய்.''

உருண்டு கீழே விழுந்ததை கூட உணராமல் உறங்கியிருக்கிறோம் என்பது அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. நந்தகிஷோர் தன்னைப் பற்றி என்ன நினைத் திருப்பான் என்று யோசனையாக இருந்தது.

நந்தகிஷோர் சிவந்திருந்த நேகாவின் முகத்தை, தன்னை பார்க்க மறுக்கும் கண்களை பார்த்தான்.

''ஒரு அசாதாரணமான சூழ்நிலையில் நடந்த சாதா ரண விஷயம் நேகா. நீ இதை பெரிதுபடுத்த வேண்டிய தில்லை'' என்றான் சகஜமாக.

''உனக்கு இது சாதாரணமாக இருக்கலாம். என்னைப் பொறுத்தவரை ஒழுக்கக் கேடாக நடந்து கொண்டிருக் கிறேன். இதே சம்பவம் இந்தியாவில் நடந்திருந்தால் என்னை மிகக் கேவலமாக பார்ப்பார்கள்.''



''இதெல்லாம் நீயாக கற்பித்துக் கொள்ளும் பிரே மைகள். தனிமனித ஒழுக்கம் எந்த சமுதாயத்தையும் சார்ந்தது அல்ல'' என்றான் நந்தகிஷோர் அலட்சியமாக.

''தனி தனி மனிதர்கள் சேர்ந்ததுதான் சமூகம் கிஷோர். தனி ஒரு மனிதனின் ஒழுக்கம், நிச்சயம் அவனது குடும்பத்தையும், குழந்தைகளையும் பாதிக்கும்.''

''ஓ காட். இந்த சின்ன விஷயத்திற்கு உனக்கு இத்தனை குழப்பம் எதற்கு? நீயும், நானும் கரடியோ புலியோ அல்லவே. அருகில் வந்தவுடன் ஒருவரை ஒருவர் கடித்து தின்பதற்கு! சராசரி மனிதர்கள் தானே நாம்.'' என்றான் நந்தகிஷோர் கேலியான குரலில்.

''தினமும் ஒரு பெண்ணுடன் உறங்குவது உனக்கு சின்ன விஷயம் தான் நந்தகிஷோர். ஆனால், நான் அப்படிப்பட்ட பெண் இல்லை. தெரிந்து கொள்.''

''அப்படியா?'' என்றான் நந்தகிஷோர் கிண்டலாக.

நந்தகிஷோரின் கிண்டலான பார்வையும், அலட்சிய மான பேச்சும் நேகாவை கோபப்படுத்தியது. தன்னையும் இவனது பெண் தோழிகளில் ஒருத்தியைப் போல் நினைக்கிறான் என்று கோபம் வந்தது.

''உன் கட்டுப்பாடில்லாத வாழ்க்கை முறையும், தன்னிச்சையான போக்கும் எனக்கு பிடிக்கவில்லை கிஷோர்'' என்றாள் முகத்தில் அடித்தாற்போல்.

''நீ என்னுடைய கெஸ்ட். என்னுடைய ப்ரண்ட். அவ் வளவுதான். உனக்கு பிடிக்கவில்லை என்பதற்காக என் னால் என்னை மாற்றிக் கொள்ள முடியாது. ஒவ் வொருக்காகவும் மாறிக் கொண்டிருந்தால் நான் நானாக இருக்க முடியாது.'' என்றான் நந்தகிஷோர் பதிலுக்கு.

''நீ மாற மாட்டாய் என்று எனக்குத் தெரியும். அத னால்தான் நான் வீட்டை மாற்றிக் கொள்வதென முடிவு

செய்து விட்டேன். என் பாதுகாப்பு பற்றியும் நான் யோசிக்க வேண்டியிருக்கிறது பார்.''

''டாமிட்.'' நந்தகிஷோர் வீசிய வேகத்தில் அருகிலிருந்த பூச்சாடி தூள்தூளாக நொறுங்கியது. ''உன் பாதுகாப்பு பற்றிய பயம் வரும்படியாக என்றைக்காவது நான் நடந்து கொண்டிருக்கிறேனா? உன்னிடம் மிக வெளிப்படையாக நட்பு பாராட்டினேன். பதிலுக்கு நீ என்னை எத்தனை கேவலமாய் நினைத்திருக்கிறாய் என்பது இப்போதுதான் தெரிகிறது. நீ இந்த வீட்டை விட்டு போவதென முடிவு செய்துவிட்டால் என்னால் அதை தடுக்க முடியாது. ஆனால் போவதற்கு முன் நீ பாதுகாப்பு பற்றி ஒரு வார்த்தை சொன்னாயே, அதற்கு விளக்கம் சொல்லி விட்டுப் போ.''

முதன் முறையாய் நந்தகிஷோரின் கோபத்தை பார்த்த நேகா பயந்து போனாள். காரசாரமான விவாதத்தில் இறங்கி தன்னையறியாது வாயை விட்டதற்கு வருந்தினாள். இத்தனை நாட்களில் நந்தகிஷோர் தப்பாக ஒரு பார்வை கூட பார்த்தறியாத போது அவனைப் பற்றி தான் பேசியது மிகப் பெரிய தவறு என்பது புரிந்தது. ஆனால் வார்த்தைகள் வாயை விட்டு வெளியே வந்த பிறகு எந்த சமாதானம் சொன்னாலும் சரியாகாது என்பது புரிய பதில் பேசாமல் நின்றிருந்தாள்.

ஆனால் நந்தகிஷோர் அவளை விடுவதாக இல்லை. ''எனக்கு பதில் சொல்'' என்றான் குனிந்திருந்த அவள் முகத்தைப் பார்த்து. நேகா பார்வையைக் கூட உயர்த்தாமல் நின்றிருந்தாள். நந்தகிஷோர் வேகத்துடன் அவள் முகத்தை நிமிர்த்தினான்.



பனிரென்ற முகமும், நெருங்கி நின்ற சரீத்தின் மென்மையும் உணர்ச்சிகளை உந்த அவள் கன்னங்களைப் பற்றி அழுத்தமாய் முத்தமிட்டான். ரோஜா நிற இதழ்கள் பயத்தில் துடிக்கவே, குனிந்து அதன் துடிப்பை நிறுத்தினான்.

நேகா புரியாத திகைப்பும் குழப்பமுமாக அவனை ஏறிட்டாள். நந்தகிஷோர் நீளமான அந்த இமைகளின் மீது முத்தமிட்டான். நேகாவின் அகன்ற கண்கள் கலவரத்துடன் மேலும் அகன்றன. அந்த விழிகளை சந்தித்த நந்தகிஷோர் அதில் திகைப்பையும் மீறி தெரிந்த பயத்தைப் பார்த்ததும் தடுமாறினான். அந்த தடுமாற்றத்தை பயன்படுத்திக் கொண்ட நேகா அவனிடமிருந்து விலகி ஓடினாள்.

தன் அறைக்குள் நுழையப் போனவளை வழி மறித்து நந்தகிஷோர் சொன்னான். ''பெண்களுடன் பொழுதை கழிப்பது எனக்கு வழக்கம்தான். அதில் தவறு இருப்பதாகவும் நான் நினைக்கவில்லை. ஆனால் அவளது விருப்பம் இன்றி எந்த பெண்ணையும் தொட்டதில்லை. இதை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்.''

# 10

அடுத்து வந்த நாட்கள் நேகாவிற்கும் நந்தகிஷோருக்கும் எந்த சுவாரஸ்யமுமின்றி கழிந்தது. இருவரும் தேவை ஏற்பட்டால் மட்டும் பேசிக்

கொண்டு. அவரவர் போக்கில் போய்க் கொண்டிருந்தனர்.

நான் ஏன் அவனுடன் விவாதத்தில் இறங்கினேன் என நேகா தன்னையே பலமுறை நொந்து கொண்டாள். இங்கிருந்து கிளம்புவதென முடிவான பின்னர் எதற்காக அவனுடன் சண்டையிட வேண்டும்? இத்தனை நாள் அவன் செய்திருக்கும் உதவிகளுக்கு இனிமையுடன் நன்றி கூறி விடைபெறுவதுதானே முறை. அவன் யாருடன் எப்படி பழகினாலும் அதை பற்றி கேட்கவோ, விமர்சிக்கவோ, அவன் பெற்றோர்களுக்கு இல்லாத உரிமை அவளுக்கு எங்கிருந்து வந்தது? அடுத்தவர்களின் அந்தரங்கத்தில் நாகரீகமின்றி தலையிட்டுவிட்டோம் என்பது புரிந்த போதும் அவனை அடுத்தவனாக எண்ணவே முடியவில்லை.

முகத்தில் புதைந்த இதழ்களின் வெப்பமும், ஈரமும் இன்னமும் அவளுடனேயே தங்கியிருக்கையில் அவனை யாரோவாக எண்ணுவது சாத்தியம் இல்லை என்று தோன்றியது. கண்களின் ஓரம் ஈரத்தில் நனைகையில் நேகா தனக்குள் சொல்லிக் கொண்டாள். ''நான் இங்கு வந்திருப்பதற்கான காரணங்கள் வேறு. என் காலில் நான் நிற்க வேண்டும். சுயமரியாதையுடன் வாழ வேண்டும். ஒரு முத்தத்தில் கிளர்ச்சியடைந்தேன் என்றால் எனக்கும் என் அம்மாவுக்கும் வித்தியாசம் இல்லாமல் போய் விடும். நடைமுறையில் ஒத்துவராத எந்த விஷயமும் மனதை பாதிக்காமல் பார்த்துக் கொள்வதுதான் புத்திசாலித்தனம். வயதின் ஆசைகளுக்கு இடம் கொடுத்தேன் என்றால் மிக கேவலமாகிப் போவேன். என் மனமே என்னை கொன்றுவிடும்.



நடந்ததை மனதளவில் ஒதுக்கிய பிறகு நேகாவுக்கு வழக்கம் போல் அவனிடம் பேசுவதற்கு சிரமம் எதுவும் ஏற்படவில்லை. ஆனால் எப்போதும் கலகலப்பாக இருக்கும் நந்தகிஷோர் மிக அமைதியாக இருந்தான். பேச்சில் நிதானம் தெரிந்தது. மீண்டும் சர்ச்சை ஏற்படாமல் இருக்கும் பொருட்டு கவனமாக இருக்கிறான் போலும் என்று நினைத்தாள் நேகா.

அன்று மாலையில் மாதவி போன் செய்து பிறந்தநாள் பார்ட்டியைப் பற்றி நினைவூட்டினாள். போய்தான் ஆக வேண்டும். இல்லை என்றால் விடமாட்டாள். முன்பானால் நந்தகிஷோரை உரிமையுடன் விரட்டி இழுத்துச் செல்லலாம். இப்போது அவனை வருகிறாயா என்று கேட்கக் கூட தயக்கமாக இருந்தது. திரும்பி வர நேரமாகிவிடும் என்பதால் வண்டியில்லாமல் போக முடியாது. மாதவியிடம் கார் அனுப்ப முடியுமா என்று கேட்க வேண்டும் என்று நினைத்தபடி போன் அருகில் சென்றாள் நேகா.

அங்கிருந்த நந்தகிஷோர் அவளைப் பார்த்ததும், ''நீ இன்னும் தயாராகவில்லையா?'' என்றான் வியப்புடன். ''மாதவி உன்னை நேரத்திலேயே வர சொல்லியிருந்தாளே!''

ஒரு நிம்மதியான சிரிப்புடன் ''நீ எப்போது போகிறாய் என்று கேட்பதற்காகத்தான் வந்தேன்'' என்றாள் நேகா.

''நீ கிளம்பியதும் போகலாம். பார்ட்டி முடிவதற்குள் கிளம்பி விடுவாய் அல்லவா?'' என்றான் கேலியாக.

அவனது இயல்பான பேச்சு உற்சாகத்தை தர ''ஐ வில் ட்ரை'' என்கையில் மறுபடி போனில் மாதவியின் குரல்

ஒலித்தது. ''நேகா இன்று பார்ட்டியில் டிரஸ் கோட் தெரியுமா? எல்லோரும் டிரடிஸ்னல் டிரஸ்தான் அணிய வேண்டும். பெண்கள் புடவை. ஆண்களுக்கு பைஜாமா குர்த்தா அல்லது வேஷ்டி. எனவே மறக்காமல் புடவையில் வா'' என்றாள் மாதவி.

''இந்த மாதவியின் ஆர்ப்பாட்டத்திற்கு ஒரு எல்லையே இல்லை'' என்றாள் நேகா முணுமுணுப்பாக.

''என்ன விஷயம்?'' என்றாள் நந்தகிஷோர்.

''இன்று பார்ட்டியின் டிரஸ் கோட் புடவையாம். ஆண்களுக்கு குர்த்தா என்று சொன்னாள்.''

''வித்தியாசமாக கொண்டாட நினைப்பவர்கள், ஒரு தீம் செலக்ட் பண்ணி அதற்கு தகுந்தது போல் உடையணிந்து வர சொல்லுவார்கள் நேகா. உதாரணத்திற்கு பார்ட்டி ஹால் அரண்மனை போல் வடிவமைத்து. விருந்தினர்களை அரச உடைகளின் ஸ்டைலில் உடையணிந்து வரச் சொல்வார்கள். அமெரிக்கன் ஸ்டைல் என்றால் மார்டன் உடைகள், கடற்கரையில் குடில்கள் அமைத்து பார்ட்டி கொண்டாடினால் நீச்சல் உடையோ...''

''என்னது?'' என்றாள் நேகா திடுக்கிட்டு.

நந்தகிஷோர் சிரித்தான். ''கவலைப்படாதே! உன்னை புடவையில்தானே வர சொல்லியிருக்கிறாள்! உன்னிடம் பார்ட்டிக்கு அணிகிற மாதிரி புடவை இருக்கிறதா நேகா? இல்லை என்றால் என் தங்கையின், அம்மாவின் புடவைகள் அலமாரி முழுவதும் நிறைந்திருக்கின்றன.''

''இல்லை கிஷோர். என்னிடமே இருக்கிறது'' என்றாள் நேகா.



நேகா டெல்லியில் வேலைக்கு சேர்ந்த முதல் மாத சம்பளத்தில் அவள் வாங்கிய புடவை பெட்டியின் அடியே கிடந்தது. காபி பொடி கலரில் அடர் பச்சை கரை வைத்த பனாரஸ் பட்டுப்புடவை பிரிக்கும் போதே கைகளில் வழுக்கியது. நேர்த்தியாக புடவை அணிந்து பச்சை கல் ஜிமிக்கியும், பதக்கம் வைத்த மெலிதான ஜெயினுமாய் கண்ணாடி பிரதிபலித்த உருவத்தைப் பார்க்கையில் பெண்களுக்கே உரித்தான மெல்லிய கர்வம் வந்தது.

தலையில் கல் வைத்த க்ளிப்பை மாட்டி, கைகளில் வளையலைப் போடுகையில் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. நந்தகிஷோர் அதற்குள் தயாராகிவிட்டானா? என்று நினைத்தபடியே கதவைத் திறந்த நேகா பயந்து போனாள்.

ஹாலில் பெரிய கரடி ஒன்று நின்று கொண்டிருந்தது. நேகா அலாஸ்கா வந்ததிலிருந்து கரடி பற்றிய பல கதைகளை, அவை மனிதர்களை தாக்கிய சம்பவங்களை கேள்விப்பட்டிருந்தாள். பொது இடங்களில் உள்ள குப்பை தொட்டிகளை இறுக்கமான மூடி போட்டு சங்கிலியுடன் கட்டி வைத்திருப்பார்கள். அதை கரடிகள் உருட்டி விடும் என்பதால் ஆங்கரேஜை விட்டு வெளியே புறப்பட வேண்டும் என்றாலே கையில் கரடி மணியை எடுத்துக் கொண்டுதான் புறப்பட வேண்டும். மணி சத்தத்திற்கு கரடிகள் ஓடிவிடும்.

மிகவும் பிஸியாக இருக்கும் டியூட்டர் ரோடு, நார்தர்ன் லைட் ரோடு ஹைவேக்களிலும் கரடிகள் நிதானமாக உலா வருவதை நேகா பார்த்திருக்கிறாள். கரடியை காயப்படுத்துவதோ, சுட்டுக் கொள்வதோ குற்றம்

என்பதால் வண்டியில் செல்பவர்கள் அவை செல்லும் வரை காத்திருந்த பின்பே செல்வார்கள். பல கார்களில் "இது கரடிகளின் தேசம். இங்கே அவற்றிற்குதான் முதல் உரிமை" என்று ஒட்டப்பட்டிருக்கும். ஸ்டிக்கர்களையும் பார்த்திருக்கிறாள். பார்க்குகளிலும் பொது இடங்களிலும் நேரடியாக கரடியை சந்திக்க நேர்ந்தால் என்ன செய்வது என்று எழுதி வைத்திருப்பார்கள்.

கரடியுடன் பேசிக் கொண்டே கையை உயர்த்திக் கொண்டு பின்னால் நகர வேண்டும். நம் மீது பாய்ந்தால் மூக்கில் அடிக்க வேண்டும் என்ற வாசகங்கள் நினைவில் இருந்தாலும் ஒரு டன் எடையும் எட்டடி உயரமும் உள்ள கரடியைப் பார்த்ததும் கை கால்கள் இயங்க மறுத்தன. சுற்றிலும் பார்த்தபடி அறைக்குள் சென்று விட முயற்சிக்கையில் கரடி நேகாவை பார்த்துவிட்டது. திரும்பி அவளை நோக்கி சீறியது. தன்னை நோக்கி பாயும் கரடியைப் பார்த்ததும் நேகா பயத்தில் அலறினாள். சத்தம் கேட்டு ஓடி வந்த நந்தகிஷோர் ஒரு கணம் திகைத்துப் போனான். நேகா நந்தகிஷோரை திரும்பிப் பார்த்த அந்த ஒரு நொடி கவனக்குறைவில் கரடி நேகாவை நோக்கிப் பாய்ந்தது. கரடியின் முகம் மிக அருகில் இருக்க, அதன் ஆக்ரோஷத்தைப் பார்த்த நேகா வீறிட்டாள்.

நந்தகிஷோர் அருகிலிருந்த மர நாற்காலியை கரடி மீது வீசி எறிந்தான். நாற்காலி மேலே பட்டதும் கரடி நேகாவை விட்டுவிட்டு நந்தகிஷோரை நோக்கி திரும்பியது. நந்தகிஷோர் திறந்திருந்த பால்கனியை குறி வைத்து ஓடினான்.



கரடி வேகத்துடன் அவனை துரத்தியது. நேகா பதற்றத்துடன் பின்னால் ஓடினாள்.

"கிஷோர்.... ஜாக்கிரதை... வேகமாகப் போ."

கரடியிடம் பிடிபடாமலிருக்க நந்தகிஷோர் இடதும், வலதுமாய் வளைந்து ஓடியபடியே கத்தினான். "நீ உள்ளே போ நேகா."

நேகா அவன் கத்தியதை காதில் வாங்காமல் பின் தொடர்ந்தாள். நந்தகிஷோர்.. கரடி... நேகா மூவரும் ஒருவர் பின் ஒருவராக ஓடிக் கொண்டிருந்தனர்.

"நேகா திரும்பிப் போ" நந்தகிஷோர் கத்தியபடியே பால்கனியிலிருந்து குதித்தான். கரடியும் அவனை நோக்கிப் பாயவே, கதறியபடி கீழே குதிக்க முற்பட்ட நேகாவின் புடவை ஜன்னல் கம்பியில் மாட்டிக் கொண்டு விடுபட மறுத்தது. புதிய புடவை என்பது அந்த சூழ்நிலையிலும் நினைவு வர நேகா அவசரமாய் புடவையை விடுவிக்கத் தொடங்கினாள்.

அந்த சில நிமிட இடைவேளையில் நந்தகிஷோர் வீட்டை சுற்றி ஓடி வாயிற்கதவு வழியாக உள்ளே நுழைந்து கதவை தாழிட்டான். கரடி மூடியிருந்த வாயிலிலிருந்து தோட்டத்தின் பக்கமாய் செல்வதைப் பார்த்த நேகா ஒரு வழியாய் புடவையை விடுவித்துக் கொண்டு பால்கனிக் கதவைத் தாழிட்டாள்.

"நீ சொல்வதைக் கேட்க மாட்டாயா நேகா? எதற்காக கரடியின் பின்னே ஓடி வந்தாய்? பின் பக்கம் அசைவு உணர்ந்து கரடி திரும்பியிருந்தால் என்ன நடந்திருக்கும் தெரியுமா? அதுவும் இந்த பால்கனியிலிருந்து குதித்தால் கீழே கிடக்கும் ஐஸ்சில் கால் முறிந்து போகும்" என்றான் நந்தகிஷோர் கடிந்து கொள்ளும் விதமாக.

''நீ குதிக்கும் போது உடையாத கால், நான் குதித்தால் மட்டும் உடைந்து விடுமா என்ன?''

''டோன்ட் பி புலீஷ். எனக்கு சிறு வயதிலிருந்து பழக்கம். விமானத்திலிருந்து அடிபடாமல் பனிமலைகளில் குதித்து வேலை பார்க்கும் அனுபவமும் பயிற்சியும் எனக்கிருக்கிறது. விஷயம் தெரியாமல் நீ என்னை பின் தொடர்வது ஆபத்தாக முடியும்.''

அவன் வார்த்தைகளிலிருந்த உண்மை உறைக்கவும் நேகா யோசனையின்றி சொன்னாள். ''உன்னை கரடி துரத்துவதைப் பார்த்ததும் நான் எதைப் பற்றியும் யோசிக்க மறந்து போனேன்.''

நந்தகிஷோர் கண்களில் வியப்புடன் அவளைப் பார்த்தான். ''உன்னையே மறந்து போகும் அளவுக்கு என் மீது அன்பிருக்கிறதா உனக்கு?''

அவன் குரல் மனதைத் தொட்டாலும் நேகா சமாளித்தபடி சொன்னாள்.

''கரடி என் மீது பாய வந்ததும் நீ ஓடி வரவில்லையா கிஷோர்? அது போலத்தான் இதுவும். ஒரே இடத்தில் வசிக்கும் இருவர் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்வது சகஜம்தான்!''

எதையோ எதிர்பார்த்து ஏமாந்தாற் போல் நந்தகிஷோர் அமைதியானான்.

''என்ன கிஷோர்?'' என நேகா அவன் முகத்தைப் பார்த்ததும், சிரித்தான்.

''எப்பவும் எதிலாவது சிக்கிக் கொள்வதே உனக்கு வழக்கமாக போய் விட்டது. ஆபத்தை வலிய வரவழைத்துக் கொள்வது.''



அவன் முடிக்கும் முன் நேகா குறுக்கிட்டாள்.''நானா கரடியை வீட்டிற்குள் அழைத்து வந்தேன்?''

''பின்பக்க கதவை மூடாமல் விட்டிருக்கிறாய். போதாதற்கு டஸ்ட் பேக்கை வெளியே வைத்திருக்கிறாய். டஸ்ட் பேக்கில் உணவுப் பொருளைத் தேடி வரும் கரடி திறந்திருந்த கதவின் வழியாக உள்ளே வராமல் என்ன செய்யும்?''

''என்னை குறை சொல்வதே உனக்கு வேலையாகி விட்டது'' என்றாள் நேகா.

''கவனக் குறைவாக இருப்பதே உனக்கு வேலையாகி விட்டது'' என்றான் நந்தகிஷோர்.

நேகா பேசாமல் இருக்கவே, வாடிய அவள் முகத்தைப் பார்த்த நந்தகிஷோர் சொன்னான். ''பல ஆயிரம் வருஷங்களாக இங்கு வாழ்ந்து பழகிய கரடிகளுக்கு அலாஸ்கா அவர்களது நாடு. வீடு, தோட்டம், ரோடு என்ற வித்தியாசம் எல்லாம் அவற்றிற்கு கிடையாது. நாம்தான் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.''

''நான் அலாஸ்கா பற்றிய படங்களில் வெள்ளைக் கரடிகளைத் தான் பார்த்திருக்கிறேன். இத்தனை பெரிய கரடியை இங்கு வந்த பிறகு தான் பார்க்கிறேன்'' என்றாள் நேகா.

''ஆமாம். அலாஸ்கா என்றதும் நினைவுக்கு வருவது வெண்நிற போலார் கரடிகள்தான். போலார் கரடிகள் ஆர்க்டிக் கடலை ஒட்டிய பனியில் மட்டுமே இருக்கும். ஊர் கோடியில் உள்ள காடுகளில், நதிக்கரைகளில் கறுப்புக் கரடியும், பிரவுன் கரடிகளான கிரிஸ் கரடிகளும் இருக்கும். அதனால் அவை அடிக்கடி ஊருக்குள் வரும்.''

"கரடி பொம்மையை கொஞ்சும் போது இருக்கும் மகிழ்ச்சி கரடியைப் பார்த்தால் இருப்பதில்லை" என்றாள் நேகா சிரிப்புடன்.

"கரடி மட்டுமல்ல. கரடி பொம்மை உருவானது கூட சுவாரஸ்யமானது தெரியுமா? ஒருமுறை அமெரிக்க ஜனாதிபதி தியோடர் ரூஸ்வெல்ட் கரடி வேட்டைக்கு போனார். ஒருநாள் முழுவதும் அலைந்து திரிந்தும் ஒரு கரடி கூட அவர் கண்ணில் படவில்லை. அவரின் ஏமாற்றத்தை சகிக்க இயலாத அவரது குழுவினர் ஒரு கரடியை கொண்டு வந்து மரத்தில் கட்டி அவரை சுட சொன்னார்கள். அவர் அதை சுட மனமில்லாமல் திரும்பி சென்றுவிட்டார். அதைக் கேட்டு மகிழ்ந்த மக்கள் அவரை பாராட்டும் விதமாக கரடி பொம்மை செய்து அதற்கு 'டெடி' என செல்லமாக பெயர் வைத்தார்கள். இன்று அமெரிக்காவில் டெபி பியர் வைத்து விளையாடாத குழந்தைகளே இல்லை."

"இந்தியாவிலும்தான்" என்றாள் நேகா.

அவளைப் பார்த்த நந்தகிஷோர் சின்ன சிரிப்புடன் சொன்னான்.

"இத்தனை அழகாய் தயாராகி கடைசியில் புடவையை தூக்கிப் பிடித்தபடி கரடி உன்னை ஓட வைத்துவிட்டது பார்! ஆனால் நேகா, கரடியைக் கண்டு நீ பயந்த அந்த நேரத்திலும் பளீரென்ற உன் அழகு என்னை ஒரு நிமிடம் திகைக்க வைத்தது. என்ன இருந்தாலும் இந்திய பெண்களின் நளினமும், மென்மையும் தனிதான். அதுவும் உன்னைப் போல் ஒரு அழகியை இதுவரை நான் பார்த்ததில்லை."



"ரொம்ப வழியாதே கிஷோர். எல்லா ஆண்களும், பெண்களிடம் இப்படித்தான் ஆரம்பிக்கிறார்கள்" என நேகா அவனை கேலி செய்த போதும் எதிர்பாராத புகழ்ச்சியில் மனம் துள்ளுவதை அவளால் தடுக்கவே முடியவில்லை.

நேகா அன்று பார்ட்டியில் உற்சாகத்துடன் இருந்தாள். யுனிவர்சிட்டி காம்பசிலிருந்து நிறைய பேர் வந்திருந்தார்கள். சொல்லி வைத்தாற் போல் எல்லோரும் நேகாவை புகழ்ந்து தள்ளினார்கள். மாதவி அன்று டீன் ஏஜ் பெண்ணைப் போல் இருந்தாள். லோ ஹிப்பில் இறங்கி இருந்த நெட் புடவையும், அபாயகரமான வளைவுகளுடன் கட் சோளியுமாய் வாய் நிறைய சிரிப்புடன் வளைய வந்தவளைப் பார்த்த நேகா அசந்து போனாள். இதற்காகவா புடவை அணிய வேண்டும் என்றாள்? ஒரு ஜீன்சை அணிந்திருந்தால் கூட பாந்தமாக இருந்திருக்கும் என்று தோன்றியது. ரங்காரெட்டி கையில் ஸ்காட்ச் பாட்டிலும் உதட்டில் மேம்போக்கான சிரிப்புமாக நின்றிருந்தார். மனைவியின் அதீத கவர்ச்சியையும், ஆண்கள் அவளை சுற்றி வருவதையும் அவர் பொருட்படுத்தவே இல்லை.

"மாதவி ரொம்ப பிஸி போலிருக்கிறதே!" என்றாள் நேகா தன்னையறியாமல்.

"ஆமாம், மாதவி எப்போதும் அப்படித்தான். அதுவும் இத்தனை அழகும் சாமர்த்தியமும் உள்ள பெண் வீட்டிற்குள் முடங்கி கிடக்க முடியுமா? அவள் பிஸியாக இருப்பதில் ஆச்சரியமே இல்லை"என்றார் ரங்காரெட்டி.

இதில் பெருமிதம் வேறா என்றிருந்தது நேகாவிற்கு.

ராபின் நேகாவைப் பார்த்ததும் அவள் அருகில் வந்தான். ''உங்கள் இந்திய உடைக்கு உள்ள கவர்ச்சி வேறு எதிலும் இல்லை நேகா. இங்கு வந்திருக்கும் பெண்கள் எல்லோரும் இந்த உடையில் எத்தனை அழகாக இருக்கிறார்கள்? அதுவும் மாதவியை 'சிம்பல் ஆப் செக்ஸ்' என்றே சொல்லலாம்,'' என்றான் ரசனையுடன்.

நேகா சங்கடத்துடன் சொன்னாள். ''உண்மையில் எங்களது புடவை மிக கண்ணியமானது ராபின். பார்ப்பவர்களுக்கு மரியாதையான தோற்றம் தருவது. இங்கே வசிப்பவர்கள் தங்கள் சுதந்திர மனப்பான்மையை வெளிப்படுத்தும் விதமாய் உடை அணிகிறார்கள். எனவே இவர்களை வைத்து உடையை மதிப்பிடாதே. ஒருமுறை இந்தியா போய்ப் பார். அல்லது இன்டர்நெட்டில் தேடிப்பார். பாரம்பரிய இந்திய பெண்கள் எப்படி உடையணிவார்கள் என்று.''

''அதற்கெல்லாம் அவசியமே இல்லை நேகா. உன்னை பார்த்தாலே போதும். ஒட்டு மொத்த இந்திய பெண்களின் அழகும் உன்னிடம் குவிந்திருக்கிறது'' என்றான் ராபின்.

நந்தகிஷோர் புகழ்ந்த போது துள்ளிய மனம் இப்போது கூசியது.

''ராபின் நான் வளர்ந்த சூழ்நிலையில் இது போல ஆண்கள், பெண்களிடம் பேசுவது வழக்கத்தில் இல்லை. அதனால் உன் பேச்சை என்னால் ரசிக்க முடியவில்லை. ஸாரி'' என்றாள் நேகா.

ராபினின் சிரிப்பு மறைந்து போய் முகம் இறுகியது.



அவனை கவனிக்காத நேகா மாதவியின் பெண் தர்ஷணாவைத் தேடிப் போனாள். தர்ஷணா ஹாலின் ஓரமாக எனக்கும் இந்த விருந்திற்கும் சம்பந்தம் இல்லை என்பது போல் அமர்ந்திருந்தாள். பால் போன்ற சருமமும், ப்ரௌன் நிற பட்டு கூந்தலும், ''ஹாய் அக்கா'' என்ற போது பளீரிட்ட பச்சரிசி பற்களும் மனதை மயக்கின. மாதவிக்கு இத்தனை அழகான பெண்ணா, என எப்போதும் ஏற்படும் பிரமிப்பு இப்போதும் ஏற்பட்டது. உல்லாசமாய் பொழுதை கழிக்க விழையும் மாதவிக்கும், ஆழமான கருத்துக்கள் ஏதுமில்லாத ரங்கா ரெட்டிக்கும் தங்களுக்கு கிடைத்திருக்கும் பொக்கிஷத்தின் அருமை தெரியுமா?'' என்ற எண்ணம் எழுந்தது.

''வாவ்! தர்ஷணா யு லுக் வெரி ஸ்வீட். அழகான பளிங்கு சிலையைப் போல் இருக்கிறாய்'' என்றாள் நேகா அவள் கன்னங்களை வருடி.

''நீங்கள் கூட என்னை வெறும் சிலையாகத்தான் நினைக்கிறீர்களா அக்கா? ஆனால் நான் கல் அல்ல. உடலும் உணர்ச்சிகளும் உள்ள மனுஷி. எனக்கும் துக்கமும், வருத்தங்களும், ஏக்கங்களும் உண்டு'' என்றாள் தர்ஷணா வரண்ட குரலில்.

ஒரு நிமிடம் திகைத்த நேகா சிரித்தபடி அவள் கைகளைப் பற்றினாள்.

''உனக்கு வயது பதினைந்துதான் தர்ஷணா. பேச்சைப் பார்த்தால் நூத்துக் கிழவியாட்டம் இருக்கு.''

''எனக்கே அப்படித்தான் இருக்கு அக்கா. எங்கம்மாவுக்கு பதினைந்து வயசுன்னும், எனக்கு நூறு வயசுன்னும் பிரேமை ஏற்படுது.''

"ஓ காட். உனக்கு எதற்கு இப்படிப்பட்ட சிந்தனைகள்? உன் வயது தோழிகள் யாரும் வரவில்லையா இங்கு?"

"எனக்கு தோழிகளே கிடையாது அக்கா. பள்ளியில் என்னுடன் படிக்கும் பெண்களின் பேச்சில் எனக்கு ஈடுபாடே ஏற்படுவதில்லை. ஆண் சிநேகிதர்களையும், தங்கள் காதலையும் பற்றி அவர்கள் பேசும்போது வெறுப்பு தான் வருகிறது."

தர்ஷணாவின் பார்வை தொலைவில் நிலைத்திருந்தது. நேகா அவள் பார்வை சென்ற இடத்தைப் பார்த்தாள். மாதவி உயரமும் பருமனுமாய் இருந்த ஒருவனின் தோளைத் தட்டி சிரித்துக் கொண்டிருந்தாள்.

உடல் குலுங்க சிரித்ததில் சேலை ஒரு புறம் விலகியிருந்தது. நேகா அவசரமாக தர்ஷணாவின் கைகளைப் பற்றி எழுப்பினாள்.

"எனக்கு உன் அறையை காண்பி தர்ஷணா. நான் பார்த்ததே இல்லை."

"வாங்க போகலாம்" தர்ஷணா உடனே எழுந்தாள்.

இருவரும் படியேறி மேலே வந்தபோது அங்கே யாருடனோ பேசிக் கொண்டிருந்த நந்தகிஷோர் இவர்களைப் பார்த்து கையசைத்தான்.

தர்ஷணாவின் அருகில் வந்து "யு லுக் ப்ரெட்டி டுடே" என்றான் வாஞ்சையுடன்.

தர்ஷணா ஒரு அலட்சியத்துடன் தோள்களை குலுக்கினாள். "என் அறைக்கு வருகிறீர்களா அங்கிள்?" என்று அவள் முன்னே நடக்கவும் இருவரும் பின்தொடர்ந்தனர்.



தர்ஷணா அவளது அறையை விதவிதமான ஓவியங்களால் அலங்கரித்திருந்தாள். சுவர் அலமாரிகள் முழுக்க புத்தகங்கள் நிறைந்திருந்தன. அறை நறுவிசாக இருந்தது. பொருட்கள் அழகாக அடுக்கப்பட்டிருந்தன.

"உன்னை சின்னப் பெண் என்று நினைத்தேன். எத்தனை அழகாக உன் பொருட்களை வைத்திருக்கிறாய்?" என்றாள் நேகா பாராட்டுதலாக.

"ஆமாம் தர்ஷணா. நேகாவை விட நீ எவ்வளவோ தேவலாம். ஒரு விடுமுறை நாளில் எங்கள் வீட்டிற்கு வந்து பார். நேகாவின் லட்சணம் தெரியும்" என்றான் நந்தகிஷோர்.

"என்னைப் பற்றி நீ பேசாதே. சாப்பிட்ட பிளேட்டை கழுவி வைக்காத சோம்பேறி நீ. நீ என்னின குறை சொல்கிறாயா?" என்றாள் நேகா கோபத்துடன்.

"நீ இருக்கையில் நான் எதற்காக ப்ளேட்டை கழுவ வேண்டும்?"

"நான் உன் வேலைக்காரியா என்ன? உன் தட்டை கழுவித் துடைப்பது தான் என் வேலையா?"

"பின்னே, இத்தனை நாளாய் அந்த வேலையை நீ தானே செய்கிறாய்! பிறகு வேலைக்காரி இல்லாமல் வேறு யாராம்?"

"உன் மனதில் இத்தனை கெட்ட எண்ணம் இருப்பது இத்தனை நாள் தெரியாமல் போயிற்று. இனி பார்க்கலாம். நான் எந்த வேலையும் செய்யப் போவதில்லை."

"நீ செய்யாவிட்டால் எல்லாம் அப்படியே நின்று விடுமா? போடீ... போ..."

''நீ போடா.''

''நீ, போடீ முதலில்.''

''நீதான் இரண்டாவதாய் இங்கே வந்தாய். அதனால் நீயே முதலில் போ.''

''நான்தான் இந்த வீட்டிற்கே உன்னை அழைத்து வந்தேன். அதனால் நீதான் முதலில் போக வேண்டும்.''

தர்ஷணா கைகளைத் தட்டி கலகலவென சிரித்தாள். ''இருவரும் சின்ன பிள்ளைகள் மாதிரி சண்டை போடுகிறீர்களே!''

''ஆமாம். தர்ஷணா, நீ இருப்பதால் சண்டை இத்துடன் நின்றது. இல்லை என்றால் அடி விழுந்திருக்கும்'' என்றான் நந்தகிஷோர்.

''ஆமாம். நான் அடிக்கிற அடியில் கிஷோரின் முகம் வீங்கியிருக்கும்'' என்றாள் நேகா.

''நிஜமாக அடிப்பாயா என்ன? எங்கே தைரியமிருந்தால் அடி பார்க்கலாம்'' என்றான் நந்தகிஷோர் சட்டையை மடக்கியபடி.

''எனக்கென்ன பயம்? நீ பயந்து ஓடாமல் இருந்தால் சரி.'' நேகா சேலை முந்தானையை இழுத்து இடுப்பில் சொருகினாள்.

''ஸ்டாப்.. ஸ்டாப்...'' தர்ஷணா குறுக்கே வந்து நின்றாள். ''உங்கள் அடிதடி சண்டையை வீட்டில் வைத்துக் கொள்ளுங்கள். இப்போது ஏதாவது விளையாடலாம்.''

''சரி. ஓடி பிடித்து விளையாடலாம்'' என்றான் நந்தகிஷோர்.



தர்ஷணாவுடன் நந்தகிஷோர் ஓடி ஒளிந்து நேகாவை வேண்டுமென்றே அலைய விட்டான். பிடிபடுவது போல பாவனை செய்து தர்ஷணாவை சிரிக்க வைத்தான். அவள் வரைந்திருந்த ஓவியங்களை பாராட்டி அவள் முகத்தை மலர வைத்த பின் இருவரும் கிளம்பினார்கள்.

''அக்கா, அங்கிள் இருவரும் அடிக்கடி வர வேண்டும்'' என்ற உறுதிமொழியைப் பெற்றுக் கொண்டு தர்ஷணா அவர்களுக்கு விடை கொடுத்தாள்.

மாதவி, நேகாவின் தோளை அணைத்து கையசைத்தவள், நந்தகிஷோரையும் இறுக அணைத்து ''நீங்கள் வந்ததில் மிகவும் மகிழ்ச்சி'' என்றாள் மிகையான சிரிப்புடன்.

நேகாவின் முகம் கடுத்ததை கண்ட நந்தகிஷோர், மாதவியின் பற்றிய கைகளை விடாமலே பேசத் தொடங்கினான். ரங்காரெட்டி தன் வழக்கமான மெத்தென சிரிப்புடன் நின்றிருப்பதைக் கண்ட நேகாவிற்கு அவர் கன்னத்தில் ஓங்கி அறைந்தால் என்ன என்று தோன்றியது.

வீடு திரும்புகையில் நந்தகிஷோர் விசிலடித்த படியே காரை ஓட்டிக் கொண்டிருந்தான். ''ரொம்ப உற்சாகமாய் இருக்கிறாய் போலிருக்கிறதே!'' என்றாள் நேகா அவனிடம்.

''ஆமாம். அத்தனை அழகான பெண்களை ஒரே இடத்தில் சந்தித்தால் எப்படி உற்சாகம் ஏற்படாமல் இருக்கும்?''

''ஆமாமாம். அந்த உற்சாகம் மிதமிஞ்சி போய் மாதவியின் கணவன் எதிரிலேயே அவளிடம் வழிந்ததை பார்த்துக் கொண்டு தானே இருந்தேன்!''

''நான் என்ன செய்யட்டும்? மாதவி என் கைகளை விடவே இல்லை. என் பர்சனாலிட்டி அப்படி. பார்க்கிறவர்களை எல்லாம்...''

நேகா அவன் பேச்சை கவனிக்காமல் ஏதோ சிந்தனையில் இருக்கவும், ''என்ன விஷயம் நேகா? மாதவியைப் பார்த்து பொறாமையா?'' என அவளை சீண்டினான் நந்தகிஷோர்.

''இல்லை. நான் தர்ஷணாவை நினைத்துக் கொண்டிருந்தேன்'' என்றாள் நேகா.

''ரொம்ப அழகான பெண் இல்லையா? எனக்கு அவளைப் பார்க்கிற போதெல்லாம் பரிசுத்தமான தேவதையைப் பார்க்கிறாற் போல் இருக்கும். என் சொந்த குழந்தையை பார்க்கிற மாதிரி தோன்றும்.''

நேகா வியப்புடன் அவனைப் பார்த்தாள். கல்யாணமே செய்து கொள்ள போவதில்லை என்றவன் குழந்தையைப் பற்றி பேசுவது ஆச்சரியமாக இருந்தது.

வீடு வந்து விடவே காரை விட்டிறங்கி ரிமோட் கன்ட்ரோல் மூலம் உள் விளக்குகளையும், ஹீட்டரையும் ஆன் செய்துவிட்டு கதவைத் திறந்த படியே நந்தகிஷோர் தொடர்ந்து பேசினான். ''தர்ஷணாவை குழந்தையிலிருந்தே எனக்கு தெரியும் நேகா. கொழுகொழுவென ரொம்ப அழகாக இருப்பாள். அவளை பார்ப்பதற்காகவே ரங்காரெட்டி வீட்டு பார்ட்டிகளுக்கெல்லாம் போவேன். சில சமயம் என்னுடன் இங்கே வரும்போது பூஜா,



அம்மா, அப்பா எல்லோரும் அவளை திரும்பி போக விடவே மாட்டார்கள். தர்ஷணாவும் எல்லோரையும் விட என்னிடம் பிரியமாக இருப்பாள்.''

''உனக்கு குழந்தைகள் என்றால் மிகவும் பிடிக்குமா கிஷோர்?'' என்றாள் நேகா.

''பிடிக்குமாவா? எனக்கு குழந்தைகள் என்றால் உயிர் நேகா. அது எந்த குழந்தையாக இருந்தாலும் சரி. இங்கே பனி உறைந்து கிடக்கும் ஆர்க்டிக் பெருங்கடலுக்கு அருகே 'பாரோ' என்னுமிடம் இருக்கிறது. அந்த இடம் தான் அலாஸ்காவின் உச்சி. அங்கிருக்கும் பனி கடுமையான சம்மரில் கூட கரையாது. மரம் செடி கொடிகள் எதுவுமே அங்கு வளராது. அங்கும் கூட எஸ்கிமோ மக்கள் வசிக்கும் சிறிய கிராமங்கள் இருக்கின்றன. இங்கு பனிமலைகளுக்கு நடுவே எரிமலைகளும் உண்டு இல்லையா? ஒரு முறை பாரோவுக்கு அருகே இருந்த ஒரு எரிமலை வெடிக்கும் தருவாயில் இருந்தபோது அங்கிருந்த மக்களை வேறு இடத்திற்கு அழைத்துச் செல்லும் முயற்சியில் என்னைப் போன்ற புஷ் விமானிகள் ஈடுபட்டிருந்தார்கள். அநேகமாக எல்லோரையும் வெளியேற்றி விட்டு நாங்கள் கிளம்பும் சமயம் எரிமலையிலிருந்து புகையும் தூசியும் கிளம்பி எங்கள் வழியை மறைத்தன. சிரமத்துடன் நான் மேலே எழும்ப முயற்சிக்கையில் என் எதிரே மூன்று வயது மதிக்கத்தக்க குழந்தை அழுதபடி ஓடிக் கொண்டிருந்தது. நான் திடுக்கிட்டுப் போனேன். நூல் ஏணியையோ, கயிறையோ போட்டால் குழந்தைக்கு அதை பிடித்துக் கொள்ளத் தெரியாது. யாராவது இறங்கிப் போய்தான் மீட்க வேண்டும். என்னுடன் வந்தவர்கள் கிளம்பி விட்ட

நிலையில் ஒரு நிமிடம் செய்வதறியாது நின்றேன். பின் சேட்டிலைட் போன் மூலம் கட்டுப்பாட்டு அறையை தொடர்பு கொண்டபோது எரிமலை வெடிக்கத் தொடங்கி விட்டதால் யாரையும் அனுப்ப இயலாது என்றும் என்னை விரைவில் திரும்பி வந்துவிடும் படியும் கூறினார்கள்.

அவர்கள் சொன்னது நியாயம் என்பது புரிந்தாலும் என் கண்முன்னே பயத்துடன் கதறிய குழந்தையை என்னால் விட முடியவில்லை. புத்திக்கும் மனசுக்கும் அன்று நடந்த போராட்டத்தில் இறுதியில் மனசே வென்றது. எனவே விமானத்திலிருந்து கயிறை என்னுடன் பிணைத்துக் கொண்டு விமானத்திலிருந்து இறங்கினேன். இறங்கியதும் குழந்தை எங்கே இருக்கிறது என்றே தெரியவில்லை. என் தலையில் மாட்டியிருந்த பாட்டரியின் வெளிச்சம் மிக மங்கலாக இருந்தது. பனி மீது சாம்பல் மூட ஆரம்பித்திருந்தது. என்னால் வெகு நேரம் தேட முடியவில்லை. விமானத்தின் எரிபொருள் தீரும் அபாயம் இருந்தது.

சோர்வுடன் போகலாம் என்று திரும்பிய போது எனக்கு வெகு சமீபத்தில் குழந்தையின் அழுகுரல் கேட்டது. தேடிப் பார்த்தபோது குழந்தை கீழே விழுந்து கிடந்தது. பாய்ந்து சென்று தூக்கிக் கொண்டு நொடியும் தாமதிக்காமல் விமானத்தை நோக்கி விரைந்தேன்.

புகையில் போராடி விமானத்தை செலுத்தி தரையிறங்கியதும், விமானத்தில் சீட்டில் தூங்கிப் போயிருந்த குழந்தை விழித்துக் கொண்டு என்னை பார்த்த பயத்தில் முன்பை விட அதிகமாக கத்த ஆரம்பித்து விட்டான்."



நந்தகிஷோர் வாய்விட்டு சிரிக்கவும், நேகா அந்த சிரிப்பை ரசித்தபடியே சொன்னாள். "நீதான் ரியல் ஹீரோ கிஷோர். அப்புறம் குழந்தை என்னவாயிற்று?"

"அப்புறம் என்ன? கேம்ப்பில் தங்க வைக்கப்பட்டிருந்த அதன் பெற்றோரிடம் கொடுக்க அவர்களுக்கு ரொம்ப சந்தோஷம்."

"அதன் பிறகு?"

"இதென்ன சினிமாவா நேகா? பிறகு டான்ஸ் ஆடி பாட்டு பாடுவதற்கு" என்றான் நந்தகிஷோர்.

"இத்தனை சாகசம் செய்திருக்கிறாயே. உனக்கு அவார்ட் எதுவும் கிடைக்கவில்லையா?" என்றாள் நேகா.

"இது என்னுடைய கடமை. கடமையை செய்ததற்கு யாராவது அவார்ட் கொடுப்பார்களா?" என்றான் நந்தகிஷோர்.

"கடமை என்றாலும் உயிரை பணயம் வைக்கும் துணிச்சல் எத்தனை பேருக்கு இருக்கும்? எங்கள் நாட்டில் என்றால் நிச்சயம் விருது கிடைத்திருக்கும்."

"கடமையை செய்வதற்கே லஞ்சம் வாங்கும் நபர்களுக்கு நடுவே ஒருவன் ஒழுங்காக வேலை பார்த்தால் அவனை பாராட்டுவது சகஜம்தான். ஆனால் எல்லோரும் நேர்மையாக இருக்கும் இடத்தில் அது சாத்தியம் இல்லை."

நந்தகிஷோரின் வார்த்தைகள் நேகாவை சுரீலென தைத்தன. அவன் சொன்னதில் உண்மை இருந்தாலும், அந்நிய தேசத்தில் இருந்து கொண்டு அவன் சொன்னது அவளுக்குள் அவமான உணர்வை ஏற்படுத்தியது.

''இந்தியா போன்ற தொன்மையான கலாச்சாரமும், வலிமையான இளைஞர் கூட்டமும், சகிப்பு தன்மையும் உடைய பெரிய நாட்டில் ஒரு சில பலவீனங்களும் இருக்கத்தான் செய்யும். ஒருமுறை கூட இந்தியா வந்திராத நீ அதை விமர்சிப்பது சரியல்ல'' என்றாள் படபடப்பாக.

வியப்புடன் அவளைப் பார்த்த நந்தகிஷோர் மென்மையாக புன்னகைத்தான். ''நான் பிறந்தது இங்கேதான் என்றாலும் என் பெற்றோர்கள் இந்தியர்கள் நேகா. நான் எப்படி இந்தியாவைப் பற்றி தவறாக பேச முடியும்? யதார்த்தமான விஷயத்தை சொன்னேன். நீ விரும்பவில்லை எனில் இனி இதுபோன்ற விஷயங்களை நாம் பேச வேண்டாம். சரியா?''

நந்தகிஷோர் பதிலுக்கு வாதாடாமல், நான் உண்மையைத் தானே சொன்னேன் என்று உதாரணங்கள் சொல்லாமல் உடனடியாக தழைந்து போனது அவளுக்குள் ஒரு கூச்சத்தை ஏற்படுத்தியது. தன் கூச்சத்தை மறைக்க பேச்சை ஆரம்பித்த இடத்திலிருந்து தொடர்ந்தாள்.

''குழந்தைகள் பரிசுத்தமானவர்கள் கிஷோர். அன்பு காட்டும் இடத்தில் பேதமின்றி ஒட்டிக் கொள்வார்கள். ஆனால் நீ குழந்தைகள் மீது பிரியம் வைத்திருப்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது.''

''ஏன்? என்னைப் பார்த்தால் அன்பு செலுத்தத் தெரியாத காட்டுமிராண்டி போலவா இருக்கிறது?''

''நீ மிகவும் அன்பானவன்தான் கிஷோர். அதே சமயம் சுதந்திரமானவனும் கூட. உனக்கென்று ஒரு குழந்தை பிறந்தால்...''



நேகா முடிக்கும் முன் நந்தகிஷோர் தொடர்ந்தான். ''பிறந்தால்.. தர்ஷணாவைப் போல் இருப்பாள். மென்மையும், பரிசுத்தமுமாக. ஏன் அவளை விட அழகாக கூட இருக்கலாம்.'' கண்களில் கனவுடன் தொடர்ந்தான். ''அதுவும் உன்னைப் போல் அழகான கண்களும், செதுக்கின மூக்கும், ரோஜா இதழ்களும் இருந்தால் போதும். நெற்றியும் புருவமும் என்னைப் போல் இருந்தால் கம்பீரமாக தெரியக் கூடும். அப்படி ஒரு குழந்தை எதிரில் இருந்தால்...'' நந்தகிஷோர் தன் கற்பனை குழந்தையில் மூழ்கியிருக்க, நேகாவுக்கு தூக்கிவாரிப் போட்டது. இவனுடைய குழந்தையிடம் என் சாயலை எப்படி எதிர்பார்க்கத் தோன்றியது? சொல்வதை உணர்ந்து தான் சொல்கிறானா? மனதில் ஏதேதோ எண்ணங்கள் எழ உன் வார்த்தைகளின் அர்த்தம் தெரியுமா உனக்கு? என அவனைப் பிடித்து உலுக்க வேண்டும் போலிருந்தது.

## 11



மாதவியின் பர்த்டே பார்ட்டிக்கு பிறகு தர்ஷணா அடிக்கடி நேகாவுடன் டெலிபோனில் பேசினாள். இரண்டொருமுறை நந்தகிஷோருடன் வீட்டிற்கும் வந்திருந்தாள். ''எனக்கு வீட்டில் போரடிக்கிறது. தனிமையில் பயமாக இருக்கிறது'' என்றாள் அடிக்கடி.

''மாதவி வீட்டில் இல்லையா?'' என்றாள் நேகா.

''அம்மா அடிக்கடி பார்ட்டி என்று போய் விடுவாள். அப்பா பல சமயம் வேலை விஷயமாக வெளியே போய் இருப்பார். எப்போதாவது வீட்டில் இருக்கும் சமயமும் அம்மா அவரை வற்புறுத்தி பார்ட்டிக்கு அழைத்துப் போய் விடுவாள்.''

''நீயும் அவர்களுடன் போக வேண்டியதுதானே தர்ஷணா? உன்னை அழைத்துப் போக மாட்டார்களா என்ன?''

''ஐ ஹேட் தட் பார்ட்டீஸ்'' தர்ஷணா வெறுப்புடன் தோள்களைக் குலுக்கினாள்.

''அம்மா என்னை வற்புறுத்தி பார்ட்டிக்கு அழைப்பாள். போக மறுக்கும்போது அடிக்கக்கூட செய்வாள். என்னை ஷோகேஸ் பொம்மையாய் அலங்கரிப்பாள். என்னிடம் அழகான பொம்மை இருக்கிறது பார் என காண்பித்துக் கொள்வதில் அவளுக்கு ஆசை அதிகம்.''

''தர்ஷணா யு வா க்ருயல். பெண்ணின் அழகைப் பார்த்து அம்மாக்கள் கர்வப்படுவது இயற்கை. உன் பெண்ணை பார், என பிறர் பாராட்டும் போது மகிழ்ச்சி ஏற்படத்தான் செய்யும்.''

எல்லோரும் உள்ளுக்குள் மகிழ்ந்து போவார்கள் அக்கா. ஆனால் என் அம்மா என்னை கடைப்பொருளைப் போல் விளம்பரப் படுத்துகிறாள். எனக்கு அது பிடிக்கவில்லை. அவளுடன் செல்லும்போது அங்கிருக்கும் ஆண்கள் 'ஸ்வீட் கேர்ள்' என்று என் கன்னத்தைத் தட்டுவார்கள். ''மாதவி உன் பெண் அழகாக இருக்கிறாள்'' என தோளைத் தடவுவார்கள். எனக்கு அருவெறுப்பாக இருக்கும்.''



மாதவி பார்ட்டிகளில் ஸ்காட்ச் டம்ளருடன் ஆண்களின் தோளை உரசியபடி நின்றிருந்தது நேகாவுக்கு நினைவுக்கு வந்தது. அவள் பெண்ணுக்கு இத்தனை துல்லியமான உணர்வா என்ற ஆச்சரியம் ஏற்பட்டது.

தர்ஷணாவை சமாதானப்படுத்தும் விதமாய் நேகா சொன்னாள்.

''ஆண் பெண் வித்தியாசமின்றி இங்கு பழகுவதை உன் சிறு வயதிலிருந்து நீயே பார்த்திருப்பாய். இதில் உன் அம்மாவை மட்டும் எப்படி குற்றம் சொல்ல முடியும்?''

''அக்கா உண்மையில் என்னுடன் படிக்கும் மாணவர்களின் பெற்றோரும் பார்ட்டிக்குப் போகிறார்கள். ட்ரிங் பண்ணுகிறார்கள். கடுமையாய் வேலை பார்க்கிறார்கள். அதே சமயம் குடும்பத்திற்கென தனியாய் நேரம் ஒதுக்கி அந்த நேரத்தில் எத்தனை முக்கியமான வேலைகள் இருந்தாலும் தவிர்த்துவிட்டு தங்கள் குடும்பத்துடன் மட்டுமே செலவிடுகிறார்கள். வெளிநாட்டில் வேலை பார்க்க வந்து விட்டதாலேயே அவர்களது உடைகளையும், கலாச்சாரத்தையும் பின்பற்றும் என் அம்மா போன்றவர்கள், அவர்கள் செய்யும் கடமையை மட்டும் ஒழுங்காகச் செய்வதில்லை.''

தர்ஷணா யோசனையுடன் தலை குனிந்து அமர்ந்திருந்தாள். அந்த பளிங்கு முகத்தில் தெரிந்த வேதனையைக் கண்ட நேகா துணுக்குற்றாள்.

''தர்ஷணா'' என்றாள் அவள் தோள்களைப் பற்றி.

தர்ஷணா தன்னை சமாளித்துக் கொண்டு புன்னகைத்தாள். ''நான் கிளம்புகிறேன் அக்கா. அடிக்கடி வீட்டிற்கு

வந்து போய்க் கொண்டிருங்கள். பை'' என வீட்டிற்குக் கிளம்பிப் போனாள்.

தர்ஷணாவின் வாடிய முகம் மனதைத் தொட, நந்தகிஷோர் வந்ததும் அவனிடம் சொன்னபோது, ''குளிர் காலத்தில் இதுபோல டிப்ரஷன் வருவது சகஜம்தான்'' என்றான் அவன் சாதாரணமாக. ''மாதக் கணக்கில் வீட்டை விட்டு வெளியே செல்ல முடியாமல் அலுவலகம், வீடு என தினமும் செய்த வேலைகளையே திரும்பத் திரும்பச் செய்வதால் வாழ்க்கை இயந்திரத் தனமாகத் தோன்றும்.

சூரிய ஒளியில் கிடைக்கும் எனர்ஜியும் கிடைக்காமல் மனச்சோர்வு ஏற்படும். இதை 'கேபின் பீவர்' என்பார்கள். இங்கு குளிர் காலத்தில்தான் பல சண்டைகளும், கொலை களும், தற்கொலைகளும் நடக்கின்றன. மாதவியும் டிப்ரஷனிலிருந்து விடுபடத்தான் பொழுது போக்கு களில் ஈடுபடுகிறாள். தர்ஷணாவுக்கு அதில் பிரியம் இல்லை என்றால் தனக்குப் பிடித்த வேலை எதிலாவது கவனத்தைச் செலுத்த வேண்டும். அல்லது தினமும் இரண்டு மணி நேரமாவது லைட்டை எரிய விட்டு விஷயத்தை மிக லேசாக எடுத்துக் கொள்கிறான் என்று தோன்றியது.'' ''டீன் ஏஜ் ஆரம்பத்தில் இருக்கும் பெண் ணுக்கு இந்த வயதில் தாயின் கண்காணிப்பும் அரவணைப் பும் முக்கியம் இல்லையா கிஷோர்?''

''மனிதர்கள் தனித்தன்மை வாய்ந்தவர்கள் நேகா. கல்வியும், சமூக அறிவும், படிக்கும்போதே வேலை பார்ப்பதால் கிடைக்கும் வருவாயும் அவர்களைச் சுதந்திர மனிதர்களாக்குகின்றன. கைதிகளைத்தான் பின் தொட



ரவும் கண்காணிக்கவும் செய்வார்கள். மனிதர்களுக்கு அது அவசியம் இல்லை.''

மாதவியின் மனப்போக்கும், நந்தகிஷோர் எண்ணங் களுக்கும் அதிக வித்தியாசம் இல்லை என்பதால் மேற்கொண்டு என்ன பேசுவதெனப் புரியாமல் நேகா அமைதியானாள்.

நேகா அன்று வகுப்பு முடிந்து வருகையில் அவள் அருகே வந்த ராபின் ''உங்கள் ஸ்டூடன்ட்ஸ் இப் போதெல்லாம் வகுப்புக்குச் சரியாக வருவதில்லை போலிருக்கிறதே!'' என்றான் அவளிடம்.

''இதோ என் ஸ்டூடன்ட்ஸ்'' என வகுப்பறையிலிருந்து வெளியே வருபவர்களை நேகா காண்பித்ததும், ''இவர்கள் இல்லை. உங்களிடம் ஸ்பெஷலாக ட்யூஷன் படிக்க வருபவர்கள்'' என்றான் ராபின்.

அப்போதுதான் பிருஸாவும், பெர்டினின்னும் க்ளாசுக் கும், ட்யூஷனுக்கும் சில நாட்களாய் வருவதில்லை என்பது நேகாவிற்கு நினைவு வந்தது.

ஏன் வரவில்லை? உடல்நிலை சரியில்லாமல் போயிருக்கக் கூடுமோ என்ற யோசனைகளுடே இவன் இதை கவனித்துக் கேட்பதும் ஆச்சரியமாக இருந்தது.

''தெரியவில்லை ராபின். ஒருவேளை அவர்கள் இடத் திலிருந்து இங்கு வரும் பாதையை பனி மூடியிருக் குமோ என்னவோ?''

''நல்ல ஜோக்'' ராபின் சிரித்தான். ''பனியிலேயே வீடுகட்டி குடி இருப்பவர்கள் பாதையை மூடியிருக்கும் பனிக்கு பயப்படுவார்களா என்ன?''

''அதுவும் சரிதான். நீ நினைவு படுத்தியதற்கு நன்றி. நான் விசாரித்துக் கொள்கிறேன்'' என்ற நேகா, அங்கே வந்த ஜெயதேவ்வைப் பார்த்ததும் ''உங்கள் மனைவி எப்படியிருக்கிறார்கள் ஜெயதேவ்? ஒரு வழியாய் இங்கு வருவதற்கு ஒத்துக் கொண்டார்களா?'' என்றாள் நேகா.

நேகாவுடன் சேர்ந்து நடந்தபடியே ஜெயதேவ் ''ஆமாம்'' என்றான் ஜெயதேவ் முகம் மலர.

''ஆனால் கோடையில்தான் அழைத்து வருவேன். இப்போது வந்தால் இந்த குளிரைப் பார்த்து பயந்து போவாள்.''

''ஆனால் கோடைக்காலம் நான்கு மாதம்தான். மீண்டும் இதே குளிரும் இருளும் வரத்தான் செய்யும் ஜெயதேவ்.''

''உண்மைதான். ஆனால் அதற்குள் அவள் சமாளித்துக் கொள்வாள் என்ற நம்பிக்கை இருக்கிறது. என்னுடன் குவார்ட்டர்ஸ் வருகிறீர்களா நேகா? ஒரு டீ சாப்பிடலாம்'' என்றான் ஜெயதேவ்.

அந்த அழைப்பை மறுக்க இயலாமல் நேகா யுனிவர்சிட்டி காம்பசிலிருந்த ஜெயதேவ்வின் குவார்ட்டர்சிற்குச் சென்றாள். அவனது அறை மிக சுத்தமாக இருந்தது. பொருட்கள் அழகாக அதனதன் இடத்தில் இருந்தன. அலமாரி ஹேங்கர்களில் அயர்ன் செய்யப்பட்ட சட்டைகள் வரிசை மாறாமல் தொங்கின. எலெக்ட்ரிக் அடுப்பின் அருகே பாத்திரங்கள் கழுவி துடைத்து வைக்கப்பட்டிருந்தன.

''வாவ்! இது பேச்சிலர் அறை போலவே இல்லை. நான் கூட இங்கே தங்கியிருந்த போது இத்தனை



அழகாய் வைத்துக் கொண்டதில்லை'' என்றாள் நேகா பாராட்டாக.

ஜெயதேவ் பெருமையுடன் சிரித்தபடி நிமிஷத்தில் டீயும் வெங்காய பகோடாவும் தயார் செய்தான். நேகாவின் முகத்தில் தெரிந்த வியப்பைப் பார்த்ததும் ''மாவு எல்லாம் ஊரிலிருந்தே கொண்டு வந்தேன். ஊரிலிருந்து வரும்போது சாம்பார் பொடி, ரசப் பொடி, மசாலாப் பொருட்கள்தான் என் பெட்டி நிறைய இருந்தன. தொடர்ந்து இரண்டு நாள் என்னால் இந்த ப்ரெட்டையும் சீஸையும் சாப்பிட முடியாது. நான் நன்றாக சமைப்பேன். ஒரு நாள் என் சமையலைச் சாப்பிட்டு பாருங்கள்'' என்றான் ஜெயதேவ்.

பகோடாவும் டீயும் மிகவும் சுவையாக இருந்தது. அந்த உணவிலும், வீட்டிலும் ஒரு இந்திய நடுத்தர குடும்பத்தின் சாயல் அப்பட்டமாக தெரிந்தது. உலகின் எல்லைக்கே வந்திருந்த போதும் தன் பழக்கங்களை விட்டுக் கொடுக்காத ஜெயதேவ்வின் மனோபாவம் ஆச்சரியமாக இருந்தது. இவன் அடிக்கடி குடும்பத்தைப் பற்றி புலம்பினாலும் இவனது வயிற்றுப் பசிக்கோ குடும்பத்தைப் பராமரிக்கவோ மனைவி தேவையில்லை என்று தோன்றியது. அதை அவனிடம் சொன்னபோது, ''உண்மைதான். வீட்டைப் பராமரிக்க மனைவி தேவையில்லைதான். ஆனால் என் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள, நான் வரும் நேரம் எனக்காக வீட்டில் காத்திருக்க ஒரு ஆள் வேண்டும். அது மனதிற்கு புதிய தெம்பைக் கொடுக்கும்.''

பொதுவாக சில நிமிடங்கள் பேசிக் கொண்டிருந்துவிட்டு கிளம்புகையில் ஜெயதேவ் கேட்டான். ''உங்கள்

பெற்றோர் எங்கே இருக்கிறார்கள் நேகா? உங்களை எப்படி இத்தனை தொலைவு தனியாக வேலை பார்க்க அனுப்பி வைத்தார்கள்?''

ஒருவேளை அம்மாவும் அப்பாவும் பிரிந்து போகாமல் இருந்திருந்தால் நிச்சயம் என்னை இங்கு அனுப்பி யிருக்க மாட்டார்களாய் இருக்கும். இப்போது நான் அவர்களுக்கு வேண்டாத குப்பை. அது குப்பை கூடை யில் கிடந்தாலும் ஆடோ மாடோ மேய்ந்து விட்டுப் போனாலும் அவர்களுக்குக் கவலை இல்லை.

''எனக்கு பெற்றோர்கள் இல்லை ஜெயதேவ். சிறு வயதில் பாட்டி வீட்டில் வளர்ந்தேன். நான் கல்லூரி வருவதற்குள் பாட்டியும் போய் விட்டாள். பிறகு உதவித் தொகையில் படித்தேன்'' என்றாள் நேகா சாதாரணமான குரலில்.

''ஐ யம் ஸாரி நேகா. நான் இதை எதிர்பார்க்கவில்லை. வெல். பெற்றோர்களைப் பறித்துக் கொண்டாலும் கடவுள் உனக்குப் படிப்பையும், அழகையும், சொந்தக் காலில் நிற்கும் திடத்தையும் கொடுத்திருக்கிறார். சிறு வயது தனிமை உன்னைத் துன்புறுத்தாமல் பாதுகாப் பளித்த உன் பாட்டிக்கு நன்றி சொல்ல வேண்டுமே தவிர கிடைக்காமல் போன எதையும் பற்றி யோசிக்கக் கூடாது'' என்றான் ஜெயதேவ்.

பெற்றோரின் புறக்கணிப்பால் எப்போதும் ஒரு பாது காப்பின்மையும், வெறுமையும் நேகாவிற்கு ஏற்பட் டிருந்தது. ஜெயதேவ் வார்த்தைகளிலிருந்த உண்மை சொந்தக் காலில் நிற்கிறோம் என்று பெருமிதப்பட வைத்தது.



நேகா ஜெயதேவ்வைப் பார்த்து மென்மையாகப் புன்னகைத்தாள். ''நன்றி ஜெயதேவ்.''

ஜெயதேவ் மிகுந்த தயக்கத்துடன் கேட்டான். ''நந்த கிஷோரும், நீங்களும் காதலர்களா? திருமணம் செய்து கொள்ளப் போகிறீர்களா? நந்தகிஷோரின் பெற்றோரும் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்று கேள்விப்பட்டேன். அவர்கள் உங்களை மருமகளாக ஏற்றுக் கொண்டார் களா? உங்கள் சொந்த விஷயத்தில் தலையிடுவதாக நினைக்க வேண்டாம். நீங்கள் சரியான வழியைத் தேர்ந்தெடுக்க வேண்டுமே என்ற ஆதங்கத்தில் கேட் டேன்.''

''உங்கள் ஆதங்கம் எனக்குப் புரிகிறது ஜெயதேவ். நந்தகிஷோர் என் நண்பன். எனக்கு தங்க இடம் கிடைக் காத சூழ்நிலையில் அவனுடைய வீட்டில் தங்கியிருக் கிறேன். சுருக்கமாகச் சொன்னால் நாங்கள் ஒரு ஹவுஸ் மேட்?''

ஜெயதேவ் குழப்பத்துடன் பார்க்க நேகா தொடர்ந் தாள். ''மார்க்கெட் பகுதியில் நான் வீடு பார்த்து விட் டேன் ஜெயதேவ். இன்னும் சில நாளில் அங்கு போய் விடுவேன்.''

ஜெயதேவ் பஸ் ஸ்டாப் வரை கூட வந்தான். பஸ் வரும் வரை காத்திருந்து பஸ்ஸில் ஏறியதும் ''ஜாக்கிரதை யாகப் போ'' என்றான் திரும்பத் திரும்ப.

இன்று ஜெயதேவ் வீட்டிற்குப் போனது மிகவும் நல்ல விஷயம் என்று தோன்றியது. மனம் லேசாக இருந்தது. ஜெயதேவ் அவர்கள் குடும்பத்தில் மூத்தவன். தன் அம்மா, தங்கை என பிறந்ததிலிருந்தே பெண்களை

பாதுகாக்கும், மரியாதை கொடுக்கும் ஆணின் வழி வந்தவன். இன்று என்னிடம் அவன் காட்டிய அக் கறைக்கு அதுதான் காரணம்.

நேகா வீட்டிற்கு அருகே பஸ்சை விட்டு இறங்கி நடக்கத் தொடங்கியதும் நந்தகிஷோர் எங்கிருந்தோ வந்து அவளுடன் சேர்ந்து கொண்டான்.

''ஏய் நீ இங்கே என்ன செய்கிறாய்?'' என்றாள் நேகா வியப்புடன்.

''ம்... இங்கே எங்கேயாவது கரடிக்குட்டி போட்டிருக் கிறதா என்று பார்க்கிறேன்.''

''அன்றைக்கு வீட்டிற்கே கரடி வந்ததே. அப்போது பார்த்திருக்கக் கூடாதா?''

''அன்று ஒரு குட்டிச்சாத்தானை காப்பாற்றப் போய் கரடிக் குட்டியைப் பார்க்க மறந்து போனேன்.''

''குட்டிச்சாத்தானா? ஒரு பேய் இருக்கும் வீட்டில் வசிக்க வேண்டும் என்றால் மனிதர்கள் கூட குட்டிச் சாத்தானாகத்தான் மாற வேண்டியிருக்கும்.''

''நான் பேயாடீ?''

''நான் குட்டிச்சாத்தானாடா?''

''ஆனாலும் நீ ரொம்பப் பேசுகிறாய்?''

''நீ மட்டும் பேசுவதே இல்லையா என்ன?''

''உன்னை'' நந்தகிஷோர் விளையாட்டாக அவளை அடிப்பது போல் கையை ஓங்க அவனை முந்திக் கொள் ளும் வேகத்தில் நேகா ஓங்கி அவன் முதுகில் அறைந் தாள். சுரீலென்ற வலியில் நந்தகிஷோர் ஒரு நிமிடம் நிஜமாகவே திகைத்துப் போனான்.



''என் அம்மா அடிக்கடி சொல்வார்கள். இந்தியாவில் பெண்கள் ஆண்கள் அடித்தால் பொறுத்துக் கொண்டு அமைதியாய் இருப்பார்கள். ஒரு வார்த்தை எதிர்த்துப் பேச மாட்டார்கள் என்பார்களே'' என்றான் நந்தகிஷோர் முதுகைத் தேய்த்தபடி.

''ஓ! அந்த தைரியத்தில்தான் நீ அடித்தாயா? அதெல்லாம் அந்தக் காலம். இப்போதெல்லாம் அங்கே கணவர்கள்தான் மனைவியிடம் தினமும் படாதபாடு படுகிறார்கள்.''

சிரித்தபடி இருவரும் உள்ளே சென்றார்கள். சமைய லறைக்குச் சென்று குழாயைத் திறந்த நேகா, ''தண்ணீர் இல்லை கிஷோர்'' என்றாள் அவனிடம்.

''எல்லாம் இருக்கும். இந்த ஸ்விட்ச்சை ஆன் செய் தால் சிறிது நேரம் கழித்து தண்ணீர் வரும்'' என்றான் நந்தகிஷோர்.

''இதுதான் மோட்டார் ஸ்விட்ச்சா?''

''இல்லை. இதுவும் ஹீட்டர்தான். நம் வாட்டர் டேங்கில் இருக்கும் நீர், குழாயில் தேங்கியிருக்கும் நீர் எல்லாம் பனியில் உறைந்து ஐஸ் ஆகியிருக்கும். இந்த பட்டனை அழுத்தினால் ஹீட் ஆகி பனி உருகி குழாயில் நீர் வரும்'' என்ற நந்தகிஷோர் தன் கையிலிருந்த பார்சலை அவளிடம் கொடுத்தான். ''எங்கே போனேன் என்று கேட்டாய் அல்லவா? இதற்காகத்தான் போயிருந்தேன்.''

''என்ன இது?'' என்றாள் நேகா பாக்கெட்டைப் பிரித்த படி.

''என் நண்பர் ஒருவர் தமிழ்நாடு போயிருந்தார். அவரிடம் உனக்கு உங்கள் ஊர் பலகாரங்கள் வாங்கி வர சொல்லியிருந்தேன்'' என்றான் நந்தகிஷோர்.

அதிரசம், முறுக்கு, சீடை, தேன்குழல், லட்டு, கார வகைகள் என ஒரு மினி ஸ்வீட் ஸ்டாலே பாக்கெட்டின் உள்ளே இருந்தது.

''மை குட்நெஸ். என்னால் இவ்வளவும் எப்படிச் சாப்பிட முடியும்?'' என்றாள் நேகா சிணுங்கலாக.

வியப்பில் விரிந்த விழிகளையும், சந்தோஷம் மின்னும் முகத்தையும் ரசனையுடன் பார்த்த வண்ணம் ''உனக்கு எது பிடிக்கிறதோ அதை சாப்பிடு'' என்றான் நந்தகிஷோர்.

ஒரு நிமிட யோசனைக்குப் பிறகு நேகா சொன்னாள். ''எனக்கு என்ன பிடிக்கும் என்று எனக்கேத் தெரியாது கிஷோர். இதுவரை என்னை யாரும் கேட்டதும் இல்லை. சிறு வயதில் பாட்டி வீட்டில் அத்தைகளும், சித்திகளும் மீதமானதைத்தான் சாப்பிடக் கொடுப்பார்கள். விசேஷ நாட்களில் பாட்டி யாருக்கும் தெரியாமல் எடுத்து வைத்த பலகாரங்களை வீட்டில் ஆளில்லாத சமயம் பார்த்து தருவாள். பழைய பேப்பரில் சுருட்டி பெட்டிக்குள் திணித்து வைத்திருந்ததால் மக்கல் வாசனையுடன் இருந் இருக்கும். அதைச் சாப்பிடவே பிடிக்காது எனக்கு. தாலும் எதுவும் பேசாமல் சாப்பிடுவேன்.

பாட்டி இறந்த பிறகு அந்த மக்கல் பேப்பர் வீசும் பலகாரங்களும் கூட அவளுடனேயே போயிற்று. குடும் பத்தவரை விட்டு வேலை பார்க்க தொடங்கியபோது கூட எனக்கு உணவின் மீது நாட்டம் ஏற்படவில்லை. இங்கே சமைக்கத் தொடங்கிய பிறகுதான் உன்னுடன் போட்டி போட்டுக் கொண்டு சமையல் செய்யவும் சாப்பிடவும் தொடங்கினேன்.''



மனதின் சோகம் வார்த்தைகளில் வெளிப்பட்டு விடாமல் ஒரு நகைச்சுவையை விவரிக்கும் பாவனையில் சிரித்தபடி பேசுபவளைப் பார்த்த நந்தகிஷோரின் மனம் நெகிழ்ந்தது.

''உன் பெற்றோரை உனக்குப் பார்க்க வேண்டும் போலிருக்கிறதா நேகா?'' என்றான் மிருதுவான குரலில்.

''ஏன்? எதற்காகப் பார்க்க வேண்டும்? அவர்களைப் பார்க்க விரும்பாமல்தானே இங்கே தேடி வந்தேன்!''

''ஒருவேளை, அவர்கள் உன்னைச் சந்திக்க விரும்பினால்?''

''நிச்சயம் விரும்ப மாட்டார்கள். இருவரும் தாங்கள் ஏற்படுத்திக் கொண்ட குடும்பத்துடன் சந்தோஷமாக இருக்கிறார்கள். நான் அவர்களது பழைய வாழ்வை நினைவு படுத்தும் மோசமான நினைவுச் சின்னம். என்னை மறந்தால் அவர்களது கடந்த காலத்தையும் மறப்பது சுலபம்.''

''அது அத்தனை எளிதில்லை நேகா.''

''எது?''

''உன்னை மறப்பது. உன்னை ஒரு முறை பார்த்த யாரும் உயிர் உள்ள வரை மறக்க முடியாது?'' என்றான் நந்தகிஷோர் உணர்ச்சியுடன்.

நேகா விரக்தியுடன் சிரித்தாள். ''ரொம்பக் கஷ்டப் பட்டு டயலாக் எல்லாம் பேசாதே கிஷோர். என் அம்மாவே என்னை வெறுக்கத்தான் செய்தாள்.''

''அப்படி உறுதியாகச் சொல்ல முடியாது நேகா. என்ன இருந்தாலும் ஒரு தாய். எப்படியிருந்தாலும் உன் நினைவு அவர்களுக்கு...''

''போதும் கிஷோர். கையில் ஸ்வீட்டை வைத்துக் கொண்டு வாயில் ஏன் கசப்பைப் பேச வேண்டும்? நான் இந்தியாவையே மறக்கத் தொடங்கி விட்டேன்'' என்றாள் நேகா.

''ஆ! இது ரொம்ப நல்ல விஷயம்'' என்றான் நந்தகிஷோர் உற்சாகத்துடன். ''பழசை எல்லாம் மறந்து விடு. உன் வாழ்க்கை முதன் முதலில் இந்த ஆங்கரேஜ் நகரத்திலிருந்துதான் ஆரம்பிக்கிறது. யுனிவர்சிட்டி ஆப் அலாஸ்காவின் திறமையான, ஸ்மார்ட்டான டீச்சர் நேகா.

அலாஸ்காவின் அழகு தேவதை. அவளை நான் முதன் முதலில் சாலையோரத்தில்தான் சந்தித்தேன். சாலையைக் கடக்க முயன்று பனியில் விழுந்து கிடந்தவளை முதன் முதலாய் பார்த்ததும், பனியில் முளைத்துக் கிடக்கும் டெய்ஸி பூவோ என்றுதான் நினைத்தேன். அருகில் வந்த பிறகுதான் பெண் என்று தெரிந்தது. உதவி செய்ய அருகில் போன நான் அவள் கண்களைப் பார்த்ததும் ஐஸோடு ஐஸாக உறைந்து போனேன்.''

சிவந்த முகத்தைச் சமாளித்தபடி நேகா அவன் பேச்சுக்கு வாய்விட்டுச் சிரித்தாள். ''ஏய் புளுகு மூட்டை முதன் முதலில் நீ என்னைப் பார்த்தபோது என்னை அதட்டி எழுப்பியது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது.''

''ஓகே. அதைத் தவிர மற்றதெல்லாம் நிஜம்.''

''பொய்.''

''எது பொய்? நீ அழகி என்றதா?''

''ம்..'' நேகா மீண்டும் சிரித்தாள். ''நீ புத்திசாலிதான். பாயிண்ட்டைப் பிடித்து விட்டாய். தான் அழகில்லை என்று எந்தப் பெண் ஒத்துக் கொள்ளுவாள்?''



அவள் சிரிப்பைப் பார்த்த நந்தகிஷோர் தன்னை மறந்து அவள் அருகில் வந்தான். ''நீ அழகி மட்டுமல்ல நேகா. அபூர்வமான பெண்ணும் கூட'' மென்மையாக அவள் கன்னங்களைப் பற்றி அவன் சொல்ல நேகா திக்கு முக்காடிப் போனாள். அவன் கண்களில் தெரிந்த ஏதோ ஒன்று அவளை மயக்கியது. நந்தகிஷோரின் கை தலையையும், முதுகையும் வருடுகையில் அதைத் தடுக்க முடியாத பலவீனம் எழுந்தது. மனம் கரைந்து, உடல் உணர்ச்சிகளின் விளிம்பில் நின்றது. அவன் இதழ்கள் முகமெங்கும் பதிகையில் கண்கள் தானாய் மூடின.

''நேகா'' நந்தகிஷோரின் இதழ்கள் அவள் செவியில் பதிந்து அவள் பெயரை முணுமுணுத்தன.

நேகாவின் மூடிய கண்களுக்குள் அம்மா வந்து நின்றாள். ''இனியும் உன்னுடன் போலியாக வாழ முடியாது'' என்றாள் அப்பாவிடம்.

அப்பா வீட்டுக் கூடத்தில் முகத்தைப் பொத்தியபடி 'அவ ஓடிப்போயிட்டா' என குலுங்கினார்.

தாத்தாவும், அத்தைகளும், சித்தப்பாக்களும் உரத்த குரலில் அம்மாவைத் திட்டுகிறார்கள்.

புத்தகப் பையுடன் பள்ளிக்குக் கிளம்புகிறாள் நேகா. ''தலை நிமிராமல் போய் வரணும். அம்மா மாதிரி மனசை அலைய விடாதே'' என்கிறாள் பாட்டி.

''அம்மா... அம்மா... அம்மா.''

நேகா உலுக்கி விட்டாற்போல் நிமிர்ந்தாள். என்ன செய்து கொண்டிருக்கிறோம்? இத்தனை வருட வளர்ப்பையும், பண்பாட்டையும் எப்படி ஒரு நொடியில் மறந்து

போனேன்? மனதுக்குப் பிடித்தவன் கிடைத்து விட்டால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற அம்மாவின் புத்தி எனக்கும் வந்து விட்டதா? மனைவியைப் பற்றி பேசி, கரைந்து அனுதாபம் தேடிக் கொண்ட அப்பா யாருக்கும் தெரியாமல் இன்னொருத்தியை சேர்த்துக் கொண்டது போல் ஆண்களுக்கு இது சாதாரண விஷயம்.

நேகா சடாரென அவனிடமிருந்து விடுபட்டாள்.

''வேண்டாம் கிஷோர். இது நல்லதிற்கில்லை.''

''இதில் தவறு எதும் இல்லை நேகா.''

''தவறோ இல்லையோ. எனக்குப் பிடிக்கவில்லை.''

''நிஜமாகவா?'' என்றான் நந்தகிஷோர் கிண்டலாக.

சற்று நிதானித்த பிறகு நேகா சொன்னாள். ''நான் ஒரு நிமிடம் நெகிழ்ந்து போனது உண்மைதான் கிஷோர். இதை ஒத்துக் கொள்வதில் எனக்கு வெட்கம் எதுவும் இல்லை. ஆனால் மனதின் உணர்ச்சிகளை மூளையின் அறிவால் வெல்ல வேண்டும். ஆறாவது அறிவு நமக்கு அதற்காகத்தான் இருக்கிறது. இல்லை என்றால் மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விடும்.''

''எப்போதும் உன் ஆறாவது அறிவையே பயன்படுத்திக் கொண்டிருந்தால் இதயமே வேலை செய்யாது போய் விடும். நந்தகிஷோர் பேசியபடியே அவள் தோளில் கை வைக்கவும். நேகா அவன் கைகளை விலக்கினாள்.

''வேண்டாம் கிஷோர். நீ இது மாதிரி நடந்து கொண்டால் என்னால் உன் முகத்தைப் பார்த்துப் பேச



முடியாமல் போய்விடும். இத்தனை நாள் இருந்த நட்பு இல்லாமல் போய் விடும்.''

''இயற்கைக்கு முரணாக இங்கு எதுவும் நடக்காத போது எதற்காக நம் நட்பை உடைக்க வேண்டும்? இது மிக இயல்பான விஷயம் நேகா.''

''நான் நானாக இருப்பதுதான் என் பலம் கிஷோர். தேவையற்ற பலவீனத்திற்கு இடம் கொடுத்தேன் என்றால் என் மீது எனக்கு உள்ள மரியாதையே போய்விடும். மிகவும் அல்பமாகிப் போவேன்.''

''மிக மென்மையாக நம்மைக் கடந்து செல்லக் கூடிய ஒரு விஷயத்தை மிக விகாரமாக்கிப் பார்க்கிறாய். குறுகிய வட்டத்திற்குள் வாழப் பழகிய உன் மனோபாவம்தான் இதற்குக் காரணமாய் இருக்க வேண்டும். எப்படியும் நீயும் ஒரு நாள் மாறுவாய். சூழ்நிலைகள் உன்னை மாற்றியே தீரும்'' என்றான் நந்தகிஷோர் உறுதியுடன்.

''அப்படி மாறுகிறபோது பார்க்கலாம்'' என்றாள் நேகா.

அவள் சொல்வதை ஆமோதிப்பதைப் போல் காலிங் பெல் ஒலித்தது. ஒரு நிமிடம் தயங்கிய நந்தகிஷோர் விரல்களால் தலையைக் கோதியபடி கதவைத் திறக்கப் போனான்.

## 12

வாயிலில் நின்றிருந்த சுமனைப் பார்த்ததும் 'டாடி' என்றான் நந்தகிஷோர் வியப்புடன்.

''ஹ ஆர் யு மை பாய்?'' சுமன் சிரித்தபடியே உள்ளே நுழைந்தார்.

''வருவதாக தகவல் சொல்லவே இல்லையே நீங்கள்! சொல்லியிருந்தால் ஏர்போர்ட்டுக்கு வந்திருப்பேன்.''

''அதனால்தான் சொல்லவில்லை. ஆங்கரேஜ் எனக்குப் புதிய இடமா என்ன? எப்படியும் வீட்டிற்கு வரப் போகிறேன். இடையில் உன்னை எதற்கு அலைய விட வேண்டும்?'' என்ற சுமனுக்கு தாங்கள் ப்ளோரிடா கிளம்பியபோது நந்தகிஷோர் வீட்டு வாயில் வரை கூட வழியனுப்ப வராதது நினைவு வந்தது. எதிர்பார்த்த படியே பயல் மாறித்தான் போய் இருக்கிறான்.

நல்ல உயரமும், உடற்கட்டுமாக நந்தகிஷோரின் அண்ணன் என்று சொல்லக் கூடிய தோற்றத்தில் இருந்த சுமனை நேகா வியப்புடன் பார்த்துக் கொண்டிருக்க, ''ஹலோ நேகா'' என்றார் சுமன் பல நாள் பழகின பாவனையில்.

''சொல்லாமல் கொள்ளாமல் வந்து நிற்கிறேன். என் மகனைப் போல உனக்கும் ஆச்சரியமாகத்தான் இருக்கும். எனக்கு கம்பெனியிலிருந்து மெயில் வந்தது. உடனடியாகக் கிளம்பி வந்தேன். ஆன்ட்டி, பூஜாவை விட்டு விட்டு உடனே கிளம்ப முடியவில்லை. இதில் உனக்குச் சிரமம் எதுவும் இல்லையே!''

''மை காட். உங்களுடைய வீட்டிற்கு நீங்கள் வருவதில் எனக்கு என்ன சிரமம் இருக்க முடியும் அங்கிள்?''

''என் எதிர்பாராத வரவினால் உங்கள் வழக்கமான நடைமுறை பாதிக்கப்படலாம். இப்போது கூட ஏதாவது வேலையில் இருந்திருப்பீர்கள்.''



சற்றுமுன் இருவரும் என்ன செய்து கொண்டிருந்தோம் என்பது நினைவுக்கு வர நந்தகிஷோரும் நேகாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். நேகா தன் கூச்சத்தை மறைக்கத் திரும்பி சுமனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

''பயணத்தில் களைத்துப் போயிருப்பீர்கள் அங்கிள். டீ சாப்பிடுகிறீர்களா? அல்லது சாப்பாடே சாப்பிட்டு விடுகிறீர்களா?''

''இரண்டுமே வேண்டாம் நேகா. ஒரு கப் பால் கொடு போதும்'' என்றார் சுமன்.

நந்தகிஷோர் அவர்கள் வீட்டில் மசாலா பால் சாப்பிடுவது வழக்கம் என்று சொல்லி அவளுக்கு அதைத் தயாரித்தும் தந்திருக்கிறான். அந்த நினைவில் அவன் காட்டியிருந்த விதமாய் பாலைக் கலந்து கொண்டு போய் கொடுத்ததும் சுமனின் முகம் மலர்ந்து போனது.

''வெரிகுட். எனக்குப் பிடித்தமானதைத் தெரிந்து வைத்திருக்கிறாய்'' என்றவர் பாலை சொட்டு விடாமல் குடித்தார்.

சுமன் அதன் பிறகு நேகாவிடம் சகஜமாகப் பழகினார். இந்த நாட்டில் வாழ்ந்து பழகியதாலோ என்னவோ வீட்டு வேலைகளில் சரளமாக உதவி செய்தார். நேகா வேலை முடிந்து வரும் சமயம் சுமன் அநேகமாக நியூஸ் சேனலில் ஆழ்ந்திருப்பார். அன்றைய முக்கிய நிகழ்வுகளை அவளிடம் கூற, அவள் தன் கல்லூரி விஷயங்களைப் பேசியபடி இருவரும் சாப்பிடுவார்கள். தன் வேலை தவிர மற்ற நாட்களில் நந்தகிஷோரும் அவர்களுடன் கலந்து கொள்வான். நேகா சொந்த குடும்பத்தில் இருப்பது போலவே உணரத் தொடங்கினாள்.

அன்று மாலை வாக்வம் க்ளீனரால் கார்பெட்டை சுத்தம் செய்து கொண்டிருந்த சுமன் சொன்னார். "நான் இதுவரை அனுசுயாவை விட்டு இப்படி வந்ததே யில்லை நேகா. பூஜா குழந்தையுடன் சிரமப்படுவாள் என்பதால் வேறு வழியில்லாமல் விட்டு விட்டு வந்தேன். நீ இங்கே இருக்கிறாய் என்பதில் அனுசுயா வுக்கு நிம்மதி. பொதுவாகவே இங்கு சிலோன். பங்களாதேஷ் என ஆசியாவிலிருந்து வந்திருப்பவர் களைப் பார்த்தாலே உறவினர்களை பார்ப்பது போல இருக்கும். அதுவும் நீ இந்தியாவிலிருந்து வந்திருக் கிறாய், எங்கள் வீட்டில் தங்கியிருக்கிறாய் என்பதில் எங்களுக்கு மிகவும் சந்தோஷம்.

நந்தகிஷோர் ஒரு முறை வெப் கேமராவில் பேசிய போது உன்னை அறிமுகம் செய்தான் இல்லையா? அப்போதிருந்த அனுசுயாவும் பூஜாவும் உன்னைப் பார்க்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந் தார்கள். லேப்டாப்பில் பார்த்ததைவிட நேரில் மிகவும் அழகாய் இருக்கிறாய் என்று அவர்களிடம் சொல்லி யிருக்கிறேன்" என்றார் சிரித்தபடி.

அதிக அறிமுகம் இல்லாத தன்னிடம் அவர்கள் காட்டும் ஆர்வம் எப்போதும் போலவே இப்போதும் நேகாவிற்கு ஆச்சரியமாக இருந்தது! மனைவியைப் பற்றியும், குடும்பத்தைப் பற்றியும் பேசும்போது அவர் பேச்சில் தென்பட்ட பெருமிதமும், நெருக்கமும் குடும் பத்தினர் மீது அவர் கொண்டுள்ள அன்பை வெளிப் படையாக அறிவித்தது. இத்தனை அந்நியோன்யமான தம்பதிகளுக்குப் பிறந்த நந்தகிஷோர் தாம்பத்ய வாழ்க்



கையில் ஈடுபட விருப்பம் காட்டாதது ஆச்சரியமாக இருந்தது.

அலுவலகத்திலிருந்து மெயில் வந்திருப்பதால் உடனடியாகக் கிளம்பி வந்தவர் இன்னும் அலுவல கத்திற்கே போகாதது அதை விட ஆச்சரியமாக இருந்தது.

"நீங்கள் எப்போது அலுவலகம் போக வேண்டும் அங்கிள்?" என்றாள் நேகா.

"இப்போதும் நான் வந்த வேலையைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன்" என்றார் சுமன்.

அவர் டோர்மேட்டை சுத்தம் செய்வதைப் பார்த்த நேகா புன்னகைத்தாள். "இந்த வேலை பார்க்கவா ப்ளோரிடாவிலிருந்து ப்ளைட்டைப் பிடித்து வந்தீர்கள்?"

"யு. நாட்டி கேர்ள்" சுமன் பெரிதாகச் சிரித்தார்.

அப்போதுதான் உள்ளே நுழைந்த நந்தகிஷோருக்கு இருவரின் சிரிப்பொலியும் இனிய சங்கீதமாய் காது களில் விழுந்து முகத்தை மலர வைத்தது.

அடுத்த நாள் காலையில் அவசரமாய் கிளம்பிய நேகா வுடன் சுமனும் கிளம்பினார். "இரும்மா, நான் உன்னை டிராப் பண்ணுகிறேன்." "நீங்கள் எதுவரை போக வேண் டும் அங்கிள்? நான் பஸ்சிலேயே போய்க் கொள்வேன்" என்றாள் நேகா.

"கிஷோர் இன்னும் தூங்கி விழிக்கவில்லை நேகா. எனக்கும் வீட்டில் போர் அடிக்கிறது" என்றபடி சுமன் காரின் ப்ளக்கை சொருகி சூடாக்கினார். இருவரும் யுனி வர்சிட்டியை நோக்கி பயணிக்கையில் நேகா அவரது ஆபீஸ் கம்பெனியைப் பற்றி விசாரித்தாள்.

''எங்கள் ஆயில் கம்பெனியின் பெயர் B.P. அங்கு வேலை பார்ப்பவர்கள் தவிர யாரும் போக முடியாது நேகா. ஆனால் B.P. கம்பெனி வருடத்திற்கு ஒருமுறை ஒரு சிலருக்கு மட்டும் நண்பர்களை அழைத்துச் செல்ல பாஸ் கொடுத்து கம்பெனிக்குச் சொந்தமான விமானத்தி லேயே அழைத்துச் செல்வார்கள். இந்த முறை நான் உன்னை அழைத்துச் சென்று காண்பிக்கிறேன். உலகத் தின் உச்சியில் அலாஸ்கா இருக்கிறது நேகா. அலாஸ்கா வின் உச்சியான புருடபே எனுமிடத்தில் இந்த ஆயில் கம்பெனி இருக்கிறது. ஆங்கரேஜ்லிருந்து ஊசியிலை காடுகளையும், பனிமலைகளையும் கடந்து கம்பெனிக் குச் செல்வதே புதுமையான அனுபவம்தான். ஆரவார மற்ற பனிக்காட்டில் அலுவலகக் கட்டிடம்!

அத்தனை நவீன வசதிகளுடனும் இருக்கிறது. இலவச கேண்டீன்கள் இருக்கின்றன. அங்கு இருபத்தி நாலு மணி நேரமும் இறைச்சியுடன் நட்ஸ், பிஸ்கெட்ஸ், பழங்கள், காபி, குளிர்பானங்கள் என யார் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் சாப்பிடலாம். புருடபேயில் நாம் நிற்கும்போது உலக உருண்டையான குளோப்பின் உச்சியில் நிற்கிற மாதிரி உணர்வுதான் வரும். உலகின் எல்லை புருடபேதான் நேகா.''

''அத்தனை உயரத்திலிருந்தா ஆயில் எடுக்கிறார் கள்?'' என்றாள் நேகா வியப்புடன்.

''ஆமாம். ஆர்க்டிக் கடலில் துளை போட்டு எண் ணெய் எடுக்கிறார்கள். எடுத்த எண்ணெய்யை எட்டு நூறு மைல் தூரத்திலிருக்கும் வால்டீஸ் என்னும் இடம் வரை பைப் மூலம் கொண்டு சென்று அங்கிருந்து கப்பல் மூலம் பல்வேறு இடங்களுக்குக் கொண்டு



செல்கிறார்கள். பைப் லைன் செல்லும் எண்ணூறு மைல்களும் நிலநடுக்கத்தால் பைப் உடைந்து விடா மலும், பனியில் ஆயில் உறைந்து விடாமலும், மான் களும் கரடிகளும் திரியும் இடத்தில் அவற்றினால் சேதம் ஏற்படாமலும், யூகான் ஆற்றைக் கடக்க பாலம் கட்டப் பட்டு அதன் மேல் பைப்களைப் பொருத்தியும் மிகுந்த பிரயத்தனத்துடன் கொண்டு செல்லப்படுகின்றன. உலகத்தின் உச்சியில் இப்படி ஒரு தொழிற்சாலை இருக்குமென்று பலர் கற்பனை செய்து கூட பார்த்திருக்க மாட்டார்கள்.

சுமனின் பேச்சால் விளைந்த ஆர்வத்துடன் ''நாம் எப்போது அங்கே போகிறோம் அங்கிள்?'' என்றாள் நேகா.

''கோடை காலம் வரும் வரை பொறுத்திரு நேகா'' என்ற சுமன் நந்தகிஷோரைப் பற்றிப் பேசினார். ''நானும் அனுசூயாவும் இங்கிருந்து அமெரிக்காவின் மத்திய பகுதிக்குப் போய் விடலாம் என பல முறை யோசித் தோம். ஆனால் நந்தகிஷோர் நகர மறுத்து விட்டான். நாங்கள் பூஜாவிடம் போகும்போது அங்கேயே செட்டில் ஆகி விடுவதாகச் சொல்லி விட்டுத்தான் போனோம். கூட யாரும் இல்லை என்றால் அவனுக்குத் தனிமையின் கஷ்டம் புரியும்.

திருமணத்திற்கு சம்மதிப்பான் என்று நினைத்தோம். நாங்கள் நினைத்தபடியே அவன் உன் துணையை விரும்பி உன்னை வீட்டில் தங்க இடமளித்திருக்கிறான் என்பதில் எங்களுக்கு மிக்வும் மகிழ்ச்சி. சொல்லப் போனால் நான் இங்கே வந்ததே உன்னைப் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான்.''

சுமன் வந்த வேலை என்னவென்று புரிந்து கொண்ட திகைப்புடன் நேகா சொன்னாள். "அங்கிள், நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டீர்கள் என்று நினைக்கிறேன். நாங்கள் இருவரும் நல்ல நண்பர்கள். குடியிருக்க வீடு கிடைப்பது சிரமமாய் இருக்கும் இது போன்ற இடங்களில் ஒரே வீட்டில் இருவர் தங்கி செலவுகளைப் பகிர்ந்து கொள்வதை சாதாரணமாக நீங்கள் நிறையப் பார்த்திருப்பீர்கள். அது போலத்தான் இதுவும். கிஷோர் என்னிடம் வாடகை என்று தனியாக வாங்க மறுத்ததால் நான் சமையல் பொருட்கள், பழங்கள், வீட்டுக்குத் தேவையான பொருட்களை என் பணத்தில் வாங்கி வைத்து விடுவேன். இதை வைத்து நீங்களாக எந்த முடிவிற்கும் வந்து விடாதீர்கள்."

சுமன் அவள் பேச்சுக்கு ஒப்புதலாய் தலையசைத்தார். "உன்னைத் தன் தோழி என்றுதான் நந்தகிஷோரும் சொன்னான். நேகா நான் பல நாடுகள் சுற்றியவன். பல கலாச்சாரங்களைப் பார்த்துப் பழகியவன். வெளிப்படையாக ஒரு விஷயம் கேட்கிறேன். நட்பு காதலாக மாறுவது சகஜம்தான். உங்களுக்குள் ஏற்பட்டிருக்கும் இந்த நட்பும் ஏன் காதலாகி கல்யாணத்தில் முடியக் கூடாது."

நேகா ஒரு நிமிடம் பேசத் தோன்றாமல் அமைதியானாள். "எல்லா நட்பும் திருமணத்தில் முடிவதில்லை அங்கிள். அதுவும் குடும்ப வாழ்வை விலங்காக நினைக்கும் நந்தகிஷோரிடம் நீங்கள் காதலை எதிர்பார்ப்பது நடக்காத காரியம்."

"அப்படிச் சொல்ல முடியாது நேகா. மனிதர்கள் மாறுவார்கள். நந்தகிஷோரும் மாறி இருக்கிறான். ஆனால்



அதை அவனே உணரவில்லை. உன்னைப் பார்க்கும் போது அவன் பார்வையில் தெரியும் குழைவும், பேச்சில் தெரியும் கனிவும் அவன் மாற்றத்திற்கு உறுதி கூறுகின்றன."

நேகா வாய்விட்டுச் சிரித்தாள். "அங்கிள். யு வார் ரொமான்டிக். உங்கள் மகனைப் பற்றிய கவலையும், அக்கறையுமே உங்களது இந்த கற்பனைக்குக் காரணம். பட் வி ஆர் ப்ராக்டிக்கல்."

"ஓகே. நான் சொன்னது கற்பனையாகவே. இருக்கட்டும். ஒரு பேச்சுக்கு கேட்கிறேன். என் கற்பனை உண்மையாக இருந்தால் உன் நிலை என்ன? என் மகனை மணந்து கொள்ள நீ சம்மதிப்பாயா?"

"அங்கிள் உணர்ந்துதான் பேசுகிறீர்களா? உங்கள் வீட்டுப் பெண்ணாக, உங்கள் மகனுடன் வாழ்நாள் முழுவதும் இருக்கப் போகிற உறவை யார் என்று தெரியாமலே தேர்ந்தெடுப்பீர்களா? நான் யார்? என் பூர்வீகம் என்ன என்று தெரிய வேண்டாமா உங்களுக்கு?"

"என் மகன் வீடுவரை உன்னை அழைத்து வந்து மதிப்புடன் நடத்துவதிலிருந்தே உன் மீது அவன் வைத்திருக்கும் நம்பிக்கை புரிகிறது நேகா. நீ நல்ல பெண் என்பது உன்னுடன் ஐந்து நிமிடம் பேசினாலே தெரிகிறது. நீ தவறான பெண்ணாக இருந்தால் என் மகன் இந்நேரம் வீணாகியிருப்பான். அதனால், உன் பூர்வீகம் பற்றி எங்களுக்கு கவலை இல்லை. என் மனைவிக்கும் எனக்கும் எங்கள் இனத்தில் இல்லாவிட்டாலும் குறைந்த பட்சம் ஒரு இந்தியப் பெண்ணாகவாவது எங்கள் மருமகள் இருக்க வேண்டும் என்று ஆசை.

பூஜாவைப் பொறுத்தவரை பிரச்சனை இல்லாமல் நாங்கள் தேர்ந்தெடுத்த மாப்பிள்ளைக்குத் தலையாட்டி விட்டாள். நந்தகிஷோருக்குத் திருமணத்தில் நாட்டம் இல்லை என்றதும் எப்படியாவது அவனுக்கு திருமணம் ஆனால் போதும். அது யாராக இருந்தாலும் சரி என்ற நிலைக்கு வந்து விட்டோம். ஆனாலும் மனதிற்குள், வேறு பழக்க வழக்கங்களும், வாழ்க்கை முறையும் கொண்ட பெண்ணுடன் நம்மால் இருக்க முடியுமா? அவளை நம் வீட்டுப் பெண்ணாய் நினைக்க முடியுமா என்ற பயம் இருந்து கொண்டே இருந்தது. உன்னைப் பார்த்ததும் எங்கள் நிம்மதியையும் சந்தோஷத்தையும் விவரிக்க முடியாது.''

''ப்ளீஸ் அங்கிள், நிஜமாகவே நீங்கள் நினைக்கிற மாதிரி எதுவும் இல்லை. நான் யுனிவர்சிட்டி காம்பசில் தனியாக வசிக்க பயந்து டவுனுக்குள் வீடு தேடியபோது அவசரத்திற்கு இடம் கிடைக்காமல் உங்கள் வீட்டிற்கு வந்தேன். இப்போது எனக்கு இடம் கிடைத்துவிட்டது. நந்தகிஷோரிடமும் சொல்லியிருக்கிறேன். அடுத்த வாரத்தில் போய் விடுவேன். ஆனால் முன் பின் அறிமுக மில்லாத பெண்ணை உங்கள் மருமகளாக ஏற்கத் துணிந்த பெருந் தன்மையை என்னால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை'' என்றாள் நேகா.

சுமன் ஏமாற்றத்துடன் தலையசைத்தார். ''நான் உன்னிடமிருந்து இந்த பதிலை எதிர்பார்க்கவில்லை நேகா. நந்தகிஷோரை உனக்குப் பிடிக்கவில்லையா? எதுவாக இருந்தாலும் என்னிடம் வெளிப்படையாகப் பேசலாம்'' என்றார் சுமன்.



நேகா உடனே பதில் சொல்லாமல் கை நகங்களை ஆராய்ந்தாள். 'நந்தகிஷோரை மிகவும் பிடித்துப் போன தால்தான் இந்த முடிவுக்கு வந்தேன்' என்றாள் மனதிற்குள். நான் விரும்பியவனின் விருப்பங்களும் கொள்கைகளும் ஏற்றுக் கொள்ள முடியாதவை என்றான பின் அவனிட மிருந்து விலகியிருப்பதுதான் நல்லது. கூடவே இருந்து மனதின் சலனங்களுக்கு இடம் கொடுத்தேன் என்றால் வாழ்நாள் முழுவதும் வருத்தப்பட வேண்டியிருக்கும். பெற்றோரின் வற்புறுத்தலுக்காக நந்தகிஷோர் ஒரு கட்டத்தில் திருமணத்திற்கே சம்மதித்தான் என்றாலும் அவனைப் பொறுத்தவரை அது ஒரு சடங்கு. அவ் வளவுதான். திருமண பந்தம் அவனை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது. ஒருவனுக்கு ஒருத்தி என்பது பத்தாம் பசலித்தனம். கணவனுக்காக மனைவி காத்திருப்பது கட்டுப்பெட்டித்தனம் என்ற எண்ணம் உடையவன். என் கண் எதிரே லோரியாவையோ, ரோஸ் மேரியையோ எந்தக் குற்ற உணர்வும் இன்றி அறைக்குள் அழைத்துச் செல்வான். இதில் ஒன்றும் தவறில்லை என என் மன சுக்கு நான் சொல்ல வேண்டும். அல்லது ரங்காரெட் டியைப் போல எதுவுமே நடக்காதது போன்ற மெத்தனத் துடன் வளைய வர வேண்டும். இதெல்லாம் என்னால் முடியாது. முடியவே முடியாது.

நேகா கண்களை இறுக மூடியபடி மறுப்புடன் தலை யசைத்தாள்.

''நேகா...'' என்றார் சுமன்.

கண்களைத் திறந்த நேகா யுனிவர்சிட்டி வந்து விட் டதை உணர்ந்து தன் தோள் பையுடன் கீழே இறங்கி னாள். ''தேங்க்யூ அங்கிள்.''

"நான் சொன்னதை நிதானமாய் யோசித்துப் பார் நேகா" என சுமன் அவளிடமிருந்து விடைபெற்றார்.

நேகா அன்றைய வகுப்புகள் முடிந்ததும், ஜெயதேவ் மாதவி யாரும் பார்ப்பதற்கு முன் கல்லூரியை விட்டு வெளியே வந்தாள். யாருடனும் சரளமாகப் பேச மனமின்றி சுமனின் வார்த்தைகளே காதில் ஒலித்துக் கொண்டிருந்தன. காம்பஸை ஒட்டியிருந்த பஸ் ஸ்டாப்பை நோக்கி நடக்கையில் தன் முன்னால் சென்றவர்களில் பெர்னடினின் அப்பாவும் இருப்பதைப் பார்த்தாள். பிரூஸாவும் பெர்னடினும் ஏன் வகுப்பிறகு வரவில்லை என அவர்களிடம் கேட்கலாம் என வேகமாக அவர்களை நோக்கிச் சென்றாள்.

"ஹலோ, என்னைத் தெரிகிறதா உங்களுக்கு? பெர்னடின் டீச்சர் நான். அவளும் பிரூஸாவும் இப்போதெல்லாம் ஏன் வகுப்புகளுக்கு வருவதில்லை" என்றாள் அவர்களிடம்.

அவர்கள் அவளுக்கு பதில் சொல்லாமல் தங்கள் கையிலிருந்த பொருட்களை காட்டி ஏதோ கூறினர். ஆங்கரேஜ் நகரத்திற்குள் வசிக்கும் எக்ஸிமோக்கள் அலாஸ்காவில் மற்ற பகுதிகளில் வசிப்பவர்களைப் போல் கடலில் வேட்டையாடச் செல்வதில்லை. அரசு அவர்களை நாகரீகமாக்க எடுத்துக் கொள்ளும் முயற்சியால் டூரிஸ்டுகளுக்கு கலைப் பொருட்கள் தயாரித்து விற்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். கரடியையும் திமிங்கலத்தையும் வெட்டுவதற்கு அவர்கள் உபயோகித்த 'ஊலு' எனப்படும் பெரிய கத்தி, எக்ஸிமோ பூசாரிகள் நடனமாடும் போது முகத்திற்கு அணியும் முகமூடி, மூஸ்



நக்கட்ஸ் எனப்படும் மூஸ்ஸின் சாணம், கண்ணுக்கு அவர்கள் அணியும் விஷன்கள் முதலியவற்றை விற்கிறார்கள். டூரிஸ்ட் மட்டுமின்றி அலாஸ்காவில் வசிக்கும் எல்லா தரப்பினரும் அவர்களிடம் விரும்பி வாங்குவது ட்ரீம்கேச்சர் என்னும் பொருளைத்தான். பறவைகளின் இறகினால் செய்யப்பட்டிருக்கும் இதை வீட்டில் வைத்தால் கெட்ட கனவுகள் வராது என்பது இங்கு பரவலாக உள்ள நம்பிக்கை. பிரூஸாவும், பெர்னடினும் தாங்களே தயாரித்ததாகக் கூறி பரிசளித்த டிரீம் கேச்சரை நேகா நந்தகிஷோர் வீட்டு ஹாலில் மாட்டியிருக்கிறாள்.

நேகா அவர்களை அணுகி விசாரித்ததும் தங்கள் கைகளிலிருந்த கலைப் பொருட்களை கேட்பதாக எண்ணி அவர்கள் ஒவ்வொன்றாக நேகாவிடம் காண்பித்தனர்.

"எனக்கும் இவை எதுவும் வேண்டாம். உங்கள் பெண் எப்படியிருக்கிறது" என்றாள் நேகா சத்தமாக.

பெர்னடின் அப்பா அவளுக்கு பதில் சொல்லாமல் சற்று முன்னே போய் கொண்டிருந்த சிறுவனை அழைத்து அவனிடம் ஏதோ சொல்லவும், அந்தச் சிறுவன் நேகாவின் அருகில் வந்தான்.

"நீங்கள் பெர்னடின் டீச்சர்தானே!" என்றான் அவளிடம். "நான் அவள் தம்பிதான். என் அப்பாவுக்கு... ஆங்கிலம் தெரியாது. எங்கள் கூட்டத்தில் பழைய தலைமுறையினர் இன்னும் எங்கள் தாய்மொழியை மட்டுமே பேசி வருகிறார்கள். எங்கள் தலைமுறைக்கு கட்டாய கல்வியில் ஏற்பட்ட ஆங்கில அறிவால் தாய்மொழியை

மறக்கத் தொடங்கி விட்டோம். அதனால் இப்போது எக்ஸிமோ குடும்பங்களில் தாத்தாவும் பேரனும் பேசும் மொழி வேறு வேறாக இருக்கிறது.''

''தமிழ்நாட்டிலும் அப்படித்தான்'' என்ற நேகா ''உன் அக்காவும் பிரூஸாவும் எங்கேயிருக்கிறார்கள்?'' என்றாள் அவனிடம்.

''வீட்டில்தான் இருப்பார்கள்'' என்ற அவன் ''வருகிறீர்களா எங்கள் வீட்டிற்குப் போகலாம்'' என்றான் அவளிடம்.

போய் பார்க்கலாமே என்ற ஆர்வம் ஏற்பட, ''வருகிறேன்'' என்றாள் நேகா உடனடியாக.

அந்தச் சிறுவன் திரும்பி பெர்னடின் அப்பாவிடம் ஏதோ சொல்லிவிட்டு நடக்க ஆரம்பித்தான். அவர்களது நடை மெதுவாக இருப்பதாகத் தெரிந்தாலும் அதற்கு ஈடு கொடுக்க நேகா ஓட வேண்டியிருந்தது. கிட்டத்தட்ட ஒரு மைல் தூரம் சென்ற பிறகு எக்ஸிமோ குடியிருப்பு கண்ணில் பட்டன. தரை மட்டத்தில் பலகைகளில் செய்யப்பட்ட வீடுகள் சில இருந்தன. சற்று உயரத்தில் பனியில் கட்டப்பட்ட இக்ளூ வீடுகளும் கண்ணுக்குத் தெரிந்தன. நேகா பார்த்துக் கொண்டிருக்கையிலேயே ஓடி வந்த பிரூஸாவும், பெர்னடினும் அவள் கைகளைப் பற்றி ஆர்ப்பரித்தனர்.

''உங்களை இங்கு நாங்கள் எதிர்பார்க்கவே இல்லை மேம்'' என்றார்கள் ஆச்சரியத்துடன்.

''போலார் கரடி மாமிசம் இருக்கிறது. சாப்பிடுகிறீர்களா மேம்?'' என்றார்கள் உபசரிக்கும் விதமாக.



எப்போதும் மாமிசக் கொழுப்பையே சாப்பிடுவதால் தான் எக்ஸிமோக்கள் அனைவரும் குண்டாக இருக்கிறார்கள் என்று நினைத்தபடி 'வேண்டாம்' என தலையசைத்தாள் நேகா.

அவர்கள் உட்காரச் சொல்லி காட்டிய பர்னிச்சரைப் பார்த்த நேகா அசந்து போனாள். விலங்குகளின் எலும்பில் கடையப்பட்ட நாற்காலியும் சோபாக்களும், அவற்றின் தோலிலிருந்து நெய்யப்பட்டிருந்த மிருதுவான வெல்வெட் விரிப்பும் மனதைக் கவர்ந்தன. கூட்டம் கூட்டமாக சுற்றி வந்த நாய்களை நேகா வியப்புடன் பார்த்தாள். அலாஸ்காவில் பொதுவாக வீட்டிற்கு ஒரு நாய் வளர்ப்பதை அவள் பார்த்திருந்தாள். ஆனால் இங்கே ஒரு வீட்டிற்கு பல நாய்கள் இருக்கும் போலிருந்தது. கொழு கொழுவென அடர்த்தியான ரோமங்களுடன் இருந்த ஹஸ்கி, மால்ம்யூட் வகை நாய்களை அவள் கவனிப்பதைக் கண்ட பிரூஸா சொன்னாள்.

''எங்கள் சமூகத்தில் ஒரு பழமொழி உண்டு மேம். 'ஒரு எக்ஸிமோ எப்போது தன் நாயை இழக்கிறானோ அப்போதே அவன் தொலைந்தான்' என்பார்கள். ஏனென்றால் 'ஸ்லெட்' எனப்படும் நாய்கள் பூட்டிய வண்டியில்தான் எங்கள் ஆட்கள் பயணம் செய்வார்கள். வேட்டைக்குப் போகவும், தனியாகப் போகும்போது தக்க துணையாகவும், நல்ல நண்பனாகவும், வேலைக்காரனாகவும் எங்களுக்கு நாய்கள் இருக்கின்றன.''

நேகா அலாஸ்கா வந்த புதிதில் பார்த்து வியந்திருக்கிறாள். சாலையில் நடந்து செல்லும் அனைவரும் ஆளுக்கொரு நாயைக் கையில் பிடித்தபடி செல்வார்கள்.

நந்தகிஷோரின் வீட்டிற்கு அருகாமையிலிருக்கும் வீடுகளிலும் நாய்கள் இருந்தன. இங்குள்ள நாய்களின் விசேஷம் அவற்றை வீட்டிற்குள் வைத்திருக்கத் தேவையில்லை. வீட்டிற்குப் பின்னால் ஸ்நோ இருக்கும் இடத்தில் விட்டு விட்டால் அவை ஜாலியாக பனியில் புரண்டு விளையாடும்.

நந்தகிஷோர் வீட்டு நாய்களை ப்ளோரிடா செல்லும் முன் தன் பெற்றோர் காப்பகத்தில் விட்டு விட்டுச் சென்றதாகவும் அம்மா இங்கு வந்த பிறகுதான் நாயை அழைத்துவர வேண்டும் என்றும் சொல்லியிருந்தான். துணைக்காக நாய் வளர்ப்பவர்களே அதை அக்கறை எடுத்து கவனிக்கும்போது உணவு தேடச் செல்லும் எக்ஸிமோக்களுக்கு துணைபுரியும் நாய்கள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை என்று புரிந்தது.

பெர்னடின் கிரான் பெரி, ஊதா பெரி பழங்களைச் சாப்பிடக் கொண்டு வந்து கொடுத்தாள். ''அதைச் சாப்பிட்டபடி அந்த இக்ளூ வீடுகளில் யார் இருக்கிறார்கள்?'' என்றாள் நேகா.

''எங்கள் ஆட்கள்தான். நாங்கள் வெளியே வந்து படிப்பதால் கால மாற்றத்திற்கு ஏற்ப பலகைகளில் வீடு கட்டிக் கொண்டோம். படித்து முன்னேறிய இன்னும் சிலர் கார், சொகுசான வீடு என வசதியுடன் வாழ்கிறார்கள். ஆனால் பழமையில் ஊறிப்போன எங்கள் முன்னோர் இன்னும் இக்ளூவை விட்டு வரத் தயங்குகிறார்கள்.''

நேகா பாட புத்தகங்களில் மட்டுமே படித்திருந்த இக்ளூ வீட்டை நேரில் பார்த்தபோது ஆச்சரியமாக



இருந்தது. பனியைக் குடைந்து வீடு கட்டியிருக்கும் அவர்கள் வெளிச்சத்திற்காகவும், வெப்பத்திற்காகவும் திமிங்கல கொழுப்பையும், 'சீல்' என்ற கடல் பிராணியின் கொழுப்பையும் உபயோகித்திருந்தனர். வீட்டிற்கு வெப்பமும் வெளிச்சமும் தேவை என்றாலும் பனிக்கட்டிகளால் செய்யப்பட்ட வீடுகள் உருகி விடாமல் இருக்க வீட்டிற்குள் '0' டிகிரிக்கு மேற்படாமல் கண்காணித்து வருகிறார்கள். வீட்டிற்கு அருகிலேயே துணி காயப் போடவென்று மற்றொரு சிறு வீடும் கட்டியிருந்தார்கள்.

''ஒவ்வொரு எக்ஸிமோ குடும்பத்திற்கும் ஒரு கோடை கால வீடும், குளிர் கால வீடும் இருக்கும். ஆனால் எதுவுமே நிரந்தரமானதாக இருக்காது. தங்களுக்கு உணவு கிடைக்காதபோது அல்லது வாழ்வாதாரம் குறையும் போது அத்தியாவசிய பொருட்களுடன் 'ஸ்லெட்' வண்டியில் அந்த இடத்தை விட்டு கிளம்பிவிடுவார்கள். வழியில் தங்களைப் போல் கூட்டமாக வருபவர்களைச் சந்திக்கும் போது அவர்களிடம் பண்டமாற்று செய்து கொள்வார்கள்'' என்றாள் பெர்னடின்.

படர்ந்த முகமும், சப்பை மூக்கும், பருத்த உடலுமாய் இருந்த அவர்கள் நேகாவைப் பார்த்தபோதும் கண்டு கொள்ளாமல் தங்கள் வேலையை செய்து கொண்டிருந்தனர்.

நேகா அங்கிருந்து கிளம்புகையில் கிராம எல்லை வரை அந்தப் பெண்கள் கூடவே வந்தனர். எல்லையில் நடப்பட்டிருந்த 'டோட்டம் போல்' எனப்படும் வேலைப்பாடுகள் நிறைந்த மரத்தை நேகாவிடம் காண்பித்தார்கள்.

''இந்த மரம் எங்கள் கூட்டத்தைக் குறிக்கும் மேம். இதே போல் எங்களில் ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஒரு மரமும், ஒரு தலைவனும் கொடியும் உண்டு. கிராம எல்லையில் இருக்கும் இந்த மரத்தைப் பார்த்தாலே அங்கு வசிப்பவர்கள் எந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள், அவர்கள் தலைவன் யார் எனத் தெரிந்து கொள்ளலாம்.''

வெகுநாள் கற்பனைகளில் உலா வந்த இக்ளு வீட்டைப் பார்த்த மகிழ்ச்சியுடன் நேகா பஸ்ஸில் ஏறும் போது நினைத்தாள். தான் வந்த விஷயத்தைப் பற்றி இவர்களிடம் பேசவே இல்லை என்று. அவசரமாக பின்னால் திரும்பி ''இருவரும் வீட்டிற்கு வாருங்கள், கட்டாயமாய்'' என்றாள் சத்தமாக.

பிருஸாவும் பெர்டின்னும் கைகளை ஆட்டி தலையை அசைத்தனர்.

* * *

நேகா அன்று மதிய இடைவேளையில் டீச்சர் ரூமில் புத்தகம் படிப்பதில் ஆழ்ந்திருந்தாள். இரண்டு பக்கங்கள் படித்து முடிப்பதற்குள் மாதவி அவள் எதிரே வந்து அமர்ந்தாள். உரிமையுடன் அவள் கையிலிருந்த புத்தகத்தைப் பறித்தாள்.

''இதை எல்லாம் வீட்டிற்கு போன பிறகு வைத்துக் கொள். இப்போது பேசிக் கொண்டிருக்கலாம்'' என்றாள் அவளிடம்.

''இப்போது உனக்கு க்ளாஸ் இல்லையா மாதவி?''

''இருக்கிறது. ஆனால் எனக்கு மூட் இல்லை. கெமிஸ்ட்ரி புரபஸர் டிக்கன்ஸ் தலையில் அலாஸ்கா ஐஸ்சை எல்லாம் மொத்தமாய் தூக்கி வைத்தேனா.



க்ளாசை அவர் பார்த்துக் கொள்வதாகத் தலையாட்டி விட்டார்.'' மாதவி அட்டகாசமாகச் சிரித்தாள்.

''உன்னுடைய பொறுப்புகளை மற்றவர்கள் தலையில் சுமத்துவது சரியா மாதவி?''

''சரி தவறு பற்றி யோசித்துக் கொண்டிருந்தால் எப்போதும் முதுகில் சுமையுடன்தான் அலைய வேண்டும். சுமக்க நீ தயாராக இருந்தால் உன் மீது சுமத்த பலர் தயாராக இருப்பார்கள்.''

நேகா பதில் பேசுமுன் அந்த விஷயத்தை ஒதுக்கிய மாதவி ''நாளை நம் அசோசியேஷனில் ஒரு கல்சுரலில் இருக்கிறது. வருகிறாயா?'' என்றாள்.

''நாளை விடுமுறை இல்லையா?''

''ஆமாம். நாளை விடுமுறை என்பதால்தான் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.''

''நீங்கள் மூவரும் போகிறீர்களா மாதவி?''

''ரங்கா ஊரில் இல்லை. தர்ஷணாவுக்கு வழக்கம் போல் பிடிக்காது. சோ, நான் மட்டும்தான் போவேன்.''

''தர்ஷணா வீட்டில் தனியாக இருப்பாள் இல்லையா மாதவி? இந்த இரண்டும் கெட்டான் வயதில்தான் பெண்களை கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். மாதவி, நீ தர்ஷணாவுடன் அதிக நேரத்தைச் செலவிட வேண்டும். அவளுக்குத் துணையாகவும், பாதுகாப்பாகவும் நீ இருக்கிறாய் என்பதை அவள் உணர வேண்டும்.''

''தர்ஷணா உன்னிடம் ஏதாவது சொன்னாளா?'' என்றாள் மாதவி கோபத்துடன்.

''எதுவும் சொல்லவில்லை'' என்றாள் நேகா அவசரமாக. ''இந்த வயதில் மனதில் குழப்பங்களும், சஞ்சலங்களும் ஏற்படும். நாம் தகுந்த வழி காட்டாமல் போனால் அது எதாவது விபரீதத்தில் கொண்டு போய் விடும்.''

''உனக்கு இன்னும் இந்தியத்தனம் போகவில்லை நேகா. தர்ஷணா இங்கேயே பிறந்து வளர்ந்தவள். அவளுடன் படிக்கும் மற்ற பெண்களைப் போல நண்பர்களுடன் ஜாலியாகப் பொழுதைக் கழிக்கலாம். இவள் வயதில் என் அம்மா எனக்கு பள்ளிக்கூடம் போவதற்குக் கூட என் தம்பியை துணைக்கு அனுப்புவாள்.

இங்கே நிற்காதே. சத்தமாய் பேசாதே என எத்தனை கட்டுப்பாடுகள் தெரியுமா? எல்லாவற்றையும் அடித்து உடைக்க வேண்டும் போலிருக்கும். நல்லவேளை திருமணம் ஆனதும் அந்த ஜெயிலிலிருந்து பெரிய விடுதலை கிடைத்தது. திருமணமாகி வந்த பிறகு இதுவரை நான் என் பிறந்த வீடு போக விரும்பியதேயில்லை. அத்தனை வெறுப்பு அவர்கள் மீது.

இதில் பெரிய ஜோக் என்னவென்றால் கல்யாணத்திற்கு முன் நான் உடுத்தியிருந்த பாவாடை தாவணியையும் நீள சடையையும் பார்த்துதான் ரங்காரெட்டியும் வீட்டினர் என்னை பெண் கேட்டார்கள்.'' மாதவி பகபகவெனச் சிரித்தாள். ''ஆனால் தர்ஷணாவைப் பார். அவளுக்கு எத்தனை சுதந்திரம் கிடைத்திருக்கிறது. என் பெற்றோர்களைப் போல் நான் அவளைக் கைதியாக நடத்துவதில்லை. எப்போது வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் போகலாம். வரலாம். விரும்பிய உடையை அணியலாம். பிடித்த படிப்பை படிக்கலாம். இதற்கு மேல் வேறு என்ன வேண்டும் அவளுக்கு?



தனக்கு எப்படிப்பட்ட வாழ்க்கை கிடைத்திருக்கிறது என்பதை உணராத முட்டாள் பெண் அவள்.''

''மாதவி அளவுக்கு அதிகமாக அளிக்கப்படும் சுதந்திரம் பாதுகாப்பின்மையைத்தான் ஏற்படுத்தும். பாதுகாக்க யாருமில்லை என்ற எண்ணம் வெறுமையை உண்டாக்கும்.''

நேகா பேசிக் கொண்டிருக்கையிலேயே மாதவியின் செல்போன் ஒலித்தது. ''இருபது நிமிடங்களில் அங்கிருப்பேன்'' என போனில் யாரிடமோ சொன்னவள், ''பை ஸீ யூ'' என அவள் பதிலை எதிர்பாராமல் வெளியே விரைந்தாள்.

## 13

நேகா வீட்டிற்கு வந்தபோது பிருஸாவும், பெர்னடின்னும் அவளுக்காகக் காத்திருந்தார்கள். நந்தகிஷோர் கொடுத்த பர்கரையும் மசாலா டீயைப் பருகிக் கொண்டிருந்தவர்களைப் பார்த்ததும் ''ஹாய்'' என்றாள் நேகா உற்சாகத்துடன்.

''நீங்கள் வகுப்புக்கு வந்து எத்தனை நாட்கள் ஆகின்றன தெரியுமா?'' என்றாள் நேகா கண்டிப்பான குரலில்.

இருவரும் எழுந்து அவள் அருகில் வந்தார்கள். ''ஆமாம் மேம். உங்களையும் பார்த்து வெகு நாட்கள் ஆகின்றன. அன்றைக்கு எங்கள் வீட்டிற்கு வந்தபோது

பேச நேரம் இல்லை. நீங்கள் முன்பைவிட லேசாக எடைகூடி அழகாகி விட்டீர்கள்'' என்றார்கள் சிரித்தபடி.

''உங்கள் சோப்பு இங்கே கரையாது'' என நேகா சொல்லிக் கொண்டிருக்கும்போதே குறுக்கிட்டு ''தேங்க்யூ'' என்றான் நந்தகிஷோர்.

''எதற்கு? நாங்கள் மேம்மைத்தானே சொன்னோம்!'' என்றான் பிருஸா.

''உங்கள் மேடத்தை அத்தனை அழகாக கவனித்துக் கொண்டது நான் தானே!'' அதனால் எல்லா கிரடிட்டும் எனக்குத்தான் சேர வேண்டும்.''

''சரி எல்லா கிரடிட்டையும் நீயே எடுத்துக் கொள். இப்படி எல்லாம் இளம் பெண்கள் மத்தியில் உன்னை நீயே புகழ்ந்து பேசி உன் இமேஜ்ஜை உயர்த்திக் கொண்டால்தான் உண்டு'' என்றாள் நேகா. பதிலுக்கு சிரித்தபடி 'பேசிக் கொண்டிருங்கள்' என நந்தகிஷோர் விலகிச் செல்ல ''சார் எத்தனை நல்லவர்!'' என்றாள் பிருஸா.

''ஆமாம். மனித உருவில் திரியும் மிருகங்களைத்தான் நாம் பார்க்கிறோம்!'' என்றாள் பெர்னடின்.

''என்ன விஷயம்?'' என்றாள் நேகா இருவரையும் பார்த்து. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டபின் பிருஸா சொன்னாள். ''யுனிவர்சிட்டியில் வேலை பார்க்கும் ராபின் அடிக்கடி நாங்கள் செல்லும் போது வழி மறித்து அவருடன் வரும்படி கூப்பிடுவார் மேம். நாங்கள் முடியாது என்று சொன்னால் தூக்கிக் கொண்டு போய் விடுவதாக மிரட்டுவார்.

நாங்கள் பழங்குடி பெண்கள் என்பதால் இளக்காரமாகிப் போனோம் போலிருக்கிறது. எங்கள் வீட்டு ஆண்களிடம் சொன்னால் ஊறு கத்தியால் ஒரே



போடாக போட்டு விடுவார்கள். எங்களால் பிரச்சினை வேண்டாம் என்பதால் வெளியே வராமல் இருந்தோம்.''

நேகாவிற்கு திகைப்பும், கோபமுமாய் இருந்தது. ராபின் இவர்களைப் பற்றி தன்னிடம் விசாரித்தது நினைவுக்கு வந்தது. ராபினுடைய பெண் வயதிருக்கும் இவர்களிடம் அப்படி நடந்து கொள்ள எப்படி மனம் வந்தது? நேகா ஆதரவுடன் அவர்கள் தோளைப் பற்றினாள். ''நீங்கள் இதற்கெல்லாம் பயந்துவிடக் கூடாது. தினமும் நாம் சந்திக்கும் மனிதர்களில் ஒவ்வொருவரும் ஒரு மாதிரி இருப்பார்கள். உதவி செய்வதற்கென்றே சிலர் இருப்பது போல் தொல்லை தருவதற்கும் சிலர் இருக்கத்தான் செய்வார்கள். அவர்களைக் கண்டு பயந்து ஒதுங்கினால் நாம் எப்போதுமே வெளியே வர முடியாது. எதிர்த்து நிற்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.''

''எதிர்த்து நிற்பதா? அடித்தே விட்டோம் தெரியுமா?'' என்றாள் பெர்னடின்.

''என்னது? ராபினை அடித்தீர்களா? உண்மையாகவா?'' என்றாள் நேகா நம்ப முடியாமல்.

''ஆமாம். நேற்று நானும் பெர்னடினும் கடை வீதிக்குப் போய் விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தோம். பெர்னடின்னுடன் அவள் தம்பி வந்திருந்தான். அவனுடன் விளையாடியபடி அவள் சற்று பின் தங்கி விட நான் வேகமாக முன்னால் நடந்தேன். ராபின் தனியாக வருவதைப் பார்த்ததும் வேகமாக என் அருகில் வந்தான். 'என்னுடன் வா போகலாம்' என வழக்கம்போல் வழியை மறித்துத் தொல்லை தந்தான். நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். நிறைய பணம்

தருகிறேன். விதவிதமாய் உடைகளும் நகைகளும் வாங்கித் தருகிறேன் என கூறியபடி பலவந்தமாய் என் கைகளைப் பற்றினான்.

எனக்கு மிகுந்த கோபம் வந்தது. முதலில் இங்கிருந்து போய்விடு என்றேன். எலும்பையும் தோலையும் அணிந்து கொண்டு ஊர் விட்டு ஊர் நாடோடிகளாகத் திரியும் கூட்டம் நீங்கள். தங்கமும், பணமுமாகத் தரு கிறேன் என்றால் அதன் அருமை தெரியவில்லையா? என்றான். என் கையில் விற்பதற்காகக் கொண்டு போயிருந்த கரடி தோலினால் செய்யப்பட்ட வார் இருந்தது. அதை சுழட்டி ஒரு வீசு வீசினேன். அவன் முதுகிலும் கையிலும் நிச்சயம் தோல் பிய்ந்திருக்கும். அவன் வலியில் கத்தியபடி என் கையிலிருந்த வாரை பிடுங்க முயல, சத்தம் கேட்டு பெர்னடின்னும் அவள் தம்பியும் ஓடி வந்தனர். அவர்களும் சேர்ந்து அவனை அடிக்க ஆரம்பிக்க ராபின் பயந்து ஓடிப் போனான்.

''நிஜமாகவா?'' என்றாள் நேகா வியப்புடன்.

''உண்மைதான் மேம். இப்போது இங்கே வரும்போது கூட வழியில் ராபினைச் சந்தித்தோம். எங்களைப் பார்த்ததும் தலையை குனிந்து கொண்டு வேகமாக நடந்து போனான்'' என்றார்கள் இருவரும் கலகலவெனச் சிரித்தபடி.

நேகாவிற்கு அந்தப் பெண்களின் சிரிப்பும் தன்னம் பிக்கையும் பார்க்க சந்தோஷமாக இருந்தது. மேலும் சிறிது நேரம் கலகலத்து விட்டு அவர்கள் கிளம்புகையில் நேகா சொன்னாள். ''இந்த விஷயத்தை இத்துடன் மறந்து விடுவோம். இனி ராபினை எங்காவது பார்த்தாலும்



சீண்டிப் பார்க்க முயல வேண்டாம். நம் வேலையை கவனிப்போம். நாளை புத்தகத்துடன் கல்லூரிக்கு வாருங்கள். இனி உங்கள் கவனமெல்லாம் படிப்பில்தான் இருக்க வேண்டும்.''

''சரி'' என தலையசைத்து வாசல்வரை சென்ற அந்தப் பெண்கள் நினைவு வந்தவர்களாகச் சொன்னார்கள். ''உங்கள் சார் ஜென்டில்மேன் மேம். நீங்க ரொம்ப லக்கி.''

அவர்கள் சென்ற பின்பும் அந்த வார்த்தைகள் நேகா வின் காதில் எதிரொலித்தன. நாப்கினால் கைகளைத் துடைத்தபடி வந்த கிஷோர். ''அந்த பெண்கள் போய் விட்டார்களா?'' என்றான் அவளிடம்.

''ஆமாம்.''

''சாப்பிடச் சொல்லலாம் என்று நினைத்தேன். அதற் குள் போய் விட்டார்கள்.''

''நல்லவேளை போய் விட்டார்கள். அவர்களாவது நல்ல சாப்பாடு சாப்பிடட்டும்'' என்றாள் நேகா.

''டயர்டா வந்திருப்பயேன்னு சமைச்சுக் கொடுத்தா, என்னையே குறை சொல்றியா?''

இருவரும் சிரித்தபடி சாப்பிடப் போகையில் நேகா, ராபினைப் பற்றி, அவர்கள் அவனை அடித்துத் துரத் தியதை எல்லாம் சொன்னாள். முழுவதும் கேட்டு விட்டு நந்தகிஷோர் சொன்னான். ''அந்த பெண்களின் துணிச் சலைப் பற்றிச் சொல்ல எதுவுமே இல்லை. பிறந்ததி லிருந்தே பனிக்குகையிலும், ஆழ்கடலிலும், அடர்ந்த காடுகளிலும் இயற்கையை எதிர்த்துப் போராடி வாழ்ந் தவர்கள். அவர்களின் தைரியத்திற்கு குறைவேது?

ராபினை அவர்கள் அடித்ததோடு விட்டார்களே என்பது தான் ஆச்சரியமாக இருக்கிறது'' என்ற நந்தகிஷோர் சிறிது நேர யோசனைக்குப் பிறகு சொன்னான் ''உலகின் எல்லா பழங்குடி இனத்தவரையும் நாகரீகமடைந்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் நகர மக்கள் துன்புறுத் தினார்கள். அவர்கள் அறியாமையைப் பயன்படுத்தி அடிமைப்படுத்தினார்கள்.

எக்ஸிமோக்களும் இதற்கு விதிவிலக்கல்ல. மெதுவாக அலாஸ்காவினுள் புகுந்த ஐரோப்பியர்கள் எக்ஸிமோ ஆண்களை மிரட்டி கடலில் ஆட்டர்களையும், பிற கடல் விலங்குகளையும் பிடிக்க அழைத்துச் சென் றார்கள். அவற்றின் தோலை விற்று நல்ல பணம் சம்பாதித்தார்கள்.

ஆண்கள் வேட்டையாட சென்ற பிறகு வீட்டில் இருக்கும் பெண்களைக் கற்பழித்தார்கள். சிறுவர்களை அடிமை வேலை செய்ய வைத்தார்கள். அலாஸ்காவின் முதலில் பெட்ரோலியம் இருப்பது தெரிய வந்ததே எக்ஸிமோக்களால்தான்.

இந்த பனிமலையும், உறைகடலும், ஊசியிலைக் காடுகளும் அதில் புதைந்து கிடக்கும் இயற்கைச் செல்வங்களும் அவர்கள் சொத்து. ஆனாலும் அவர்களை தீண்டத் தகாதவர்களாகவும், காட்டு மிராண்டிகளாகவுமே சமூகம் பார்க்கிறது'' என்றான் வருத்தத்துடன்.

அவன் சொல்வதை உன்னிப்பாக கவனித்துக் கொண் டிருந்த நேகாவைப் பார்த்த நந்தகிஷோர் சிரித்தபடியே கேட்டான். ''நீ இங்கு வந்த கொஞ்ச நாளிலேயே உன்னைத் தேடி எத்தனை பிரச்சனைகள் வருகிறது பார்.''



''ஆமாமில்லை!'' என்றாள் நேகா வியப்புடன். ''பிரச் சனைகளும், சந்தோஷங்களும் நல்லவர்களைத்தான் தேடி வரும்'' என்றாள் புன்னகையுடன்.

''அவை மட்டுமா வரும்? காதலும் கூடத்தானே வரும்!''

''காதலா?'' என்றாள் நேகா திகைப்புடன்.

''சொல்லு நேகா. நீ யாரையும் காதலித்ததில் லையா?'' என்றான் நந்தகிஷோர் அவள் முகத்தையே பார்த்தபடி.

''எனக்கு அதற்கெல்லாம் நேரம் இல்லை கிஷோர். வாழ்க்கையில் கால் ஊன்றி நிற்க வேண்டும் என்பதி லேயே என் கவனம் பூராவும் இருந்தது.''

''உன்னை யாராவது விரும்பியிருக்கலாம்.''

''அது எனக்குத் தெரியாது கிஷோர்.''

''எப்போதும் விழிப்புடன் இரு நேகா. இல்லை என் றால் நம்மைப் பற்றிய பல விஷயங்கள் நமக்கே தெரி யாமல் போய்விடும்.''

''ஏய், நீ என்ன சொல்ல வருகிறாய்! சுற்றி வளைக் காமல் நேரடியாகச் சொல்லு'' என்றாள் நேகா.

''சரி. நேரடியாகக் கேட்கிறேன். இப்போதும் நீ யாரை யும் காதலிக்கவில்லையா நேகா?''

நேகாவின் கண்களைப் பார்த்து அவன் கேட்க, அந்தப் பார்வையும் குரலும் அவளை ஒரு நொடி தடுமாற வைத்தது. என் உடலிலிருந்து உயிர் வரை நீ நிறைந் திருக்கையில் வேறு யாரை காதலிக்க முடியும் கிஷோர்? என்ற வார்த்தைகள் நாவின் நுனியில் நின்றன.

ஆண்மையின் கம்பீரமும், அழகுமாய் நந்தகிஷோர் எதிரில் அமர்ந்து ''சொல்லு நேகா'' என்கையில் நேகாவின் வாய்பூட்டு தானாகக் கழண்டது.

அவள் வாயைத் திறந்த சமயம் சுமன் உள்ளே வந்தார்.

''என்ன விழிக்கிறீர்கள் இருவரும்? என்னை மறந்து விட்டதா? அடையாளம் தெரியவில்லையா?'' என்றார் சிரிப்புடன்.

''இத்தனை பெரிய உருவத்தை அடையாளம் தெரியாமல் யாராவது இருக்க முடியுமா? என் அம்மாவுடன் உங்களைப் பார்த்த நினைவிருக்கிறது'' என்றான் நந்தகிஷோர்.

''இவன் திமிரைப் பார்த்தாயா நேகா'' என்றபடி சுமன் சேரில் அமர்ந்து டைனிங் டேபிளில் இருந்த ப்ளேட்களில் ஒன்றை எடுத்துக் கொண்டதும் நேகா அவருக்கு பரிமாறினாள். உணவை முடித்துவிட்ட நந்தகிஷோர் எழுந்து கொள்ள, நேகாவும் அவரும் பேசியபடியே சாப்பிட்டனர். நேகா இங்கு வருவதற்கு முன் தான் டெல்லியில் வேலை பார்த்ததாகச் சொல்லவும் என் சொந்த ஊர் டெல்லிதான்'' என்றார் சுமன்.

''நான் டெல்லியில் தான் பிறந்தேன். என்னுடன் பிறந்தவர்கள் ஒன்பது பேர் நேகா. குடும்பக் கட்டுப்பாடு பாவம் என்று நினைத்த காலம் அது. நிறைய பிள்ளைகள் பெற்றால் வயது முதிர்ந்த பின் ஒரு பிள்ளையாவது தங்களை அரவணைத்துப் போகக் கூடும் என்ற அன்றைய பெற்றோரின் மனோபாவமும் ஒரு காரணமாய் இருக்கக் கூடும். ஆனால் நாங்கள் நிறைய பேர் என்பதாலேயே யாரும் பெற்றோரை சார்ந்திருக்க



முடியவில்லை. எங்களது படிப்பையும் வேலையையும் நாங்களே தேடிக் கொள்ள வேண்டியிருந்தது.

எங்கள் எல்லோருக்குமே பெற்றோர் வரன் பார்த்து சம்பிரதாயம் மாறாமல் எளிமையாக திருமணம் செய்து வைத்தனர். என் சகோதரிகள் மணமாகி கணவன் வீடு போய்விட, சகோதரர்கள் வேலை கிடைத்த இடத்தில் செட்டில் ஆகிவிட, என் பெற்றோர் வயதான காலத்தில் அவர்களே எதிர்பாராத விதமாய் தனியாகிப் போனார்கள்.

தினமும் எனக்கு இந்தியாவிலிருக்கும் என் பெற்றோர்களைப் பற்றித்தான் கவலையாய் இருக்கும். அன்றைய அலாஸ்கா வாழ்க்கை மிக கடினமானது நேகா. இப்போது போல இன்டர்நெட் செல்போன் வசதிகளோ, டிபார்ட்மென்ட் ஸ்டோர்களோ கிடையாது. இந்திய சாமான்கள் கிடைக்காது. புயலினால் கப்பல், விமானப் போக்குவரத்து தடைபடும்போது சாப்பிட ப்ரெட் கூட கிடைக்காது.

பல சமயம் மின்சார தொடர்பு அறுந்து போகும். சாலைகளைப் பனி மூடிவிடும்போது உடல்நிலை சரியில்லாதவரை மருத்துவமனைக்கு அழைத்துப் போக முடியாது. எல்லாவற்றையும் விட சிரமம் என்னவென்றால் இங்கு மத்தினால் செய்யப்பட்ட கம்மோடுகள்தான் முன்பு டாய்லெட்டில் பயன்படுத்தப்படும். அதில் நாம் உட்கார்ந்த உடன் பனியில் உறைந்து கிடப்பதால் ஒட்டிக் கொள்ளும். பிறகு நம்மைச் சுற்றி சூடான நீர் ஊற்றினால்தான் கம்மோடை விட்டு எழுந்திருக்க முடியும். இது போன்ற ஒரு இடத்தில் என் பெற்றோரை வரவழைத்துக் கொள்ள முடியாமல் வருமானம் தரும் வேலையையும்

விட முடியாமல் மிகவும் சிரமப்பட்டேன். குழந்தைகள் பிறந்ததும் அவர்கள் வளர்ந்தவுடன் கண்டிப்பாக இந்தியாவில் செட்டில் ஆகிவிட வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் எங்களுக்கு அந்த சிரமம் கொடுக்காமல் பூஜா பிறந்த சில மாதங்களிலேயே என் அம்மாவும் அப்பாவும் ஒருவர் பின் ஒருவராய் போய்ச் சேர்ந்தார்கள். பெற்றோர்கள் இறந்து சகோதர சகோதரி களும் திசைக்கொருவராய் போன பிறகு பூஜாவும், நந்த கிஷோரும் இந்த பகுதியிலேயே இருந்து விட்டதால் இந்தியாவில் செட்டில் ஆக வேண்டும் என்ற என் விருப்பம் நிறைவேறாமலே போயிற்று. அட்லீஸ்ட் மருமகளாவது இந்தியப் பெண்ணாக இருந்தால் எங்கள் ஏக்கம் தீர்ந்து போகும்'' என்றார் சுமன்.

''அதற்கு சான்ஸே இல்லை'' என்றான் நந்தகிஷோர். ''நான் திருமணம் செய்து கொள்ளப் போவதில்லை. அதனல் உங்கள் விருப்பத்தை மாற்றிக் கொள்ளுங்கள்.''

''எதையும் உறுதியாகச் சொல்லாதே நந்தகிஷோர். நீயே வந்து எனக்கு திருமணம் செய்து வையுங்கள் என்று கேட்கும் காலம் வரத்தான் போகிறது.''

''நிச்சயம் இல்லை.''

''நிச்சயம் நடக்கும். என் விருப்பம் மாறப் போகிறதா, அல்லது உன் எண்ணம் மாறப் போகிறதா என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.''

''பார்க்கலாம்.''

இருவரின் பேச்சையும் கவனித்துக் கொண்டிருந்த நேகாவிற்கு வருத்தம் ஏற்பட்டது. நந்தகிஷோர் மிக வெளிப்படையானவன். தனிமையில் இருந்த போதும் தவறாக ஒரு பார்வை பார்த்தறியாதவன். அதே சமயம்



அவள் மீது தனக்குள்ள பிரியத்தையும் வெளிப்படையாக சொல்லியிருக்கிறான். திருமணம் பற்றிய அவன் எண்ணங்களும் நேகா அறிந்தவைதான். என்றாலும் தன் அப்பாவிடம் அவன் உறுதியாக திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என்று மறுத்தபோது அவள் மனம் வேதனையடையவே செய்தது.

நேகா வாடிய முகத்துடன் எழுந்து செல்வதைக் கண்ட சுமன் புன்னகைத்தார். ''கண்ணாமூச்சி விளை யாடறீங்களா ரெண்டு பேரும்?'' என்றார் வாய்விட்டு.

நேகாவிற்கு அன்று மாலை சில்வியாவிடமிருந்து போன் வந்தது. அவள் வீட்டில் குடித்தனம் இருந்தவர்கள் காலி செய்து விட்டதால் ஞாயிற்றுக் கிழமை நேகா வரலாம் என்றாள்.

நேகாவிற்கு ஏனோ கலக்கமாக இருந்தது. ஞாயிற்றுக் கிழமைக்கு இன்னும் நான்கே நாட்கள் இருந்தன. அடுத்த மாதம், இருபது நாள், இன்னும் பத்து நாள் என யோசிப்பதைக் கூட தள்ளிப் போட்டது போய் இப்போது திடுதிப்பென கிளம்ப வேண்டும் என்றதும் செய்வதறி யாத திகைப்பு ஏற்பட்டது. அசையாமல் சில நிமிடங்கள் அமர்ந்திருந்த நேகா தலையை உலுக்கிக் கொண்டாள். இதென்ன முட்டாள்தனம்! அடுத்தவர் வீட்டில் எத் தனை நாள் இருக்க முடியும்? போவதென முடிவு செய்த பின் இந்த பலவீனம் எப்படி வந்தது? சொந்த ஊரையும் உறவையும் விட்டு வந்தபோது கலங்காத மனம் இப்போது கலங்குவானேன்!

நேகா வெகு நேரத்திற்கு பிறகு தன்னை சமாளித்துக் கொண்டு எழுந்தாள்.

* * *

''நேகா'' என்ற குரலுடன் மெலிதாக கதவைத் தட்டிவிட்டு சுமன் உள்ளே நுழைந்தார். ''கபோர்ட் க்ளீன் பண்ணுகிறாயா? நீ ப்ரியாக இருந்தால் 'கே மார்ட்' வரை போய் சில சாமான்கள் வாங்கலாம் என்றிருந்தேன்'' என்றார் அவளிடம்.

''இதோ பத்து நிமிடத்தில் என் வேலை முடிந்து விடும். அப்புறம் நான் ப்ரீதான் அங்கிள்'' என்ற நேகா ''கிஷோர் எங்கே போனான்? இன்று முழுவதும் அவனைப் பார்க்கவே இல்லையே!'' என்றாள் அவரிடம்.

''''பெளுகா பாயிண்ட்'' என்ற இடத்தில் ஏழு பேர் உறை பனியில் சிக்கிக் கொண்டார்களாம். அவர்களை மீட்டு வரப் போயிருக்கிறான்'' என்றார் சுமன்.

நேகா சில நிமிடங்களில் தயாராகி அவளுடன் மார்க் கெட்டிற்கு நடந்து செல்கையில் கேட்டாள். ''உங்கள் மகன் இத்தனை ஆபத்தான வேலையில் இருக்கிறானே. உங்களுக்கு பயம் இல்லையா அங்கிள்?''

''ஆபத்து எல்லா இடத்திலும் இருக்கிறது நேகா. இந்தியாவிலும் பூகம்பமும் சுனாமியும் ஏற்பட்டு தூங்கிக் கொண்டிருந்தவர்களும், நடந்து சென்றவர்களும் சாக வில்லையா? சாலை ஓரம் நிற்கையில் வண்டி மோதி, நோய் தாக்கி ஒரு நாளைக்கு எத்தனையோ பேர் இறக்கிறார்கள். உன் ஆன்ட்டிதான் ஆரம்பத்தில் கொஞ்சம் பயப்பட்டாள். இப்போது அவளுக்கும் பழகி விட்டது.''

நேகா பதில் பேசாமல் நடந்தாள். அவள் முகத்தில் தெரிந்த யோசனையைப் பார்த்ததும் ''நந்தகிஷோர் எந்தச் சூழ்நிலையையும் சமாளிக்கத் தெரிந்தவன். அவனுக்கு எதுவும் ஆகாது. பயப்படாதே'' என்றார்.



அவரது மகனின் பாதுகாப்பு பற்றி சுமன் தனக்கு ஆறுதல் கூறுவது நேகாவுக்கு வேடிக்கையாக இருந்தது.

மார்க்கெட்டில் மளிகைப் பொருட்களும், காய்கறி களும் வாங்கிக் கொண்டு வரும் வழியில் சுமன் வழி யிலிருந்த பிள்ளையார் கோவிலுக்கு அவளை அழைத்துப் போனார்.

''நான் இங்கே வந்ததே இல்லையே!'' என்றாள் நேகா வியப்புடன்.

''நந்தகிஷோர் கோவிலுக்குப் போகிற வழக்கம் இல்லை. அதனால் உன்னைக் கூட்டி வந்திருக்க மாட் டான்'' என்ற சுமன், ''இது உங்க ஊர் விநாயகர் தான் நேகா. தமிழ்நாட்டில் மகாபலிபுரத்தில் செய்யப்பட்டது. நன்றாக வேண்டிக்கொள். உலகின் உச்சியில் இருக்கும் விநாயகர் அநேகமாக இவராகத்தான் இருக்கும்'' என்றார்.

கருங்கல்லால் செதுக்கப்பட்ட தமிழ்நாட்டு பாணி விநாயகரைப் பார்த்ததும் நேகாவின் உடல் சிலிர்த்தது. சொந்த மண்ணில் பிறந்ததிலிருந்து பார்த்துப் பழகிய உருவத்தைக் கண்டதும் கண்களில் நீர் ததும்பியது. குனிந்து விநாயகரின் பாதம் தொடுகையில் தாயின் அரவணைப்பு கிடைத்தது போன்ற உணர்வில் நேகா குலுங்கிப் போனாள்.

சுமன் அவளை விட்டு சற்றுத் தள்ளி படி அருகே அமர்ந்தார். சில நிமிடங்கள் கண்களை இறுக மூடி நின்றிருந்த நேகா, தன்னை சமாளித்துக் கொண்டு சுமன் அருகில் வந்தாள்.

''தேங்க்யூ அங்கிள்'' என்றாள் பரவசத்துடன்.

சொந்த மண்ணுக்கு உள்ள ஆகர்ஷண சக்தி இதுதான் நேகா. நீரும் மொழியும், மண்ணும் ஈர்ப்புத் தன்மை உடையவை'' என்றார் சுமன்.

''உண்மைதான். ஒருவேளை அதனால்தான் கடவுள்களுக்கு நாம் பிறந்த மண்ணிலிருந்தே உருவம் கொடுத்து, நீரால் அபிஷேகம் செய்து, வார்த்தைகளால் அர்ச்சனை செய்கிறார்களோ என்னவோ?'' என்றாள் நேகா.

அவர்கள் இன்னும் கிளம்பி வீட்டிற்கு வந்தபோது நந்தகிஷோர் வீட்டில் இருந்தான்.

''அப்பா வந்த பிறகு நீ ரொம்ப சுத்த ஆரம்பித்து விட்டாய். வீட்டிலேயே இருப்பதில்லை'' என்றான் நந்தகிஷோர் அவளிடம்.

''நீ அழைத்துப் போவதாய் இருந்தால் இந்த கிழவனுடன் ஏன் சுற்றப் போகிறாள்?'' என்றார் சுமன்.

''அப்படியானால் உங்களிடமிருந்து இவளைக் காப்பாற்றுவதற்காகவாவது வெளியே அழைத்துப் போக வேண்டும். நேகா வா போகலாம்'' என்றான் நந்தகிஷோர்.

''அங்கிள் ஏதோ விளையாட்டிற்குச் சொல்கிறார் கிஷோர். அதற்காக நாம் போக வேண்டிய அவசியமில்லை'' என்றாள் நேகா.

''அவனே உருப்படியாக இப்போதுதான் ஏதோ செய்யத் தொடங்கியிருக்கிறான். அதை நீ ஏன் ஆரம்பத்திலேயே தடுக்கிறாய். போய்த்தான் பாரேன்! அப்படி என்ன அதிசயத்தைக் காட்டப் போகிறான் என்று பார்க்கலாம்'' என்றார் சுமன்.



''அப்பாவே சொல்லியாச்சு! பிறகென்ன?'' என நந்தகிஷோர் மெலிதாகச் சீண்ட, அந்த சீண்டலுக்கு பதில் பேசாமல் நேகா அவனுடன் கிளம்பினாள்.

அவர்கள் போனதும் கதவைத் தாழிட்டுக் கொண்டு உள்ளே வந்த சுமன் தொலைபேசியில் நம்பர்களை டயல் செய்தார். தொடர்பு கிடைத்ததும் 'அனுசூயா நீ சொன்னபடி ஜோடிப் பொருத்தமும், மனப் பொருத்தமும் அபாரம். மற்ற விஷயங்கள் நாம் முடிவு செய்தபடியே செய்யலாம்' சுமன் தன் திட்டங்களை விவரிக்கத் ஆரம்பித்தார்.

ஆங்கரேஜ் நகரின் பிரதான சாலைகளில் ஒன்றான நார்தன் லைட்ஸ் சாலையில் கார் சென்று கொண்டிருந்தது. அந்தக் குளிர் இரவில் வாகன போக்குவரத்தின்றி சாலை வெறிச்சோடி இருந்தது. மிருகங்கள் பனிக்குவியலின் நடுவே 'ஹைபர்நேஷன்' எனப்படும் ஆழ்ந்த உறக்கத்தில் கிட்டத்தட்ட கோமா நிலையில் இருந்தன.

''கிஷோர் எங்கே போகிறோம்?'' என்றாள் நேகா அமைதியை உடைத்து,

''சொல்கிறேன்'' என்ற நந்தகிஷோர் மேலும் சிறிது தூரம் சென்றதும் காரை நிறுத்தினான்.

''எதிரே பார்'' என்றான் நேகாவிடம்.

நேகாவின் கண் எதிரே வானம் இருட்டாக இருந்தது. ஒன்றும் புரியாமல் நந்தகிஷோரைப் பார்த்தாள். அவன் வானத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கவும் நேகாவும் பார்வையைத் திருப்பினாள். சில நிமிடங்கள் அப்படியே கழியவும் நேகாவுக்குப் போரடித்தது. ''நடு இரவில் இந்த இருளைப் பார்க்கவா கூட்டி வந்தாய்? வா போகலாம்'' என்றாள் நேகா.

நந்தகிஷோர் பார்வையில் திருப்பாமல் அமர்ந்திருந்தான். நேகா மெல்லிய கொட்டாவியை கை மறைவில் நாசூக்காக வெளியேற்றினாள். அப்போதுதான் வானில் அந்த அதிசயம் நடந்தது. வானத்தில் பச்சை நிற விளக்கொளி ஒன்று தெரிந்தது. முதலில் சின்ன விளக்கொளி போல் தெரிந்தது. பார்த்துக் கொண்டிருக்கையிலேயே வானின் பச்சை நிற திரைச்சீலை விரித்தது போலப் பெரிதாக விரிந்தது.

நேகா ஆச்சரியத்துடன் பார்க்கும் போதே மஞ்சள் நிற ஒளி ஒன்று ஊடுருவி பச்சையும் மஞ்சளுமாய் பின்னிப் பிணைந்து வானில் பாலே நடனமாடுவது போல் இருந்தது. அடுத்தது பச்சை நிற ஒளி சற்றே மங்கினாற் போலிருக்க மஞ்சள் ஒளிக்கு மேலே சிவப்பான ஒளிக்கீற்று தோன்றியது.

மறுபடி பச்சை நிறம் ஒளிர்விட மஞ்சளும் பச்சையும் சிவப்புமாய் வானில் வெளிச்சத்தைப் பாய்ச்சி ஹோலி விளையாடுவது போலிருந்தது. பார்த்துக் கொண்டிருக்கையிலேயே அனைத்தும் மறைந்து வானம் இருட்டாகி விட நேகா தான் பார்த்தது நிஜமா, கனவா என குழம்பிப் போனாள்.

நந்தகிஷோருடன் காரில் அமர்ந்திருப்பது கூட கனவா, உண்மையா என்ற குழப்பம் வந்தது. நேகா பிரமையுடன் இருக்க, வானில் மறுபடி பச்சை நிற ஒளி பிரம்மாண்டமாய் எழுந்தது. கண்ணுக்கெட்டியவரை வானம் முழுவதையும் ஆக்ரமித்துப் பார்க்கும் இடமெல்லாம் வானம் பச்சையாய் தெரிந்தது. இந்த பச்சை வானத்தை கற்பனை கூட செய்திராத இதுவரை கேள்விப்பட்டிராத நேகா பயந்து போனாள். பச்சையும்



சிவப்பும் மஞ்சளுமாய் பாயும் ஒளிவெள்ளம் தன்னை மூழ்கடிப்பது போல் தோன்ற 'கிஷோர்' என கத்த வாயைத் திறந்தவள் முடியாமல் உடனடியாக மயக்கமானாள்.

நந்தகிஷோர் பதறிப் போனான். ''நேகா.. நேகா'' என்ற அவன் உலுக்கலுக்கும் குரலுக்கும் அவளிடமிருந்து பதில் வராமல் இருக்கவே அங்கிருந்து காரைக் கிளப்பினான். வழியில் தென்பட்ட ஒரு பஸ் நிறுத்தத்தின் கூரைக்குக் கீழ் காரை நிறுத்தி கார் கதவை லேசாகத் திறந்தான்.

குபீரென காரினுள் புகுந்த பனிக்குளிர் நேகாவைத் தாக்கவே, நேகா சடாரென எழுந்து அமர்ந்தாள். அவள் எழுந்ததும் நந்தகிஷோர் காரின் கதவை அழுத்தமாக மூடினான். நேகா மிரட்சியுடன் சுற்றிலும் பார்த்தாள். வானத்திலிருந்து வரும் ஒளிவெள்ளம் தன்னை துரத்துவது போலவும், தான் பயந்து ஓடுவது போலவும், வானத்திலிருந்த ஒளி ஊடுருவி கீழேயிருக்கும் பனி எல்லாம் பச்சையும் மஞ்சளுமாய் தெரிவது போலவும், தரையிலும் வானிலும் பார்க்கிற இடமெல்லாம் ஒளி சூழ்ந்து பிரளயம் ஏற்படுவது போலவும் ஒரு ஹாலிவுட் படத்தின் காட்சிகள் போல அவன் கண் முன்னே காட்சிகள் விரிந்தன.

''பயந்து விட்டாயா நேகா?'' என நந்தகிஷோர் அவள் தலையைத் தொடவும், பாய்ந்து அவனை அணைத்துக் கொண்டு ''எனக்கு பயமா இருக்கு கிஷோர். என்னைக் காப்பாத்து ப்ளீஸ்'' என்றாள் கண்களை இறுக மூடி. நந்தகிஷோர் ஒரு கணம் திகைத்துப் போனான். பூமாலையாய் மேலே விழுந்து கிடந்தவளை விலக்க

மனம் வராமல் அவள் முதுகை வருடினான். ''நான் இருக்கிறேன் நேகா. பயப்படாதே'' என்றான் அவள் காதருகே. இருவரின் நெருக்கவும் குளிருக்குக் கதகதப்பைத் தர விலகத் தோன்றாமல் கிடந்த சில நிமிடங்களுக்குப் பிறகு நந்தகிஷோர் தன் தோளில் புதைந்திருந்த அவள் முகத்தை உயர்த்தினான். குனிந்து மிக மிக மென்மையாக அவள் இதழ்களில் முத்தமிட்டான்.

நேகா அசையாமல் இருக்க மீண்டும் நெற்றியில் முத்தமிட்டான். அவளை இருக்கையில் சரியாக அமர வைத்துவிட்டு காரை ஸ்டார்ட் செய்தான். நேகா மயக்கமா, உறக்கமா என புரியாத உணர்வில் பின்னால் சாய்ந்தவள் சில நிமிடங்களில் உறங்கிப் போனாள்.

வீடு வந்ததும், உறங்கப் போய்விட்ட சுமனைத் தொல்லைப்படுத்தாமல் தன் சாவியால் கதவைத் திறந்து அவளை அழைத்துப் போய் அவளது அறையில் விட்டதும் கனவு போலவே இருந்தது நேகாவுக்கு.

## 14



நேகா காலையில் எழும்போதே நான்கு நாட்களில் ஒரு நாள் கழிந்து போயிற்று என்ற எண்ணம் எழுந்தது. வழக்கம் போல் பரபரப்பாக வேலைக்குக் கிளம்ப முடியாமல் சோம்பலாக இருந்தது. படுக்கையில் இரண்டு தரம் புரண்டவளுக்கு பேசாமல் விடுமுறை எடுத்துக்



கொண்டால் என்ன என்று தோன்றியது. வேலையில் சேர்ந்ததிலிருந்து இதுவரை விடுமுறை எடுத்ததே இல்லை. இப்போது மூன்று நாட்கள் விடுமுறை எடுத்துக் கொண்டால் பொருட்களை பேக் செய்யவும் வசதியாக இருக்கும் என்று தோன்றவே நேகா தன் விடுமுறை விண்ணப்பத்தை மெயிலில் அனுப்பி விட்டு தன் வேலையை கவனிக்கப் போனாள்.

காலை உணவு தயாரிப்பில் மும்முரமாக இருந்த நேகாவைப் பார்த்ததும்,

''இன்று உனக்கு விடுமுறையா நேகா?'' என்றார் சுமன்.

''இல்லை அங்கிள். நான்தான் விடுமுறை எடுத்துக் கொண்டேன்'' என்றாள் நேகா.

''பார்த்தீர்களா அப்பா? இது போன்ற பொறுப்பில்லாத ஆசிரியர்கள் இருந்தால் அலாஸ்கா யுனிவர்சிட்டியின் கல்வித்தரம் எப்படியிருக்கும் பாருங்கள்!'' என்றான் நந்தகிஷோர்.

''வேலை பார்க்கத் தொடங்கியதிலிருந்து விடுமுறையே எடுக்காத டீச்சர் நியாயமான காரணங்களுக்காக மூன்று நாட்கள் விடுமுறை எடுத்தவுடன் கல்வித்தரம் குறைந்து விடுமானால் அது மிகவும் மோசமான யுனிவர்சிட்டியாகத்தான் இருக்க வேண்டும்'' என்றாள் நேகா.

''மூன்று நாள் விடுமுறையா? என்னவாயிற்று நேகா? உடல்நிலை சரியில்லையா? அல்லது நேற்று பயந்ததின் காரணமா?'' என்றான் நந்தகிஷோர் கவலையுடன்.

''அப்படி எதுவும் இல்லை'' என்று நேகா மறுக்கவும், ''நேற்று பயப்படும்படியாய் என்ன நடந்தது?'' என்றார் சுமன் இருவரையும் பார்த்து.

''பெரிதாய் ஒன்றுமில்லை டாடி. நார்தன் லைட்சை காண்பித்தேன். அதற்கே மிரண்டு போய் விட்டாள்'' என்றான் நந்தகிஷோர்.

''நேற்று லைட் தெரிந்ததா?'' என்றார் சுமன் ஆர்வத்துடன் ''உன் ஆன்ட்டி பார்த்ததேயில்லை. இங்கேயே பல வருஷங்கள் வசித்தும் நார்தன் லைட்டைப் பார்க்காதவர்கள் இருக்கிறார்கள். ஏனென்றால் அது குளிர்கால நடு இரவில், வானில் மேகமூட்டம் அதிகம் இல்லாத, நட்சத்திரங்களும் இல்லாத சுத்தமான வானில் தான் தெரியும். வின்டரில் கடுங்குளிர் காரணமாக யாரும் அதிகமாக வெளியே செல்லாததால் நார்தன் லைட்டைப் பார்க்கும் அனுபவம் அநேகம் பேருக்குக் கிடைப்பதில்லை. நானும் முதன் முறை பார்த்தபோது உன்னைப் போல் அரண்டுதான் போனேன். ஆனால் நந்தகிஷோரும் பூஜாவும் பள்ளிகளில் கேட்டு, டி.வி.க் களில் பார்த்திருந்ததால் அந்த அளவு பயப்படவில்லை. இது துருவப் பகுதியில் மட்டுமே தெரியும் என்பதால் வேறு எந்த ஊருக்கும் இல்லாத சிறப்பு மிக்கதாக பூஜா இப்போதும் ப்ளோரிடாவில் பெருமையடித்துக் கொள்ளு வாள்.''

''இந்த நார்தன் லைட்ஸ் எப்படி உருவாகிறது?'' என்றாள் நேகா ஆர்வத்துடன்.

''ஸையன்ஸ் சொல்வது என்னவென்றால் சூரியனிட மிருந்து அவ்வப்போது இயல்புக்கு அதிகமாக வெளிப் படும் எலக்ட்ரான்களும், புரோட்டான்களும் பூமியை நோக்கி மணிக்கு ஒரு மில்லியன் மைல் வேகத்தில் வருகின்றன. அவை பூமியை அடைய சில நாட்கள் பிடிக்கின்றன. அவற்றை பூமியிலுள்ள காந்த படுக்கைகள்



தடுக்கவே அவை துருவப்பகுதியில் உட்புகுந்து இங்குள்ள காற்று மண்டலத்துடன் மோதி இந்த வெளிச்சத்தை உண்டு பண்ணுகின்றன. சுருக்கமாக சொன்னால் சூரியனுக்கும் பூமிக்கும் வடதுருவத்திலும் தென் துருவத்திலும் நடக்கும் சிறு சலசலப்புதான் நார்தன் லைட்ஸ்'' என்றான் நந்தகிஷோர் விளக்கமாக.

''இந்த நார்தன் லைட்சை 'அரேரோ போரியாஸ்' என்றும் சொல்லுவார்கள் நேகா. விஞ்ஞான வளர்ச்சி வளர்ந்துள்ள இந்த காலத்திலேயே நாம் இந்த வெளிச்சத்தை கண்டு பயப்படுகிறோம். பழங்கால மக்களின் நிலையை நினைத்துப்பார். அரேரோ பற்றி எக்ஸிமோக்களிடம் நிறைய கதைகள் உண்டு. இறந்தவர்களின் ஆவிகள் வால்ரஸ்சின் தலையுடன் கால்பந்து விளையாடுவதாகவும் புதிதாக இறந்து போனவர்களுக்கு முன்னோர்கள் புதிய உலகுக்கு வழிகாட்டி அழைத்துச் செல்வதாகவும் நம்பினார்கள்.

ஐரோப்பியர்கள் இதை கெட்ட சகுனம் என்றும், ஜப்பானியர்கள் நல்ல சகுனம் என்று வெளிச்சத்தை பார்த்து கீழே விழுந்து வணங்கவும் செய்வார்கள். வெவ்வேறு மக்களிடையே அரேரோ பற்றி நிறைய கதைகள் உண்டு'' என்றார் சுமன்.

நேகா சொன்னாள், ''சிறு வயதில் என் பாட்டி கூட மின்னும் போது காதை பொத்திக் கொண்டு அர்ஜுனா.... அர்ஜுனா என குரல் கொடுத்தால் மின்னல் கொடியின் கணவன் அர்ஜுனன் வந்து காப்பாற்றுவான் என்று சொல்வதுண்டு. நமக்கு புரியாத விஷயங்களை கதைகளாக்கி அடுத்த தலைமுறைக்கு சொல்லி வைப்பது மனித இயல்பு தான். இங்கு வந்ததிலிருந்து ஏனோ இந்த

லைட்டைப் பற்றி என்னிடம் யாரும் சொன்னதில்லை. அதனால் முதன் முதலாக பார்த்ததும் பயந்து மயங்கி விட்டேன் என்று நினைக்கிறேன் கற்பனைக்கும் அப்பாற் பட்ட ஒரு விஷயத்தை நேரில் பார்த்ததும் அது கனவா நினைவா என்று கூட புரியாமல் குழம்பிப் போனேன். நேற்று எப்படி வீடு திரும்பினோம் என்பது கூட நினைவில் இல்லை'' என்றாள் நேகா.

''நல்லவேளை. நினைவில் இல்லை'' என்றான் நந்தகிஷோர் சிரிப்புடன். சுமனும், நேகாவும் கண்களில் கேள்வியுடன் அவனைப் பார்க்க நந்தகிஷோர் ஒரு கணம் தடுமாறினான். பிறகு சொன்னான். ''நேகாவிற்கு நினைவிருந்திருந்தால் இன்னும் பயந்து பெரிய கலாட்டாவாகி இருக்கும்.''

''ஆமாம். சிறுபிள்ளைத்தனமாகத்தான் நடந்து கொண்டேன்'' என்றாள் நேகா லேசான கூச்சத்துடன்.

அந்த முகமும், கூச்சமும் நந்தகிஷோரின் மனதில் பதிந்தன.

மதியம் சுமன் பேர்பேங்க்ஸ் போவதாக சொன்னார். இந்தியாவிலிருந்து வந்திருக்கும் நண்பரை சந்தித்து விட்டு இரண்டு நாட்கள் கழித்து வருவதாக கூறி கிளம்பிப் போனார்.

அவர் போனதும் உள்ளே போகத் திரும்பிய நேகா பனியை தள்ளும் 'ஷவல்' ஐ கையில் பிடித்தபடி வீட்டு வாயிலில் கொட்டியிருந்த ஐஸ்சை அப்புறப்படுத்திக் கொண்டிருந்த நந்தகிஷோரைப் பார்த்தாள்.

''நானும் உனக்கு உதவட்டுமா?'' என்றாள் ஆர்வத்துடன்.



''நிச்சயமாய், நீ இன்று விடுமுறை எடுத்துக் கொண்டதற்கு ஏதாவது காரணம் வேண்டாமா?'' என்று சிரித்த நந்தகிஷோர் 'ஷவல்' ஐ அவள் கையில் கொடுத்தான். ''இந்த ட்ரைவ் - வே ஐ நீ சுத்தம் செய். போஸ்ட்மேன் வருகிற நேரமாயிற்று. அவன் வந்து இதில் விழுந்து கை காலை உடைத்து கொண்டால், நம்மை கோர்ட்டுக்கு இழுத்து பணத்தை கறந்து விடுவான்.''

நேகா உற்சாகத்துடன் நடைபாதையில் குவிந்திருந்த பனியை தள்ள ஆரம்பித்தாள்.

''நேற்று இரவு மட்டும் மூன்று இன்ஞ் ஸ்நோ விழுந்திருப்பதாக டிவியில் பார்த்தேன்'' என்றாள் நேகா.

''மூன்று இன்ஞ் என்பதெல்லாம் ஒன்றுமே இல்லை. போன வருடம் ஒரே நாளில் இருபத்தி ஒன்பது இன்ஞ் ஸ்நோ விழுந்து ரெக்கார்ட் ஏற்படுத்தியது'' என்ற நந்தகிஷோர் வீட்டின் உள்ளே போய் பெரிய கயிறை எடுத்து வந்தான். கயிற்றை இடுப்பை சுற்றி முடிச்சிட்டபடி நேகாவிடம் சொன்னான். ''வீட்டின் மீது நிறைய பனி விழுந்திருக்கிறது நேகா. இன்னும் பனி பொழிந்தால் நாளை ஐஸ் கனம் தாங்காமல் வீடு ஒழுக ஆரம்பித்து விடும். நான் வீட்டுக் கூரை மேல் ஏறி பனியை தள்ளி விடுகிறேன். ஐஸ்ஸில் எனக்கு கால் வழுக்கும். எனவே நீ கயிற்றின் மறுபகுதியை கெட்டியாக உன் இடுப்பில் கட்டிக் கொள்'' என்றவன் கயிற்றை எப்படி கட்ட வேண்டும் என சொல்லிவிட்டு மடமடவென கூரை மீது ஏறத் தொடங்கினான்.

கூரை மீது ஏறி அவன் ஸ்நோவை தள்ளிவிட இடுப்பில் கட்டியிருந்த கயிற்றை கண்காணித்தபடி நின்றிருந்த நேகாவிற்கு அடக்கமாட்டாமல் சிரிப்பு வந்தது.

"நான் கை வலிக்க வேலை பார்க்கிறேன், உனக்கு அப்படியென்ன சிரிப்பு?" என்றான் நந்தகிஷோர் எரிச்சலுடன்.

"எங்கள் ஊரில் குரங்காட்டிகள் குரங்கின் இடுப்பில் கயிற்றை கட்டிவிட்டு கையில் குச்சியுடன் தெருத்தெருவாக போய் வித்தை காட்டுவார்கள். கூரை மேல் குச்சியுடன் அமர்ந்திருக்கும் உன்னைப் பார்த்ததும் எனக்கும் அந்த நினைவு தான் வந்தது."

"அப்படியா?" என்ற நந்தகிஷோர் தான் இடுப்பில் கட்டியிருந்த கயிறை சுண்டி இழுத்தான். நேகா நிலை தடுமாறி தான் சுற்றியிருந்த கயிற்றால் இழுக்கப் பட்டவளாய் வீட்டின் டெரஸ் அருகே வந்து விழுந்தாள்.

"எதுக்குடா கயிறை இழுத்தாய்?" என்ற நேகா எழுந்து நின்றவுடன் நந்தகிஷோர் கிணற்றில் நீர் இறைக்கும் லாவகத்துடன் அவளை மேலே இழுத்தான்.

"டேய், என்னை விடுடா" நேகா கைகால்களை உதைத்தபடி கத்த கத்த அவளை தூக்கி கூரை மீது உட்கார வைத்தான்.

"இப்பபார், குரங்காட்டிக்கு வித்தை காட்ட இரண்டு குரங்கு கிடைத்து விட்டது" என்றான் பெரிய சிரிப்புடன்.

"உன்னை....." என்ற நேகா அவன் தள்ளிவிட்டது போக மீதியிருந்த பனித்துகளை வாரி எடுத்து அவன் மீது வீசினாள். "என்னையும் உன்னை மாதிரின்னு நினைச்சியா?"

"ஏய், வேண்டாம் குளிர்கிறது?" என அவள் கைகளைப் பற்றி அவன் தடுக்க முயல, அவள் அவன் கைகளை விடுவிக்க போராடுகையில் பிடிமானமில்லாத



கால் ஐஸ்சில் வழுக்கியது. கூரை மீதிருந்து நந்தகிஷோர் சரியவும், நேகா தான் கட்டியிருந்த கயிற்றால் இழுக்கப் பார்த்து, அவன் கனத்தை இழுக்க முடியாமல் அவளும் சேர்ந்து சரிந்தாள். ஃபயர் வீட் செடிகள் புதராக மண்டியிருந்த இடத்தில் நந்தகிஷோர் விழ, அவன் மீது நேகா விழுந்தாள்.

மூச்சு வாங்க கிடைத்த அவகாசத்திற்கு பிறகு "எல்லாம் உன்னால் வந்தது. எதற்காக என் மீது ஐசை வீசினாய்?" என்றான் நந்தகிஷோர் கோபமாக.

"நீ எதற்காக என்னை மேலே இழுத்தாய்?" என்றாள் நேகா அதைவிட கோபமாக.

"நீ என்னை குரங்கு என்று சொல்லவில்லை?"

"பதிலுக்கு நீயும் சொல்ல வேண்டியதுதானே! எதற்காக மேலே தூக்கினாய்?"

"நீ அசல் குரங்கு தான் என்பதை நிருபிக்க வேண்டாமா? அதனால் தான்."

"இந்த ஐசில் கீழே விழுந்து காலை உடைத்துக் கொண்டேன் என்றால் எதை நிருபிப்பாய்?"

"நிச்சயம் உனக்கு அடிபடாது."

"எப்படி அத்தனை உறுதியாக சொல்கிறாய்?"

"உறுதி தான். ஏனென்றால் நீ என் மீது அல்லவா விழுந்து கிடக்கிறாய்?"

நேகா அப்போது தான் சுயஉணர்வு பெற்றவளாக அவசரமாய் எழுந்தாள். எப்படி இத்தனை நேரம் அவன் மீது விழுந்து கிடந்ததையே உணராமல் போனோம் என்று திகைப்பாக இருந்தது.

அவளைத் தொடர்ந்து எழுந்து நின்ற நந்தகிஷோர் ''நல்ல வேளை புதரில் விழுந்தோம். எதற்கும் எக்ஸ்ரே எடுக்க வேண்டும். உடையாத என் எலும்புகள் நீ மேலே விழுந்ததால் உடைந்திருக்கக் கூடும்?'' என்றான் கவலையாக.

அவனை முறைத்த நேகா, ''மேலே விழுந்தால் உடையாத எலும்பு என்னிடம் அடிவாங்கி உடையக் கூடும். ஜாக்கிரதை?'' என்றாள் சுட்டு விரலை உயர்த்தி.

இருவரும் பேச்சு சிரிப்புமாய் வேலையை முடிக்கையில் நந்தகிஷோர் அவளிடம் சொன்னான். ''இது போல இதுவரை நான் சிரித்ததே இல்லை நேகா. இதற்கு முன்பும் என் வாழ்வில் பெரிய துக்கமோ, மிகப் பெரிய மகிழ்ச்சியோ எதுவும் இல்லை. நாட்கள் ஒரே நிதானத்துடன் போய்க் கொண்டிருந்தன. ஆனால் உன்னை சந்தித்த பிறகு என் வாழ்க்கை உற்சாகமாக இருக்கிறது. ஒவ்வொரு நாளையும் புத்துணர்ச்சியுடன் உணர்கிறேன். தேங்க்யூ நேகா'' என்றான் உணர்ச்சியுடன்.

நேகாவுக்கு அவன் வார்த்தைகளில் மகிழ்ச்சியும், இன்னும் இரண்டு நாளுடன் எல்லாம் முடிந்து விடும் என்ற துக்கமும் ஒரே நேரத்தில் ஏற்பட்டது.

அடுத்த நாளும் நந்தகிஷோர் வீட்டிலேயே இருந்தான். பூஜாவின் திருமண சி.டி.யை இருவரும் பார்த்தார்கள். வட இந்திய முறைப்படி கல்லும் ஜரிகையும் மின்னும் சிவப்பு புடவையில் தலை முழுவதையும் மூடியிருந்த பூஜா பேரழகியாய் ஜொலித்தாள். புடவை நிறத்திற்கு போட்டியிடுவது போல் முழங்கை வரை வரையப்பட்டிருந்த மருதாணி சிவப்பிலும் முகத்தில் மின்னிய மகிழ்ச்சியிலும் கன்னம் சிவந்திருந்தவளை



நேகா வைத்த கண் எடுக்காமல் பார்த்திருந்தாள். சுமன், அனுசுயா முகங்களில் தென்பட்ட பூரிப்பும் லேசான கவலையும், உறவினர்களின் உற்சாகமும், நண்பர்களின் கேலியும் நேகாவிற்கு தெரியாத புதிய உலகத்தை அறிமுகப்படுத்தின. டிவி திரையில் காட்சிகள் முடிந்த பிறகும் அசையாமல் அமர்ந்திருந்தவளின் எதிரே வந்து நின்ற நந்தகிஷோர் டிவியையே உற்றுப் பார்த்தான்.

''என்ன கிஷோர்?'' என்றாள் நேகா வியப்புடன்.

''டிவியில் உன் கண்ணுக்கு மட்டும் எதாவது படம் தெரிகிறதா என்று பார்த்தேன்.''

நேகா சிரித்தாள். ''டிவி திரையில் தெரியவில்லை கிஷோர். மனத்திரையில் தெரிகிறது.''

''உன் மனசில் ஓடும் படம் என்ன நேகா?'' என்றான் நந்தகிஷோர் ஆர்வத்துடன்.

''மனதில் ஓடும் எண்ணங்களை, அந்த மனதில் குடியிருப்பவர்கள் சொல்லாமலே தெரிந்து கொள்ள முடியும். மற்றபடி எண்ணங்களை திரையில் காண்பிக்கும் கருவி இதுவரை கண்டுபிடிக்கப் படவில்லை என்றே நினைக்கிறேன்'' என்றாள் நேகா.

''வாவ்! நீ கூட நன்றாக பேசக் கற்றுக் கொண்டாய் நேகா'' என்றான் நந்தகிஷோர்.

''எல்லாம் பழக்க தோஷம்'' என்றாள் நேகா.

''எப்படியோ என் பழக்கத்தால் உன்னிடம் ஒரு மாற்றம் ஏற்பட்டிருந்தால் சந்தோஷம்தான்'' என்றான் நந்தகிஷோர்.

''உன்னை சந்தித்த பிறகு எனக்குள் ஏற்பட்ட மாற்றங்களை கேட்டால் பயந்தே போய்விடுவாய்'' என்றாள்

நேகா மனதிற்குள். ''உன் தங்கை மிகவும் அழகு கிஷோர்'' என்றாள் வாய்விட்டு.

''ஆமாம். என் அம்மாவும் அப்பாவும் சேர்த்து பிழிந்த ஜூஸ் தான் பூஜா'' என்றான் நந்தகிஷோர்.

நேகாவின் சிறுவயதில் பார்த்த அத்தை பெண், சித்தப்பா பையன்களின் திருமணங்கள் நினைவு வந்தன. புதிய உடையும், தலைநிறைய பூவுமாய் மற்ற குழந்தைகள் வீட்டை சுற்றி விளையாடிக் கொண்டிருக்க, நேகா அவர்களை வேடிக்கைபார்த்தபடி வீட்டில் பெரியவர்கள் ஏவிய வேலையை செய்து கொண்டிருப்பாள். திருமண குதூகலத்தில் இரவெல்லாம் மற்றவர்கள் விழித்திருக்க வேலை செய்த அசதியில் நேகா நேரத்திலேயே உறங்கிவிட்டிருப்பாள். பூஜாவின் திருமணம் மனதை தொட, ''மனித வாழ்வில் திருமணங்களுக்கு தரப்படும் முக்கியத்துவமும் அது ஏற்படுத்தும் மாறுதலும் விசித்திரமானது இல்லையா கிஷோர்?'' என்றாள் நேகா.

''விசித்திரமானது மட்டுமல்ல, வீணானதும் கூட'' என்றான் நந்தகிஷோர். தங்கள் இருவர் பேச்சிலும் இருந்த முரண்பாடு மனதை தாக்க நேகா.... இதுவரை இல்லாத விதமாய் திருமண பந்தத்திற்காக ஏங்கத் தொடங்கினாள்.

அன்று மாலை நேகாவிற்கு தர்ஷணாவிடமிருந்து போன் வந்தது.

அவள் கேட்டதும் தன் வழக்கமான உற்சாகத்துடன் ''சொல்லு தர்ஷணா! எப்படியிருக்கிறாய்...!'' என்றாள் நேகா.

பதிலுக்கு தர்ஷணாவின் விம்மல் ஒலி கேட்டதும் நேகா திடுக்கிட்டாள்.



''தர்ஷணா...'' என்ன விஷயம்?'' என்றாள் கவலையுடன்.

''அக்கா நான் உங்களைப் பார்க்க வேண்டும்'' என்றாள் தர்ஷணா அழுகை குரலில்.

''நான் நாளை கல்லூரி முடிந்ததும் நேராய் உன் வீட்டிற்கு வருகிறேன்'' என்றாள் நேகா.

''இல்லை.... எனக்கு.... நீங்கள் இப்போதே வர வேண்டும்'' என்றாள் தர்ஷணா அவசரக் குரலில்.

''மாதவி என்ன செய்கிறாள்?'' என்றாள் நேகா யோசனையுடன்.

''அவளைப் பற்றி என்னிடம் பேச வேண்டாம்'' என்றாள் தர்ஷணா உரத்த குரலில்.

''சரி. உன் அப்பா வீட்டில் இருக்கிறாரா?'' என்றாள் நேகா மிருதுவான குரலில்.

''அந்த மிருகங்கள் யாரைப் பற்றியும் என்னிடம் பேசாதீர்கள்.''

''தே ஆர் ஸ்கென்ரல்ஸ்.''

''அவர்கள் இருவரும் இப்போது என் எதிரில் இருந்தால் இதோ. இந்த வெஜிடபிள் கத்தியால் அவர்களை குத்தி கொன்று விடுவேன்'' என்றாள் ஹிஸ்டீரிக்கலாக.

''தர்ஷணா.... தர்ஷணா... அக்கா சொல்வதைக் கேள்...'' நேகா விடாது அழைத்து அவள் கவனத்தை திருப்ப முயன்றாள். ''தர்ஷணா முதலில் சாப்பிடு தர்ஷணா. எதையும் யோசிக்காமல் சமர்த்தாக தூங்கு. நான் நாளைக் காலையிலேயே வந்து விடுகிறேன். தர்ஷணா நல்ல பெண் இல்லையா? நான் சொல்வதைக் கேள்!''

''நாளையா? நாளைக் காலை வரப் போகிறீர்களா?'' தர்ஷணா கடகடவென சிரித்தாள். ''ஆமாம். வரத்தான் போகிறீர்கள்.''

''தர்ஷணா நான் சொல்வதைக் கேள் தர்ஷணா'' நேகாவை மேற்கொண்டு பேச விடாமல் தர்ஷணா சொன்னாள். ''ஸாரி அக்கா, உங்களை தொல்லை செய்து விட்டேன். உங்களை கூப்பிட எனக்கு எந்த உரிமையும் இல்லை தான்.''

''உனக்கு என்னிடம் எல்லா உரிமையும் இருக்கிறது தர்ஷணா'' ரிசீவர் சத்தமின்றி இருந்ததை உணர்ந்த நேகா போனை அதன் இடத்தில் வைத்து விட்டு மீண்டும் மாதவியின் வீட்டு நம்பருக்கு டயல் செய்தாள். முதல் முறை வெகுநேரம் ஒலித்த போதும் யாரும் போனை எடுக்கவில்லை. மறுபடி முயற்சித்த போது போன் தொடர்பில் இல்லை என்ற தகவல் வந்தது. நேகா உடனே மாதவியின் செல் நம்பருக்கு முயற்சி செய்தாள். அவள் போன் அணைக்கப்பட்டிருக்கவும், நேகா நந்தகிஷோரிடம் சென்று ரங்காரெட்டியின் நம்பரைக் கேட்டாள்.

நேகாவிடம் விஷயத்தை கேட்டறிந்த நந்தகிஷோர் ''மற்றவர்கள் குடும்ப விஷயத்தில் நாம் தலையிடுவது நாகரிகம் இல்லை நேகா'' என்றான் தயக்கத்துடன்....

''நாமாக யார் வீட்டுக் கதவையும் தட்டவில்லை கிஷோர். அத்தனை சின்னப் பெண் வேதனையில் அழும் போது மனம் கலங்கிப் போகிறது.''

அதற்கு மேல் எதுவும் சொல்லாமல் நந்தகிஷோர் ரங்காரெட்டியின் நம்பரை முயற்சி செய்தான். அதுவும் அணைக்கப்பட்டிருந்தது. ''ரங்காரெட்டி வேலை



விஷயமாக இன்டீரியராக போய்விட்டால் அங்கே போன் தொடர்பு கிடைக்காது நேகா. ஒரு வேளை அவர் வேலைக்கு போயிருக்கலாம்'' என்றான் நந்தகிஷோர்.

''சரி கிளம்பு போகலாம்'' என்றாள் நேகா கோட்டை அணிந்தபடி.

''இந்த நேரத்தில் 'ஈகிள் ரிவர்' போவதா? இன்று மதியம் நியூஸ் கேட்டாய் அல்லவா? ப்ரீசிங் ரெயினுடன். ஆங்காங்கே ப்ளாக் ஐஸ்சும் ஃபார்ம் ஆகியிருக்கிறது. வண்டியில் செல்வது மிகவும் சிரமம்'' என்றான் நந்தகிஷோர்.

பனியும் நீரும் கலந்து பெய்யும் ப்ரிசிங் மழை, ஐஸ் தரையில் தண்ணீர் ஊற்றியது போல் இருக்கும். காரில் விழும் இந்த ப்ரீசிங்மழை கண்ணாடியில் ஒட்டிக் கொண்டு சாலையை கண்களுக்குத் தெரியாமல் மறைத்து விடும். அந்த சமயத்தில் கார் ஓட்டக் கூடாது. டிரைவிங்கில் இருக்கும் சமயம் மழை பெய்தால் சாலையிலிருந்து விலகி பார்க்கிங் லைட்டைப் போட்டு விட்டு மழை நிற்கும் வரை காத்திருக்க வேண்டும் என்று நேகா கேள்விப்பட்டிருந்தாள். ஆனால் இன்று தர்ஷணாவின் குரல் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கவும், ''நீ ஒரு புஷ் பைலட். பனி மலையில் ப்ளைட் ஓட்டுபவனுக்கு ப்ரீசிங் மழையில் கார் ஓட்டுவது பெரிய விஷயமா?'' என்றாள் வேகத்துடன்.

''புரிந்துதான் பேசுகிறாயா நேகா? ரோடே கண்ணாடி போல் இருக்கிறது. வெளியே போய் பார்'' என்றான் நந்தகிஷோர்.

''ஓகே. அப்படியானால் நானே போகிறேன்'' என நேகா தன் கால் ஷூவை மாட்டவும் நந்தகிஷோர் வேறுவழியின்றி எழுந்தான்.

ஷெட்டைத் திறந்து கார் ஹீட்டரை ஆன் செய்தவன் சொன்னான்.

"உன் பிடிவாதத்திற்கு அளவே இல்லை நேகா. மாதவிக்கும் தர்ஷணாவுக்கும் நடக்கும் வாக்குவாதங்கள் எப்போதும் நாம் அறிந்ததுதான். அது அவர்களுக்குள்ளேயே முடிந்து விடக்கூடியதும் கூட. நாம் தலையிடுவதால் அது பெரிதாகலாம். தர்ஷணா சிறு பெண் நேகா. அவள் பேச்சை கேட்டுக் கொண்டு அவள் பெற்றோர்களை நாம் கேள்வி கேட்பதோ குற்றம் சொல்வதோ கொஞ்சமும் முறையல்ல."

நந்தகிஷோரின் பேச்சிலுள்ள நியாயம் புரிந்தாலும், தர்ஷணா போனை எடுக்காததும், அவள் கையில் கத்தியுடன் இருக்கிறாள் என்பதும் மனதை உறுத்தியது. "நாம் யாரிடமும் எதையும் கேட்க வேண்டாம் கிஷோர். தர்ஷணாவைப் போய் பார்த்து பேசிக் கொண்டிருந்து விட்டு வரலாம்" என்றாள் நேகா.

"அதைக் கூட நாளைக்கு செய்யலாம்" என்றான் நந்தகிஷோர்.

"கிஷோர் நான் சொல்வதைப் புரிந்து கொள். என் மனதிற்கு என்னவோ விபரீதமாக படுகிறது. தர்ஷணாவைப் பார்க்காமல் என்னால் தூங்க முடியும் என்று தோன்றவில்லை" என்றாள் நேகா.

"மாதவிக்கு இல்லாத கவலை உனக்கு ஏன்?" என்றான் நந்தகிஷோர் வியப்புடன்.

"ஏனென்றால் நானும் தர்ஷணாவும் ஒரே ஜாதி. பெற்றோர்கள் இருந்தும் இல்லாத அநாதை ஜாதி."

நேகாவின் குரல் துயரத்துடன் ஒலித்தது. நந்தகிஷோர் தன்னையறியாமல் அவள் தோள் மீது கை வைத்தான்.



"இங்கு யாருமே அநாதை இல்லை நேகா. நான் இருக்கிறேன் உனக்கு."

"எத்தனை நாள்?"

"........."

"சொல்லு நந்தகிஷோர் எத்தனை நாள் என்னுடன் இருப்பாய்? எந்த உறவில் இருப்பாய்? ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள உறவை கௌரவமான முறையில் உலகத்துக்கு அவர்கள் அறிவிக்க வேண்டும். இல்லை எனில் சமூகம் மிக கேவலமான முறையில் அந்த உறவை உலகத்துக்கு சொல்லி விடும். முடிந்தால் நம் உறவுக்கு நீ ஒரு பெயரிடு. இல்லை என்றால் சமுதாயம் தப்பான பெயர் சூட்டி விடும்."

உணர்ச்சி வேகத்தில் நேகா மனதில் இருப்பவை வெளியே வர நந்தகிஷோர் முதன் முறையாக பேசத் தோன்றாமல் நின்றிருந்தான்.

நேகா அவனை கடந்து போய் காரில் அமர்ந்தாள். நந்தகிஷோர் மிக கவனமாக காரை ஓட்டிக் கொண்டிருந்தான். பிடிமானமில்லாத சாலையில் கார் வழுக்கிக் கொண்டு சென்றது. முன்னால் சென்ற கார்களும் இதே போல சென்றதால் முன்பக்கமோ, பக்கவாட்டிலோ மோதி விடமால் போக வேண்டியிருந்தது.

"சீக்கிரம் போ கிஷோர்" என்றாள் நேகா.

"இதற்கு மேல் முடியாது நேகா."

நேகா பொறுமையின்றி தவித்துக் கொண்டிருந்தாள். ஊர்ந்து செல்லும் காரிலிருந்து இறங்கி ஓட வேண்டும் போலிருந்தது.

நேகாவின் பரபரப்பை உணர்ந்த நந்தகிஷோர் சொன்னான்.

"வெறுமனே உணர்ச்சி வசப்படுவதால் பயனில்லை நேகா. நமக்கு முன்னும் பின்னும் கார்கள் நகருவதைப் பார். இது போன்ற க்ளைமேட் இருக்கும் சமயம் ஒரு நாளைக்கு சகஜமாக முந்நூறு ஆக்ஸிடென்ட்கள் நடக்கின்றன. சாலையில் கறுப்பு ஐஸ் விழுந்திருப்பதாக என் நண்பன் சொன்னான்.

அது சாலையில் இருப்பதே கண்ணுக்குத் தெரியாது. சுத்தமான ரோடு மாதிரியிருக்கும். கார் சக்கரம் அதில் சிக்கிக் கொண்டால் பிடிமானமின்றி கார் நம் கட்டுப் பாட்டை மீறி சுற்ற ஆரம்பித்து விடும். எனவே நீ இப்படி பதட்டப்பட்டால் நாம் இருவரும் பாதுகாப்பாக போய் சேர முடியாது?"

பொறுமையை இழுத்து பிடித்தபடி நந்தகிஷோர் விளக்கவும், அவனை தொல்லை செய்யக் கூடாது என்பது அவள் புத்தியில் பட்டது. நேகா கைகளை கட்டியபடி இறுக்கத்துடன் அமர்ந்திருந்தாள்.

அவர்களுக்கு முன்னால் சென்று கொண்டிருந்த கார் சாலையை கடந்ததும் இவர்கள் திரும்ப வேண்டிய அதே சந்தில் நுழைய நந்தகிஷோர் சட்டென்று ப்ரேக்கை அழுத்தினான். கார் அரை வட்டமடித்து சந்தை நோக்கி திரும்பி நின்றது. ரிவர்ஸ் எடுக்க வேண்டி பின்னால் பார்த்தான். பின்னால் குவிந்திருந்த பனி வழியை மறைக்கவே சந்தின் உள்ளே சென்று திரும்பி மெயின் ரோடு வரலாம் என்ற எண்ணத்தில் காரை சந்தின் உள்ளே செலுத்தினான். அவன் எதிர்பார்த்திராத வண்ணம் அந்த சந்து தாழ்வாக சரிந்திருந்ததால் கார்



தடுமாறிக் கொண்டு ஓடத் தொடங்கியது. நேகா கலக்கத்துடன் சீட்டின் நுனியில் அமர்ந்தாள்.

இந்த பள்ளத்தில் இறங்கி காரை திருப்பிக் கொண்டு மேலே ஏறி மெயின்ரோடுக்கு வருவது எப்படி என்று நந்தகிஷோர் யோசித்துக் கொண்டிருந்த போது, அவர் களை கடந்து சென்ற கார் மேலே ஏற முயற்சி செய்து கண்ணாடி போல பிடிமான இல்லாத சாலையில் வண்டி நழுவிச் செல்லவே காரை ஒரு ஓரமாக நிறுத்திக் கொண் டார்கள்.

நந்தகிஷோர் ஒரு கணம் கண்களை மூடி திறந்து சடாரென ஆக்ஸலேட்டரை அழுத்தி ஒரே வீச்சில் மேலே ஏற முயற்சி செய்தான். இதற்கென பிரத்யேகமாக மாட்டப்பட்டிருந்த ஸ்டட்டட் டயர்கள் அவனுக்கு உதவ மறுத்தன.

"ஓ! ஷிட்!" எரிச்சலுடன் கை முஷ்டியால் ஸ்டியரிங் வீலை குத்திய நந்தகிஷோர் திரும்பி நேகாவைப் பார்த்தான்.

"வேறு வழியில்லை. இறங்கி நடந்துதான் போக வேண்டும்" என்றவன், தன் நண்பனுக்கு போன் செய்து தாங்கள் இருக்கும் இடத்தை தெரிவித்து, மெயின் ரோட்டுக்கு வரும்படி சொல்லிவிட்டு "இறங்கு நேகா" என்றான். அவளிடம். செல்போனையும், பர்ஸையும் பேண்ட்பாக்கெட்டில் பத்திரப்படுத்தி விட்டு காரையும் பூட்டி விட்டு நேகாவின் கைகளைப் பற்றியபடி கீழே இறங்கினான்.

காரின் ஹீட்டருக்குள் அமர்ந்திருந்த உடம்பு இறங்கி நின்றதும் உதறியது. அவர்களுக்கு முன்னே சென்ற காரில் இருந்தவர்கள் தரையில் கால்களையும்

கைகளையும் ஊன்றிக் கொண்டு மேலே ஏற முயற்சி செய்து கொண்டிருந்தனர். இரவு இரண்டு மணியாகி யிருந்தது. அந்த தெருவில் அதிக வெளிச்சம் இல்லை. காரைப் பூட்டியவுடன் இதுவரை இருந்த காரின் ஹெட் லைட் வெளிச்சமும் நின்று விடவே கும்மிருட்டாக இருந்தது. தெரியாத இடத்தில் சாதகமில்லாத சாலையை எப்படி கடக்கப் போகிறோம் என்ற நேகாவிற்கு மலைப் பாக இருந்தது.

"ம்... நட" என்றான் நந்தகிஷோர். அவள் தோள் களைப் பற்றி. கீழே தரை கண்ணாடி போலிருந்ததை குழப்பத்தில் மறந்து போன நேகா வழக்கம் போல் நடக்க காலை எடுத்து வைத்ததும் சரேலென வழுக்கின. கீழேயிருந்த சரிவான பள்ளத்தில் சரிந்து விடாமலிருக்க பிடிமானத்திற்கு அலைந்த கைகள் காரின் டயரை இறுகப் பற்றின.

ஐசில் ஓட்டுவதற்கென பிரத்யேகமாக வடிவமைக்கப் பட்ட கூரான டயர்கள் விரல்களை பதம் பார்த்து விட நேகாவின் கையிலிருந்து ரத்தம் கொட்டியது.

"இடியட், எத்தனை முறை சொன்னேன்" அறிவில் லையா உனக்கு?

முன்னால் செல்பவர்களைப் பார்த்து கூட பின்னே செல்ல முடியவில்லையா உன்னால்?" என்றான் நந்தகிஷோர் ஆத்திரமாக.

நேகா பதில் பேசாமல் இரத்தம் வழியும் விரல்களில் க்ளவ்சை மாட்டிக் கொண்டு குனிந்து நாலுகால் விலங்கைப் போல உறைய வைக்கும் பனியில் ஊர்ந்து போகத் தொடங்கினாள். க்ளவுஸ் அணிந்த கைகளுக்கு



பிடிமானம் கிடைக்காமல் ஐஸ் வழுக்கியது. காயம் பட்ட விரல்கள் மரண வலி வலித்தன.

"நேகா ஜாக்கிரதையாக வா."

"பயப்படாதே. இதோ வந்துவிட்டோம். ஐந்தே நிமிஷம்..." நந்தகிஷோர் அவளுக்கு தைரியமூட்டிய படியே இருந்தான். மெதுவாக தவழ்ந்து இருவரும் மெயின் ரோட்டிற்கு வந்த போது நந்தகிஷோரின் நண்பன் கார் தயாராக நின்றிருந்தது. அதில் ஏறி அமர்ந்ததும் கார் கிளம்பியது."

"எங்கே போகிறோம்?" என்றாள் நேகா பலவீனமாக குரலில்.

"நம் வீட்டிற்குத்தான்" என்றான் நந்தகிஷோர் அழுத்த மான குரலில்.

"ஈகிள் ரிவர் போகவில்..." நேகாவின் வார்த்தை முடியும் முன் நந்தகிஷோர் சீறினான். "கிறுக்குத்தனத்திற்கு ஒரு அளவிருக்கிறது. இப்போது நாம் வீடு போய் சேரு வதே சிரமம். உன் அவசரபுத்தியால் எத்தனை நஷ்டம் பார். கையை வேறு காயப்படுத்தி கொண்டாய். இந்த வின்டரில்..."

"போதும் கிஷோர்" என்றாள் நேகா சோர்வுடன்.

அவளை பார்த்த நந்தகிஷோர் அவள் முகத்தில் ஒட்டி யிருந்த முடிக்கற்றைகளை கைகளால் ஒதுக்கி விட்டான். "எதைப் பத்தியும் யோசிக்காதே நேகா வீடு வரும் வரை பின்னால் சாய்ந்து கொள்" என்றான் ஆறுதலாக....

வீடு வந்து சேருவதற்குள் நேகாவின் விரல்களில் தொடங்கியிருந்த வலி தோள்பட்டை வரை பரவி யிருந்தது. இரத்தம் உறைந்து போயிருந்ததால் க்ளவ்ஸ் விரலை விட்டு வராமல் வலியில் நேகா வாய் விட்டு

முணகினாள். பர்ஸ்ட் எய்ட் பாக்ஸை எடுத்து வந்த நந்தகிஷோர் அதிலிருந்த சின்ன கத்திரிக்கோலால் க்ளவ்சை நலுங்காமல் கட் பண்ணினான். ஆன்டி செப்டிக்கால் க்ளீன் பண்ணி, ஆயில்மென்ட்டும் தடவிய பின்னர், ஒரு வலி மாத்திரையை சூடான நீருடன் விழுங்கச் செய்தான்.

"கை நன்றாக வீங்கிவிட்டது நேகா, அநேகமாக இந்த மாத்திரையில் சரியாகி விடும். இல்லை எனில் காலையில் டாக்டரைப் பார்த்து விடலாம்" என்றான் வாஞ்சையுடன்.

நந்தகிஷோரின் முகத்தில் தெரிந்த களைப்பையும், கவலையையும் பார்த்த நேகாவுக்கு இவனை அலைக்கழித்து விட்டோம் என்ற குற்ற உணர்வு ஏற்பட்டது.

"தூங்கு நேகா" என்றான் நந்தகிஷோர் அவள் அருகில் அமர்ந்து.

"ஸாரி கிஷோர்" என்றாள் நேகா அவனிடம்.

"ஸாரிக்கெல்லாம் அவசியமே இல்லை நேகா. தர்ஷணா மேல் எனக்கும் அன்பும், அக்கறையும் இருக்கிறது. இந்த நேரத்தில் போவதிலுள்ள சிரமமும், நாம் போயே ஆக வேண்டிய அளவு முக்கியமான விஷயமா என்பதும்தான் எனக்கு யோசனையாக இருந்தது" என்றான் நந்தகிஷோர்.

"கடைசியில் நீ சொன்னபடியே தான் நடந்தது" என்ற நேகா, "உன் கார் என்னவாயிற்று? வழியில் நிறுத்தி விட்டு வந்துவிட்டோமே!" என்றாள் நினைவு வந்தவளாக.

"ஸர்வீஸ் சென்டருக்கு தகவல் சொல்லிவிட்டேன். அவர்கள் காரை எடுத்து வருவார்கள்" என்றான் நந்தகிஷோர்.



இத்தனை சிரமமும் வீணாயிற்று என்ற சோர்வுடன் அமர்ந்திருந்த நேகாவை எழுப்பி நந்தகிஷோர் அவள் அறையில் சென்று தூங்க செய்தான்.

வலியிலும், குழப்பத்திலும் சிறிது நேரம் புரண்ட நேகா, தான் விழுங்கியிருந்த மாத்திரையின் விளைவாக விரைவிலேயே உறங்கிப் போனாள்.

## 15



**கா**லையில் நேகாவிற்கு விழிப்பு வந்த போது டெலிபோன் மணி அடிக்கும் ஓசை கேட்டது. கூடவே நந்தகிஷோரின் குரலும் கேட்கவே நேகா உடலை சோம்பல் முறித்தபடி எழுந்து குளியலறைக்குள் சென்றாள். நேகா தயாராகி தன் அறையை விட்டு வெளியே வந்த போது நந்தகிஷோர் டைனிங் டேபிள் சேரில் அமர்ந்திருந்திருந்தான். டேபிள் மீது கைகளை ஊன்றி அதில் முகத்தைப் புதைத்திருந்தான்.

"கிஷோர்" என்றாள் நேகா. அவன் அருகில் சென்று. நிமிர்ந்து அவளைப் பார்த்தவனின் முகம் இறுகியிருந்தது. கண்களில் இது வரை பார்த்திராத கடினம் தெரிந்தது.

"உனக்கு உடல்நிலை சரியில்லையா கிஷோர்?" என்றாள் நேகா கவலையுடன்.

"இல்லை" என தலையசைத்த நந்தகிஷோர், "உனக்கு இப்போது உடம்பு எப்படியிருக்கிறது? கை வலிக்கிறதா?" என்றான் அவளிடம்.

குரலின் கரகரப்பு ஆச்சரியத்தைத் தர நேகா புரியாமல் தலையசைத்தாள். ''வலி பரவாயில்லை.''

தெர்மோ பாட்டில் இருந்த டீயை கப்பில் ஊற்றி அவளிடம் கொடுத்தவன்,

அவள் குடித்து முடிக்கும் வரை காத்திருந்தான். அவள் காலி கப்பை கீழே வைத்ததும் ''வா நேகா'' என்றான் அவளிடம்.

''எங்கே?'' என்றாள் நேகா கேள்வியுடன்.

பதில் சொல்லாமல் அவள் கைகளைப் பற்றி அழைத்து சென்றவனின் கூட நடந்தவள் வாயிலில் நின்றிருந்த காரை பார்த்ததும் நிம்மதி பெருமூச்சு விட்டாள். ''நல்ல வேளை நேற்று கார் சேதமாகியிருக்கும் என்று எனக்கு கவலையாக இருந்தது.''

அதற்கு அவன் பதில் எதுவும் சொல்லாமல் இருக்கவும். ''ஏன் என்னவோ போல் இருக்கிறாய்?'' என்றாள் அவனிடம்.

நந்தகிஷோர் ஒன்றுமில்லை என தலையசைக்கவும், நேகா காரில் ஏறி அமர்ந்தாள். நந்தகிஷோர் தொடர்ந்து அமைதியாகவே இருக்கவும், நேகாவும் சாலையை வெறித்தபடி வெறுமனே அமர்ந்திருந்தாள். கார் நேற்று சென்ற அதே வழியில் செல்லவும், ''இப்போது எங்கே போகிறோம்?'' என்றாள் நேகா வியப்புடன்.

''சற்று பொறுத்திரு. உனக்கே புரியும்'' என்றான் நந்த கிஷோர்.

''பெரிய சஸ்பென்ஸ். எனக்கு தெரியாதா என்ன? நேற்று போக முடியாததால் மாதவி வீட்டிற்கு இப்போது கூட்டிப் போகிறாய், சரியா?'' என்றாள் நேகா ஆர்வத் துடன்.



அன்று சாலை தெளிவாக இருந்தது. நேற்று இந்த இடம்தானா அப்படி வழுக்கியது? இங்கேயா போக முடியாமல் போனது என்று நம்ப முடியாமல் கார் சீரான வேகத்தில் சென்று மாதவியின் வீட்டின் முன் நின்றது. நந்தகிஷோரை முந்திக் கொண்டு காரை விட்டிறங்கிய நேகா ஏற்கனவே வீட்டு வாயிலில் நின்றிருந்த கார்களைப் பார்த்ததும் தயங்கி நின்றாள். 'இன்றைக்கு ஏதாவது பார்ட்டியா? மாதவி சொல்லவேயில்லையே' என யோசித்த வளுக்கு வீட்டின் அசாதாரண அமைதியும் நந்தகிஷோ ரின் தொடர்ந்த மௌனமும் எதையோ உணர்த்த,

''என்ன விஷயம் கிஷோர்?'' என்றாள் குரல் நடுங்க.

நந்தகிஷோர் பதில் பேசாமல் காரிலிருந்து இறங்கி அவள் கைகளைப் பற்றியபடி வீட்டை நோக்கி நடந்தான். நேகா கால்கள் தடுமாற அவனுடன் சென்றாள். எதிர்ப் பட்ட முகங்களில் காணப்பட்ட வெறுமை அவளை கலங்கடித்தது. மாதவியின் வீட்டுக்கூடம் முதல் முறையாக விருந்துக்கான அலங்காரங்கள் இன்று வெறிச்சென்றிருந் தது. நடுக்கூடத்தில் கும்பலாக பலர் நின்றிருந்தனர். வழி விட கேட்கும் நாகரீகத்தையும் மறந்து போய் அவர்களை இடித்துத் தள்ளிக் கொண்டு நேகா எட்டிப் பார்த்தாள்.

நடுவே கிடந்த நீண்ட பலகையின் மீது தர்ஷணா வின் உடல் கிடத்தப்பட்டிருந்தது. இன்னும் தூக்கத்தி லிருந்து விழிக்காத பாவனையில் முகம் இருந்தது. மணிக்கட்டில் நரம்புகளை வெட்டப்பட்டதன் அடையாள மாய் இரத்தம் உறைந்திருந்தது. நேகா கண்ணால் காண்பதை நம்ப முடியாத ஆவேசத்துடன் தர்ஷணாவின் அருகில் சென்றாள். தர்ஷாணவிடம் எப்போதும் தெரியும் தேவதைத்தனம் மறைந்து போய் பச்சை குழந்தை போல்

பரிதாபமாக கிடந்தாள். நேகாவின் அடிவயிற்றிலிருந்து ஒரு ஓலம் எழுந்தது.

கடைசியில் தோற்றுப் போனாயா? இந்த சுயநலம் மிக்க மனிதர்களிடையே பொறுப்பில்லாத பெற்றோர்களிடம் வாழ வேண்டாம் என்று முடிவு செய்து விட்டாயா? ஒரு ஜென்மம் ஆரம்பத்திலேயே முடிந்து போன அவலத்தை தாங்க முடியாமல் நேகா வாய்விட்டு கதறினாள்.

'எல்லோரையும் குற்றவாளியாக்கி விட்டாய் தர்ஷணா. இந்த சமூகத்தை உன் பெற்றோரை, என்னையும் கூட. நீ கூப்பிட்ட நேரம் வர முடியாமல் போன குற்றவாளி நான்! உன்னிடம் மன்னிப்பு கூட பெற முடியாத நிலையில் வாழ்நாள் முழுவதும் தொடரப் போகும் குற்ற உணர்வை எப்படி தாங்கப் போகிறேன்! விடியும் வரை பொறுத்திருக்கக் கூடாதா தர்ஷணா? அப்படி என்ன அவசரம் உனக்கு? அம்மா செய்யாததை அக்கா செய்து விடப் போகிறாளா? என்ன அவ நம்பிக்கையா? என்ன நினைத்தாய் தர்ஷணா? எப்படித் துடித்தாய்?'

நேகாவுக்கு சமாளிக்க முடியாமல் மனம் பொங்கியது. சூழ்நிலை மறந்து கதறியவளின் தோள்களை பற்றினாள் மாதவி. முகத்தில் எப்போதும் மின்னும் பவுன்டேஷனும், லிப்டிக்கும் இல்லாமல் கண்கள் சிவந்து கோரமாய் காட்சியளித்தாள்.

''என் பெண் என்னை ஏமாற்றி விட்டாள் பார்த்தாயா நேகா?'' என்றாள் அழுகை குரலில்.

''அதற்கு காரணம் நீதான்'' என்றாள் நேகா கடுமையான குரலில்.

''நீ என்னைத்தான் குற்றம் சொல்வாய், எனக்குத் தெரியும். இங்கே பார்?'' மாதவி தன் கைகளையும், கழுத்தையும் காண்பித்தாள்.



''நேற்று தர்ஷணா என்னிடம் மரியாதையின்றி நடந்து கொண்டாள். வாய்க்கு வந்தபடி பேசினாள். நான் கோபமாக பேசியதும் என்னை அடித்து என் கைகளிலும் முகத்திலும் நகங்களால் கீறி காயப்படுத்தினாள்.''

தர்ஷணாவா அப்படி நடந்து கொண்டாள் என்பதை நம்ப முடியாமல்,

''எதற்காக உன்னுடன் சண்டை போட்டாள்?'' என்றாள் நேகா.

மாதவியின் தலை ஒரு கணம் தாழ்ந்தது. பிறகு சகஜமான ஒரு விஷயத்தை சொல்கிற குரலில் சொன்னாள். ''ராபின் எங்கள் வீட்டில் தங்கியிருந்தான். அவனை வெளியே போக சொல்லி சண்டை போட்டாள்.''

''அவள் சண்டை போட்டதில் என்ன தவறு மாதவி?'' என்றாள் நேகா கோபத்துடன்.

''எத்தனை பிற்போக்குவாதி நீ! பெற்றோரின் பர்சனல் விஷயங்களில் தலையிடுவது அநாகரீகம் இல்லையா? அவளுக்கு தேவையான எல்லா வசதிகளையும் செய்து தருகையில் எங்களது தனிப்பட்ட வாழ்க்கை பற்றி, அவள் ஏன் யோசிக்க வேண்டும்?''

மாதவியிடம் பேச யாரோ வர மாதவி அங்கிருந்து எழுந்து போனாள். நேகாவிற்கு துக்கம் பந்தாய் எழும்பியது.

''நேகா, வா போகலாம்'' என்றான் நந்தகிஷோர் அவள் தோளைத் தொட்டு.

நேகா பதில் பேசாமல் எழுந்தாள். மாடிப்படி வளைவில் ரங்காரெட்டி சோகம் ததும்பும் முகத்துடன் நின்றிருந்தார். எல்லாவற்றிற்கும் இவரும் ஒரு காரணம் என்ற ஆக்ரோஷம் ஏற்பட்டது.

''நேற்று மாதவிக்கும் தர்ஷணாவிற்கும் பெரிய வாக்குவாதம் ஏற்பட்டிருக்கிறது. கோபத்துடன் மாதவி வெளியே கிளம்பிப் போய் இருக்கிறாள். இன்று காலையில்தான் நான் ட்யூட்டி முடிந்து வீட்டிற்கு வந்தேன். வந்து பார்த்த போது தர்ஷணா படுக்கை அறையில் சரிந்து கிடந்தாள்.''

ரங்காரெட்டி துக்கம் மிகுந்த குரலில் நந்தகிஷோரிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

தன்னையும் மீறி எதையாவது சொல்லிவிடப் போகிறோம் என்ற பயத்தில் நேகா பற்களை இறுக கடித்தபடி நந்தகிஷோரின் கைகளைப் பற்றி இழுத்தாள். ''போகலாம்.''

நந்தகிஷோர் மறுபேச்சின்றி அவளுடன் நடந்தான்.

''வின்டர் சீஸன் வந்துவிட்டால் இது போன்ற காரணமற்ற தற்கொலைகள் அதிகம் நடக்கின்றன. பாவம் டிப்ரெஷன், போலும்'' என்ற அனுதாப குரல்கள் கேட்டன.

வீட்டு வாயிலில் நின்று நேகா கடைசி முறையாக திரும்பிப் பார்த்த போது சுற்றியிருந்தவர்கள் மறைத்திருக்க, தர்ஷணாவின் கால் மட்டும் இடைவெளியில் தெரிந்தது. விவரிக்க இயலாத மென்மையும் பளிங்கின் வெண்மையுமாய் மின்னிய பாதங்களையும், ரோஜா நிற நகங்களையும் தொடர்ந்து பார்க்க முடியாமல் கண்களை நீர் மறைத்தது. மங்கிய பார்வையில் சுவரில் சாய்ந்து கைகளை கட்டியபடி ஜெயதேவ் நின்றிருந்தது பட்டது. பாட்டனி ஆசிரியர் க்ருஸோ மாதவியிடம் ஏதோ கேட்டதும் அவள் அவர் தோளில் சாய்ந்து அழுவதும் கண்ணில் பட்டது. வழக்கம் போல கழுத்துக் கீழே இறங்கிய மாதவியின் உடையின் பரிமாணம் அது துக்க



வீடு என்பதை மறக்கச் செய்தது. ''த்தூ''... என்றாள் நேகா வாய்விட்டு. துக்கத்திலும் சாய்ந்து அழ உனக்கு அடுத்தவனின் தோள்தான் வேண்டுமா! உன் பெண் உனக்கு எத்தனை பெரிய தண்டனை கொடுத்திருக்கிறாள் என்றாவது புரிகிறதா உனக்கு! பழி வாங்கி விட்டாள்.

மாதவி. மிகப் பெரிய பழி! நேகா நந்தகிஷோரின் கைகளை பற்றிக் கொண்டு காரை நோக்கி வேகமாக போனாள்.

ஒரு வார்த்தை பேசாமல் திரும்பி வந்தவுடன் நேகா சொன்னாள்.

''நாம் பெரிய தவறு செய்து விட்டோம் கிஷோர். நேற்று எப்படியும் அங்கே போயிருக்க வேண்டும். ஒரு இரவு தாமதத்தால் ஒரு உயிர் போயிற்றே!'' என்றாள் ஆதங்கத்துடன்.

''நேற்று அங்கே செல்லும் சாலை சரியில்லை என்பது உனக்கே தெரியும். அத்துடன் இரத்தம் வழிந்த விரல்களுடன் வலியில் நீ தவிக்கையில் எனக்கு வேறு நினைவே இல்லாமல் போயிற்று!'' என நந்தகிஷோர் காலையிலிருந்து முதன் முறையாக வாய் திறந்தான்.

ப்ளாஸ்டர் சுற்றியிருந்த தன் விரல்களைப் பார்த்த நேகா, கண்களில் நிறைந்த நீருடன் நந்தகிஷோரை வெறித்தாள். ''என்னால் தாங்க முடியல கிஷோர். எத்தனை அழகான பெண்! எப்படி மனம் வந்தது அவளுக்கு! என்னால முடியல'' என்றாள் வாய்விட்டு அழுதபடி.

நந்தகிஷோர் ஒரே எட்டில் அவளை அணுகி அணைத்துக் கொண்டான். சோபாவில் அமர்ந்திருந்த நேகா தன் எதிரே நின்றிந்த நந்தகிஷோரின் இடுப்பை அணைத்தபடி விசும்பினாள்.

தன் கண்களில் நிறைந்த நீரை சுண்டி விட்ட நந்தகிஷோர் அவள் உச்சியில் இதழ் பதித்து சொன்னான். ''எனக்கும் தாங்கல நேகா. ஐ லவ் தட் இட்.''

தாங்க முடியாத துக்கத்தை சேர்ந்து அனுபவிக்கையில் தங்களிடம் இது வரை இல்லாத நெருக்கத்தை உணர்ந்தார்கள். இரு மனமும் இணைந்து விட்டதைப் போலிருந்தது. ஒரு வழியாக நேகாவின் கண்ணீர் நின்றபின் நந்தகிஷோர் அவளிடமிருந்து விலகிச் சென்று பிரிட்ஜ்ஜை திறந்தான். விஸ்கியை டம்ளரில் ஊற்றியவன், அதை ஒரு வாய் அருந்திய பின் சொன்னான். ''எனக்கு திருமணத்தில் ஈடுபாடு இல்லாமல் இருந்த போதும், எனக்கு என்றாவது ஒரு குழந்தை பெற்றுக் கொள்ள தோணுமானால் அது தர்ஷணாவைப் போலத்தான் இருக்க வேண்டும் என்று நினைத்திருந்தேன்.''

''நல்ல வேளை தர்ஷணாவாவது பதினைந்து வயது வரை இருந்தாள். உன் குழந்தையாக இருந்திருந்தால் பத்து வயதிலேயே கையுடன் சேர்த்து கழுத்தையும் அறுத்துக் கொண்டிருக்கும்'' என்றாள் நேகா நிஷ்டூரமாக.

''ஷட்டப் நேகா'' என்றான் நந்தகிஷோர் அடிக் குரலில்.

''முடியாது. நான் எதற்கு வாயை மூட வேண்டும்? உறவுகளின் மீது நம்பிக்கை இல்லை. ஆனால் குழந்தை மீது மட்டும் ஆசை உனக்கு. குழந்தைகள் என்பது பொம்மையல்ல கிஷோர். அது ஒரு உயிர். அந்த உயிருக்கென்று தனிப்பட்ட எதிர்பார்ப்புகளும், சிந்தனைகளும் இருக்கும். அது நிறைவேறாத போது பெற்றோரை வெறுக்கும் இந்த உலகத்தை, தன்னைத்தானே வெறுத்துக் கொள்ளும். இதோ சடலமாய் நடுவீட்டில் கிடக்கும்.''



''போதும் நேகா.''

''ஒரே நபருடன் வாழ்நாள் முழுவதும் செலவிடுவது போர் அடிக்கிறது உங்களுக்கெல்லாம். ஆனால் கிஷோர் பரஸ்பர நம்பிக்கையும் இறுதி வரை கூட இருப்பான் என்ற உறுதியும் இல்லாத இடத்தில் அன்பும் பாசமும் எங்கிருந்து வரும்?

மாதவிக்கும் அவள் கணவருக்கும் தர்ஷணா மேல் பாசம் இருக்கிறது கிஷோர். அதை விட மேலாய் சுதந்திர மனோபாவமும், மற்றவர் உணர்ச்சிகளுக்கு மதிப்பு தராத தான்தோன்றித்தனமும் இருக்கிறது. பெற்றோர்களின் விபரீத நடத்தை குழந்தைகளை கலவரப்படுத்தும் கிஷோர். பொறுப்பின்றி அவர்கள் செயல்படும் போது குழந்தைகள் தாங்கள் பாதுகாப்பில்லாததாக உணர்வார்கள்.''

''போதும் நேகா. என்னை கோபப்படுத்தாதே'' என்றான் நந்தகிஷோர் குரலில் அழுத்தத்துடன்.

''முடியாது. நான் பேசத்தான் செய்வேன். என் பேச்சிற்கு காரணம் இருக்கிறது கிஷோர். உன்னைப் போல் சுய நலம் மிக்கவர்களால் என்னைப் போல் தர்ஷணாவைப் போல் எத்தனை பேர் பாதிக்கப்படுகிறார்கள் என்று உனக்குத் தெரியாது. விட்டுக் கொடுக்கவும், தியாகம் செய்யவும் தயாராய் இல்லாதவர்கள் குழந்தைகளை பெற்றுக் கொள்ள தகுதியில்லாதவர்கள். நல்ல பெற்றோர்களின் நிழலில் வளர்ந்த உனக்கு எங்களைப் போன்றவர்களின் வேதனை புரியாது. நல்லவேளை, உனக்கு குழந்தை இல்லை. இல்லையெனில் நீ பிற பெண்களுடன் சுற்றுவதைப் பார்த்து....''

தன்னைக் கட்டுப்படுத்த முடியாத கோபத்தில் நந்தகிஷோர் ஓங்கி அவள் கன்னத்தில் அறைந்தான். ''இனி ஒரு வார்த்தை பேசக்கூடாது நீ!'' என்றான் உத்தரவிடும் குரலில்.

தன்னை மறந்து பேசிக்கொண்டிருந்த நேகா சுயநினைவுக்கு வந்தாள். எரியும் கன்னத்தை தொட்டுப் பார்த்தவள். ''இனி பேசவில்லை'' என்றாள் அமைதியான குரலில்.

டம்ளரில் இருந்த விஸ்கியை ஒரு வாயாக சரித்துக் கொண்ட நந்தகிஷோர் எழுந்து தன் அறைக்கு சென்று படுக்கையில் விழுந்தான். அன்று காலையிலிருந்தே நடந்த எதிர்பாராத நிகழ்ச்சிகள் அவனை புரட்டிப் போட்டன. நந்தகிஷோர் அயர்வுடன் கண்களை மூடினான். மூடிய கண்களுக்குள் தர்ஷணா வந்தாள். 'எனக்கு இந்த வீடே பிடிக்கலை அங்கிள்' என்றாள். ஐ ஹேட் தெம். ஐ ஹேட்... என்றாள் உரத்த குரலில் கூடத்து பலகையில் வெளிரிய முகத்துடன் 'இப்ப திருப்தியா உங்களுக்கு?' என்ற கேள்வியுடன் சடலமாய் கிடந்தாள்.

திரும்பிய பக்கமெல்லாம் தர்ஷணாவாய் தெரிய நந்தகிஷோரின் உடல் ஒரு முறை சிலிர்த்து அடங்கியது. அவளது முடிவிற்கு தானும் ஒரு காரணமாகிப் போனாற் போல் துக்கம் ஏற்பட்டது. கண்களில் கசிந்த நீரை துடைத்தபடி நந்தகிஷோர் வெகு நேரம் படுக்கையில் புரண்டான். தலை தாங்க முடியாமல் வலித்தது. ஒரு மாத்திரையாவது போட்டால் தான் தூங்க முடியும் போலிருக்க. நந்தகிஷோர் எழுந்து வெளியே வந்தான். கபோர்ட்டிலிருந்த மாத்திரையை நீருடன் விழுங்கி



விட்டு திரும்புகையில் சோபாவில் சுருண்டு படுத்திருந்த நேகா கண்ணில் பட்டாள்.

நந்தகிஷோர் மெதுவாக நடந்து போய் மண்டியிட்டு அவள் அருகில் அமர்ந்தான். முதல் நாள் பட்ட காயத்தில் அவள் விரல்கள் வீங்கியிருக்க, அழுததில் முகமும் வீங்கியிருந்தது. வெளேர் என்ற கன்னத்தில் அவன் கைத்தடம் சிவப்பாக தெரிய நந்தகிஷோரின் மனதில் தாங்கமாட்டாத வேதனை எழுந்தது. ஆதரவு யாருமற்ற குழந்தையைப் போல் அவள் படுத்திருந்தது பரிதாபமாக இருந்தது. உறக்கம் கலைந்து விடாமல் நந்தகிஷோர் அவள் கன்னத்தை வருடினான். தலைமுடியை சீர் செய்தான்.

ஒரு போர்வையை எடுத்து வந்து போர்த்திவிட்டான். அவளையே பார்த்தபடி அமர்ந்திருந்தான். நேகாவின் அருகாமையில் தன் மனதிற்குள் அமைதி பரவுவதை உணர்ந்தான். அந்த நிமிடத்தில் அந்த நொடியில் தன் உயிர் அவளுடன் கலந்து விட்டாற் போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. தன்னுள் இருந்த ஏதோ திரை விலகினாற் போலிருந்தது. தன் வாழ்நாளில் எந்த பெண்ணைப் பார்த்தும் இப்படி உருகி நின்றதில்லை என்ற எண்ணத்தில் இதழ்கள் விரிந்தன. கடவுளை தரிசிக்கும் அற்புதத்தை பற்றி புராணங்கள் சொல்வதை படித்திருக்கிறான். மலை ஏறும் அற்புதத்தை தெனாலிமலையை ஏறி அதன் உச்சியை அடைந்தவர்கள் கூறும் மெய்சிலிர்க்கும் அனுபவங்களை கேட்டிருக்கிறான். ஆனால் தனக்குள் இருக்கும் காதலை உணர்வது இது எல்லாவற்றையும் விட பெரிய அற்புதம் என்று தோன்றியது. நந்தகிஷோர் மன நிறைவுடன் பின்னால் சாய்ந்து கண்களை மூடினான்.

* * *

அடுத்த நாள் நேகாவிற்கு சில்வியாவிடமிருந்து போன் வந்து விட்டது. "இன்று வருவதாக கூறியிருந்தாய் எப்போது வருகிறாய்?" என்ற போதுதான் இன்று ஞாயிற்றுகிழமை என்பது நேகாவிற்கு நினைவு வந்தது. நான்கு நாட்கள் கழிந்த விதம் நினைவுக்கு வர "சில மணி நேரங்களில் அங்கிருப்பேன்" என்றாள் நேகா.

இத்தனை நாளாய் இருந்து வந்த ஊசலாட்டம் நின்று போய் இதுவரை இல்லாத விதமாய் மனம் மிக அமைதியாக இருந்தது. கிளம்புவதற்கு எந்த தயக்கமும் ஏற்படவில்லை. எல்லாமே ஒரு முடிவுக்கு வந்து விட்டாற் போலிருந்தது. தயாராகி நந்தகிஷோரின் எதிரே போய் நின்றவள். "நான் கிளம்புகிறேன் கிஷோர்" என்றாள் சலனமற்ற குரலில்.

அவள் கையிலிருந்த பெரிய சூட்கேஸையும், பையும் பார்த்த நந்தகிஷோர் "எங்கே?" என்றான் கேள்வியாக.

"உனக்கு நினைவில்லையா? போன மாதமே Town Down பகுதியில் எனக்கு வீடு கிடைத்திருப்பதாக உன்னிடம் சொல்லியிருந்தேன் இன்று வரும்படி சில்வியா போன் செய்தாள்."

நேகா முன்பே சொல்லியிருந்த போதும் அவள் உண்மையாலுமே போய் விடுவாள் என்று எதிர்பார்க்காத நந்தகிஷோர் திகைத்துப் போனான். "இன்றே போக வேண்டுமா?"என்றான் எழும்பாத குரலில்.

"ஆமாம். இல்லை என்றால் வீடு யார் கைக்காவது போய் விடும். மீண்டும் வீடு தேடுவது சிரமம்."

"நேகா. உனக்கு இங்கே இருக்கப் பிடிக்கவில்லையா?" என்றான் நந்தகிஷோர் வருத்தத்துடன்.



"பிடித்திருக்கிறது கிஷோர். ஆனால் நமக்கு பிடித்திருக்கிறது என்பதற்காக அடுத்தவர்கள் வீட்டில் எத்தனை நாள் தங்க முடியும்? இன்றில்லாவிட்டால் நாளையோ அடுத்த மாதமோ போய்த்தானே ஆக வேண்டும்?"

நேகாவின் வார்த்தைகள் கூராய் மனதை தைக்க, "என்னை இன்னும் வேற்று மனிதனாகத்தான் நினைக்கிறாயா நேகா? என் மீது உனக்கு எந்த அபிமானமும் இல்லையா?" என்றான் நந்தகிஷோர் அவள் முகத்தைப் பார்த்தபடி.

மற்ற சமயங்களில் அவனை பார்க்கும் போதே தன் வசமிழக்கும் நேகாவுக்கு அன்று எந்த சலனமும் ஏற்படவில்லை. நேற்றைய ஒரே இரவில் மனசு மிகவும் முதிர்ந்து போனாற் போலிருந்தது. வாழ்க்கையை அதில் ஏற்படும் நிகழ்வுகளை மிக சாதாரணமாக எதிர்கொள்ள முடிந்தது. இதே ஒரு நாள் முன்பு நேகா அவன் முகத்தைப் பார்த்து இத்தனை சாதாரணமாக கிளம்புகிறேன் என்று சொல்லியிருக்க முடியுமா என்பது சந்தேகம் தான். இப்போது நேகாவின் மனதில் எந்த துக்கமும், வருத்தமும் இல்லை. எதையும் சகஜமாக எதிர் கொள்ள முடிந்தது. எனவே நந்தகிஷோரின் கேள்விக்கு அவன் கண்களைப் பார்த்தே பதிலளிக்க முடிந்தது. "நான் உன் மீது எப்படிப்பட்ட அபிமானம் கொண்டிருந்தாலும், அது நமக்குள் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை கிஷோர். அதனால் நடக்கப் போவதைப் பற்றி மட்டும் பேசலாம்."

"ஆனால் நேகா, இனி நீ இல்லாமல் இந்த வீட்டில் என்னால் இருக்க முடியும் என்று எனக்குத் தோணவில்லை."

''இது உன் வீடு கிஷோர். இதில் ஏன் நீ இருக்க முடியாமல் போக வேண்டும்? நான் இங்கு வருவதற்கு முன்பும் நீ இங்கு தானே இருந்தாய்!''

''அன்றைக்கு இருந்த நந்தகிஷோர் வேறு. இன்றைக்கு இருப்பவன் வேறு. நீ இதைப் புரிந்து கொள்ளாததுதான் ஆச்சரியமாக இருக்கிறது. நான் நேரடியாகவே சொல்கிறேன் நேகா. நான் உன்னை.... ''

நந்தகிஷோர் முடிக்கும் முன் நேகா சொன்னாள். ''வேண்டாம் கிஷோர் எதுவும் சொல்லாதே.''

''உன்னைப் பார்த்த நாளாக என் மனதில் ஏற்பட்ட மாற்றங்களை இதுவரை நானே உணர்ந்து கொள்ளாமல் தான் இருந்தேன் நேகா. ஒரே நாளில் ஒரு மனிதன் முற்றிலும் மாறிவிட முடியும் என்பதை வேறு யாராவது சொன்னால் நம்பியிருக்க மாட்டேன். ஆனால் தர்ஷணாவின் மரணம் என்னையே எனக்கு புரிய வைத்து உலகையே புதிய பார்வையில் பார்க்க வைத்திருக்கிறது.''

நந்தகிஷோரின் குரலில் எப்போதும் இல்லாத ஆழ்ந்த அமைதியும் பேச்சில் தீர்க்கமும் தென்பட்டது. எப்போதும் சிரிப்பும், துடிப்புமாய் நந்தகிஷோர் இல்லை இவன் என்று தோன்றியது. ஒரு வேளை இது தர்ஷணாவின் இறப்பு ஏற்படுத்திய பாதிப்பாகக் கூட இருக்கலாம். சில நாட்களில் தேறி விடுவான். பழைய கிஷோர் ஆகி விடுவான்.

நேகா சொன்னாள். ''இப்போது நாம் எதைப்பற்றியும் பேச வேண்டாம் கிஷோர். உன்னால் முடியுமானால் என்னை சில்வியா வீட்டில் டிராப் பண்ணு'' என்றாள் முடிவான குரலில்.



அவள் முகத்தைப் பார்த்த நந்தகிஷோர் அதற்கு மேல் எதுவும் பேசாமல் எழுந்தான். சில்வியா வீட்டு வாயிலில் காரை நிறுத்தியவன் திரும்பி அவளைப் பார்த்தான். ''உறவுகளின் அருமை அவர்களை பிரியும் போது தான் தெரியும் என்பார்கள். நேற்று தர்ஷணாவும், இன்று நீயும் எனக்கு தெரிய வைத்திருக்கிறீர்கள். என் பெற்றோர்களை என்னை விட்டு விட்டு என் தங்கை வீட்டிற்கு போய் சில மாதங்கள் தங்கியிருந்த போது கூட என் மனதில் எதுவும் தோன்றியதில்லை. பிரிவை நினைத்து இத்தனை கவலைப்பட்டதில்லை. எனக்கு நீ ஸ்பெஷல் நேகா. தனியானவள். எனக்குள் உனக்கிருக்கும் முக்கியத்துவத்தை நான் உணர்ந்து கொண்டது போல் என்றாவது நீயும் உணர்ந்து கொண்டால் தகவல் சொல்'' என்ற நந்தகிஷோர் அவள் முகத்தைப் பாராமல் போய் வருகிறேன் என்று கூட சொல்லாமல் கிளம்பிப் போனான்.

கால்களை நகர்த்த கூட மறந்துபோய் நின்றிருந்த நேகாவை சில்வியாவின் குரல் கலைத்தது. ''ஓ! வந்து விட்டாயா? இதோ உன் அறை சாவி'' என்றவளிடம் சாவியை வாங்கிக் கொண்டு ஒரு பெருமூச்சுடன் உள்ளே போனாள்.

## 16

நான்கு நாட்கள் பேர்பேங்க்-ல கழித்து விட்டு ஒரு முக்கியமான விஷயத்தை சொல்லப் போகும்

உற்சாகத்துடன் வந்த சுமன் வீட்டின் வெறுமையைப் பார்த்ததும் திகைத்துப் போனார்.

''நேகா எங்கே கிஷோர்?'' என்று அவரின் கேள்விக்கு ''வேறு இடம் கிடைத்து விட்டது போய் விட்டாள்'' என்ற மகனின் பதில் குழப்பத்தை அளித்தது.

''உங்களுக்குள் எதாவது சண்டையா கிஷோர்?'' என்றதற்கும் நந்தகிஷோர் ''இல்லை'' என தலையசைத்தான். இத்தனை நாள் பார்த்திராத விதமாய் மகனின் வேதனை நிறைந்த முகமும் வெற்றுப் பார்வைகளும் அவருக்கு வருத்தத்தை அளித்தன. நேகாவைப்பற்றிய அவரின் கேள்விக்கு அவன் சரியாக பதில் அளிக்கவில்லை. வளர்ந்த மகனிடம் தூண்டித் துருவி கேட்பது நாகரீகம் இல்லை என்பதால் அடுத்து என்ன செய்யலாம் என்று யோசித்தார்.

பேர்பேங்க்லிருந்து வரும்போது அவர் எத்தனையோ ஆர்வத்துடன் வந்தார். இங்கே வந்த பிறகு சூழ்நிலை அவர் எதிர்பாராத விதமாய் மாறியிருந்தது. விஷயத்தை எங்கிருந்து தொடங்குவது என்று யோசித்தவர் வழக்கம் போல் மகன் வீட்டிலில்லாத சமயம் அனுசுயாவிற்கு போன் செய்தார்.

நேகாவிற்கு அன்று கல்லூரி விடுமுறை நாள். இன்றுடன் அவள் சில்வியா வீட்டிற்கு வந்து இரண்டு வாரங்கள் ஆகியிருந்தன. இந்த இரண்டு வாரங்களில் ஒரு முறை கூட அவள் நந்தகிஷோரையே சுமனையோ சந்திக்கவில்லை. கடைவீதிக்கு அருகிலேயே வீடு இருந்ததால் அடிக்கடி கண்ணில் படுவார்கள் என்று நினைத்தாள். ஆனால் ஒரு முறை கூட பார்க்க நேராதது ஏமாற்றமாக இருந்தது. வேண்டுமென்றே தன்னை



தவிர்க்கிறார்களோ என்று கூட தோன்றியது. ஆனால் சுமன் தன்னை தவிர்க்க காரணம் இல்லை என்பதால் அவர் இன்னும் பேர்பேங்க்லிருந்து வரவில்லை போலும் என்றெண்ணினாள். பிரூஸாவும், பெர்னடின்னும் அடிக்கடி வந்து போனார்கள். வீட்டை ஒதுக்குவதில் அவளுக்கு உதவி செய்தார்கள். அடிக்கடி யாராவது ஒருவர் அவளுடன் தங்கிச் சென்றார்கள். அவர்களைப் பார்க்கும் போதெல்லாம் தர்ஷணாவின் நினைவு வந்தது.

அடிப்படை வசதிகள் எதுவுமற்ற சூழலிலும் பிரச்சனைகளை எதிர்த்து போராட இந்த பெண்களுக்கு இருந்த துணிச்சல், அத்தனை பணத்திலும் சொகுசிலும் வளர்ந்த தர்ஷணாவுக்கு இல்லாமல் போயிற்று. இங்கேயே பிறந்து வளர்ந்த அந்த பெண்ணுக்கு பெற்றோரின் முற்போக்கு சிந்தனைகள் ஏற்படாமல் அவள் ஜீன்களில் பதிந்து போன தென் இந்திய பெண்களின் மென்மையும் ஒழுங்கும்தான் அவள் இறப்பிற்கு காரணம்.

மாதவியை நேகா அதன் பிறகு சந்திக்கவே இல்லை. நீண்ட விடுமுறை எடுத்திருப்பதாக ஜெயதேவ் சொன்னான். நேகாவிற்கு மிகவும் சோர்வாக இருந்தது. ஒவ்வொரு நாளும் கழிவது சிரமமாக இருந்தது. அலாஸ்காவின் இருளிலும் குளிரிலும் கடினமான வாழ்க்கை சூழலிலும் துவண்டு போகாத மனம் இப்போது தொய்ந்தது. தினமும் ஒரே வேலையை திரும்ப திரும்ப செய்வது அலுப்பாக இருந்தது. பதினைந்து நாளில் தன் மனம் இப்படி பேதலித்துப் போனால் இனி வாழ்க்கை முழுக்க இங்கே எப்படி கழிப்பது என்ற பயம் வந்தது.

நேகா மேற்கொண்டு யோசிக்காமல் வீட்டை பூட்டிக் கொண்டு கிளம்பினாள். சுமன் ஒரு முறை காட்டியிருந்த

விநாயகர் கோவிலை அடைந்து கடவுளை வழிபட்டு சுற்றி வந்து நடையில் அமர்ந்தாள்.

''என்னம்மா, எப்படியிருக்கிறது தனிக்குடித்தனம்?'' என்ற குரல் கேட்டுத் திரும்பியவள் ''அங்கிள் நீங்களா?'' என்றாள் மகிழ்ச்சியுடன்.

''நல்ல வேளை அங்கிளை உனக்கு நினைவிருக்கிறதே!'' என்றார் சுமன்.

''என்ன அங்கிள் இப்படி கேட்கறீர்கள்?'' என்ற நேகாவின் முகம் வாடியது.

''நான்கு நாட்கள் நான் போய் வருவதற்குள் சொல்லிக் கொள்ளாமல் கிளம்பிப் போனவர்களுக்கு எப்படி நினைவிருக்கும்?'' என்றார் சுமன்.

''வீடு காலியான தகவல் வந்ததால் உடனே கிளம்பும் படியாகி விட்டது'' என்றாள் நேகா.

''நீ சின்னப் பெண் இல்லை நேகா. உன் விஷயத்தில் முடிவெடுக்கும் முழு உரிமையும் உனக்குத்தான் உண்டு. அதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் உன்னைப் பார்த்தால் விரும்பி தனியாக வந்தது போல் தெரியவில்லையே! உன் முகத்தில் இருந்த சிரிப்பையே காணோம். இளைத்து வேறு போயிருக்கிறாய்!'' என்றார் சுமன்.

''வா வா என் சமையல் ரொம்ப மோசமாகி விட்டது அங்கிள். என்னாலேயே சாப்பிட முடியவில்லை'' என்றாள் புன்னகையுடன். நந்தகிஷோருக்காக பார்த்து பார்த்து சமைத்ததும், அவன் பாராட்டில் மகிழ்ந்து போனதும் இருவரும் போட்டிபோட்டுக் கொண்டு பாத்திரத்தை காலி செய்ததும் நினைவுக்கு வந்தது.



சுமன் சொன்னார். ''என்னவோ தெரியவில்லை, நந்தகிஷோரும் இளைத்துதான் போய்விட்டான். பழைய சிரிப்போ, பேச்சோ இல்லாமல் என் மகனைப் பார்க்க எனக்கே கஷ்டமாக இருக்கிறது.''

அவர் சொன்னதைக் கேட்டதும் நேகாவின் முகத்தில் ஏற்பட்ட வேதனையை கண்டும் காணாதவராக சுமன் விடைபெற்றார்.

அதன் பிறகு நேகா தற்செயலாக சுமனை பலமுறை சந்தித்தாள்.

அவளுடைய அழைப்பின் பேரில் அவள் வீட்டிற்கும் வந்தார். அந்த ஒற்றை அறையை அளவெடுத்தவர் நேகாவின் பெற்றோர்களைப் பற்றி பேசினார். ''இந்த சமயத்தில் அவர்கள் யாராவது உன்னுடன் இருந்தால் நன்றாக இருக்கும்'' என்று அவர் சொன்னதும். ''அங்கிள் அவர்கள் என்னை மறந்து போயிருப்பார்கள் அங்கிள்'' என்றாள் நேகா.

''நிச்சயம் இருக்காது நேகா. பெற்ற குழந்தைகளை யாராலும் மறக்க முடியாது. அதுவும் ஒரு தாயால் முடியாது. ஒரு வேளை அவர்கள் உன்னைத் தேடி இங்கே வந்தால்?''

''நான் இங்கே வந்திருப்பதே அவர்களுக்குத் தெரியாது. அதனால் என்னைத் தேடி வர சான்ஸே இல்லை'' என்றாள் நேகா உறுதியாக. இன்னொரு நாள் பேசகையில் சுமன் சொன்னார் ''நீ இருக்கும் இடத்தை உன் பெற்றோர்களுக்கு குறைந்த பட்சம் உன் அம்மாவுக்காவது தெரிவித்தால் என்ன? விருப்பமிருந்தால் வாட்டுமே!''

''அவர்கள் இருக்கும் இடத்திலிருந்தே என்னை விரட்டியவர்கள் என் இருப்பிடம் தேடி வரப் போகிறார்களா? நல்ல கதை'' என்றாள் நேகா ஆத்திரத்துடன்.

''சரி, உனக்கு உன் அம்மாவைப் பார்க்க வேண்டும் என்று ஆசை இல்லையா?

''என்னிடம் உண்மையை ஒத்துக் கொள்ள நீ கௌரவம் பார்க்க வேண்டியதில்லை. சொல்லு நேகா! உனக்கு உன் அடிமனதில் அம்மா பற்றிய ஏக்கம் இல்லை?''

நேகா உதட்டைக் கடித்தபடி ஒரு நொடி யோசித்தாள். ''எனக்கு கோபமும், ஆசையும் ஒரே விகிதத்தில் இருக்கிறது அங்கிள். அம்மா மடியில் தலைசாய்ந்து தூங்க வேண்டும். அவள் கையில் சாப்பிட வேண்டும் என்ற இயல்பான ஏக்கமும், ஒரு தூசியைப் போல என்னை விலக்கினார்களே என்ற துக்கமும் எப்போதும் என் மனதை விட்டு மறையவே இல்லை....'' என்றாள் வேதனையுடன்.

''நீ சம்மதித்தால் நிரந்தரமாக இந்த வேதனையிலிருந்து விடுபடலாம்'' என்றார் சுமன் புதிர் போடும் பாணியில்.

''விளையாடாதீர்கள் அங்கிள்'' என்ற நேகா அந்த பேச்சை அத்துடன் விட்டு விட்டு வேறு பேசத் தொடங்கினாள்.

அடுத்து வந்த சிலவாரங்கள் சுமனுக்கு வேலை இருந்ததால் நேகா அவரைப் பார்க்கவே முடியவில்லை. நந்தகிஷோர் தன்னை ஒரேயடியாக மறந்து விட்டானா



என்று தோன்றியது. தன் பிரியத்தை அவன் சொன்ன போது காது கொடுத்து கேட்க மறுத்த முட்டாள்தனத்தை நினைத்து தன் மீதே கோபம் வந்தது. பெற்றோரை துறந்து பிரியம் வைத்தவனை மறந்து தான் வாழ நினைக்கும் வாழ்க்கை அர்த்தமே இல்லாததாக பட்டது. அப்பா கிட்டத்தட்ட அவள் நினைவிலிருந்தே நழுவியிருக்க, சுமன் அடிக்கடி அம்மாவைப் பற்றியே பேசியதில் சமீபகாலமாக அம்மாவின் நினைவு அதிகம் வந்தது. மாதவி ஓய்ந்து கிடப்பதாக யூனிவர்சிட்டியில் பேச்சு அடிபடும் போது அம்மாவும் அப்படி கிடப்பது போன்ற கற்பனை எழுந்தது.

நேகா தூங்கி விழிக்கையில் நந்தகிஷோர் காபியுடன் எதிரில் நிற்பது போலிருந்தது. பிடித்தமான உடைகளை அணிகையில் ''நீ ரொம்ப அழகு நேகா'' என்ற அவன் குரல் காதுகளில் ஒலித்தது. வகுப்பு முடிந்து வெளியே வருகையில் யூனிவர்சிட்டி வாயிலில் காருடன் அவன் காத்திருப்பது போன்ற பிரமை ஏற்பட்டது.

''ஏன் தனியாக வந்து விட்டாய்? நந்தகிஷோரை பிரிந்து விட்டாயா?'' என்ற ராபினிடம் எரிந்து விழுந்தாள்.

யாருடனும் பேசாமல் கனவுக்கும், நனவுக்கும் வித்தியாசம் தெரியாமல் நேகாவிற்கு பைத்தியம் பிடித்து விடும் போலிருந்தது. அந்த வாரம் முழுவதும் நேகாவுக்கு விடுமுறை நாளாக இருந்தது.

ஒரு வாரமாய் நாலு சுவர்களையே பார்த்துக் கொண்டு, மோசமான வெதரினால் வெளியே போகவும் முடியாமல் தவித்துப் போனாள். தலை விண் என்று தெறித்தது. உண்மையிலேயே மூளை கலங்கிப் போய் விடுமோ

என்ற பயத்துடன் கண்களை இறுக மூடி தலையை பிடித்த படி அமர்ந்திருந்தவளின் தோளில் ஒரு கை படிந்தது.

நேகா திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள். எதிரில் நின்றிருந்தவளை நம்ப முடியாமல் கண்கள் தெறித்தன.

''அம்மா'' என்றாள் நேகா எதிர்பாராத அதிர்ச்சியுடன்.

அடிவயிற்றிலிருந்து எழுந்த அந்த குரல் கிட்டத்தட்ட ஓலமாகவே வெளிப்பட, சுதா அந்த குரலில் உடைந்து போனாள். நேகாவை இறுக அணைத்தபடி விசும்பி அழுதாள்.

டெல்லியில் தான் பார்த்த அம்மாவா இது என்று நேகாவுக்கு வியப்பாக இருந்தது. கலெக்டரின் மனைவி என்ற பெருமிதமும், செழுமையான வாழ்க்கை தந்த மினுமினுப்புமாய் ஜொலித்தவள். இப்போது இளைத்து தளர்ந்து போயிருந்தாள். கண்களை சுற்றி கருவளையம் விழுந்திருந்தது. சுதாவின் தோற்றமே நேகாவின் நாக்கை கட்டிப் போட்டது. கோபமும், மகிழ்ச்சியும் எதிர்மறை உணர்ச்சிகளின் தாக்கத்தில் நேகாவின் கண்களிலிருந்து நீர் வழிந்தது. இது நிஜமா அல்லது தினமும் தன்னை அலைக்கழிக்கும் கனவுகளில் ஒன்றா என்று எண்ணி நகர முயன்ற நேகாவை அசைய மாட்டாமல் பற்றி யிருந்த சுதாவின் கரங்கள் அது உண்மைதான் என்று உணர்த்தியது.

''என்னை மன்னித்து விடு நேகா'' என்றாள் சுதா திரும்ப திரும்ப.

''உன்னை நான் வேண்டுமென்றே புறக்கணிக்க வில்லை. சற்று வளர்ந்த பெண்ணான உனக்கு அம்மா வின் இரண்டாவது கணவன் என்ற ஸ்தானம் கண்டிப்



பாக மிரட்சியை ஏற்படுத்தும். ராமசுந்தரத்திற்கும் உன்னை தன் பெற்றோர்கள் மத்தியில் அறிமுகம் செய்து வைப்பதில் சிக்கல்கள் ஏற்படும் என்று முதலில் எண்ணி னேன். நாங்கள் இருவரும் திருமணம் செய்து கொண்டு செட்டில் ஆன பிறகு ஒரு நாள் உன் அப்பாவுக்கு போன் செய்து உன்னை நானே வளர்ப்பதாக கூறினேன். ஆனால் உன் அப்பா ஒரு நடத்தை சரியில்லாதவளிடம் என் பெண் வளரக்கூடாது. அதை நான் அனுமதிக்க மாட்டேன் என்றார். உன் தாத்தா, பாட்டி போன்ற பெரியவர்களின் பாதுகாப்பில்தான் நீ ஒழுக்கமாய் வளர்வாய் என்றார். வேறு வழியின்றி உன்னை பிரிந்து சென்ற நான் உன் பாட்டி வீட்டில் நீ நல்லபடியாக வளர்வதை கேள்விப்பட்டேன். அவர்கள் உனக்கு நல்ல வாழ்க்கையை அமைத்துத் தருவார்கள் என்று நிம்மதி யடைந்தேன். பிறகு ஊர், ஊராக சுற்றிக் கொண்டிருந்த தாலும், எனக்கு இரண்டு குழந்தைகள் பிறந்து விட்ட தாலும் பிஸியாகி விட்டேன்.

அவ்வப்போது உன் நினைவு எழும் போதெல்லாம் உன் அப்பாவின் குடும்பத்தினர் உனக்கு நல்ல வரன் பார்த்து திருமணம் செய்து வைத்திருப்பார்கள் என்று நினைத்துக் கொள்வேன். ஆனால் உன்னை எதிர்பாரா மல் டெல்லியில் பார்த்ததும் திகைத்துப் போனேன். ஒரு மோசமான குடும்ப வாழ்விலிருந்து மீள உதவி செய்த ராமசுந்தரத்திற்கு என்னால் எந்த கெட்ட பெயரும் ஏற்பட்டு விடக் கூடாது என்றுதான் என்னால் டெல்லி யில் உன்னிடம் அப்படி நடந்து கொண்டேன். உன் பாட்டி வீட்டில் உன்னை நடத்திய விதமோ, உன் அப்பா உன் விஷயத்தில் பொறுப்பில்லாமல் நடந்து கொண் டதோ எனக்குத் தெரியாது.''

சுதா மூச்சு வாங்குவதற்காக நிறுத்திய இடைவெளியில் ''மீதியை நான் சொல்லலாமா?'' என்ற குரல் கேட்டது. நேகா நிமிர்ந்து பார்த்தாள். ராமசுந்தரம் வாயிலை நிறைத்தபடி உள்ளே வந்து நின்றார். நேகா தயக்கத்துடன் எழுந்து நிற்க, ''உட்கார் நேகா'' என அவளை அமர வைத்து உரிமையுடன் அவள் அருகில் அமர்ந்தார்.

''டெல்லியில் கல்லூரி விழாவில் உன்னை முதன் முதலில் பார்த்த போதே எனக்கு சந்தேகம் வந்தது நேகா. உன் அம்மா என்னிடம் எதுவும் சொல்ல மறுக்கவே நான் ஆட்கள் மூலம் விசாரிக்கத் தொடங்கினேன்.

உன்னைப் பற்றிய விவரம் தெரிந்தது. பிறகு உன் அம்மாவிடம் பேசினேன். நீ எனக்கும் மகள் தான். எங்கள் மற்ற இரு குழந்தைகளுக்கும் உனக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. தேவையின்றி என்னிடம் தாழ்வுமனப்பான்மை கொள்ளத் தேவையில்லை என பலவிதமாய் எடுத்துக் கூறினேன். உன் அம்மா மகிழ்ந்து போனாள். வீட்டிலிருந்த இரு குழந்தைகளிடமும் உன்னைப் பற்றிய விவரங்களை தெரிவித்தோம்.

தங்களுக்கு ஒரு அக்கா கிடைத்ததில் அவர்களுக்கு மிகுந்த சந்தோஷம். இடையே ஒரிரு முறை விஷயத்தை தெரிவிக்க உன் அம்மா கல்லூரி விடுதிக்கு பார்க்க வந்த போது நீ சந்திக்க மறுத்து விட்டதால் உன்னை பார்க்காமலே திரும்பி வந்தாள்.

எல்லோரும் இணைந்த பின் சரியாகி விடும் என்ற நம்பிக்கையுடன் உன்னை அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை செய்து விட்டு உன்னைப் பார்க்க கல்லூரிக்கு போனபோது நீ வேலையை ரிசைன் செய்துவிட்டுப்



போனதாக தகவல் கிடைத்தது. அன்று எங்கள் ஏமாற்றத்தை வார்த்தைகளால் விவரிக்க முடியாது நேகா'' ராமசுந்தரம் தொண்டையை செருமிக் கொண்டு தொடர்ந்தார்.

''உன்னை எப்படியும் கண்டுபிடித்தே ஆக வேண்டும் என்று நான் அதற்கு பிறகு எடுத்த முயற்சிகள் அனைத்தும் வீணாயின நேகா. உன் அம்மா நீ உயிருடன் இல்லையோ என பயப்பட ஆரம்பித்தாள். அந்த பயமும், குற்ற உணர்ச்சியும் அவளது உடலை பாதித்து படுக்கையில் தள்ளியது. உன் படம் போடாமல் நான் முதலில் பத்திரிகைகளில் விளம்பரம் கொடுத்தேன் அதில் பயன் எதுவும் தெரியவில்லை. இன்டர்நெட்டில் உன் போட்டோவுடன் உன் அம்மா உனக்கு கடிதம் எழுதியதைப் போல நான்கு வரிகள் இணையதளத்தில் உலவவிட்டேன். கிட்டத்தட்ட நான்கு மாதம் கழித்து அதற்கு முதல் ரெஸ்பான்ஸ் கிடைத்தது. நந்தகிஷோர் என்பவர் எங்களை தொடர்பு கொண்டார்.''

இதுவரை அமைதியாக கேட்டுக் கொண்டிருந்த நேகா திடுக்கிட்டு எழுந்து அமர்ந்தாள்.

ராமசுந்தரம் தொடர்ந்தார். ''நந்தகிஷோர் எங்களைப் பற்றி விசாரித்தார். நேகா பத்திரமாக இருப்பதாகவும் அவள் விரும்பினால் உங்களை தொடர்பு கொள்ளச் செய்கிறேன்'' என்றும் கூறினார். அதன் பிறகு அவரிடமிருந்து தகவலே இல்லை.

நந்தகிஷோர் தன் பெற்றோரைப் பற்றி ஒரு முறை ஏதோ பேசியதும் தான் அதற்கு கோபமாக பதில் சொன்னதும் நேகாவிற்கு நினைவு வந்தது.

ராமசுந்தரம் தொடர்ந்தார். ''மீண்டும் ஒரு மாதம் கழித்து சுமன் என்பவர் எங்களைத் தொடர்பு கொண்டார். அவர் அலாஸ்காவில் ஆங்கரேஜ் நகரில் வசிப்பதாகவும் நேகா தன் வீட்டில்தான் இருப்பதாகவும் கூறினார். முதலில் எங்களால் நம்ப முடியவில்லை. நீ பழக்கமற்ற இடத்திற்கு இத்தனை தொலைவு எப்படி தனியாக போயிருக்க முடியும் என்று ஆச்சரியமாக இருந்தது.

சுமனுக்கும் நாங்கள் உண்மையிலேயே உன் பெற்றோர்கள் தானா என்பது சந்தேகமாக இருந்தது. தொடர்ந்து ஒரு மாதம் போனிலும் மெயிலிலும் தொடர்பு கொண்டு பேசினோம். நண்பர்கள் தெரிந்தவர்கள் மூலம் ஒருவரைப் பற்றி ஒருவருக்கு தெரியாமல் விசாரித்துக் கொண்டோம். பரஸ்பர நம்பிக்கை ஏற்பட்ட பின் சுமனின் அழைப்பின் பேரில் நான் முதலில் நான்கு நாட்கள் பேர்பேங்க் வந்து அவருடைய நண்பர் வீட்டில் தங்கியிருந்தேன். அங்கு வந்து என்னை சந்தித்த அவர், நேகாவை தயார் செய்து விட்டு உங்களை அழைத்துப் போகிறேன் என்றார்.

எங்களை சில மாதங்களுக்கு முன்பு தொடர்பு கொண்ட நந்தகிஷோர் சுமனின் மகன்தான் என்பதையும் அவர் பேச்சிலிருந்து தெரிந்து கொண்டேன். என்னிடம் பேர் பேங்க்கில் பேசிவிட்டு கிளம்பிச் சென்ற சுமன் நேகா இப்போது தன் வீட்டில் இல்லை எனவும் வேறு இடத்தில் தங்கியிருப்பதாகவும் கூறினார். இதற்குள் சுதாவும் உன்னை வந்து பார்த்தே ஆக வேண்டும் என்று அடம் பிடிக்க, அவளையும் வரவழைத்தோம். இது தான் நேகா நடந்தது.



எங்கள் அன்பில் நடிப்போ, போலித்தனமோ இல்லை. முதலில் உன்னை புரிந்து அரவணைக்காததுதான் நாங்கள் செய்த பெரிய தவறு. அந்த தவறுக்கு நிறைய அனுபவித்து விட்டோம் நேகா'' என்ற ராமசுந்தரத்தின் குரல் ஓய்ந்து கிடந்தது.

தன்னை இத்தனை சிரமப்பட்டு தேடிக் கண்டு பிடித்து வந்திருக்கிறார்கள் என்பதே நேகாவிற்கு பிரமிப்பாய் இருந்தது. சுமனும் இதற்கு பின்னணியில் இருந்திருக்கிறார் என்பது நேகா எதிர்பார்த்திராத திகைப்பாய் இருந்தது. நேகா பேச வாய் வராமல் அமர்ந்திருக்க ''இன்னும் கோபமா நேகா?'' என்றாள் சுதா அவள் முகத்தைப் பற்றி.

நேகா ''இல்லை'' என தலையசைத்ததும், சுதா நேகாவின் கன்னங்களில் மாறி மாறி முத்தமிட்டாள்.

அழுகையும், சிரிப்பும், மகிழ்ச்சியுமாய் அந்த சங்கமம் உணர்ச்சிக் குவியலாய் வீட்டை நிறைத்தது.

சுதாவும் ராமசுந்தரமும் மகளுடன் தங்கியிருந்த நான்கு நாட்களுக்கு பிறகே சுமன் அவர்களை சந்தித்தார். அவரைப் பார்த்ததும் ''அங்கிள் என்னிடம் சொல்லாமலே இத்தனை வேலை செய்திருக்கிறீர்களே!'' என்றாள் நேகா அவரிடம்.

''முன்பே சொல்லியிருந்தாள் இத்தனை சந்தோஷம் கிடைத்திருக்காது. அதுமட்டுமில்லாமல் சிறிது நாட்களுக்கு முன்பு வரை நீ உன் அம்மா மீது மிகுந்த வெறுப்பில் இருந்தாய். ஒரு வேளை அவர்களை சந்திக்க நீ மறுத்துவிட்டால், என்ற தயக்கமும் என் நாவைக் கட்டிப் போட்டது. உனக்கு தனிமையில் சிந்திக்க அவகாசம் கொடுத்து உன் அம்மாவைப் பற்றி, அடிக்கடி நினைக்க

வைத்து, பிறகு சந்தித்து கொள்வதுதான் இருவருக்கும் நல்லது என்று நினைத்தேன். எனவே எல்லாம் நல்ல படியாக முடிந்தது'' என்றார் சுமன் திருப்தியுடன்.

''உங்களுக்கு எத்தனை நன்றி சொன்னாலும் போதாது'' என்றாள் சுதா உணர்ச்சியுடன்.

''அடுத்த வாரம் நமக்கு டிக்கெட் கிடைத்திருக்கிறது நேகா. யூனிவர்சிட்டிக்கு ஒரு மாதம் விடுமுறை கேட்டு மெயில் அனுப்பி விடு. இந்தியா போனதும் ராஜினாமா கடிதம் அனுப்பி விடலாம்'' என்றார் ராமசுந்தரம்.

இதை எதிர்பார்த்திராத நேகா ''ராஜினாமாவா?'' என்றாள் திகைப்புடன்.

''ஆமாம். உன்னை இவ்வளவு தூரத்தில் விட்டு விட்டு எங்களால் எப்படி நிம்மதியாக இருக்க முடியும்? இங்கு வந்த சில நாட்களிலேயே என்னால் இந்த வெதரை சமாளிக்க முடியவில்லை. உன்னை எப்படி தினமும் இங்கு கஷ்டப்படும்படி விட முடியும்?'' என்றாள் சுதா.

''உன் தம்பி, தங்கைகள் தினமும் நீ எப்போது வரு வாய் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்'' என்றார் ராமசுந்தரம்.

மேற்கொண்டு சுதாவும், ராமசுந்தரமும் பயண ஏற் பாடுகள் குறித்து பேசிக் கொண்டிருக்க, சுமன் அவர் களிடம் விடைபெற்று கிளம்பினார். வழியனுப்ப வாயில் வரை வந்த நேகாவிடம் சுமன் சொன்னார்.

''நேகா, உன்னையும் உன் பெற்றோரையும் சந்திக்க வைத்ததன் பின்னணியில் எனக்கு ஒரு காரணம் இருக் கிறது. நம் இந்திய முறைப்படியான என் மகனின் திரு



மணத்திற்கு பெண்ணின் பெற்றோர்களும் உடன் இருந்து நடத்தினால் சிறப்பாக இருக்கும் என்று நினைத் தேன்.''

சுமனின் பேச்சைக் கேட்ட நேகாவின் முகம் வேதனை யில் கசங்கியது. பதில் பேசாது அவள் உள்ளே செல்ல வும் சுமன் திரும்பி வீடு நோக்கி நடந்தார்.

நேகா பயணத்திற்கு தயாராய் இருந்த பெட்டிகளை சரி பார்த்தாள்.

''எல்லாம் எடுத்து வைத்தாயிற்று'' என்றாள் அம்மா விடம்.

உலர்ந்த ராஸ்பெர்ரி, ப்ளூபெர்ரி பழங்களையும், கலைப் பொருட்களையும், பதப்படுத்தப்பட்ட மீனையும் ஒரு பையினுள் வைத்தவள் ''இது தம்பி தங்கைக்கு மிகவும் பிடிக்கும்'' என்றாள் ராமசுந்தரத்திடம்.

டாக்ஸி வந்து வாயிலில் நின்றது. அதிலிருந்து எக் ஸிமோ டிரைவர் ''மேடம் டாக்ஸி ரெடி'' என்றான் அவளிடம்.

லக்கேஜை பின்புறம் அடுக்கிவிட்டு மூவரும் காருக் குள் அமர்ந்தனர். கார் 'ஆங்கரேஜ் இன்டர் நேஷனல்' விமான நிலையத்தை நோக்கி விரைந்தது.

காரில் செல்கையில் கனமான கம்பளி அணிந்து வாக்கிங் ஸ்டிக்குடன் எதிர்பட்ட முதியவர்களைப் பார்த்த சுதா, ''இவர்களால் எப்படி இந்த நகரில் வசிக்க முடிகிறது?'' என்றாள் வியப்புடன்.

''அலாஸ்கா மிக அழகான நகரம் அம்மா. கடலும், நதிகளும், அடர்காடுகளும், பூந்தோட்டங்களும் பனியும்

அதில் வாழும் உயிரினங்களுமாய் இயற்கையின் அற்புத மான படைப்பு இந்த நகரம். ஒரு கோடை காலத்தில் வந்து பாருங்கள். பிறகு அலாஸ்காவை விட்டு நகர மாட்டீர்கள். இங்கு ஆயில் மூலமாக அரசுக்கு கிடைக்கும் பணம் குடிமக்களுக்கு பகிர்ந்து கொடுக்கப்படுகிறது. ஒருவருக்கு குறைந்தது இரண்டாயிரம் டாலர் கிடைக் கும். மேலும் முதியவர்களுக்கான ஓய்வூதிய தொகையும் கிடைப்பதால் வயதானவர்கள் இங்கு வருமானத்தைப் பற்றிய கவலை இன்றி வாழ முடிகிறது'' என்றாள் நேகா.

''இங்கே காய்கறிகள் எப்படி கிடைக்கின்றன?'' என்றார் சுமன் வியப்புடன்.

''கோடையில் நான்கு மாதங்கள்தான் காய்கறி பயிரிட முடியும். இப்போது சூரிய வெளிச்சம் மறை யாமல் இருப்பதால் காய்கறிகள் நம் ஊரை விட இரு மடங்கு பருமனாக வளரும் 'மாடநுஸ்காவேலி' என்னு மிடத்திலும் 'பாமர்' என்னுமிடத்திலும் நாமே தோண்டி எடுத்துக் கொள்ளும்படி தோட்டங்கள் உண்டு. இங்கே பெரிய பக்கெட்டுகளும், கத்தியும் வைத்திருப்பார்கள். நாமே தோண்டி எடுத்துக் கொள்வதால் அவர்களுக்கு அறுவடை கூலி மிச்சமாகிறது.

அதனால் நாம் எடுத்து வரும் காய்களை எடை போட்டு குறைந்த விலைக்கு தருவார்கள். உருளை, கேரட். காலிபிளவர், முட்டைகோஸ், பெர்ரி பழங்கள் என எல்லாமே கிடைக்கும். குழந்தைகள் கூட தோட்ட வேலை செய்யும் ஆர்வத்துடனே மண்ணை கிளறுவது பார்க்க வேடிக்கையாக இருக்கும்.''

''மேடம் ஏர்போட்டை நெருங்கி விட்டோம்'' என்றான் டிரைவர் நேகாவிடம்.



''இந்த டிரைவர் எக்ஸிமோ என்று சொன்னாயே. கார் எல்லாம் ஓட்டுகிறான். நாகரீகமாக இருக்கிறான்'' என்றாள் சுதா தமிழில் வியந்து.

''எக்ஸிமோக்களில் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களின் குழந்தைகள் மெதுவாக முன்னேறத் தொடங்கியிருக்கிறார்கள் அம்மா'' என்றாள் நேகா.

ராமசுந்தரமும், சுதாவும் வியப்புடன் ஒவ்வொன்றாக கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லி முடிக்கும் முன் கார் ஏர்போர்ட் வாயிலில் நின்றது.

* * *

''சோ, நேகாவின் அம்மாவும் அப்பாவும் அவளுடன் தான் இருக்கிறார்களா?'' என்றான் நந்தகிஷோர் ஆச் சரியத்துடன்.

''ஆமாம். பெண்ணைப் பார்த்ததும் அவள் அம்மா அழுத அழுகையும் பட்ட சந்தோஷத்தையும் பார்க்க வேண்டுமே! ஆனால் உண்மையிலேயே ராமசுந்தரம் ஜென்டில்மேன்'' என்றார் சுமன்.

''நேகா? நேகா என்ன செய்தாள்? அவர்களிடம் எப்படி நடந்து கொண்டாள்?'' என்றான் நந்தகிஷோர் ஆர்வத்துடன்.

''நான் கூட இப்படித்தான் பயந்தேன். கோபத்தில் அவமானப் படுத்திவிடக் கூடும் என்று எண்ணினேன். ஆனால் இரத்த பாசம் விடுமா? நேகா அவள் அம்மாவை கட்டிக் கொண்டாள். ராமசுந்தரத்திடமும் பிரியமாக பழக ஆரம்பித்து விட்டாள். ரொம்ப சந்தோஷமாக இருக்கிறாள். அவர்களுடன் இந்தியா செல்லத் தயாராகி விட்டாள்.''

''என்னது? நேகாவும் இந்தியா போகிறாளா?'' என்றான் நந்தகிஷோர் திடுக்கிட்டு.

''ஆமாம்.''

''இல்லை. என்னிடம் ஒரு வார்த்தை கூட சொல்லாமல் அவள் போக மாட்டாள்'' என்றான் நந்தகிஷோர் நம்பிக் கையின்றி.

''நம்பிக்கை இல்லை எனில் நீயே அவளுக்கு போன் செய்து பார்'' என்றார் சுமன்.

நந்தகிஷோர் அவசரமாக நேகாவின் எண்களை டயல் செய்ய ரிங் போய்க் கொண்டே இருந்தது. பலமுறை முயற்சி செய்த பின்னரும் அவள் போனை எடுக்காமல் இருக்கவே ''போனை வீட்டிலேயே விட்டு விட்டு போயி ருக்கலாம்'' என்றார் சுமன்.

நந்தகிஷோர் நண்பன் ஒருவன் மூலமாய் முயற்சி செய்து சில்வியாவின் நம்பரை பெற்றான். நம்பர் கிடைத்த சந்தோஷத்தில் நந்தகிஷோர் சில்வியாவிற்கு போன் செய்ய, தூக்க கலக்கத்தில் ஒலித்த சில்வியாவின் குரல் ''நேகா ஏர்போர்ட் போயிருக்கிறாள்'' என்றது.

செய்வதறியாவது ஒரு நிமிடம் திகைத்த நந்தகிஷோர் ஏர்போர்ட்டை தொடர்பு கொண்டு ப்ளைட் பற்றிய விவரம் கேட்டான்.

ஸ்டாண்டில் மாட்டியிருந்த கார் சாவியை உருவிய வன், சுமன் திரும்பிப் பார்ப்பதற்குள் போய்விட்டிருந் தான். சுமன் வாய்விட்டு சிரித்தபடி கதவைத் தாழிட்டார்.

நந்தகிஷோர் கார் இதுவரை இல்லாத வேகத்துடன் பறந்தது. தன் கண் முன்னே தன் உயிர் போவதைப் போன்ற பயம் எழுந்தது.

இன்னும் சரியாக இருபது நிமிடங்கள் இருந்தது ப்ளைட் கிளம்ப.



''இன்னும் பதினைந்து நிமிடங்களில் ப்ளைட் கிளம்பி விடும்'' என்றார் ராமசுந்தரம் நேகாவிடம். நேகாவின் கண்கள் தன்னையறியாமல் கலங்கின. சுதாவும் கண் களைத் துடைப்பதைப் பார்த்த ராமசுந்தரம் ''அடிக்கடி இங்கே வந்து கொண்டிருப்போம். அதனால் கவலைப் படக் கூடாது'' என்றார் இருவரிடமும்.

'இன்னும் பத்து நிமிடங்கள் என்றது நந்தகிஷோரின் வாட்ச்' வலது பக்கம் திரும்பிய வேகத்தில் 'நோ எண்ட்ரி ஏரியா'விற்குள் சென்றுவிட பின்னால் போலீஸின் விசில் சப்தம் கேட்டது.

ப்ளைட் கிளம்பப் போவதாக அறிவிப்பு கேட்டதும் சுமன் பெட்டியை தள்ளியபடி முன்னே நடக்கத் தொடங் கினார். நேகாவும் சுதாவும் எழுந்து நின்றார்கள்.

காரிலிருந்த வாட்ச்சை பார்த்த நந்தகிஷோர் சோர்ந்து போனான். இந்த நேரம் ப்ளைட் கிளம்பியிருக்கும்.

போலீஸ் நந்தகிஷோரின் கார் கண்ணாடியை இறக்க சொல்லி சைகை செய்தான். கண்ணாடி கீழே இறங்கிய தும் பைன் ரசீதை அவன் கையில் கொடுத்தான். நந்தகிஷோர் இயந்திரத்தனமாய் பாக்கெட்டிலிருந்த பணத்தை எடுத்துக் கொடுத்து விட்டு காரை எடுத்தான். இத்தனை அவசரமாய் ஓடி வந்தும் பயனில்லை என்பது புரிய மனம் துவண்டது. காரை ஏர்போர்ட் வாயிலில் நிறுத்தியவன், வானத்தில் புள்ளியாய் தெரிந்த விமானத் தின் விளக்கை அண்ணாந்து பார்த்தான். செய்வதறியாத தவிப்புடன் விமானம் மறையும் வரை பார்த்துக் கொண்டு நின்றிருந்தான்.

'உனக்கு ஏன் என் நினைவு வரவில்லை? என்னை விட்டு போய் விடுவாய் என்று நான் நினைக்கவே

இல்லை. உன் அன்பில், பிரியத்தில் உண்மை தெரிந்தது, நிஜம் தெரிந்தது. அந்த நிஜம் எப்படியும் ஒருநாள் உன்னை என்னிடம் கொண்டு வந்து சேர்க்கும் என்று நம்பியிருந்தேன்' என்றான் வானத்தைப் பார்த்து.

''என்ன பைலட் ஸார், எப்பவும் வானத்தைத்தான் பார்ப்பீர்களா? பூமியில் இருக்கும் மனிதர்கள் உங்கள் கண்களுக்குத் தெரியாதா?''

நந்தகிஷோர் தூக்கிவாரிப்போட திரும்பினான். நேகா செல்லமாக அவன் தோளில் குத்தினாள்.

''நீ?'' என்றான் நந்தகிஷோர் தாங்கமுடியாத வியப்புடன்.

''ஆமாம். நான் ;ான்.''

''நீ போகவில் :லயா அவர்களுடன்?''

''அவர்களை வழியனுப்ப வந்தேன்.''

''ஓ! வழியனுப்பத்தான் வந்தாயா?''

''அப்படியா சரி நானும் அவர்களுடன் போகிறேன்.''

''போய்த்தான் பாரேன்.''

''எனக்கென்ன பயம்? போகத்தான் போகிறேன்!'' நேகா பின்னால் திரும்ப நந்தகிஷோர் ஒரே பாய்ச்சலில் அவளை இழுத்து அணைத்தான் மூச்சு திணற... திணற...முத்தமிட்டான்.

''போதும் கிஷோர் நமக்கு இன்னும் ஆயுள் முழுக்க அவகாசம் இருக்கிறது?'' என்றாள் நேகா.

''எனக்கு ஒரு ஆயுள் போதாது நேகா?''

''ப்ராட். டயலாக் பேசாதே. இத்தனை நாள் என்னைப் பார்க்காமல் இருந்துவிட்டு இப்போது நடிக்கிறாயா?'' என்றாள் நேகா கோபத்துடன்.



''நான் உன்னிடம் கடைசியாக சொன்னதை நினைத்துப்பார். நீயாக உன் மனதை மாற்றிக் கொண்டு வருவாய் என காத்திருந்தேன்!''

''உனக்கு எப்போதும் என் மீதிருக்கும் அன்பும் தர்ஷணா இறந்த அன்று உனக்குள் ஏற்பட்ட மாற்றமும் எனக்கு புரிந்தது கிஷோர். ஆனால் அது நிலையானது தானா, எதிர்பாராத அதிர்ச்சியில் ஏற்பட்டதுதானா என்பதை அறியத்தான் அமைதியாக காத்திருந்தேன்'' என்ற நேகா அவன் இடுப்பை அணைத்தபடி புன்னகைத்தாள். ''அங்கிளுக்கு எத்தனை நன்றி சொன்னாலும் போதாது கிஷோர். என் அம்மாவை அழைத்து வந்து என் நெடுநாள் மன உறுத்தலை துடைத்ததுடன் நம் திருமணத்திற்கும் சம்மதம் வாங்கி விட்டார். அம்மா பாவம். இத்தனை நாள் கழித்து சந்தித்ததும் என்னை அவர்களுடன் வைத்துக் கொள்ள முடியவில்லை என ரொம்ப அழுதார்கள்.''

''உனக்கும் அவர்களுடன் இருக்க வேண்டும் என்ற ஆசை இருக்கும் இல்லையா? நீ கொஞ்ச நாள் இந்தியா போய் விட்டு வா'' என்றான் நந்தகிஷோர்.

''இத்தனை நாள் இங்கே அவர்களுடன் இருந்ததே ரொம்ப சந்தோஷமாக இருந்தது. இத்தனை வருடம் கழித்து புதிதாக ஒரு உறவை சொல்லி அங்கு யார் மனதிலும் சலனத்தை ஏற்படுத்த எனக்கு பிரியம் இல்லை. இப்போது என் மனதில் வெறுமை இல்லை கிஷோர். எனக்கென்று பெற்றோர், தம்பி, தங்கை என ஒரு குடும்பம் இந்தியாவில் இருக்கிறது என்ற நினைவு ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது. அவர்கள் மனதிலும் இனி குற்ற உணர்ச்சியின்றி சந்தோஷமாக இருப்பார்கள்.''

''உண்மையில் அடுத்தவர்களை சந்தோஷப்படுத்தும் இந்த உன் குணம்தான் என்னை முதலில் ஈர்த்தது'' என்றான் நந்தகிஷோர்.

இருவரும் காரை நோக்கி நடந்தார்கள். அன்று டிசம்பர் 22. கோடை காலத்தின் முதல் சூரிய ஒளி அப்போது அவர்கள் மீது பட்டது. கிட்டத்தட்ட ஆறுமாதங்கள் இருளில் மூழ்கியிருந்த ஆங்கரே நகரம் சூரிய ஒளியில் தகதகத்தது. நேகா ஆர்வத்துடன் துள்ளிக் குதித்தாள். பனிச் சிகரங்களும், ஐஸ் சாலைகளும், மரங்களும் சூரிய ஒளிபட்டு கண்ணாடியில் தெரியும் எதிரொளியாய் கண்ணைப் பறித்தன. தொடர்ந்த இருளுக்கு பின் பார்க்கையில் அலாஸ்கா சொர்க்கலோகம் போல் காட்சியளித்தது.

''கிஷோர் இது உண்மையில் பூமியா அல்லது சொர்க்கமா? என்னை கிள்ளேன்'' என்றாள் நேகா பரவசத்துடன்.

அவளைத் தோளோடு அணைத்த நந்தகிஷோர் அழுத்தமாய் கன்னத்தில் முத்தமிட்டான்.

''இது பூலோகம் இல்லை. சொர்க்கம்தான்'' நேகா அவன் அணைப்பில் கிறங்கினாள்.

ஐந்து நிமிடங்கள் நீடித்த சூரியன் இந்த இளஞ் ஜோடிகளை தொல்லை செய்யாமல் மறைந்து விட அலாஸ்கா மீண்டும் இருளில் ஆழ்ந்தது.

ஆனால் அவர்கள் இருவரும் சிரித்த சிரிப்பின் ஓசை அந்த இருளையும், குளிரையும் கிழித்துக் கொண்டு பனிச்சிகரங்களில் மோதி எதிரொலித்தது.